6372.

மொழிதல்

ஆய்விதழ்

தொகுதி: 11, எண்: 2
ஆடி – மார்கழி 2024

சுதந்திர ஆய்வு வட்டம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

894.811
Class No: ~~059.9,811~~
Acc No 63782

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிதல்

Class No: 894.811
~~894.8111~~
Acc No 63772.

ஆய்விதழ்

தொகுதி: 11, எண்: 2 ஆடி – மார்கழி 2024

Arasady Public Library
Municipal Council
Batticaloa.

சுதந்திர ஆய்வு வட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிதல்

ஆய்விதழ்

சுதந்திர ஆய்வு வட்டத்தினரால் வருடம் இரு இதழ்களாக (ஆனி, மார்கழி) வெளியிடப்படும் சக மதிப்பீட்டுச் சீர்தூக்கிய சஞ்சிகையாகும் (Peer Reviewed Journal). இது துறைசார் உள்நாட்டு, வெளிநாட்டுப் புலமையாளர்களால் மீளாய்வு செய்யப்பட்டு வெளியிடப்படுகின்றது.

தொகுதி: 11, எண்: 2 ஆடி– மார்கழி 2024

ISSN 2386 – 1630

ஆசிரியர்

வடிவேல் இன்பமோகன்

உதவி ஆசிரியர்

பேராசிரியர் சி.சந்திரசேகரம்

ஆசிரியர் குழு

பேராசிரியர் வீ.அரசு (இந்தியா)

பேராசிரியர் வ.மகேஸ்வரன் (இலங்கை)

முனைவர் ந.முத்துமோகன் (இந்தியா)

முனைவர் செல்வஜோதி இராமலிங்கம் (மலேசியா)

முனைவர் சுந்தர் காளி (இந்தியா)

பேராசிரியர் A.LM.றியால் (இலங்கை)

நிர்வாக ஆசிரியர்

முனைவர் சு.இராமர் (மதுரை) I முனைவர் மு.ஏழுமலை (சென்னை)

வெளியீடு

சுதந்திர ஆய்வு வட்டம்

முன் அட்டை & புத்தக வடிவமைப்பு

வெ.பாலாஜி

தொடர்பு

29/1A, ஞானசூரியம் சதுக்கம், 2ஆம் குறுக்கு,

மட்டக்களப்பு, இலங்கை.

தொலைபேசி 0774749441, 0776647375.

மின்னஞ்சல் : mozhithal2014@gmail.com

அச்சு

Aadhavan Art Print, Chennai – 116.

விலை: SLR 1000.00

INR 175.00

மொழிதலில் பிரசுரமாகும் கட்டுரைகளை ஆசிரியரின் அனுமதியுடன் மாத்திரமே மறுபிரசுரம் செய்யலாம். இவ்விதழிலே பிரசுரமாகியுள்ள கட்டுரைகளில் கூறப்பட்டுள்ள கருத்துக்கள் அனைத்தும் கட்டுரை ஆசிரியர்களின் சொந்தக் கருத்துக்களாகும்.

- ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிதலுக்கான ஆய்வுகள் கோரப்படுகின்றன.

ஆர்வமுடைய ஆய்வாளர்களிடமிருந்து மொழிதலுக்கான ஆய்வுக்கட்டுரைகள் கோரப்படுகின்றன. மொழிதலில் பிரசுரிப்பதற்கான ஆய்வுக்கட்டுரைகளை அனுப்பிவைக்கும் ஆய்வாளர்கள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யயுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்.

- ❖ மனிதவியல் கற்கைகள் (*Humanities Studies*), சமூக விஞ்ஞானங்கள் (*Social Sciences*) ஆகிய ஆய்வுத் துறைகளை உள்ளடக்கிய ஆய்வுகள் மொழிதலில் பிரசுரமாகும்.
- ❖ ஆய்வுகள் அறிமுகம் (*Introduction or Background of the study*), ஆய்வுப் பிரச்சினை (*Research problem*), ஆய்வின் நோக்கம் (*Objectives*), இலக்கிய மீளாய்வு (*Literature Review*), புதிய ஆய்வின் தேவை (*Gabs in Existing research*), முறையியல் (*Methodology / Method's*), ஆய்வுப் பொருள் பற்றிய கருத்தாடலும் முடிவுகளும் (*Results & Discussion*), முடிவுரை (*Conclusions & Recommendations*), உசாத்துணைகள் (*References*), பின்னிணைப்புக்கள் (*Annexures*) ஆகியவை ஆய்வின் தன்மைக்கேற்ப உள்ளடக்கப்பட வேண்டும்.
- ❖ ஆய்வு 3000 – 5000 க்கு இடைப்பட்ட சொற்களைக் கொண்டதாக அமைந்திருக்க வேண்டும்.
- ❖ உசாத்துணை மாதிரியாக ஹவாட் முறை (*Harvard style*) பரிந்துரைக்கப்படுகிறது.
- ❖ ஆய்வுகள் யுனிக்கோட் அல்லது பாமினி வரிவடிவில் அமையப் பெற்றிருக்க வேண்டும்.
- ❖ மொழிதல் ஆனி (*June*), மார்கழி (*December*) ஆகிய இரு மாதங்களிலும் வருடம் இரு இதழாக வெளிவருவதால் ஆய்வாளர்களால் அனுப்பி வைக்கப்படும் ஆய்வுகள் அனுப்பி வைக்கப்படும் காலத்தைப் பொறுத்து ஏதாவது ஒரு இதழில் வெளிவரும்.
- ❖ ஆய்வுகள் துறைசார்ந்த இரு மதிப்பீட்டாளர்களினால் மதிப்பீடு செய்யப்படும். மதிப்பீட்டாளர்கள் பரிந்துரைக்கும் திருத்தங்களை பூர்த்தி செய்யப்படும்போது ஆய்வு பிரசுரிப்பதற்கு தகுதியுடையதாகும். மதிப்பீட்டாளரால் நிராகரிக்கப்பட்ட ஆய்வுகள் பிரசுரிக்கப்பட மாட்டாது.
- ❖ முன்னமே ஆய்விதழ்களில் வெளியிடப்பட்ட, ஆய்வு மகாநாடுகளில் படிக்கப்பட்ட ஆய்வுகள் மொழிதலில் வெளியிடப்படமாட்டாது.

ஆய்வுகள் அனுப்பி வைக்கப்பட வேண்டிய மின்னஞ்சல் :

mozhithal2014@gmail.com / vinpamohan@yahoo.com

ஆசிரியர்கள்

மொழிதல்

Class No: 894.811
Acc No 63772.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளடக்கம்

ஆசிரியர் தலையங்கம்

உணவுப் பண்பாட்டில் நவீன அறிவியல் தொழில்நுட்பத்தின் தாக்கம் 07

1. **இந்தியச் சமூகத்தில் சமூக முரண்கள்: சாதி – சூத்திரர் – தீண்டப்படாதார் குறித்த அண்ணல் அம்பேத்கர் உரையாடல்கள்** 17
வீ.அரசு

2. **கம்பராயரோடு முரணும் சாமாண்டி: சமயக் கதையாடல்களும் சமூக உறவுகளும்** 42
மு.செல்வக்குமார்

3. **தமிழ்த் தொடுத்தெழுதல் : தொடுத்தெழுதலின் தேவையும் தொடுத்தெழுது முறைகளும்** 59
சி.சிவசேகரம்

4. **அருட்காடு என்னும் புனிதக் கருத்தாக்கமும் இயற்கை சார்ந்த சமூகச் சிந்தனையும்** 74
சி. ஜஸ்டின் செல்வராஜ்

5. **திரைப்படக் கலை பற்றிய அடோர்னோவின் சிந்தனைகள் - ஒரு தத்துவவியல் பகுப்பாய்வு** 91
இரத்தினசபாபதி பிறேம்குமார்

6. **அந்நியமாதல் கருத்துநிலையும் ஈழத்துப் புகலிடத் தமிழ் இலக்கியங்களும்** 109
த.மேகராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்
மொழிதல்
உணவுப் பண்பாட்டில் நவீன அறிவியல் தொழில்நுட்பத்தின் தாக்கம்

I

உயிரினங்களின் உயிர்வாழ்விற்கு உணவு அவசியமானது. உயிரினங்கள் இயற்கையில் இருந்து உணவைப் பெற்றுண்டு அவற்றின் வாழ்க்கைக் காலத்தை நீடிக்கின்றன. மனிதரும் பண்பாட்டு மயப்படுத்தப்படுவதற்கு முன்னர் ஏனைய உயிரினங்கள் போன்றே உயிரியல் தேவையைப் பூர்த்தி செய்தனர். பண்பாட்டு உயிரியாக மனிதர் வளர்ச்சியுற்ற பின்னர் உணவு தொடர்பான மனிதரின் நடைமுறைகளில் காலத்திற்குக் காலம் மாற்றங்கள் ஏற்பட்டு வந்த வண்ணமுள்ளன. இன்றைய நவீன அறிவியல், தொழில்நுட்ப யுகத்தில் மனிதரின் உணவுச் செயற்பாடுகள் அனைத்திலும் அறிவியல் (Science) தொழில்நுட்பம் (Technology) பாரிய தாக்கத்தை ஏற்படுத்திய வண்ணமுள்ளது[1].

அறிவியல், தொழில்நுட்பம் ஆகியன உணவுப் பண்பாட்டில் ஏற்படுத்தியுள்ள பாதிப்புகளை அனுகூலங்களாகவும் பிரதிகூலங்களாகவும் அடையாளப்படுத்தலாம். இதனைப் பண்பாட்டு உணவின் உற்பத்தி, பாதுகாத்தல், உண்பதற்கேற்றதாகப் பதப்படுத்துதல் (சமைத்தல்), அணுகல், நுகர்வு (உண்ணல்) ஆகிய செயற்பாடுகளில் அடையாளம் காணலாம். உணவுப் பண்பாட்டு மயப்படுத்தல் என்பது அறிவியல் தொழில் நுட்பத்தின் பெறுபேறாகும். பூர்வீக மக்கள் உணவைப் பெற்றுக் கொள்வதில் எதிர்கொண்ட பல்வேறு சவால்களுக்கு அறிவியல், தொழில்நுட்பம் தீர்வைப் பெற்றுக் கொடுத்தது. எந்தவித ஆயுதமும் இன்றி வேட்டை விலங்கை எதிர்கொண்ட வேட்டையாடி ஆயுதங்களைப் பயன்படுத்தி வேட்டையாடியபோது அறிவியல் தொழில்நுட்பத்தின் பயன்பாடு ஆரம்பித்துவிடுகின்றது. இதுவே மனிதரின் பண்பாட்டு மயப்படுத்தப்பட்ட செயற்பாடுமாகும். இதன்போது மனிதர் எதிர்கொண்ட அபாய நேர்வுகளில் இருந்து படிப்படியாக விடுவிப்புப் பெற்றதுடன் வாழ்வாதாரத்திற்கான உணவைப் பெற்றுக்கொள்வதில் நிலவிய நிச்சயமற்ற தன்மையும் நிச்சயப்படுத்தப்பட்டது. பண்பாட்டு மயப்படுத் தப்பட்ட மனித சமூகத்தில் அறிவியல் தொழில்நுட்பத்தின் பயன்பாடு உணவுச் செயற்பாட்டில் காலத்திற்குக் காலம் பயன்படுத்தப்பட்டு

---

1 *https://ayokasystems.com/news/from-farm-to-smartphone-the-impact-of-technology-on-todays-foodie-culture/, 07.09.2024*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்துள்ளது, பயன்படுத்தப்படுகிறது. மனித சமூகத்தின் உணவு விநியோகத்தைத் தொடர்ச்சியாக ஒழுங்குபடுத்திய வண்ணமுள்ளது. சமகாலத்தில் அபார வளர்ச்சியைப் பெற்றுள்ளது. இந்த வளர்ச்சியில் பல காரணிகள் தாக்கம் செலுத்தினாலும் குறிப்பாகச் சுட்டிக்காட்டத்தக்கதாக விளங்குவது சர்வதேச ரீதியில் அதிகரித்துக் கொண்டு செல்லும் சனத்தொகைப் பெருக்கமாகும்.

சர்வதேச ரீதியில் அதிகரித்துச் செல்லும் சனத்தொகை உயிரினங்களுக்கும் இயற்கைச் செயற்பாடுகளுக்கும் அச்சுறுத்தலாக உள்ளது. விவசாயத்தின் தோற்றத்தால் கிட்டத்தட்ட கி.மு. 8000களில் சர்வதேச சனத்தொகை சுமார் 5 மில்லியனாக (Million) இருந்தது. கைத்தொழில் புரட்சியுடன் ஏற்பட்ட மாற்றத்தின் பின்னர் சர்வதேச சனத்தொகை ஒரு பில்லியனை எட்டுவதற்கு சுமார் 1800 ஆண்டுகாலத்தை எடுத்துக் கொண்டது. 20ஆம் நூற்றாண்டில் 1.65 பில்லியனில் இருந்து 6 பில்லியனாக அதிகரித்தது. 1970 இல், உலகில் இப்போது இருப்பதில் அரைவாசியாகக் காணப்பட்டது. ஆனால், இன்றைய உலக சனத்தொகை 8.2 பில்லியனைத் (Billion) தாண்டியுள்ளது[2].

பெருகிவரும் சனத்தொகைக்கு ஏற்றவிதத்தில் உணவை வழங்க வேண்டிய தேவை சர்வதேசத்திற்கு ஏற்படுகிறது. இதற்கு பாரம்பரியமாகப் பயன்படுத்தப்பட்டு வந்த உணவு விநியோகச் செயற்பாடுகளை மறுசீரமைக்க வேண்டிய தேவை ஏற்படுகின்றது. ஏனெனில், மறுசீரமைக்காவிடின் உலகிலுள்ள அதிக மக்கள் பட்டினிச் சாவை எதிர்கொள்ள வேண்டியேற்படும் என்பதே இதிலுள்ள பிரச்சினையாகும். இதனை அறிவியல் தொழில்நுட்பத்தினாலேயே பூர்த்திசெய்ய முடிந்தது. அறிவியல் பெருக்கமுற்று வரும் சனத்தொகைக்குத் தேவையான உணவை உற்பத்தி செய்து வழங்குவதற்கான வழிவகைகளை முன்மொழிய தொழில்நுட்பம் அதனை நடைமுறைச் சாத்திய முடையதாக்கியது.

நவீன அறிவியல் தொழில்நுட்பத்தின் பாதிப்புக்கு முற்பட்ட உணவுச் செயற்பாடு இன்றுள்ளது போன்று முழுமையாக வர்த்தகமயப் படுத்தப்பட்ட பல்தேசிய நிறுவனங்களின் ஆதிக்கத்திற்கு உட்பட்டதாக இருக்கவில்லை. சுதேச உணவு உற்பத்தி அதாவது, அனேகமான மக்கள் அவர்களுக்குத் தேவையான அடிப்படையான உணவை அவர்களே உற்பத்தி செய்து கொண்டதுடன், இயற்கையில் இருந்தும் சில உணவுகளைப் பெற்றுண்டனர். இதன்போது உலகில் உள்ள 90% மக்கள் உணவு உற்பத்தியில் ஈடுபட வேண்டியிருந்தது. பாரம்பரிய உணவு விநியோகத்தில் பண்டமாற்று முறையும் பங்காற்றியது. ஆரம்பகால மக்களின் பொருளாதார ஈட்டம் வாழ்வாதாரத்தை அடிப்படையாகக் கொண்டது.

---

2 https://ayokasystems.com/news/from-farm-to-smartphone-the-impact-of-technology-on-todays-foodie-culture/, 07.09.2024

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரம்பரிய பொருளாதார முறையில் இருந்த குறைபாடுகளை நிவர்த்தி செய்வதை நோக்காகக் கொண்டு பணப் பொருளாதாரம் தோற்றம் பெற்றது. பணப் பொருளாதாரம் உணவு வர்தகத்திலும் கூடுதலான தாக்கத்தைச் செலுத்தியது. உற்பத்தியில் தொழிலாளி, முதலாளி எனும் தரப்பகுப்பு, உற்பத்திப் பொருட்களுக்கு வழங்கப்பட்ட பெறுமானம் ஆகியன பணப் பொருளாதாரத்துடன் இணைந்திருந்தன. இது சமூக ஏற்றத்தாழ்விற்கும் வழிவகுக்கின்றது. அதிகரித்துச் செல்லும் சனத்தொகைக்கான உணவுத் தேவையை பாரம்பரிய உணவீட்டத்தினால் பூர்த்திசெய்ய முடியாத நிலைமை ஏற்பட்டதுடன் உணவு வர்த்தகம் பிரதானமான இலாபமீட்டுந் தொழில்துறையாக மாற்றமடைகின்றது. பாரம்பரிய சமூகத்தில் வாழ்வாதாரத்தினை அடிப்படையாக விளக்கிய உழைப்பு பணப் பொருளாதாரம் பிரதானம் பெற்றதும் மாற்றமடைகின்றது. மக்களின் தேவைகள் பல்கிப் பெருகின. தொடர்பாடல், பொழுதுபோக்கு, விளையாட்டு, போக்குவரத்து, மருத்துவம், கல்வியுடன் இணைந்த தொழில்வாய்ப்பு, ஆடம்பர வதிவிடம் எனப் புதிய தேவைகளின் பட்டியல் விரிவடைந்து கொண்டு செல்கின்றது.

பணத்தைப் பிரதானப்படுத்தும் புதிய தேவைகள் புறந்தள்ள முடியாத விதத்தில் மனித வாழ்வுடன் இணைக்கப்படுகின்றன. இவை அறிவியல் தொழில்நுட்பத்தால் உருவான சாதனங்களுடன் (கையடக்கத் தொலைபேசி, கணினி, மோட்டார் வண்டி, கார், தொலைக்காட்சி போன்றன) தொடர்புபடுத்தப்பட்டிருந்தன. இவை புதியதொரு வாழ்க்கைச் சூழலுக்குள் மக்களை இடம் மாற்றியது. இந்தப் புதிய வாழ்க்கைச் சூழல் குடும்பப் பொருளாதார அமைப்பை பாதிக்கின்றது. வாழ்வாதாரத் தேவைகளை அவர்கள் வாழும் சூழலில் கிடைக்கக்கூடிய பொருட்கள், சேவைகளில் இருந்து பெற்றுப் பூர்த்தி செய்த மக்கள் அவர்கள் முன் திணிக்கப்பட்ட புதிய வாழ்க்கைச் சுமையால் அவர்கள் வாழும் சூழலில் இருந்து அன்னியமாவதுடன், ஓய்வின்றி உழைக்க வேண்டிய தேவையும் ஏற்படுகின்றது. ஆண்களின் வருமானம் குடும்ப அமைப்பில் பிரதானம் பெற்ற நிலை மாற்றமுற்று பெண்களும் குடும்ப பொருளாதாரத்தை ஈடுகட்டுவதற்காக உழைக்கவேண்டிய தேவை ஏற்படுகிறது. இதன்போது புதிதாக உருவாக்கப்பட்ட சித்தாந்தங்கள் புதிய சமூக அமைப்பைப் பேணுவதற்கு உதவின (எடுத்துக்காட்டாக பெண்களை மையப்படுத்திய சித்தாந்தங்கள்). மக்கள் தொகைப் பெருக்கத்தால் பாரம்பரிய உணவு உற்பத்திக்குரிய பௌதீக வளங்கள் குறைவாக இருந்தாலும் இருக்கும் வளங்களைப் பயன்படுத்தி உணவு உற்பத்தியில் ஈடுபடுவதற்கான வாய்ப்பை நவீன வாழ்க்கைக் கட்டமைப்பு வழங்கவில்லை. இவ்விடத்தில் மக்களின் நடத்தையில் ஏற்பட்ட மாற்றமும் குறிப்பிடத்தக்கது. உணவு உற்பத்தியில் ஈடு படுவதைத் தவிர்த்து உணவைப் பணங்கொடுத்துப் பெற்று உண்ணபதில் ஆர்வம் காட்டினர். புதிய வாழ்க்கைச் சூழல் வழங்கிய கௌரவம், வசதி போன்றவற்றால் இம்மாற்றம் ஏற்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவு உற்பத்தியை தேசிய ரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் அங்கிகாரம் பெற்ற பெரு நிறுவன உற்பத்தியாளர்களே மேற்கொள் வதற்கான அனுமதி வழங்கப்படுகின்றது. இந்நிறுவனங்கள் அதிநவீன வளர்ச்சியுற்ற தொழில்நுட்பச் சாதனங்களையும், நுட்பங்களையும் பயன்படுத்தி பாரம்பரிய முறைமைகள் போலன்றி குறுகிய காலத்தில் உற்பத்தியை மேற்கொள்கின்றன. இதன்படி அமெரிக்காவில் வாழும் மக்களுக்குத் தேவையான உணவை 2% மான மனித வலுவைப் பயன்படுத்தி உற்பத்தி செய்ய முடிந்ததுடன், இந்த உற்பத்தி செய்யப்பட்ட உணவில் அமெரிக்க மக்களின் நுகர்வுத் தேவைக்குரியவை தவிர மீதமாக உள்ள உணவுப் பொருட்கள் வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யவும்படுகின்றன[3]. இதன்போது ஏனைய தேவைகளைப் போன்று உணவும் சந்தையில் பணத்தைக் கொடுத்து பெற்றுகொள்ள வேண்டிய தேவையாக மாற்றமடைகின்றது. ஏனெனில் ஏனைய உற்பத்திகள் போலன்றி உலகிலுள்ள அனைத்து மக்களினதும் வாழ்வாதாரத் தேவையாக உணவு விளங்கியதால் உணவிற்கான சந்தை மிகவும் பலமானதாக இருந்தது. உணவுற்பத்தி தொழில்துறை மக்களின் நுகர்வுத் தேவைக்கேற்ப தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட வேண்டியதொன்றாக உள்ளதால் நம்பகத் தன்மையுடைய இலாபம் ஈட்டும் தொழில்துறையாக வளர்ச்சியடைந்தது.

II

உணவில் நவீன அறிவியல் தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டதன் பின்னர் மக்களுக்குப் பல நன்மைகள் கிடைத்தன. அவற்றை,

1. மேம்படுத்தப்பட்ட உணவுப் பாதுகாப்பு
2. உணவுப் பொருட்களின் ஆயுட்காலம் அல்லது பாவனைக் காலம் நீடிக்கப்பட்டமை
3. ஊட்டச்சத்துப் பெறுமானம் மேம்படுத்தப்பட்டமை
4. உற்பத்தித் திறனை அதிகரித்தமை
5. உணவுப் பொருட்களைப் பெற்றுக்கொள்வதற்கான வசதி, அணுகல் அதிகரிப்பு
6. உணவின் நிலைத்ததன்மை (*Sustainability*) மேம்படுத்தப்பட்டமை
7. விரிவாக்கம் செய்யப்பட்ட சந்தை வரம்பெல்லை
8. உணவுச் செயற்பாட்டில் மேம்படுத்தப்பட்ட புதுமைகள்

என வகைப்படுத்த முடியும். பாரம்பரிய உணவுச் செயற்பாட்டில் நிலவிய பல பிரச்சினைகளுக்கான தீர்வை மேற்குறிப்பிட்ட அனுகூலங்கள் பெற்றுக் கொடுத்தன.

---

3 யுவான் நோவா ஹராரி. (2018) சேப்பியன்ஸ்: மனிதகுலத்தின் ஒரு சுருக்கமான வரலாறு. தமிழில் நாகலட்சுமி சண்முகம். போபால் 462003- இந்தியா: மஞ்சுள் பப்பிஷிங் ஹவுஸ். ப:409.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

III

உணவில் அறிவியல் தொழில்நுட்பத்தின் பயன்பாட்டால் ஏற்படுத்தப் பட்ட பிரதிகூலங்கள் நீண்டநாள் விளைவுகளை ஏற்படுத்தக் கூடியனவாக அமைகின்றன. இது தொடர்பாக "புதிய தொழில்நுட்பங்கள் உணவு அமைப்பிலுள்ள சில பிரச்சினைகளை நிவர்த்தி செய்வதற்கு உதவிய அதேவேளை, அவற்றின் இடையூறு, எதிர்பாராத விளைவுகளை ஏற்படுத்தும் நீண்டநாள் தாக்கங்களைக் கொண்டதாக அமைந்திருந்தது, சில நன்மைகளை விளைவித்தாலும் நிலையான அபிவிருத்தி இலக்கு களை அடைவதற்கு அறிவியல் தொழில்நுட்பத்தால் வாய்ப்பில்லை" என பேராசிரியர் மரியோ ஹெர்ரெரோ[4] குறிப்பிடும் கருத்துகள் உணவில் அறிவியல் தொழில்நுட்பம் செலுத்தும் பிரதிகூலங்களைப் பொறுத்தவரை ஏற்புடையதே.

இப்பாதிப்புக்களில் மக்களை தாக்கும் நோய்கள் குறிப்பிடத்தக்கன. உணவு உற்பத்தி, பதப்படுத்தல், தயாரிப்பு நுட்பங்கள், உணவின் பாவனைக் காலத்தை நீடித்தல், சுவையீட்டல், பொதிசெய்தல் போன்ற வற்றின்போது உணவில் சேர்க்கப்படும் பொருட்கள் உடல்நலத்தில் பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றன என்பதை ஆய்வுகள் தெரியப்படுத்துகின்றன. இவை ஒவ்வாமை, நுண் உணர்திறன் பாதிப்பு, நாட்பட்ட நோய்கள் உள்ளிட்ட பாதகமான உடல்நல விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை அறிய முடிகிறது. எடுத்துக்காட்டாக பதப்படுத்தல் நுட்பங்களில் ஒன்றான பொரித்தல் பாரதூரமான ஆரோக்கியத் தாக்கங்களை ஏற்படுத்தும் எனக் குறிப்பிடப்படுகிறது. அது தொடர்பான ஜெகி பெர்க்கின் பரிந்துரை பின்வருமாறு அமைகிறது. "சமீபகாலங்களில், அக்ரிலாமைடு *(Acrylamide)* பிரச்சினை தொடர்பாக பொரித்தலின் ஆரோக்கிய தாக்கங்கள் தீவிரமாக ஆய்வு செய்யப்பட்ட விடயமாக மாறியுள்ளது. அக்ரிலாமைடு (C_2H_5NO) என்பது அஸ்பாரகின்கள் *(Asparagines)* அதிக வெப்பநிலையில் சர்க்கரையைக் குறைக்கும்போது உருவாகும் ஒரு பொருளாகும். இது புற்றுநோயை ஏற்படுத்தும் என சந்தேகிக்கப்படுகிறது. அதிக வெப்பநிலைக்கு உட்படுத்தப்பட்ட ஸ்டார்ச் *(Starch)* கொண்ட உணவுகள் (வறுத்த உருளைக்கிழங்கு பொருட்கள் போன்றவை) பிரச்சினைக்குரிய முக்கிய காரணிகளாக தெரிகிறது.[5] இவ்வாறான உணவுகளை பெரு நிறுவனங்கள் சர்வதேச சந்தையை இலக்காகக் கொண்டு பெரியளவில் தயாரிக்கப்படுகின்றன. இது முழுக்க முழுக்க இயந்திரங்களால் மேற்கொள்ளப்படும் உற்பத்தி யாகும்.

---

4 Professor Mario Herrero, lead author of the paper and Chief Research Scientist at the Commonwealth Scientific and Industrial Research Organisation (CSIRO). HTTPS://CCAFS.CGIAR.ORG/NEWS/PROS-AND-CONS-EMERGING-TECHNOLOGY-OUR-FOOD-SYSTEM.23.09.2024.

5 Zeki Berk. (2009) Food Process Engineering and Technology. Second Edition. Landon NW1 7BY, UK: Elsevier Inc.P:586.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரபணு மாற்றப்பட்ட உயிரினங்கள் (தாவரம், விலங்குகள்) (GMO - Genetically Modified Organisms) மனித ஆரோக்கியத்தில் நீண்டகாலப் பாதிப்புக்களை ஏற்படுத்தும் காரணிகளில் ஒன்று. மரபணு மாற்றப்பட்ட தாவர உற்பத்தியின்போது நன்மை செய்யும் பூச்சிகள், தாவரங்கள் ஆகியவற்றின் நீடித்த வாழ்வு குறைவடைந்து அவை படிப்படியாக அழிவடைந்து போகின்றன. பூச்சி-எதிர்ப்பு, களைநாசினி-எதிர்ப்புத் தாவரங்கள் உருவாவது அவை இல்லாமல் போவதற்கான காரணமாகிறது. விவசாய நடவடிக்கைகளின்போது விளைச்சலை அதிகரிப்பதற்காகக் களைநாசினிகளை விசுறும் செயற்பாடு களைகளை மேலும் வீரியமடையச் செய்கின்றது. இதனால் களைகளை அழிப்பதற்காக அதிகரித்த செயல்திறன் கொண்ட களைநாசினிகளை விசிற வேண்டிய தேவை ஏற்படுகின்றது. அத்துடன் மரபணு மாற்றப்பட்ட விவசாய நடவடிக்கையின்போது இயற்கையாகச் செயற்படும் வைரஸ்கள், மரபணு மாற்றப்பட்ட தாவரங்களை உருவாக்க அறிமுகப்படுத்தப்பட்ட வைரஸ் கூறுகளுடன் மீண்டும் ஒன்றிணைந்து புதிய வைரஸ்களை உருவாக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. கூடுதலாக, புதிதாக உருவாக்கப்பட்ட இந்த வைரஸினால் பல மாறுபாடான விளைவுகள் ஏற்படலாம் (பாதகமான) என ஆய்வுகள் தெரியப்படுத்துகின்றன[6].

இதேபோன்று மரபணு மாற்றப்பட்ட விலங்குகளின் நிறை அதிகரிப்பு, வீரியம், கூடுதலான முட்டைகள் இடச் செய்தல், அதிக பால் உற்பத்தி, வீரியமான குட்டிகளை ஈனுவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் அனைத்தும் மக்கள் அவ்விலங்குகளை உணவாக உண்ணும் போது உடலியல் மாற்றங்களையும் நோய்களையும் ஏற்படுத்துகின்றன. *(எடை அதிகரிப்பு, மலட்டுத் தன்மை, சிறுவயதில் முதிர்ச்சியடைதல் நாட்பட்ட நோய் போன்ற பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன).* இயற்கை முறை உணவு உற்பத்தியில் மக்கள் இவ்வாறான உடலியல் பாதிப்புக்களை எதிர்கொள்வதில்லை. *ஏனெனில், தாவரங்கள் இயற்கை உரங்களைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படுவதுடன், விலங்குகள், பறவைகள் இயற்கைச் சூழலில் காணப்படும் உணவுப் பொருட்களையே உணவாக உட்கொள்கின்றன.*

பிராந்திய, உள்ளூர் உணவுப் பண்பாட்டில் ஏற்பட்ட மாற்றங்களில் உணவு விநியோகம் ஒருங்கிணைக்கப்பட்டு (Integration) பெரும் பண்பாட்டிற்குள் உள்வாங்கப்படுவதும் அடுத்து அடையாளப்படுத்தபட வேண்டிய பாதிப்பாகும்.

---

6 A. S. Bawa & K. R. Anilakumar. (November–December 2013) "Genetically modified foods: safety, risks and public concerns—a review" India: Association of Food Scientists & Technologists. Issue & Pages: 50(6):1035–1046. https://www.ncbi.nlm.nih.gov/pmc/articles/PMC3791249/pdf/13197_2012_Article_899.pdf,23.09.2024.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவு வர்த்தகம் உலகமயமாக்கலுக்கு உட்பட்டதன் பின்னர் பிராந்திய உணவுப் பண்பாடு பாதிப்புக்குள்ளாகிறது. "1990களில் தேசிய எல்லைகளுக்கு அப்பால் உணவுச் செயற்பாடுகளுடன் தொடர்பு டைய உறவுகளை விரிவுபடுத்துவதில் முழுக்கவனஞ் செலுத்தப்பட்டது. விவசாயத்தில் தேசிய அடிப்படையிலான கட்டமைப்புகளை மாற்றிய மைத்து, வளர்ந்து வரும் சர்வதேச வர்த்தக மாதிரிகள் பற்றிய விடயங் களைப் பரீட்சித்து (பாரம்பரியமற்ற ஏற்றுமதிகள், தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்களை மேம்படுத்துதல் போன்றவை), அபிவிருத்தியடைந்து வரும், அபிவிருத்தியடைந்த நாடுகளில் விவசாய உணவு முறைகளுக் கான விளைவுகளைப் பற்றிப் பரீசீலித்தல் பிரதானம் பெற்றது. இதன்போது உலகளாவிய உணவு ஒழுங்குமுறையில் ஒரு புதிய சகாப்தம் உருவாக்கப்படுவதில் பாரிய உடன்பாடு நிலவியது. மிகவும் நெகிழ்ச்சி யான உற்பத்தி முறைகளுக்கு மாறுதல், புதியதும், அதிக லாபத்தையும் பல்தேசிய நிறுவனங்கள் அடைதல் போன்ற நோக்கங்கள் இந்த உணவு வர்த்தகத்தில் பிரதானம் பெற்றிருந்தன. தேசிய எல்லைககளைத் தாண்டி உலகம் முழுவதும் உணவு வர்த்தகத்தை இலகுவாக மேற்கொள்வதற்கு அனுமதித்தல் இதில் முதன்மை பெற்றது. இதனைச் சிலர் "அமைதிப் புரட்சி" என்றனர். பலருக்கு இது அச்சுறுத்தலாக அமைந்தது"[7]

உணவைப் (1) பாதுகாக்கும் நுட்பம் (2) இயந்திரமயமாக்கல் (3) சில்லறை, மொத்த விற்பனையின் விரிவாக்கம், (4) போக்குவரத்து வசதி ஆகிய நான்கு காரணிகளே மேற்கு நாடுகளில் உணவு தொழில் மயமாக்கல் எழுச்சியில் முக்கியபங்கு வகித்தன.[8] தொழில் மயமாக்கத்தின் அடுத்த கட்ட நகர்வாகவே உலகமயமாக்கம் அமைந்திருந்தது. தொழில் மயமாக்கம், வர்த்தக மயமாக்கம், உலக மயமாக்கம் ஆகியன ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய செயற்பாடுகளாக வளர்ச்சி கண்டன.

உணவில் ஏற்படுத்தப்பட்ட உலகமயமாக்கல் செயல்முறை தேசிய அரசுகளுக்குள் நிலவிய தனித்துவமான பண்பாட்டு உணவு முறை களையும் சர்வதேச உணவுப் பண்பாட்டுடன் இணைக்கும் செயற்பாடாக அமைந்திருந்தது. பலம் பொருந்திய தேசிய அரசுகள் அவற்றின் பொருளாதார மேம்பாட்டை அடைதல் எனும் சுய லாபத்திற்காக உருவாக்கிய ஓரினவாக்கச்செயற்பாட்டை உணவில் மேற்கொள்வதற்கான ஒரு செயற்பாடாக உணவு வர்த்தகத்தை சர்வதேச வர்த்தக

7 Lynne Phillips. (2006) Food and Globalization. Annual Reviews is collaborating with JSTOR to digitize, preserve and extend access to Annual Review of Anthropology. Vol. 35 (2006), pp. 37-57. Stable URL: http://www.jstor.org/stable/25064913.

8 Jack Goody. (2013) "Industrial Food: Towards the Development of a World". Cuisine food and culture: a reader, third edition, edited by carole counihan and penny van esterik. New York, NY 10017: Routledge, Taylor & Francis Group. P:73.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலையமைப்பாக மாற்றும் செயற்பாடு அமைந்திருந்தது. இது உலகம் முழுவதும் வாழும் மக்களைக் குறித்த ஒரு உணவுப் பண்பாட்டுக்குள் வழிப்படுத்தும் முயற்சியாக அமைந்தது. இதில் சர்வதேச ரீதியில் இயங்கும் துரித உணவு நிறுவனங்கள், சர்வதேச ரீதியிலும் தேசிய ரீதியிலும் செயற்படும் பல்பொருள் விற்பனை நிலையங்களும் பங்காற்றின. இதன் போது பிராந்திய, உள்ளூர் உணவுச் செயற்பாடுகள் வீழ்ச்சியடைகின்றன. இங்கு உணவு முழுக்க முழுக்க ஒரு வர்த்தகப் பொருளாகின்றது. இச்சந்தர்ப்பத்தில் உணவு விநியோகம் முழுமையாக நுகர்வோரின் கட்டுப்பாட்டை இழக்கின்றது.

உணவு வர்த்தகத்தில் அதிவேக வளர்ச்சியை ஏற்படுத்துவதில் நவீன டிஜிட்டல் (Digital) தொழில்நுட்பம் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. சந்தையில் கிடைக்கும் உணவுடன் தொடர்புடைய தகவல்கள், புதிய சமையல் குறிப்புகளைப் பெற்றுக்கொள்ளல், அதனைப் பயன்படுத்தி அவர்களுக்குப் பரிச்சயமற்ற உணவுகளைக் கூடத் தயாரித்தல், உணவு உண்ணும் முறை எனப் பல விடயங்களையும் இலகுவாக்கியது.

தொழில்நுட்பம் சமையலுக்குப் பாரம்பரியமாகப் பயன்படுத்தப்பட்டு வந்த ஒழுங்கமைக்கப்பட்ட உபகரணங்களில் இருந்து மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பத் திறன்வாய்ந்த உபகரணங்களை மக்களுக்கு வழங்கியது. அவை உணவு சமைக்கும் முறைமையில் பாரிய புரட்சியை ஏற்படுத்தியுள்ளன. ஓவன்கள் (Ovens), சௌஸ்-வீட் இயந்திரம் (Sous-Vide Machines), அழுத்த அடுப்பு (Precision Cookers) போன்ற ஸ்மார்ட் சமையலறைச் சாதனங்கள் வீட்டில் சமையல் செய்வோர் சமையல் நிபுணரினால் தரத்தைக் கொண்ட சமையலை மேற்கொள்ளக்கூடிய திறனை வழங்கியது. இது சமையல் முறையையும் சர்வதேச தரம் வாய்ந்ததாக மாற்றியுள்ளது.

புதுமையானதும் சுவையானதுமான உணவுப் பொருட்கள், உணவைக் கொள்வனவு செய்வதற்கான உபகரணங்கள், நுட்பம், அவற்றைச் சமைக்கும் முறைமைகள், சமைப்பதற்கான உபகரணங்கள், சமைத்த உணவைப் பரிமாறுவதற்கான, உண்பதற்கான உபகரணம், உணவைப் பாதுகாக்கும் உபகரணம் என உணவுடன் தொடர்புடைய சகல செயற்பாடுகளையும் மேற்கொள்வதற்கான பொருட்கள், சேவைகளை நவீன தொழில்நுட்பம் வழங்கியது. பாரம்பரிய முறைமை போலன்றி நீண்டதொரு செயல் ஒழுங்கு முறையினூடாக இப்போது மக்களை உணவு சென்றடைகின்றது. இதன்போது 1) அனைத்து உணவுச் செயற்பாடுகளையும் பணத்தைச் செலுத்தியே மக்கள் பூர்த்தி செய்ய வேண்டியுள்ளது. 2) சர்வதேசத்திற்கே பொதுவான உணவு விநியோகக் கட்டமைப்புப் பயன்படுத்தப்படுவதுடன் விநியோகிக்கப்படும் உணவுப் பொருட்கள் சர்வதேச தரச்சான்றுதல் கொண்டவை. 3) இதனால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவுடன் தொடர்புடைய பண்பாட்டு நியமங்கள் நாடுகள், பிராந்தியங்கள், சமூகக் குழுக்கள் என வேறுபட்டிருந்த நிலை மாறி ஒற்றைப் பரிமாணம் பெறுகின்றன.

உணவில் உலகமயமாக்கல் செயற்பாடானது மக்களிடம் இருந்து பணத்தைப் பெரு முதலாளிகளின் கரங்களுக்கு மாற்றுவதற்கான திட்டத்துடன் தொடர்புடைய உணவுப் பண்பாட்டை ஒருங்கிணைக்கும் செயற்பாடாக அமைந்திருந்தது. ஓரினவாக்கத்தின் பாதிப்பு சமையல் பாரம்பரியம், உள்ளூர் உணவு முறைகளைப் பாதுகாப்பதில் நம்பிக்கையீனத்தை ஏற்படுத்துகிறது.[9] இது பிராந்திய உணவுப் பண்பாட்டின் வீழ்ச்சிக்கு, வழிவகுத்தது.

வளர்ப்பு விலங்குகள், பறவைகளின் நலன்கள் கருத்திற் கொள்ளப்படாமை, சுற்றுச் சூழல் மாசடைதல், மனித இடைவினை அல்லது செயற்பாடு இழக்கப்படுதல், உணவுச் செயற்பாடுகளுக்கு தொழில்நுட்பத்தைச் சார்ந்திருத்தல், அதிகரித்த துல்லியமான தகவல்கள், தனித்துவம், நம்பகத்தன்மை இல்லாமை என மேலும் பல பிரதிகூலங்களும் சுட்டிக்காட்டத்தக்கன. இவை விரிவான ஆய்வில் உள்ளடக்கப்பட வேண்டியவை.

வளர்ச்சியுற்றுவரும் மக்களின் கேள்விக்கு ஏற்ற விதத்தில் உணவு விநியோகத்தைப் பாரம்பரிய முறையில் மேற்கொள்ள முடியாத நிலையில் உணவு உற்பத்தியுடன் தொடர்புடைய செயற்பாடுகள் அனைத்திலும் அறிவியல், தொழில்நுட்பம் புரட்சியை ஏற்படுத்தியது. மக்கள் நிலைப்பட்ட கேள்வி நிவர்த்தி செய்யப்பட்டது அறிவியல் தொழில்நுட்பத்தால் ஏற்பட்ட பெரு நன்மையாகும். இருந்தும் உணவு ஒரு இலாபமீட்டும் வர்த்தகத்துறையாக மாற்றமடைந்தது நுகர்வோரை நெருக்கடிக்குள் தள்ளியது. உணவு வர்த்தகத்தில் ஈடுபடுவோர் இலாபத்தை அதிகரிப்பதற்கு மேற்கொண்ட தந்திரோபாயங்கள் மக்கள் நலன்சார்ந்த விடயங்களில் அக்கறை செலுத்தாமை இதற்கான காரணமாகும். இதனால் நுகர்வோர் பல அபாயநேர்வுகளை எதிர்கொள்வதற்கான வாய்ப்புகளை உருவாக்கியது. சமகாலத்தில் ஏற்பட்டுள்ள உணவுப் பிரச்சினைகளில் இருந்து விடுபடுவதற்காக சில நுகர்வோர் சமூகங்கள் "மீண்டும் கிராமத்திற்கு திரும்புவோம்" எனும் கருத்துக்கு அழுத்தம் கொடுத்து செயற்படுவதும் சுட்டிக்காட்டத்தக்கது. எது எவ்வாறு இருப்பினும் "தக்கன பிழைக்கும்" எனும் டாவின்சின் கூற்றை நடைமுறைச் சாத்தியமாக்குவது சிறப்பு.

9 https://www.collegenp.com/article/advantages-and-disadvantages-of-food-technology/23.09.2024.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

IV

மொழிதலின் இந்தப் பருவ இதழில் மொத்தமாக ஆறு ஆய்வுக் கட்டுரைகள் இடம்பெறுகின்றன. முதல் கட்டுரை பேராசிரியர் வீ.அரசு அவர்களின் அம்பேத்கர் ஆக்கங்கள் பற்றியதொரு தெளிவை குறிப்பாக, சாதி – சூத்திரர் – தீண்டத்தகாதோர் பற்றிய உசாவல் மார்க்சிஸ பின்னணியில் மேற்கொள்கிறது. அடுத்து முனைவர் மு.செல்வக்குமரனின் ஆய்வான "கம்பராயரோடு முரணும் சாமாண்டி: சமயக் கதையாடல்களும் சமூக உறவுகளும்" வாய்மொழி மரபுகளை அடிப்படையாகக் கொண்டு சமய, சமூக உறவுகளை ஆய்வுக்குட்படுத்த முனைகிறது. பேராசிரியர் சி.சிவசேகரம் அவர்கள் தமிழில் தொடுத்தெழுதலின் தேவையும் தொடுத்தெழுதும் முறைகளையும் பற்றி விவாதிக்கின்றார். முனைவர் சி.ஜஸ்டின் செல்வராஜ் மானிடவியல், சமய அடிப்படையில் அருங்காடுகள் (வனம்) பற்றிய கருத்தாக்கத்தை ஆய்வுக்குட்படுத்தி யுள்ளார். இரத்தினசபாபதி பிரேம்குமார் பின்நவீனத்துவ சிந்தனையாளர் அடோர்னோ திரைப்படக் கலை பற்றி முன்வைத்த கருத்துக்களை மெய்யியல் நோக்கில் பகுப்பாய்வு செய்கிறார். இறுதியாக கலாநிதி த. மேகராசா அந்நியமாதல் கருத்துநிலையை ஈழத்துப் புகலிடத் தமிழ் இலக்கியங்களை அடிப்படையாகக் கொண்டு பேசுகின்றார்.

மொழிதலில் இந்தப் பருவ இதழுக்கான ஆய்வுகள் ஆளுமைகள், சமயம், மானிடவியல், வாய்மொழி வழக்காறு, கலை, இலக்கியம், மொழி போன்ற விடயங்களை சமூக விஞ்ஞானம், மனிதப் பண்பியல் ஆகிய இரு துறைகளினுள்ளும் காலூன்றிப் பேசியுள்ளன. மொழிதலின் வரவிற்குத் தொடர்ந்தும் தமது பங்களிப்பை வழங்கிக் கொண்டிருக்கும் ஆய்வாளர்கள், வாசகர்கள், அச்சகத்தார், வடிவமைப்பாளர், நண்பர்கள் அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்வுறு கின்றோம்.

ஆசிரியர்

பேராசிரியர் வ.இன்பமோகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1

இந்தியச் சமூகத்தில் சமூக முரண்கள்: சாதி – சூத்திரர் தீண்டப்படாதார் குறித்த அண்ணல் அம்பேத்கர் உரையாடல்கள்

வீ.அரசு [1]

இந்தியச் சமூகம் குறித்த சூழலியல், பொருளியல், சமூகவியல் ஆகிய கோணங்களில் ஆய்வு நிகழ்த்தும் தேவை நம்முன் உள்ளது. இந்தியச் சமூகம் என்பது படிநிலைச் சமூகமாக அமைந்துள்ளது. படிநிலைச் சமூகம் குறித்த ஆய்வில் பொருளியல் ஆய்வுகளை நிகழ்த்தும் அவசியம் உண்டு; ஆனால் அவற்றை நிகழ்த்துவதற்கு, இந்தியச் சமூகம் குறித்த சமூகவியல் ஆய்வுகள் அடிப்படையாய் அமைகின்றன. சமூகவியல் ஆய்வு என்பது இந்தியாவில் வாழும் மக்கள் குறித்தப் பல்பரிமாண ஆய்வுகள் ஆகும். சமூகவியல் ஆய்வுகளை நிகழ்த்தும்போது, இந்தியாவில் புழக்கத்தில் உள்ள வருணம், சாதி ஆகிய படிநிலை சார்ந்த நிறுவன செயல்முறை குறித்த ஆய்வுகள் முதன்மைப்படுகின்றன. இந்தப் பின்புலத்தில் அண்ணல் அம்பேத்கர் (1891-1956) நிகழ்த்தியுள்ள வருணம், சாதி குறித்த ஆய்வுகள் குறிப்பிடத்தக்கவை. அம்பேத்கர் நிகழ்த்தியுள்ள இவ்வகையான சமூகவியல் ஆய்வுகளை நமது வசதிக்காகப் பின் காணும் வகையில் அமைத்துக் கொள்வோம்.

- இந்தியாவில் சாதிகள் என்ற சமூக அமைப்பை எவ்வாறு வரையறை செய்வது; சாதிகளின் தோற்றத்தை எவ்வாறு புரிந்து கொள்வது; சாதி எவ்வாறு சமூகத்தில் இயங்குகிறது; சாதி செயல்பட்டு வரும் வரலாறுகளை எப்படிப் பதிவு செய்வது ஆகியவை குறித்து அம்பேத்கர் நிகழ்த்தியுள்ள ஆய்வுகள் குறித்த உரையாடல்.

- சாதிகள் சமூகத்தில் செயல்படும் முறைகளால் உருவாகும் பல்வேறு முரண்கள்; சாதியை அழித்தொழிப்பதற்கான அடிப்படைத் திட்டங்கள்; சாதி ஒழிப்பை நடைமுறைப் படுத்துவதின் மூலம் எவ்வகையான சமூக அமைப்பை

1 Prof. V. Arasu, Formar prof&Head, dept of Tamil literature. University of Madras. Chennai. e. mail. arasuveerasami@gmail.com

KKA_6316-Mozhithal Dec-2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாக்க வேண்டும் ஆகியவை குறித்த அம்பேத்கரின் பதிவுகளைப் புரிந்து கொள்ளும் தேவை.

❖ இந்தியாவில் வருண அமைப்புகள் உருப்பெற்ற வரலாறு; வருண அமைப்புகளின் படிநிலைத் தன்மைகள்; வருண அமைப்பில் பார்ப்பனியத்தின் இயங்குமுறை; சூத்திரர் என்ற வருணம் உருவான பின்புலம்; சூத்திரர்கள் என்பதை எவ்வாறு வரையறுப்பது; நால்வருணங்கள் தமக்குள் கொண்டுள்ள தொடர்புகள்; வருணத்திற்கும் சாதிக்கும் உள்ள உறவுகள் போன்றவற்றின் தன்மைகளை உரையாடலுக்குட்படுத்தும் தேவை.

❖ இந்திய சமூக அமைப்பில் செயல்படும் தீண்டப்படாதவர்கள் யார்; இவர்கள் எவ்வாறு உருவாக்கப்பட்டார்கள்; இந்துமத சாத்திரங்கள், இலக்கியங்கள் ஆகிய பிற தீண்டப்படாதவர்களை எப்படிப் பதிவு செய்துள்ளன; மானிடவியல் துறை சார்ந்த 'தீட்டு' என்ற தன்மை; தீண்டாமை எவ்வாறு உருப்பெற்றது; இந்துமதம் தீண்டப்படாதவர்கள் குறித்துப் பதிவு செய்வது என்ன? சாதி, சூத்திரர் ஆகிய தன்மைகளோடு, தீண்டப்படாதவர்களுக்குரிய தொடர்பு என்ன ஆகிய பல கூறுகளை அம்பேத்கர் எவ்வாறு உரையாடலுக்குரியதாகக் கட்டமைத்துள்ளார் என்ற பதிவு.

❖ காந்தியார் முன்னெடுத்த சாதி, வருணம், சூத்திரர்கள், தீண்டப்படாதோர் குறித்த கருத்துநிலைகள்; காந்தியாரின் கருத்து நிலைகளை அம்பேத்கர் எதிர்கொண்ட முறைகள்; இந்தியாவில் உருவான அரசியல் கட்சி சார்ந்தோரின் அணுகுமுறைகள்; சோசலிசக் கருத்துநிலை சார்ந்தோரின் பார்வைகள் ஆகியவற்றை அம்பேத்கர் எதிர்கொண்ட முறைகள் குறித்த உரையாடல்கள்.

❖ சாதி, வருணம், சூத்திரர்கள், தீண்டப்படாதோர் குறித்த மேலைத்தேய ஆய்வாளர்கள் மற்றும் இந்திய ஆய்வாளர்களின் முறையியலிருந்து அம்பேத்கர் வேறுபடும் புள்ளிகள் எவையெவை? அவை நடைமுறை எதார்த்தத்தை முன்னிலைப் படுத்தும் பாங்கு; தோற்றம் – வரலாறு ஆகியவற்றை விட நடைமுறை நிகழ்வாக மேற்குறித்த தன்மைகள் தொடர்பான தரவுகள் சார்ந்த அம்பேத்கரின் உரையாடல்கள்.

❖ சமூகவியல் மரபு சார்ந்த சாதி, வருணம் எனும் படிநிலை ஒழுங்கு, தீண்டாமை குறித்த அம்பேத்கரின் முறையியல்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வாறு அமைந்துள்ளன; இவை வேறு முறையியல்களிலிருந்து எவ்வகையில் வேறுபட்டுள்ளன என்ற புரிதல் சார்ந்த உரையாடலின் தேவை.

அம்பேத்கர் சாதி, வருணம், சூத்திரர், தீண்டப்படாதவர்கள் குறித்த ஏறக்குறைய மூவாயிரம் பக்கங்களில் அடங்கும் ஆய்வுகளை மேற்கொண்டிருக்கிறார். அவற்றின் சுருக்கமான பதிவை மேலே பேசினோம். விரிவான பதிவுக்குள் செல்வோம்.

௳

சாதியம் பற்றிய கல்விப் புலம் சார்ந்த ஆய்வுகள் ஏராளமாக நிகழ்த்தப்பட்டுள்ளன. அவை பெரும்பாலும் மானிடவியல் துறை சார்ந்த கோட்பாடுகளை முன்னிருத்தி செய்யப்பட்டுள்ளன. வட்டார மரபு சார்ந்த வரலாற்று நிகழ்வுகளைப் புரிந்து கொள்ளுவதற்கானத் தரவுகளாகச் சாதியை முன்னிருத்தி செய்யப்பட்டுள்ளன. சமூக இயக்கங்களின் வரலாறுகளைக் கண்டறிவதற்கான மூலக் கருவியாகவும் சாதியம் பற்றிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சமூகம் பற்றிய அறிதலுக்கான விவரணங்களாகவும் சாதிய ஆராய்ச்சி நிகழ்ந்துள்ளது.

அம்பேத்கர் நிகழ்த்தியுள்ள சாதியம் தொடர்பான ஆய்வு இந்த ஆய்வுகளிலிருந்து பெரிதும் வேறுபட்டுள்ளது. கல்விப்புல மரபு சார்ந்த ஆய்வாக அவர் நிகழ்த்தினாலும், அதற்குள் குறிப்பிட்ட சமூகம், குறிப்பிட்ட மக்கள், குறிப்பிட்ட பிரதிகள் பேசும் அரசியல், மதத்தின் வகிபாகம் ஆகிய பிற கோணங்களில் அம்பேத்கரின் சாதி பற்றிய ஆய்வுகள் நிகழ்த்தப்பட்டிருப்பதைக் காண்கிறோம். சாதிய ஆய்வுகள் என்பவை இந்திய சமூகம் பற்றியப் புரிதலுக்கான அடிப்படைத் தரவுகளாக அமைந்துள்ளன. ஒரு புதிய இந்தியச் சமூக வரலாற்றை, சாதிகள் பற்றிய ஆய்வில் அம்பேத்கர் இனம் காட்டியுள்ளது அவரது அரிய பங்களிப்பாகும்.

கல்விப்புல மரபு சார்ந்த ஆய்வாக அவர் நிகழ்த்தினாலும், அதற்குள் குறிப்பிட்ட சமூகம், குறிப்பிட்ட மக்கள், குறிப்பிட்ட பிரதிகள் பேசும் அரசியல், மதத்தின் வகிபாகம் ஆகிய பிற கோணங்களில் அம்பேத்க

அம்பேத்கர் நூற்றாண்டு நிறைவையொட்டி, அம்பேத்கரின் ஆக்கங்கள் புதிய வாசிப்புக்குள்ளாக்கப்பட்டதாகக் கூற முடியும். தமிழ்ச் சூழலில் பெரியாரியம் பற்றியப் புரிதல் போல, இந்தியச் சூழலில் அம்பேத்கரியம் எனும் புதிய வாசிப்பு முறைகள் அண்மைக் காலங்களில் முன்னெடுக்கப்படுகின்றன. கால வளர்ச்சியில், அம்பேத்கரின் ஆக்கங்கள் புதிய புத்தொளி மரபைக் கொண்டிருப்பதை, சமூகம் புதிதாகக் கண்டறிந்து பேசும் சூழல் உருவாகியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பேத்கரியம், பெரியாரியம் எனும் தத்துவ உரையாடல் சார்ந்த கோட்பாட்டு மரபுகள் அடையாளப்படுத்தப்படுகின்றன. அந்த மரபை முன்னெடுத்தும் செயல்படும் தனிமனிதர்கள், இயக்கங்கள் ஆகியவை புத்தெழுச்சியுடன் செயல்படுவதைக் காண்கிறோம். இந்தப் பின்புலத்தில் தமிழ்ச் சூழலில் 'அம்பேத்கரியம்' குறித்த உரையாடலுக்கு, அவரது ஆக்கங்கள் மீதான மீள்வாசிப்பின் தேவை உருவாகியுள்ளது. அந்தப் பார்வையை அடிப்படையாகக் கொண்டு அம்பேத்கர் ஆக்கங்களை மீள்பதிப்புக்கான தேவை உருவாகியுள்ளது. அந்தப் பின்புலத்தில் மக்கள் பதிப்பாக அம்பேத்கர் ஆக்கங்கள் வெளிவருவதைப் புரிந்து கொள்ளலாம்.

அவர் இந்திய மக்களுக்கான விடுதலைப் போராளி, இந்திய சமூக அமைப்பு குறித்த நுண்ணிதான ஆய்வு மரபை முன்னெடுத்தப் புலமையாளர், ஆய்வு மரபையும் இயக்கச் செயல்பாட்டு மரபுகளையும் இணைத்த அரசியல் போராளி என்ற புரிதல் மேகத்திற்குள் மறைந்த சூரியனாக இருந்தது.

இந்திய சமூகத்தின் கெடுவாய்ப்பாக அம்பேத்கர் குறித்த பதிவுகள், நடைமுறைகள், இயக்கச் செயல்பாடுகள் ஆகிய அனைத்தும் ஒரு குறிப்பிட்ட பிரிவு மக்களுக்குள் அடங்கிவரும் சூழல் நிலவியது. அம்பேத்கரின் மறைவிலிருந்து அரை நூற்றாண்டுக் காலம், இந்தியச் சமூகம் அவ்வாறு இருட்டடிப்பு செய்துள்ளது. அவர் இந்திய மக்களுக்கான விடுதலைப் போராளி, இந்திய சமூக அமைப்பு குறித்த நுண்ணிதான ஆய்வு மரபை முன்னெடுத்தப் புலமையாளர், ஆய்வு மரபையும் இயக்கச் செயல்பாட்டு மரபுகளையும் இணைத்த அரசியல் போராளி என்ற புரிதல் மேகத்திற்குள் மறைந்த சூரியனாக இருந்தது. அந்த மேகம் இப்போது புதிய அறிவொளிக் காற்றால் புறம்தள்ளப்பட்டு, சூரியனை நேரடியாக உணர்ந்து உரையாடல் நிகழ்த்தும் வெகுமக்கள் மரபும் புலமைத்துவ மரபும் இந்தியச் சமூகச் சூழலில் உருப்பெற்றுள்ளது. இந்தப் பின்புலத்திலும் தமிழில் வெளிவரும் அம்பேத்கர் ஆக்கங்களின் மக்கள் பதிப்பு, ஒரு காலத்தின் கட்டாயத் தேவையாகியுள்ளது.

"சாதி என்பது இந்துக்கள் கலந்து உறவாடுவதற்குத் தடையாக உள்ள கற்சுவரோ கம்பி வேலியோ அல்ல. சாதி என்பது ஒரு கருத்துநிலை, ஒரு மனநிலை. எனவே சாதியை ஒழிப்பது ஒரு பௌதிகத் தன்மையை அழிக்கும் செயல் அல்ல; மக்களின் கருத்து நிலையில் மாற்றம் ஏற்படுத்தும் செயல்" *(அம்பேத்கர் 1:31)*

இந்தியச் சமூகத்தில் தவிர்க்க முடியாத நிகழ்வாக இருக்கும் சாதி குறித்த விளக்கங்கள், வரையறைகள், வரலாறுகள் என்பவை இன்றுவரை தெளிவாக முன்வைக்கப்பட்டுள்ளன என்று சொல்ல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாது. அம்பேத்கர் இந்தச் சிக்கலைத் தெளிவாக உணர்ந்து, சாதி பற்றிய உரையாடலில் களமாடியுள்ளார். ஒரு குறிப்பிட்ட நிகழ்வு குறித்தப் பதிவுகள் வரலாறுகளாக எழுதப்பட்டிருந்தால் அதிலிருந்துப் புரிதல் உணர்வை உள்வாங்க முடியும். சாதிக்கு அப்படியான வரலாறுகள் இல்லை; மாறாக சாதி எனும் நிகழ்வு சமகாலத்திலும் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. அம்பேத்கர், சாதியம் சார்ந்த நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டே, சாதியின் தோற்றத்தையும் வரையறைகளையும் முன்வைத்துள்ளார். சாதி சார்ந்த நிகழ்வுகள் என்பவை எவ்வாறு சமூகத்தில் நடைமுறைச் செயல்களாக உள்ளன என்ற விவரணத்தைக் கொண்டு அந்த நிகழ்வு சார்ந்தப் புரிதலை முன்வைக்கிறார்.

சாதிக்கு அப்படியான வரலாறுகள் இல்லை; மாறாக சாதி எனும் நிகழ்வு சமகாலத்திலும் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. அம்பேத்கர், சாதியம் சார்ந்த நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டே, சாதியின் தோற்றத்தையும் வரையறை களையும் முன்வைத் துள்ளார்.

சாதி என்பதன் அடிப்படைப் பண்பாக அமைவது அகமண முறை. உயிரினங்கள் தங்களது தொடர்ச்சியை மறுஉற்பத்தி மூலமே நடைமுறைப்படுத்துகின்றன. மனிதக் கூட்டத்தின் அடிப்படை அலகுகளாக பெண்-ஆண் எனும் பாலினப் பிரிவு உள்ளது. இவற்றின் இணைவு விழைவுகளே மறு உற்பத்தியாகின்றன. இந்த இணைவுகள் குலக்குழு சமூக வாழ்முறையில்தான் படிப்படியாக மாற்றங்களை உள்வாங்கியதை அறிகிறோம். குடும்பம் எனும் அலகு உருவாதல் என்பது குலக்குழு மரபில் ஒரு காலத்தில் உருப்பெறுகிறது. இத்தன்மை உருவான காலங்களில் குலக்குழுக்கள் என்பவை நாடோடி வாழ்முறையிலிருந்து படிப்படியாக ஓரிடத்தில் தங்கி வாழும் ஊரிருக்கை (*settlement*) முறை உருவாகிறது. இக்காலங்களில் கால்நடைகளை வளர்க்கும் முறையும் வளம் பெறுகிறது. அவை உரிமைப் பொருளாக அல்லது சொத்தாக வடிவம் பெறுகின்றன. நிலத்தைப் பண்படுத்தி உற்பத்தி செய்யும் மரபும் உருப்பெறுகிறது. இவ்வகையான சமூக அமைப்பு மட்டும் இல்லை; மாறாக நாடோடி வாழ்முறை கொண்ட, வேட்டையாடும் மரபுடைய குலக்குழுக்களும் இருந்தன. இவ்விரு குலமரபுக் குழுக்கள் என்பவை தம்முள் முரண்படும் சூழல்கள் உருப்பெற்றன. அப்போது ஒவ்வொரு குழுவும் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளும், தனிமைப்படுத்திக் கொள்ளும் சமூக இயங்கியல் உருப்பெறுகிறது என்று சமூகக் குலக்குழுக்கள் குறித்த உரையாடலை அம்பேத்கர் மேற்கொள்கிறார். இத்தன்மை சார்ந்த அதன் தொடர்ச்சி குறித்தும் பேசுகிறார்.

குலக்குழுக்கள் தம்மைத் தனிமைப்படுத்தும் தன்மைகளில் முதன்மையானது அகமணமுறை. பிறிதொரு குழுவோடு தொடர்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளும் வாய்ப்பை அகமணமுறை தவிர்க்கிறது. இப்படியாக உருவாகும் குழுக்களே பின்னர் சாதிகளாக வடிவம் பெற்றுள்ளன. மனித சமூக வரலாற்றில் மறுஉற்பத்தியே அதன் தொடர்ச்சியைக் கொண்டிருப்பதால், அதில் ஒரு கட்டுப்பாட்டை குலமரபுக் குழுக்கள் தங்களுக்குள் உருவாக்கிக் கொள்கின்றன என்ற புரிதலை முன்வைக்கிறார். அந்தக் குழுக்கள் சாதிகளாக வடிவம் பெற்று இன்று வரை உருவாகும் சமூக மாற்றங்களை உள்வாங்கித் தொடருகின்றன என்ற உரையாடலை அம்பேத்கர் நிகழ்த்துகிறார்.

இவ்வாறு உருப்பெற்ற அகமணமரபு சார்ந்த நிகழ்வை சுட்டிக் காட்டுவதற்கு மனிதச் சமூகம் மேற்கொள்ளும் முறைகள் குறித்தும் பேசுகிறார். ஆண் உயிரிழக்கும்போது பெண்ணை உடன்கட்டை ஏறச் செய்தல், பெண் கைம்பெண்ணாகவே வாழ்தல், ஆண்கள் துறவு வாழ்வை மேற்கொள்ளுதல், குழந்தை மணம் செய்தல் ஆகிய அனைத்தும் அகமணமுறையைக் கட்டிக் காக்கும் திட்டங்கள் என்கிறார் அம்பேத்கர். உபரியாக ஆண் அல்லது பெண் இருக்கும் சூழல் ஏற்பட்டால், அகமணமுறையைத் தொடரும் வாய்ப்பு இல்லாமல் போகும். அப்போது குழுக்களின் மூடுண்ட தன்மை அழியும்; அதன் தொடர்ச்சியாகச் சாதி தொடரும் வாய்ப்பு இல்லாமல் போகும் என்ற உரையாடல்களை அம்பேத்கர் விரிவாக நிகழ்த்துகிறார்.

ஆண் உயிரிழக்கும்போது பெண்ணை உடன்கட்டை ஏறச் செய்தல், பெண் கைம்பெண்ணாகவே வாழ்தல், ஆண்கள் துறவு வாழ்வை மேற்கொள்ளுதல், குழந்தை மணம் செய்தல் ஆகிய அனைத்தும் அகமணமுறையைக் கட்டிக் காக்கும் திட்டங்கள் என்கிறார் அம்பேத்கர்.

சாதியின் உருவாக்கம், அது இயங்குமுறை ஆகியவை குறித்த மேற்குறித்த சமூக இயக்கம் குறித்துப் பேசும் அம்பேத்கர், அம்முறைகள் கால ஒழுங்கில் எவ்வாறு தொடரும் மரபுகளாக உருப்பெற்றிருக்கின்றன என்பதை மிக விரிவாகப் பேசியிருக்கிறார். இப்பேச்சு என்பது சமகால நடைமுறைச் சமூக நிகழ்வுகளை அடிப்படைத் தரவாகக் கொண்டு முன்னெடுக்கப்பட்டிருப்பதைக் காண்கிறோம். இந்த வகையான உரையாடல்களில் அம்பேத்கரின் உயிர்த்துவ மரபு செயல்படுகிறது.

குலக்குழு மரபு சார்ந்து உருவான சாதியம் எனும் சமூக இயங்கு முறையை சாத்திரங்கள் எனும் பதிவுகள், குறிப்பாக மனு சாத்திரம் போன்ற பிரதிகள் எவ்வாறு பதிவு செய்துள்ளன. இப்பிரதிகளை அடிப் படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட பார்ப்பனிய மதம் எவ்வாறு செயல்படுகிறது. பின்னர் உருவான வருண மரபோடு சாதியத்தை எவ்வாறு இணைத்து நடைமுறைப்படுத்துகிறது ஆகிய பல பரிமாணங்களை அம்பேத்கர் விரிவாகவே பேசியுள்ளார். உருவாக்க மரபுகளைவிட அவை நடைமுறைப்படுத்தப்படும் நிகழ்வுகளே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகத்தை நேர்நிலையில் தாக்கம் செலுத்துபவை என்ற புரிதல் சார்ந்து, அம்பேத்கர் பதிவு செய்கிறார்.

சாதியைக் காப்பாற்றும் அகமண முறை சார்ந்த, குறிப்பாகப் பெண்ணை முதன்மைப்படுத்திய சதி, கைம்பெண் வாழ்க்கை, துறவு அல்லது பிரமச்சரியம், குழந்தை மணம் ஆகியவை தொடர்பாக மனுசாத்திரம் விவரிக்கும் வரையறைகள் குறித்த விரிவான வரை யறைகளைப் பதிவு செய்கிறார். மனுசாத்திரம் என்பது இந்துமதம் என்று இன்று அடையாளப்படுத்தப்படும் பார்ப்பனிய மதத்தின் அடிப் படைச் சட்டமாக உள்ளது. இந்துமதம் சமூகத்தில் உருப்பெற்று வளர்ந்து வந்த சமூக நடைமுறையான வருண மரபுகளோடு இதனை இணைத்துப் பார்க்கும் தேவையை முன்வைக்கிறார். இம்மரபு முன்னிலைப்படுத்தாத மேலை நாட்டு அறிஞர்களின் ஆய்வுகள் அனைத்தும் அடிப்படையவை என்று அம்பேத்கர் தமது உரையாடலில் விரிவாகவே பதிவு செய்துள்ளார்.

வருண மரபுகள் உருவாக்கத்தை அம்பேத்கர் சாதிய மரபு உருவாக்கம் போலவே வரையறை செய்யும் முயற்சியை மேற்கொண்டுள்ளார். பார்ப்பனர்கள் அல்லது புரோகிதர் வருணம், சத்திரியர் அல்லது வீரர்கள் வருணம், வைசியர் அல்லது வணிக வருணம், சூத்திரர் அல்லது கைவினைஞர், வருணம் என்று பேசப்படும் பார்ப்பனிய மதம் மற்றும் சாத்திரங்கள் கூறும் வகைகளை விரிவாகப் பேசுகிறார். இவற்றின் உருவாக்கம் குறித்த உரையாடல்களையும் நிகழ்த்துகிறார். அதனைப் பின்வரும் வகையில் நாம் தொகுக்க முயல்வோம்.

> மனுசாத்திரம் என்பது இந்துமதம் என்று இன்று அடையாளப் படுத்தப்படும் பார்ப்பனிய மதத்தின் அடிப் படைச் சட்டமாக உள்ளது.

இயங்கியல் பொருள் முதல் வாதம் மற்றும் வரலாற்றியல் பொருள் முதல் வாதம் சார்ந்து மனித சமூக வரலாற்றைப் பேசும் மரபு ஒரு வகையில் அமைகிறது. அது பண்டைக்கால பொதுவுடைமைச் சமூகம்; சொத்து என்ற தனிமனித அதிகாரத் தன்மையற்ற காலம்; நிலத்தை முதன்மையாகக் கொண்ட நிலவுடைமைச் சமூகம் பின்னர் உருவானது. இதில் அதிகார மரபுகள் உருப்பெற்று வருகின்றன. இனக்குழுக்கள் தம்முள் முரண்கொண்டு போராடுகின்றன. இனக்குழுக்களான தலைவன் உருப்பெறுகிறான். ஒவ்வொரு குழுவிற்கும் தலைவன் உருவாகிவிடுகிறான். இதன் தொடர் வளர்ச்சியாகவே குறுநில மன்னன், அரசன் எனும் அரச உருவாக்க மரபு உருவாகிறது. இதனை அரசுருவாக்கம் என்கிறோம். இதன் உடன் விளைவாக போர் வீரர்கள் உருவாகின்றனர். ஒவ்வொரு அரசும் தனக்கென போர்ப்படைகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாக்கிக் கொள்கிறது. இதன் சமூக வளர்ச்சியாக வணிகச் சமூகம் உருவாகிறது. கால வளர்ச்சியில் நிலவுடைமைச் சமூகம் என்பதோடு உற்பத்தி முறையில் ஏற்பட்ட மிகப்பெரிய மாற்றங்களால் முதலாளித்துவ சமூகம் உருவாகிறது. இவ்வாறு நிலவுடைமைச் சமூகமாகவும் முதலாளிய சமூகங்களாகவும் இருப்பவற்றை சோசலிச சமூகமாகக் காலம் மாற்றியமைக்கும் என்பது ஒரு புரிதல். இதனை மார்க்சிய தத்துவ மரபு சார்ந்த புரிதலாகக் கொள்கிறோம். ஆனால் அம்பேத்கர் பேசும் சமூக வரலாறு இம்மரபின் பிறிதொரு வடிவமாகவே அமைகிறது.

இனக்குழுக்கள், இனக்குலங்களாக வடிவம் பெறுகின்றன. அதற்குள் அகமணமரபு சார்ந்த சாதிய வடிவங்கள் உருப்பெற்று வருகின்றன. அவ்வாறு உருவான சமூகத்தில் இயற்கையின் இயக்கம் சார்ந்து பல்வேறு நம்பிக்கைகள் உருப்பெறுகின்றன. இந்த நம்பிக்கைகளை வெளிப்படுத்தும் சடங்குகள் உருப்பெறுகின்றன. சடங்குகள் என்பவை நம்பிக்கைகளை உறுதிப்படுத்தும் நடைமுறை நிகழ்வுகளாகின்றன. இந்தச் சடங்குகளை நிகழ்த்தும் பூசாரிகள் உருவாகின்றனர். பூசாரிகளின் வளர்ச்சியடைந்த சமூகமாக புரோகிதர் சமூகம் உருப்பெறுகிறது. இந்தச் சமூகம் மந்திரங்களைக் கண்டுபிடிக்கிறது. சடங்குகளோடு மந்திரங்கள் இணைந்து கொள்கின்றன. இந்த மந்திரங்களையும் சடங்குகளையும் சார்ந்த பிரதிகள் உருவாக்கப்படுகின்றன. இந்தப் பிரதிகள் வேதங்கள், பிராமணங்கள், ஸ்மிருதிகள், சூத்திரங்கள், புராணங்கள், உபநிடதங்கள் என்று மேலும் மேலும் உருவாக்கப்படுகின்றன. இவை அனைத்தும் வாய்மொழி மரபு சார்ந்தவை. இந்தப் பிரதிகளை அடிப்படையாகக் கொண்ட காவியங்கள் உருவாக்கப்படுகின்றன. அவை மகாபாரதம், இராமாயணங்கள். இப்பிரதிகளை அடிப்படையாகக் கொண்ட இலக்கணப் பிரதிகள், நாடகப் பிரதிகள் என புலமைத்துவ மரபாக வளர்ச்சியடைகின்றன. இந்த வளர்ச்சியில் முதன்மையான பங்கு வகிப்பது புரோகித வகுப்பு. இந்த வகுப்பே பார்ப்பனிய வகுப்பு. இவர்கள் உருவாக்கியது பார்ப்பனிய மதம். இந்தப் பார்ப்பனிய மதத்தை அடிப்படை வாழ்முறையாகக் கொண்டவர்கள் பார்ப்பனர்கள். இவர்களே சமூகப் படிநிலையில் முதல் நிலையில் இருக்கின்றனர். இவர்களே தம் கீழ் உள்ள அனைத்துப் பிரிவுகளையும் ஆதிக்கம் செலுத்தும் பிரிவினராக அமைகின்றனர். இந்த மரபை அம்பேத்கர் மிக விரிவாகப் பதிவு செய்கிறார்.

பார்ப்பனிய மதத்தை அடிப்படை வாழ்முறையாகக் கொண்டவர்கள் பார்ப்பனர்கள். இவர்களே சமூகப் படிநிலையில் முதல் நிலையில் இருக்கின்றனர். இவர்களே தம் கீழ் உள்ள அனைத்துப் பிரிவுகளையும் ஆதிக்கம் செலுத்தும் பிரிவினராக அமைகின்றனர்.

பார்ப்பன வகுப்பின் வாழ்முறை போலவே வேறு பல வகுப்புகளும் அல்லது பிரிவுகளும் உருப்பெறுகின்றன. சமூகத்தில் ஒரு பிரிவினருக்கும் இன்னொரு பிரிவினருக்குமான முரண்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல்பாகவே உருப்பெறுகின்றன. ஒரு பிரிவின் சொத்தான கால்நடைகள் போன்றவை இன்னொரு பிரிவினரால் கவரப்படுகின்றன. இந்தப் பின்புலத்தில் இராணுவ வீரர்கள் எனப்படும் சத்திரியர்கள் வகுப்பு உருப்பெறுகிறது. இவர்கள் பார்ப்பன வகுப்பினருடன் முரண்பட்டும் இயைந்தும் வாழும் வாழ்முறை உருவாகிறது.

மனிதச் சமூக வளர்ச்சியில் பண்டமாற்று என்பது தவிர்க்க இயலாத நடைமுறையாகிறது. இதன் வளர்ச்சியாக வணிகம் அமைகிறது. இப்படியான வகுப்பினர் வணிகச் சமூகம் எனும் வைசியர் வகுப்பினர் ஆகின்றனர் என்று சமூக அடிப்படையில் மூன்று வகுப்பினராக வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதல் உருப்பெற்று வளர்ந்து வந்த வரலாற்றை அம்பேத்கர் மிக விரிவாகவே பல்வேறு தரவுகளுடன் பதிவு செய்துள்ளார்.

இந்த மூன்று வகுப்பிற்குள் நிகழும் சமூக நிகழ்வுகள் சார்ந்து இன்னொரு வகுப்பு உருப்பெறுகிறது. அதுவே சூத்திரர்கள். இந்த அமைப்பில் முதல் மூன்று வகுப்புக்களின் அதிகாரப் படிநிலை ஒழுங்கு உள்ளது. இதனை இந்தோ–ஆரிய சமூக அமைப்பு என்கிறார் அம்பேத்கர். இந்த மூன்று பிரிவினர், தங்கள் படிநிலைமுறைகளால், வாழும் மக்களிடத்தில் ஆதிக்கத்தை உருவாக்கி, இதில் முதன்மையாக பார்ப்பன வகுப்பின் ஆதிக்கத்தில், சிதறுண்ட மக்கள் பிரிவினர் உருவாகின்றனர். இவ்வாறு உருவான மக்களே சூத்திரர்கள் என்று தனிப்பிரிவாக உருவாக்கப்படுகின்றனர். இவர்கள் சமூக வளர்ச்சியில் இயல்பாக உருவானவர்கள் இல்லை; மாறாக பார்ப்பனிய வகுப்பு முன்னின்று பிற வகுப்பினரின் துணையோடு உருவாக்கப்பட்ட சிதறுண்ட மக்களே, உதிரி மக்களே சூத்திரர்கள் என்பது அம்பேத்கர் செய்யும் வரையறை ஆகும். இவர்கள் குறித்து பார்ப்பனர்கள் உருவாக்கிய சாத்திர வரைமுறைகள் விரிவானவை. அது மனுவால் உருவாக்கப்பட்டு, சூத்திரர்கள் இழிவான பிரிவினராகக் கட்டப்பட்டனர். இது தொடர்பான விரிவான பதிவுகளை மனுசாத்திரத்தில் காண முடிகிறது.

> பார்ப்பனிய வகுப்பு முன்னின்று பிற வகுப்பினரின் துணையோடு உருவாக்கப்பட்ட சிதறுண்ட மக்களே, உதிரி மக்களே சூத்திரர்கள் என்பது அம்பேத்கர் செய்யும் வரையறை ஆகும்.

எனவே, அம்பேத்கரின் சமூக வரலாற்று ஆய்வு என்பது இந்தியச் சமூகத்தை முதன்மைப்படுத்தியது; அது நால்வருணங்களாக கட்டமைக்கப்பட்டதாக அமைகிறது. இவ்வகையான சமூக அமைப்பு சார்ந்தே அம்பேத்கர் தம் ஆய்வுகளை மேற்கொண்டிருக்கிறார். இந்தப் பின்புலத்தில்தான் 1916 முதல் 1956 வரை ஏறக்குறைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாற்பது ஆண்டுகளில் அவரது ஆய்வுகள் அமைகின்றன. அவை சாதி உருவாக்கம், சூத்திரர் உருவாக்கம், தீண்டப்படாதர் உருவாக்கம் என்னும் மூன்று அடிப்படைகளில் நிகழ்ந்திருப்பதைக் காண்கிறோம். இதனை விரிவாகப் பதிவு செய்யும் தேவையுண்டு.

சாதி உருவாக்கம், அதனைக் கட்டிக் காக்கும் கூறுகள் ஆகியவை குறித்துக் கொலம்பியாப் பல்கலைக்கழகக் கருத்தரங்களில் தமது ஆய்வை முன்வைத்து அது 1917 இல் 'இந்தியன் ஆன்டிக்கொயரி' இதழில் வெளியானது. சாதி குறித்த அம்பேத்கரின் முதல் ஆய்வு இது. பின்னர் 1944இல் மூன்றாம் பதிப்பாக வெளிவந்த அவரது 'சாதியை அழித்தொழித்தல்' எனும் புத்தகம் பெரிய கலகத்தை இந்துக்களிடையே உருவாக்கியது. ஜாத்-பாத்-தோடக் மண்டல் என்ற இந்து சீர்திருத்த அமைப்பு லாகூரில் 1936இல் நடக்கவிருந்த மாநாட்டிற்கு அம்பேத்கரை தலைமையுரை நிகழ்த்த அழைத்து, பின்னர் அவரது உரையை மாற்றி எழுதக் கேட்டுக் கொண்டது. அம்பேத்கர் மறுத்து அவ்வுரையை அச்சிட்டு வெளியிட்டார். இந்த உரையில் சாதியை அழித்தொழிப்பதற்கான பல்வேறு வழிமுறைகளை உரையாடலுக்குட்படுத்துகிறார். மத ஆதிக்கம் மிகுந்த இந்தியாவில் "சாதி அரக்கனைக் கொன்று ஒழிக்காமல் அரசியல் சீர்திருத்தத்தையோ, பொருளாதார சீர்திருத்தத்தையோ செய்ய இயலாது" (அம்பேத்கர். தொ.9:88) என்று அவ்வுரையில் தெளிவுபடுத்தினார். சாதி அமைப்பு குறித்த ஆய்வு என்பதை இந்து மத நடவடிக்கைகளை அடிப்படையாகக் கொண்டே நிகழ்த்த வேண்டும் என்பது அம்பேத்கர் முடிவு.

தனது இலட்சிய சமூகம், 'சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்' ஆகியவற்றின் அடிப்படையில் அமைய வேண்டும் என்கிறார். இதனை நடைமுறைப்படுத்த முதல் தடை இந்து மதம்தான் என்பதை விரிவாகப் பதிவு செய்கிறார்.

தனது இலட்சிய சமூகம், 'சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்' ஆகியவற்றின் அடிப்படையில் அமைய வேண்டும் என்கிறார். இதனை நடைமுறைப்படுத்த முதல் தடை இந்து மதம்தான் என்பதை விரிவாகப் பதிவு செய்கிறார். 'ஆழ்ந்த மதப்பற்றுதான்' சாதியைக் காப்பாற்றுகிறது என்பது அவரது முடிபு. இந்தியாவில் சாதியை ஒழிப்பதற்காக மேற்கொள்ளப்படும் அரசியல் சீர்திருத்தங்கள் அனைத்தும் தோல்வியடைந்துள்ளன. அவை பொது வெளியில் அவர்கள் செய்யும் அரசியல் பிரச்சாரமாகவே அமைகின்றன; சொந்த வாழ்க்கையில் சாதி ஒழிப்பிற்கான முன்னெடுப்புகளை அரசியல் வாதிகள் பின்பற்றுவதில்லை எனும் குற்றச்சாட்டை முன்வைக்கிறார். மதம், சொத்துடைமை, சமூகத் தகுதி ஆகியவை அதிகார சக்திகளாகச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயல்படுகின்றன. இவை சாதிய ஒழிப்புக்குத் துணை போவதில்லை என்பதையும் பதிவு செய்கிறார். சாதியை ஒழிப்பதற்கு செய்ய வேண்டிய மதச் சீர்திருத்தங்களை விரிவாகப் பட்டியல் போட்டுள்ளார்.

இந்து மதத்திற்கென ஒரே ஒரு அடிப்படை புத்தகம் மட்டுமே இருக்க வேண்டும்; இப்போது இந்துமதப் பிரதிகளாகப் பேசப்படுகின்ற வேதம், ஸ்மிருதிகள் போன்றவற்றைத் தடைசெய்ய வேண்டும்; புரோகிதர் முறையை ஒழித்து, அதை ஒரு அரசுப் பணியாக மாற்ற வேண்டும். புரோகிதர்களாக வருபவர்களுக்குத் தனித்தேர்வுகள் நடத்தி, அதில் தேர்ச்சி பெற்றவர்களை புரோகிதர்களாக நியமிக்க வேண்டும். தமிழக அரசு இன்றைக்கு நடைமுறைப்படுத்த விரும்பும் "அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம்" என திட்டத்தை 1930களிலேயே சாதி ஒழிக்கும் திட்டமாக அம்பேத்கர் பரிந்துரை செய்துள்ளார்.

சாதிப் பிரிவைத் தொழில் பிரிவாக முன்னெடுப்பவர்களின் கருத்தை அம்பேத்கர் ஏற்கவில்லை. சாதியைக் காப்பாற்ற விரும்புவோரின் கருத்துநிலையாகவே மேற்குறித்த செய்தியை அம்பேத்கர் வெளிப் படுத்துகிறார். தொழில்பிரிவு என்பது, தொழிலாளர்களைச் சாதி ரீதியாகப் பிளவுபடுத்துகிறது. இதில் படிநிலைச் சமூக அமைப்பு காப்பாற்றப்படுகிறது. தொழில் என்பதை யாராலும் செய்ய முடியும் என்பதை மறுத்து குறிப்பிட்டவர்களுக்குக் குறிப்பிட்ட தொழில் எனும் நவீன சாதி மரபை இத்தன்மை உருவாக்குவதாக அம்பேத்கர் பதிவு செய்துள்ளார். மாறிவரும் சமூக அமைப்பிற்கு ஏற்ப, தனக்கு வேண்டிய ஒரு தொழிலை தேர்வு செய்துகொள்ள சாதி சார்ந்த தொழிற் பிரிவுக்கொள்கை தடையாக இருப்பதாகவும் கூறுகிறார்.

சாதி என்பது குறித்த ஆய்வை, அம்பேத்கர் எங்கிருந்தோ உள்வாங்கி, புலமைத்துவ செயல்பாடாக முன்னெடுக்கவில்லை. தனது வாழ்க்கை அனுபவங்களே அவரைச் சாதி குறித்த ஆய்வுக்கும் அதனை அழித்தொழிப்பது குறித்த திட்டங்களுக்கும் இட்டுச் சென்றது. இளம் வயது முதல் அனுபவித்த வாழ்க்கைக் கொடுமைகளை, ஒரு சமூகவியல் ஆய்வு மாணவராக அவர் உருப்பெறும் தருணங்களில், சாதியை ஆய்வுப் பொருளாகக் கைக்கொள்கிறார். மேலைநாட்டு ஆய்வாளர் களும் பிற ஆய்வாளர்களும் சாதியை வெளியே நின்று தம் அறிவு சார்ந்த நிகழ்வாகவே செய்தனர். அம்பேத்கர் அதற்குள்ளேயிருந்தார். கல்வி சார்ந்த விரிவான பயிற்சியும் ஆய்வு செய்வதற்கான வாய்ப்பும் உருவான சூழலில் தமது வாழ்க்கை முறையை அவர் ஆய்வுப்

சாதி என்பது குறித்த ஆய்வை, அம்பேத்கர் எங்கிருந்தோ உள்வாங்கி, புலமைத்துவ செயல்பாடாக முன்னெடுக்க வில்லை. தனது வாழ்க்கை அனுபவங்களே அவரைச் சாதி குறித்த ஆய்வுக்கும் அதனை அழித்தொழிப்பது குறித்த திட்டங் களுக்கும் இட்டுச் சென்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாக முன்னெடுத்தார். அதனைத் தொடர்ந்து தமது வாழ்க்கைப் போராட்டத்தின் அடிப்படையாகவும் சாதியக் கருத்து மரபைக் கைக்கொண்டார். இதன் விளைவுகளே சாதியத்தின் அடுத்த மரபுகளான சூத்திரர், தீண்டப்படாதவர்கள் குறித்த ஆய்வுகள்.

நால்வருண உருவாக்கம், அமைப்பு முறை அதன் செயல்பாடுகள் ஆகியவை குறித்த விரிவான ஆய்வை மேற்கொண்ட அம்பேத்கர், சூத்திரர்கள் என்ற வருண உருவாக்கம் குறித்த விரிவான ஆய்வை மேற்கொண்டுள்ளார். உண்மையில் மூன்று வருணப் பிரிவுகளே இந்தோ-ஆரிய சமூகப் பிரிவில் முதலில் இருந்தன. நான்காவது பிரிவு இல்லை. இது குறித்த சான்றுகளை ரிக்வேதத்தில் உள்ள சூத்திரங்கள் வழி உறுதிப்படுத்துகிறார்; அப்படி எனில் சூத்திரர்கள் எப்படி உருப்பெற்றனர் என்ற கேள்வியை முன்வைக்கிறார். அதற்கான விரிவான உரையாடலே அவரது "சூத்திரர்கள் யார்?" என்ற நூல். இந்தியநச் சாதி அமைப்பு பற்றிய ஆய்வில், அம்பேத்கரின் மூன்றாவது நூல் இது. 1946இல் எழுதப்பட்டு, 1947இல் வெளியிடப்பட்டது. "சாதியை அழித்தொழிப்பது எப்படி?" என்ற இரண்டாவது நூலின் மூன்றாவது பதிப்பு வெளிவந்த சில ஆண்டுகளில் இந்நூலை அம்பேத்கர் எழுதுகிறார். இதில் அம்பேத்கர் முன்னெடுக்கும் செய்திகளைப் பின்வருமாறு பகுத்துக் கொள்வோம்.

நால்வருண உருவாக்கம், அமைப்பு முறை அதன் செயல்பாடுகள் ஆகியவை குறித்த விரிவான ஆய்வை மேற்கொண்ட அம்பேத்கர், சூத்திரர்கள் என்ற வருண உருவாக்கம் குறித்த விரிவான ஆய்வை மேற் கொண்டுள்ளார்.

- சூத்திரர்கள் என்ற நான்காவது வருணம் எவ்வாறு உருவாக்கப் பட்டது. அதனை உறுதிப்படுத்தும் தரவுகள் எவை?

- சூத்திரர்கள் பற்றிய மத நூல்களின் பதிவுகள் எவ்வாறெல்லாம் உள்ளன; அவ்வாறு அந்த நூல்கள் பதிவு செய்வதற்கான காரணங்கள் எவையெவை.

- சூத்திரர்கள் குறித்தப் பார்ப்பன எழுத்தாளர்களின் பதிவுகள் எவ்வாறு உள்ளன; அவை அவ்வாறு பதிவு செய்யப்படுவதற்குப் பின் உள்ள காரணங்கள் எவையெவை?

- சூத்திரர்கள் சாதிய மரபுக்குள் எவ்வாறு அணுக வேண்டும்; சூத்திரர்களுக்கும் தீண்டப்படாதோர்களுக்குமான உறவுகள் எத்தகையன ஆகிய பல்வேறு கூறுகளை அம்பேத்கர் உரையாடலுக்குட்படுத்தியுள்ளார்.

நால்வருண மரபில், சூத்திரர்கள் என்னும் வருண மரபு, மேலுள்ள பார்ப்பனர், சத்திரியர், வைசியர் ஆகிய மூன்று வருணத்தினரால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாக்கப்பட்டவர்கள். மேற்குறித்த மூன்று வருணத்தினர் உருவாகு வதற்கான சமூகப் பின்புலங்கள், சமூக வரலாற்றில் இயல்பாகவே உருப் பெற்றிருப்பதைக் காண முடியும். மக்களின் நம்பிக்கை சார்ந்த சடங்கு, அதை நிகழ்த்தும் புரோகிதர், அவரே பார்ப்பனர். அரசுருவாக்கம் சார்ந்து தேவைப்படும் காவல்படை, இராணுவம், அதுவே சத்திரியர். சமூகத்தில் தவிர்க்க இயலாத நுகர்வுக்குத் தேவையான பொருட்களின் விற்பனை; வணிகம், அதுவே வைசியர் எனும் வணிக வருணம். ஆனால் சூத்திரர்களுக்கு இப்படியான வரையறை செய்ய முடியாது என்பதே அம்பேத்கரின் முடிபு. அப்படியானால் சூத்திரர் யார்? என்ற ஆய்வை அவர் மேற்கொள்கிறார்.

மேலே உள்ள மூன்று வருணப் பிரிவுகளுக்கிடையே, குறிப்பாக பார்ப்பனர், சத்திரியர் பிரிவுகளுக்கிடையே நிகழும் சமூகப் போராட்டங்கள்; அப்போராட்டங்களில் தோல்வியுறும் சமூகக் குழுக்களாக உள்ளோரின் ஒருங்கிணைப்பே சூத்திரர்கள் ஆவர். இவர்கள் இயல்பு வாழ்க்கையிலிருந்து ஒதுக்கப்பட்டவர்கள், மற்றும் புறக்கணிக்கப்பட்டவர்கள் இதற்கான விரிவான சமூக வரலாற்றை அம்பேத்கர் முன்னெடுக்கிறார். மலைப் பகுதிகளில் வாழும் ஆதிப் பழங்குடிகள்; பல்வேறு சமூகக் குற்றம் என்று பின்னர் கருதப்படும் மரபில் கொள்ளை அடித்து வாழும் குலக்குழுவினர்; இவர்கள் வசதியானவர்களிடம் கொள்ளையடிப்பதை, ஒரு வேட்டையாடுதல் போன்று நிகழ்த்தும் குற்றப்பரம்பரையினர் எனும் சீர் மரபினர்; இந்த வரிசையில் ஆதிக்க மூன்று வர்ணங்களோடு போரிட்டு அவர் களிடம் தோற்றுப் போன உதிரியாக வாழும் தன்மை பெற்ற சூத்திரர்கள். இவ்வகையான மூன்று மரபில் வரலாற்றுக்கு முந்தைய காலம் தொடங்கி சமூகத்தில் உள்ள குலக்குழுக்கள் குறித்த விரிவான தரவுகளை அம்பேத்கர் பதிவு செய்திருக்கிறார். இந்தப் பதிவுகளில் சூத்திரர்களுக்கும் பார்ப்பனர்களுக்கும் நேரடி முரண் இருப்பதாகப் பேசுகிறார். இதனால் பார்ப்பனர்கள், சூத்திரர்கள் பற்றிய விரிவான பதிவுகளை தமது ஆக்கங்களில் பதிவு செய்து, அவர்களை இழிநிலைக்குத் தள்ளுகின்றனர்.

உள்ள மூன்று வருணப் பிரிவுகளுக்கிடையே, குறிப்பாக பார்ப்பனர், சத்திரியர் பிரிவுகளுக்கிடையே நிகழும் சமூகப் போராட்டங்கள்; அப்போராட்டங்களில் தோல்வியுறும் சமூகக் குழுக்களாக உள்ளோரின் ஒருங்கிணைப்பே சூத்திரர்கள் ஆவர்.

சூத்திரர்கள் பற்றிய விளக்கங்களைக் கூறுவதில் ரிக் வேதத்தின் பத்தாவது மண்டலமாக உள்ள 'புருஷசூக்தம்' முதன்மை வகிக்கிறது. புருஷ சூக்தத்தில் சூத்திரர்கள் பற்றிக் கூறப்படும் தகவல்களை அம்பேத்கர் விரிவான உரையாடலுக்குட்படுத்துகிறார். சூத்திரர்களின் தகுதிகள் பற்றிய ஸ்மிருதிகளின் பதிவுகள் என்பவை திட்டமிடப்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்ப்பன சதி. சூத்திரர்களைக் குறித்துப் பார்ப்பனர்களின் நூல்கள் பதிவு செய்கின்றன. இதன் மூலம் பார்ப்பன வர்ணம் சூத்திர வர்ணத்தோடு நேரடி மோதலில் ஈடுபட்டதாக அம்பேத்கர் விரிவான தரவுகளைத் தருகிறார். சூத்திரர்களைப் பற்றிப் பேசும் பிராமணங்கள் குறித்து, மார்க்ஸ் முல்லரின் மேற்கோள் ஒன்றை அம்பேத்கர் தருகிறார். "இந்த நூல்கள் (பிராமணங்கள்) முட்டாள்களின் உளறல்களையும் பைத்தியக்காரனின் பிதற்றல்களையும் ஒரு மருத்துவர் எவ்வாறு ஆராய்வாரோ அவ்வாறு ஆய்வதற்குரியவை" (அம்பேத்கர்.தொகு.10:79); இவ்வகையில் பிராமணங்களில் பேசப்படும் சூத்திரர்கள் பற்றிய விளக்கங்களை அம்பலப்படுத்துகிறார்.

வேதங்கள், பிராமணங்கள், ஸ்மிருதிகள் ஆகிய பலவற்றின் கட்டமைப்பில் சூத்திரர்கள் என்ற வருணம் உருவாக்கப் படுகிறது. சமூக எதார்த்தத்தில் அவ்வாறான மனிதக் கூட்டம் உருவாக ஏதுக்கள் இல்லை.

சூத்திரர்கள் சூரிய வம்சத்தைச் சார்ந்தவர்களாக பேசப்படும் செய்திகளை அம்பேத்கர் தொகுத்துத் தருகிறார். சூத்திரர்களுக்கு சத்திரியர் என்ற சமூக மதிப்பீடும் இருந்திருக்கிறது. பார்ப்பனர்கள் சூத்திரர்களுக்கு பூணூல் அணிவிப்பதை மறுத்து செயல்பட்டுள்ளனர். அவர்கள் இருபிறப்பாளராக ஆக முடியாது. பைஜவனன் எனும் சூத்திர மன்னன் இருந்துள்ளான். அவன் வலிமையான மன்னனாக இருந்த வரலாறு குறித்தும் பல்வேறு பதிவுகளை அம்பேத்கர் செய்துள்ளார். சிறுகுழுக்கள், குலக்குழுக்கள், குலமுறைகள், இனக்குழுக்கள் என்ற பல்வேறு வடிவங்களில் இருந்த மக்கள் கூட்டத்தைப் பார்ப்பனியம்தான் தனிமைப்படுத்தி சூத்திரர்கள் என்ற பிரிவைக் கட்டமைத்துள்ளது என்பதை அம்பேத்கர் விரிவாகப் பேசுகிறார்.

வேதங்கள், பிராமணங்கள், ஸ்மிருதிகள் ஆகிய பலவற்றின் கட்டமைப்பில் சூத்திரர்கள் என்ற வருணம் உருவாக்கப்படுகிறது. சமூக எதார்த்தத்தில் அவ்வாறான மனிதக் கூட்டம் உருவாக ஏதுக்கள் இல்லை. மனித சமூக வளர்ச்சி அடையாத காலத்தில், இன்றைய சமகால அறிவு மரபை விட, வளர்ச்சி அடைந்த அறிவு மரபு உருவாகியிருந்தது என்பது அறிவியல், வரலாறு ஆகிய மரபுகளுக்கு எதிரானது. பழமை ஒரு நோய்; கரடு தட்டியது; அதிலிருந்து கற்றுக்கொள்வதற்கு ஒன்றுமில்லை என்ற போக்கில் 'புருஷ சூக்தம்' போன்றவற்றில் உள்ள செய்திகளை அம்பேத்கர் மதிப்பிடுகிறார். அவ்வகையான பதிவுகளே சூத்திரர்கள் என்ற வருண உருவாக்கத்தில் முதன்மையான இடம் வகித்திருப்பதை அம்பேத்கர் விரிவாகப் பதிவு செய்கிறார். இதன் அடிப்படையில் சூத்திரர்கள் என்பவர்கள் குறித்த வரையறைகளை மனு பேசுவதைக் காண்கிறோம். "ஒரு சத்திரியன் ஒரு பிராமணனைப் பழித்தால் அவன் நூறு பணம் அபராதம் கட்ட விதிக்கப்படுவான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு வைசியன் நூற்றைம்பது அல்லது இருநூறு பணம் அபராதமாகக் கட்ட வேண்டும். ஆனால் சூத்திரன் பிராமணனைத் திட்டினால் அவனது உடலில் சாட்டையால் அடி வாங்கிக் கொள்ள வேண்டும்" (அம்பேத்கர்.தொகுதி.2:91).

இவ்வகையான வருண உருவாக்க மரபில், முதல் மூன்று வருணங்கள் சமூக இயங்குமுறை சார்ந்து உருப்பெற்றதும், இந்த முதல் மூன்று வருணங்களும் இணைந்து இன்னொரு வருணத்தை, சூத்திர வருணத்தை உருவாக்கியதும், அந்த வருணத்தைப் படிநிலையில் இறுதியில் வைத்ததும் என்ற வரலாற்றை அம்பேத்கர்தான் முதன் முதல் தமது ஆய்வின் மூலம் வெளிப்படுத்தியுள்ளார். இவ்வகையான உருவாக்கத்தில் பார்ப்பனிய வருணம் முன் கை எடுத்த விரிவான வரலாற்றையும் பதிவு செய்கிறார். பார்ப்பனர் x சூத்திரர் முரண் ஆழமாக உருப்பெற்றதற்கான காரணங்களை, பார்ப்பனர்கள் உருவாக்கிய பதிவுகளின் மூலம் உறுதிப்படுத்துகிறார். சாதிய மரபு உருவாக்கமும் வருண மரபு உருவாக்கமும் இவ்வகையில் வெவ்வேறு கோணங்களில் செயல்பட்டிருப்பதை அம்பேத்கர் பேசுகிறார்.

இந்தியச் சமூக வரலாற்றைப் புரிந்து கொள்வதற்கு அம்பேத்கர் பேசும் சூத்திரர்களின் உருவாக்கம் குறித்த வரலாறு பெரிதும் உதவுகிறது. சமூக உருவாக்கத்தில் ஆதிக்க வர்க்கம், ஒடுக்கப்படும் வர்க்கம் என்ற இரு நிலைகள் உருவாவதைக் காண்கிறோம். இதில் ஆதிக்க வர்க்கத்தின் அதிகார மரபுகள் கட்டமைக்கப்பட்டு, அடித்தட்டு மக்களைச் சுரண்டுவதற்கு, குறிப்பாகப் பண்பாட்டு அடிப்படையில் வேறுபடுத்தி அடிமைப்படுத்துவதற்கு எவ்வாறு உதவுகின்றன என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது. இன்றைய சமூகச் சூழலில் செயல்படும் பார்ப்பனியம் எனும் ஆதிக்க மரபு, கடவுள், மதம் ஆகிய காரணிகளைக் கொண்டு வெகுமக்களைச் சுரண்டுவதை நேரடியாகக் காண்கிறோம். அது 'இந்துத்துவா' எனும் பாசிசமாக இன்றைக்கு வடிவம் கொண்டுள்ளது. அம்பேத்கரின் ஆய்வுகளின் மூலம் பாசிசம் இந்திய சமூகத்தில் உருவான மூல மரபுகளை நம்மால் புரிந்துகொள்ள முடிகிறது.

> இன்றைய சமூகச் சூழலில் செயல்படும் பார்ப்பனியம் எனும் ஆதிக்க மரபு, கடவுள், மதம் ஆகிய காரணிகளைக் கொண்டு வெகுமக்களைச் சுரண்டுவதை நேரடியாகக் காண்கிறோம்.

அம்பேத்கர் இந்திய சமூக அமைப்பில், சாதி எனும் சமூக நிறுவனத்தின் செயல்கள் குறித்த நேரடி அனுபவம் பெற்றவர். உணர்வு ரீதியாக அதன் தாக்கங்களுக்குட்பட்டவர். இரத்தமும் சதையுமாக சாதி எனும் நிறுவனம் நிகழ்த்தும் அப்பட்டமான கொடுமைகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபவித்தவர். ஒழுங்குபடுத்தப்பட்ட கல்வியைப் பெற்று, அதன் வழி ஆய்வு செய்யும் தருணம் உருவான காலத்தில், தமது ஆய்வுப் பொருளாக சாதி குறித்தப் பரிமாணங்களை ஆய்வு செய்த சமூகவியல் துறைப் புலமையாளர். இந்த மரபில் சாதியின் தோற்றம், அதன் இயங்குமுறை, அதன் வரலாறு, அதனை எதிர்கொள்ள வேண்டிய முறையியல்கள் குறித்த தமது தொடக்க ஆய்வை மேற்கொண்டார். சாதி குறித்த ஆய்வு என்பது தவிர்க்க இயலாமல் வருணம் என்ற சமூகப் பிரிவு குறித்த ஆய்வுக்கு இட்டுச் செல்லும். அந்த வகையில் நால்வருண உருவாக்கம், அதன் செயல்பாடுகள் குறித்த ஆய்வாக அவரது "சூத்திரர்கள்" குறித்த ஆய்வு உருவானது. அந்த ஆய்வின் தொடர்ச்சியாக, 'தீண்டப்படாதவர்கள்' எனும் ஆய்விற்குள் அவர் பயணம் செய்யத் தொடங்கினார். இவை அனைத்தும் கால ஒழுங்கில் ஒன்றுக்குப் பின் ஒன்று என்று அமைந்திருப்பதைக் காண்கிறோம். மேலே "சாதி' மற்றும் 'சூத்திரர்கள்' குறித்த உரையாடலை மேற்கொண்டோம். இதன் தொடர்ச்சியாக, இந்திய சமூகத்தில், இந்து மதம் சார்ந்த விளக்கங்களின்படி, 'தீண்டப்படாதவர்கள்' என்ற பொருண்மை வருகிறது. இதனை அம்பேத்கர் எவ்விதம் ஆய்வு செய்து வெளிப்படுத்தியுள்ளார் என்ற உரையாடலை நிகழ்த்துவது நம்முன் உள்ளது.

> நால்வருண உருவாக்கம், அதன் செயல்பாடுகள் குறித்த ஆய்வாக அவரது "சூத்திரர்கள்" குறித்த ஆய்வு உருவானது. அந்த ஆய்வின் தொடர்ச்சியாக, 'தீண்டப்படாத வர்கள்' எனும் ஆய்விற்குள் அவர் பயணம் செய்யத் தொடங்கினார்.

இந்தியச் சமூக அமைப்பில், வருண மரபு எனும் நிறுவன அமைப்பிற்குள் நிகழ்ந்த முரண்களே சூத்திரர்கள் எனும் பிரிவு உருவாகக் காரணமாக அமைந்தன என்ற ஆய்வை மேற்கொண்ட அம்பேத்கர் இதற்குள், மேல் குறித்த வருண அமைப்பிற்குள் வராத 'தீண்டப்படாதவர்கள்' என்பவர்கள் எவ்வாறு உருவாக்கம் பெற்றிருக்க முடியும் எனும் ஆய்விற்குள் செல்கிறார். இந்தியச் சமூக அமைப்பில் உள்ள மூன்று பிரிவினர் குறித்த ஆய்வை முன்னெடுக்கிறார். இவர்கள் வருண மரபிற்குள் வராதவர்கள். இவர்கள் குற்றப் பரம்பரையினர் எனும் சீர் மரபினர், ஆதிப் பழங்குடிகள் மற்றும் தீண்டப்படாதவர்கள் ஆவர். இதில் குற்றப் பரம்பரையினரின் சமூக உருவாக்கப் பின்புலத்தை அறிந்து கொள்ள முடிகிறது. ஆதிப்பழங்குடிகள் குறித்தும் அறிய முடிகிறது. இவர்கள் வருண மரபிற்குள் கட்டமைக்கப்படாத நிலைகளையும் புரிந்து கொள்கிறோம். ஆனால் 'தீண்டப்படாதவர்கள்' எப்படி வந்தார்கள்? யாரை அவ்வாறு அடையாளப்படுத்துகிறோம்; இவர்கள் வருண மரபிற்குள்ளோ, சாதி மரபிற்குள்ளோ உட்படுகிறார்களா? என்று பார்க்கும்போது, அதற்குள் அவர்கள் அடங்குவதாக சாதி, வருணம் பற்றிப் பேசும் நூல்கள் பேசுகின்றனவா? ஆகிய ஆய்வுகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கொண்டு, அம்பேத்கர் யார் தீண்டப்படாதவர்கள் என்பதற்கான வரையறைகளைத் தருகிறார்.

1. இந்துக்களுக்கும் தீண்டப்படாதோருக்கும் இடையே இன வேறுபாடு *(racial difference)* ஏதும் இல்லை.

2. தீண்டாமை நடைமுறைக்கு வருவதற்கு முன்னர், இந்துக் களுக்கும் தீண்டப்படாதோருக்கும் இடையேயான வேறுபாடு தொடக்கத்தில் குலமரபுக் குழுவினருக்கும் அன்னிய குலமரபுக் குழுவிலிருந்து சிதறுண்ட மனிதர்களுக்கும் இடையேயான வேறுபாடாக இருந்தது. சிதறுண்ட மனிதர்கள்தான் பின்னர் தீண்டப்படாதவர்களாக நடத்தப்பட்டனர்.

3. தீண்டாமைக்கு இன அடிப்படை இல்லாதது போலவே தொழில் அடிப்படையும் இல்லை.

4. தீண்டாமை தோன்றியதற்கு இரண்டு மூலவேர்கள் உள்ளன.

அ. பௌத்தர்களிடம் காட்டியது போன்று இந்த சிதறுண்ட மனிதர் களிடமும் பார்ப்பனர்கள் காட்டிய வெறுப்பும் பகைமையும்.

ஆ. மாட்டிறைச்சி உண்பதை ஏனையோர் கைவிட்ட பிறகு சிதறுண்ட மனிதர்கள் அதைத் தொடர்ந்து கடைப்பிடித்தது.

5. தீண்டாமையின் தோற்றுவாயைத் தேடும்போது, தீண்டப் படாதோரை தூய்மையற்றவர்களிடமிருந்து வேறுபடுத்திப் பார்ப்பதில் கவனம் எடுத்துக்கொள்ள வேண்டும். அனைத்து வைதீக இந்து எழுத்தாளர்களும் தூய்மையற்றவர்களைத் தீண்டப் படாதவர்களுடன் ஒன்றாக இனம் கண்டுள்ளனர். இது தவறாகும். தீண்டப்படாதவர்கள் வேறுபட்டவர்கள்.

6. தூய்மையற்றவர்களை ஒரு வகுப்பினராக தரும சூத்திரங்கள் கூறுகின்றன. தீண்டப்படாதவர்களோ கி.பி.400க்கு வெகு காலத்திற்குப் பிறகு தோன்றினர்.

(அம்பேத்கர்.தொகுதி.4,5,6)

ஊரின் ஒதுக்குப்புறத்தில், சேரி அல்லது பறையர் தெரு என்று அழைக்கப்படும் பகுதியில் வசிப்பவர்கள் இந்தியா முழுவதும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரவியுள்ளனர். இவர்களை இன்றைய சமூகத்தில் ஆதி திராவிடர்கள், அரிசனங்கள், பட்டியல் இன மக்கள் என்று பலவாறாக அழைக்கிறோம். இம்மக்களை ஒடுக்கப்பட்ட சாதிப் பிரிவாகவே பொதுச் சமூகம் இன்றைக்கு அடையாளப்படுத்துகிறது. இவர்களது அடையாளம் என்பது தீண்டாமையோடு எவ்வாறு இணைக்கப்பட்டது; அதன் விளைவுகள் எத்தகையது; இன்றைய சமூக எதார்த்தத்தில் அதனை எப்படிப் புரிந்துகொள்வது; ஆகிய பல விவரணங்களை அம்பேத்கர் கவனத்தில் எடுத்து ஆய்வு செய்துள்ளார். அதைவிட இந்த மக்களுக்காக, தமது வாழ்க்கையை அர்ப்பணித்துப் போராடிய மகாத்துமாப் பூலேவிற்குப் (1827-1897) பின்னர் வந்தவர் அம்பேத்கர்தான் என்று சொல்ல முடியும். அம்பேத்கரின் வாழ்க்கை என்பது இந்த மக்களின் வாழ்க்கையோடு இரண்டறக் கலந்தது; 1946இல் வெளிவந்த சூத்திரர்கள் யார்? என்ற நூலின் தொடர்ச்சிதான் "தீண்டப்படாதவர்கள் யார்? அவர்கள் எவ்வாறு தீண்டப்படாதவர்கள் ஆயினர்?" என்ற நூல் என்று அம்பேத்கர் பதிவு செய்கிறார். இந்நூல் 1948இல் வெளிவந்தது.

ஊரின் ஒதுக்குப்புறத்தில், சேரி அல்லது பறையர் தெரு என்று அழைக்கப்படும் பகுதியில் வசிப்பவர்கள் இந்தியா முழுவதும் பரவியுள்ளனர். இவர்களை இன்றைய சமூகத்தில் ஆதி திராவிடர்கள், அரிசனங்கள், பட்டியல் இன மக்கள் என்று பலவாறாக அழைக்கிறோம்.

மதநூல்கள் எனப்படும் சாத்திர நூல்கள், சூத்திரன் என்பதைக் கட்டமைத்த முறையிலிருந்து வேறுபட்டு, 'தீட்டு' எனும் மானிடவியல் துறை சார்ந்து தீண்டப்படாதவர்கள் கட்டமைக்கப்பட்ட வரலாறு குறித்த விரிவான ஆய்வை மேற்கொண்ட அம்பேத்கர், "தீண்டப்படாதோர்' உருவாக்கம், வரலாறு ஆகிய பிற பற்றிய ஆய்வுகளை மேற்கொண்டிருந்தாலும், அம்மக்களை நடைமுறைச் சமூகம் எவ்வாறு எதிர்கொள்கிறது; அரசியல் தளத்தில் செயல்படுவோர் இம்மக்களை எவ்வாறு பகடைக்காயாக வடிவமைக்கின்றனர்; மத நிறுவனங்கள் இம்மக்களை எப்படி நடத்துகின்றன என்பதை எண்ணற்ற எடுத்துக்காட்டுகள் மூலம் உரையாடலுக்குட்படுத்துகின்றார்.

'இந்திய வரலாறு பற்றிக் குறிப்பிடும் அம்பேத்கர் அலெக்ஸாண்டர் வருகைக்கு முன்பான பொது நிகழ்ச்சிகள் நிகழ்ந்த காலங்களை வரையறை செய்வது அவ்வளவு எளிதாக இல்லை' என்பதைப் பதிவு செய்கிறார், அதனால்தான் பழம் வரலாறுகள் குறித்த மதநூல்களின் பதிவை, சமகால வரலாற்று நிகழ்வுகளோடு இணைத்துப் பேசுகிறார். பழங்கால வரலாறு சமகால வரலாற்று நிகழ்வுகளுக்கே முதன்மை தருகிறார். சிதறுண்ட மனிதக் கூட்டமானது, உருவான சமூக வரலாறு பற்றிப் பேசும்போது, நாடோடிகளாக வாழ்ந்த மனிதக் கூட்டம், ஓரிடத்தில் தங்கி வாழத் தொடங்கியது. ஆனால், நாடோடிகளாக வாழ்ந்தவர்களும் தொடர்ந்தார்கள். இவ்வகையான சமச்சீரற்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்மை சமூகத்தில் இயல்பானதே. இந்த இரு குழுவினருக்குள்ளும் உருவான மோதல் மூலம் சிதறுண்ட மனிதர்கள் எனும் ஒரு பிரிவினர் உருவாகின்றனர். இவர்களே தீண்டப்படாதவர்களாக ஆக்கப்பட்டனர். இவர்கள் ஊரின் புறப்பகுதிகளில் வசிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இவர்கள் ஊரில் வாழும் மக்களுக்குப் பாதுகாவலர்களாகவும் செயல்பட்டனர் என்கிறார் அம்பேத்கர். இத்தன்மையை "மகர்" மக்களின் வாழ்முறையை எடுத்துக்காட்டாகக் கொண்டு விரிவாக விளக்குகிறார்.

1920கள் முதல் தீண்டப்படாதவர்களின் எழுச்சி உருவானாலும் 1932 வரை அவர்கள் கவனத்துக்குரியவர்களாகக் கருதப்படவில்லை. பல்வேறு ஆணையங்கள், அவர்களுக்கான உரிமைகள், குறிப்பாக ஆலய நுழைவு போன்றவை, தனித்தொகுதி கோரிக்கைகள் ஆகிய பல இம்மக்கள் பற்றிய உரையாடல்கள் பொதுவெளிக்கு வருவதற்குக் காரணமாக அமைந்த வரலாற்றை அம்பேத்கர் விரிவாகப் பதிவு செய்துள்ளார். அதில் அவருடைய பங்களிப்பு முதன்மையாக இருந்த வரலாற்றையும் நாம் அறிகிறோம். இதில் குறிப்பாக வட்டமேசை மாநாடுகள், தனித்தொகுதி குறித்த காந்தியார் நிலைப்பாடு, அதன் விளைவான பூனா ஒப்பந்தம் போன்றவற்றைக் கூற முடியும்.

"தீட்டு" என்பது மானிடவியல் துறை சார்ந்து, இறப்பு எனும் நிலையையும் பெண்கள் உடற்கழிவுகளையும் சார்ந்தே கட்டமைக்கப்பட்டன. ஆனால் இது மனிதர்கள் மீது தீட்டாக கட்டமைக்கப்பட்டது; அவர்கள் தனித்துவாழ நிர்பந்திக்கப்பட்ட வரலாறும் அவர்களின் உணவுமுறை சார்ந்தும் தீட்டு கட்டமைக்கப் பட்ட வரலாற்றை அம்பேத்கர் விரிவாகப் பதிவு செய்கிறார். சமூக அரசியல் தளங்கள், மத நிகழ்வுகள் சார்ந்த தருணங்கள் ஆகியவற்றில் இவர்கள், 'தீண்டாமை' என்ற அடையாளத்தின் மூலம் எதிர்கொண்ட பல்வேறு முறைமைகளை அம்பேத்கர் விரிவாகப் பதிவு செய்துள்ளார்.

"தீட்டு" என்பது மானிடவியல் துறை சார்ந்து, இறப்பு எனும் நிலையையும் பெண்கள் உடற்கழிவுகளையும் சார்ந்தே கட்டமைக் கப்பட்டன. ஆனால் இது மனிதர்கள் மீது தீட்டாக கட்டமைக் கப்பட்டது;

சமூகத்தில் எதையெல்லாம் அறமின்மை என்று சொல்கிறோமோ, அவற்றை எல்லாம் தீண்டப்படாதவர்கள் வாழ்க்கையின் அறமாக இந்தியச் சமூகம் வரையறை செய்தது; கோயில்களில் வழிபட உரிமையில்லை, கிணற்றில் நீர் எடுக்க உரிமையில்லை, சுடுகாட்டில் பிணங்களை எரிக்க உரிமையில்லை, ஓர் இந்துவின் முன் உட்கார உரிமையில்லை, செத்த மாட்டைத் தூக்குவதுதான் வேலை, நல்ல ஆடைகள், அணிகலன்கள் அணிய உரிமையில்லை, இவையெல்லாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய சமூகச் சூழலிலும் சில பகுதிகளில் நடைமுறையில் இருப்பதைக் காண்கிறோம். இன்றைய சூழலில் அவற்றை நடைமுறைப்படுத்துவதில் மாற்றங்கள் உருப்பெற்றிருந்தாலும், மனநிலை சார்ந்த உளவியலில் அத்தன்மை மாறிவிட்டதாகக் கூறமுடியாது. இந்தியா முழுதும் இத்தன்மைகள் நடைமுறையில் இருப்பது குறித்த விரிவான தரவுகளை அம்பேத்கர் தம் நூலில் எடுத்துக் காட்டுகிறார். பல தருணங்களில் சாதியும் தீண்டாமையும் ஒன்றுக்குள் ஒன்றாகச் செயல்படும் முறைமைகள் குறித்தும் அம்பேத்கர் பதிவு செய்துள்ளார். அவர்ண இந்துக்கள் எனப்படும் ஆதிச் சாதிகள் (பழங்குடிகள்), சீர்மரபினர், தீண்டப்படாதவர்கள் ஆகியவர்களின் வாழ்முறைக்கும் நடைமுறையில் இருக்கும் சாதி எனும் நடைமுறைச் செயல்பாடுகளுக்கும் மிகவும் நெருக்கமான தொடர்புகள் உருவாக்கப்பட்டுள்ளதையும் அம்பேத்கர் விரிவாக எழுதியுள்ளார்.

பல தருணங்களில் சாதியும் தீண்டாமையும் ஒன்றுக்குள் ஒன்றாகச் செயல்படும் முறைமைகள் குறித்தும் அம்பேத்கர் பதிவு செய்துள்ளார்.

அம்பேத்கரின் போராட்டங்களில், அவரை நேரடியாக எதிர் கொண்டவர்களில் காந்தியாருக்கு (1869 -1948) முக்கிய இடமுண்டு. அம்பேத்கரின் சாதி பற்றிய ஆய்வு, சாதியை ஒழிப் பதற்கான அவரது உரை ஆகியவற்றை வாசித்த காந்தி அம்பேத்கர் குறித்துப் பின்வரும் கருத்தைப் பதிவு செய்கிறார்.

“எந்த சீர்திருத்தவாதியும் அவரது உரையைப் (சாதியை அழித் தொழித்தல் பற்றிய உரை) புறக்கணிக்க முடியாது. வைதீகர்கள் அதைப் படிப்பதால் பயனடையலாம். இப்படிச் சொல்வதால் அவருடைய உரை மறுப்புக்குரியது அல்லது என்று பொருளாகாது. மிகவும் தீவிரமான மறுப்புக்குரியது என்பதற்காகவே அதைப் படிக்க வேண்டும். இந்து மதத்திற்கு டாக்டர் அம்பேத்கர் ஒரு சவாலாக உள்ளார். அவர் இந்துவாக வளர்க்கப்பட்டவர். இந்துமத ஒழுக்கமுடையவராக பயிற்றுவிக்கப்பட்டவர். அவரும் அவரைச் சார்ந்த மக்களும் நடத்தப்பட்ட முறையினால் மேல் சாதி இந்துக்கள் (Savama) என்று தம்மை அழைத்துக் கொள்வோரிடம் வெறுப்புற்றுள்ளார்.

... அவருக்கும் அவரைச் சார்ந்தோருக்கும் பொதுவான மரபு வழியாக உள்ள இந்து மதத்திலிருந்தே அவர் விலகிச் செல்கிறார். இந்து மதவாதிகளில் ஒரு பிரிவினர் மீதுள்ள தமது வெறுப்பை இந்து மதத்தின் மீது காண்பிக்கிறார். (காந்தி.தொகுதி1:160, ஹரிஜன், ஜுலை 11, 1936)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாகூர் மாநாட்டில் பங்கேற்று நிகழ்த்துவதாக இருந்த உரை பற்றியே காந்தி தமது பத்திரிக்கையில் மேற்குறித்தவாறு பதிவு செய்திருக்கிறார். இதற்கு அம்பேத்கரின் பதிலைப் பதிவு செய்வது அவசியம்.

"... என் உரையைப் பற்றி அவர் தெரிவித்துள்ள கருத்துக்களைப் படித்தபோது, என் கருத்துக்களிலிருந்து அவர் முற்றிலும் முரண்படுகிறார் என உணர்ந்தேன்... ... என்னை எதிர்ப்பவர்கள் யாரோ வெளிஉலகிற்கு அறிமுகமாகாத பொதுவானவராக இருந்திருந்தால், இவ்வளவு பெரிதாக எடுத்துக்கொள்ளமாட்டேன். ஆனால் மகாத்மாவே என்னை எதிர்ப்பவராக இருப்பதால், அவர் எடுத்துரைத்துள்ள வழக்கை மறுப்பதற்கு முயன்றாக வேண்டும் என்பது என் கருத்து... மாநாட்டில் படிக்காத என் உரையை, நான் வெளியீட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டிருப்பதே என் அதிர்ச்சிக்குக் காரணம்... *(அம்பேத்கர். தொகுதி.1:170)*

மேற்குறித்த இரு பதிவுகளின் மூலம் காந்தியார் – அம்பேத்கர் கருத்துநிலைகள் தொடர்பான புரிதலை பெற முடிகிறது. இவ்வகையில் காந்தியாருக்கும் அம்பேத்கருக்கும் கருத்துநிலை சார்ந்தே முரண்கள் வாழ்க்கை முழுவதும் இருந்ததை அறிகிறோம். சாதி குறித்த அம்பேத்கரின் ஆய்வுகளை காந்தியார் ஏற்றுக்கொண்டதில்லை என்பதை அறிகிறோம். காந்தியாரின் கருத்துருவும் அம்பேத்கரின் கருத்துருவும் முரண்பட்டிருப்பதை இத்தொகுதிகளில் பல இடங்களில் காண முடிகிறது. காந்தி-அம்பேத்கர் குறித்தப் புரிதலுக்காக இப்பகுதியைச் சான்றாகக் கொடுத்துள்ளோம். அடிப்படையில் இருவரும் முரண்படுகின்றனர் என்பது இந்திய வரலாற்றில் ஆர்வ முடைய எவருக்கும் முக்கியமான செய்தியாக அமைகிறது.

காந்தியாருக்கும் அம்பேத் கருக்கும் கருத்துநிலை சார்ந்தே முரண்கள் வாழ்க்கை முழுவதும் இருந்ததை அறிகிறோம். சாதி குறித்த அம்பேத்கரின் ஆய்வுகளை காந்தியார் ஏற்றுக் கொண்டதில்லை என்பதை அறிகிறோம்.

கொலம்பிய பல்கலைக்கழகம் (அமெரிக்கா) இலண்டன் பொருளியல் மற்றும் அரசியல் ஆய்வு நிறுவனம் (இங்கிலாந்து) பான் பல்கலைக்கழகம் (ஜெர்மனி) ஆகிய மேலைத்தேய ஆய்வு நிறுவனங்களில் பயிற்சிபெற்றவர் அம்பேத்கர். ஐரோப்பிய–அமெரிக்கப் பல்கலைக்கழகங்கள் சார்ந்த ஆய்வு முறையியலைக் கற்றுத் தேர்ந்தவர். இதனால் தமது ஆய்வுகளில் பல்வேறு ஆய்வாளர்களின் ஆய்வுகளை மேற்கோள்காட்டி ஆய்வு செய்திருப்பதைக் காண்கிறோம். அவர்களின் பெயர்களை பின்காணும் வகையில் பதிவு செய்யலாம்.

லூயிஸ் சால்டிங், சார்லஸ் சைனபேஸ், ஆர்.எச்.டாவ்னி, ஜெ.கே. பதான், ஆர்.எச்.பரோ, பேடன் போவல், சார்லஸ் ஜான்சன்),

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்க்ஸ் முல்லர் (1823-1900), சர் ஹென்றி மைனே, துர்கைம், எம். ஆர்.பண்டராகர், மார்க்சிம் கார்க்கி, மார்டின் ஹக், ஜே.எஸ்.எப். மெக்கன்ஸி, தைஸ் ஸ்டான்லி, டபிள்யூ.இ.ஹுன், சி.எப்.ஆண்ரூஸ், இராபர்ட் ஸ்மித், சார்லஸ் ஏ.எல்வுட், ஜே.என்.ஒகில்வீ, கிராவ்பி, எம்.கிருஷ்ணமாச்சாரியார், கேயி, தர்ஸ்டன், ஜேம்ஸ் பினாஸ், ஈ.டி. புன்சென், வில்லியம் மக்டோசல், ஜே.சி.மார்ஸ் மென், மேய்பூ, சர்.டபிள்யூ.எச்.ஸ்லீமான், ஹென்றி, ஹாலம், எஸ்.வி.கெட்கர், சர்.எட்.ரிஸ்லி, செனார்ட், நெஸ்பீல்ட், குமாரசாமி ஏ.கே., ஈ.சி. பார்சன்ஸ், எச்.டிருமாண்ட், கால்டுவெல், சர்.ஹென்றி மைனே, எம்.ஆர்.பண்டாரகர், சார்லஸ் சைனபோஸ், ஆப்.எச்.டாவ்னி.

ஒரு சமூகவியல் மாணவனாக இருந்து, சமூகவியல், உளவியல், வரலாறு ஆகிய பல்துறை சார்ந்த ஆய்வாளர்களின் கருத்துக்களை வாசித்து அதனை உள்வாங்கி, இந்திய சாதியக் கருத்தியலை அம்பேத்கரின் ஆய்வுகள் முன்னெடுத்துள்ளன

மேற்குறித்த ஆய்வாளர்களில் பெரும்பாலோரின் கருத்துக்கள் இந்தியச் சூழலைப் பெரிதும் புரிந்து கொள்ளாத ஆய்வுகளாக இருப்பதைச் சுட்டிக் காட்டுகிறார். மாக்ஸ் முல்லர் போன்ற ஒரு சிலரின் ஆய்வுகள், இந்தியச் சூழலைப் புரிந்துகொண்ட ஆய்வுகள் என்றும் பதிவு செய்கிறார். ஒரு சமூகவியல் மாணவனாக இருந்து, சமூகவியல், உளவியல், வரலாறு ஆகிய பல்துறை சார்ந்த ஆய்வாளர் களின் கருத்துக்களை வாசித்து அதனை உள்வாங்கி, இந்திய சாதியக் கருத்தியலை அம்பேத்கரின் ஆய்வுகள் முன்னெடுத்துள்ளன என்பதைப் பதிவு செய்யும் தேவையுண்டு.

அம்பேத்கரின் ஆக்கங்களை வரைமுறை செய்து மக்கள் பதிப்புக்காக உருவாக்கும் இத்தொகுதிகளில், முதல் நிலையில் அம்பேத்கர் வாழ்க்கை வரலாறு அமைகிறது. இரண்டாம் நிலையில் சாதியம்: வரலாறு- ஆய்வு என்றும் சாதியம்: கருத்துநிலை என்றும் ஒன்பது தொகுதிகள் அமைகின்றன. இத்தொகுதிகளில் அம்பேத்கர் அவர் காலத்தில் வெளியிட்ட நான்கு நூல்கள் மற்றும் சாதியம் தொடர்பான அவரது கட்டுரைகள் ஆகியவை இடம்பெறுகின்றன.

அம்பேத்கரின் உரையாடல்களை சுருக்கமாகத் தொகுத்துக் கொள்ள முடியும்.

- சாதி எனும் நிறுவனம், இந்தியச் சமூகத்தில் அகமண முறை என்ற நடைமுறை மூலம் உருவாகி, அது தொடர்ந்து செயல் படுவதன் பின்னுள்ள கருத்து நிலைகள் எவையெவை; அந்தக் கருத்து நிலைகள் எவ்வாறு உருப்பெற்றன; அக்கருத்து நிலைகள் எவ்வாறெல்லாம் சமூக இயங்குதளத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றன; சாதியம் எனும் கருத்துநிலை நிறுவனப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்ட அமைப்பாகவும் எப்படிச் செய்யப்படுகிறது என்பதை அம்பேத்கர் பதிவு செய்திருக்கிறார்.

- சாதியக் கருத்துநிலைகளைப் பதிவு செய்திருக்கும் பிரதிகள் எவையெவை; காலந்தோறும் அவை எவ்வாறு முன்னெடுக் கப்படுகின்றன; அதை முன்னெடுப்பவர்கள் யார்? பிரதிகளில் பேசப்படுவதற்கு இந்துமதம் தனது ஆதாரமாக கொண்டிருக்கும் நடைமுறைகள் எவை; இதன் மூலம் சாதி எனும் நிறுவனமும் மதம் என்ற நிறுவனமும் இணைந்து இயங்கும் கூறுகள் எவையெவை?; மதத்தை ஒழிக்காமல் சாதியை ஒழிக்க முடியுமா என்ற பல்வேறு உரையாடல்களை அம்பேத்கர் முன்வைக்கிறார்.

- சாதியைக் கட்டிக்காப்பதில் வருணாசிரமம் எனும் நிறுவன நிலைகளின் பங்களிப்பு என்ன; இதில் ஆதிக்க வருணமாக இருக்கும் பார்ப்பனர்களின் வகிபாகம் எத்தகையதாக உள்ளது ஆகியவற்றை அம்பேத்கர் கவனப்படுத்துகிறார்.

- சாதிகளை அழித்தொழிக்க முற்படும்போது, எதிர்கொள்ளும் சிக்கல்கள் எவையெவை; அந்தச் சிக்கல்களை எதிர்கொள்ளும் வழிகள் எவை; சாதி ஒழிப்பில் ஈடுபடும்போது, காந்தியார் போன்ற பெரும் ஆளுமைகளும் மதநிறுவனங்களும் மேற் கொள்ளும் எதிர் நடவடிக்கைகள் எவை; அதற்கு எதிரான போராட்டத்தை மேற்கொள்ளும் முறையியல்கள் எவையெவை; என்பது குறித்தும் சான்றாதாரங்களுடன் உரையாடுகிறார்.

- சாதியின் தொடர்ச்சியாகச் செயல்படும் வருணம் சார்ந்த கருத்துநிலை நிறுவன அமைப்புகள் சாதியை காப்பாற்றும் முறைகள் எவை; வருணாசிரமத்தை புதிய பிரிவாக 'சூத்திரர்கள்' என்பதை எவ்வாறு உருவாக்கினார்கள்; அதன் செயல்பாடுகள் சமூகத்தில் உருவாக்கும் விளைவுகள் எவை என்று அவருடைய 'சூத்திரர்கள் யார்?' எனும் ஆய்வு விளக்குகிறது. சூத்திரர்கள் குறித்த அம்பேத்கர் ஆய்வுகளின் பெறுமதி அளவுக்கு இன்னொரு ஆய்வு சொல்ல முடியுமா; என்பது கேள்வி. சிதறுண்ட மனிதக் கூட்டமாக 'சூத்திரர்கள்' உருப்பெறும் வரலாறு இந்தியச் சமூகத்தில் எப்படி உருப்பெற்றது போன்ற பல புதிய வரலாறுகளை அம்பேத்கர் முன்வைக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சமூக படிநிலை வளர்ச்சியில், வருணமரபு சூத்திரர்கள் என்று இறுதிப் பிரிவை உருவாக்கியுள்ளது. ஆனால் அதற்கும் கீழாக 'தீண்டப்படாதவர்கள்' எனும் மக்கள் கூட்டத்தை உருவாக்கியுள்ளது. இது எவ்வாறு உருவானது. இதில் வருணமுறை என்ற நிறுவனத்தின் பங்களிப்பு என்ன; இதில் குறிப்பாகப் பார்ப்பனியம் எனும் கருத்துநிலை, தீட்டு எனும் மரபை உருவாக்குவதும், அது சார்ந்து புறக்கணிக்கப்பட்ட மக்களாக தீண்டப்படாதவர்களாக மக்கள் வாழ்வது ஆகியவை குறித்தப் பதிவுகளை அம்பேத்கர் செய்துள்ளார்.

- இந்திய சமூக வரலாற்றைப் படித்தறிய முயலும் மாணவனுக்கு அம்பேத்கர் அளித்துள்ள கொடைகளின் பெறுமதி அளப்பரியதாகும். அம்பேத்கரின் ஆய்வுகளைக் கற்றறிவதன் மூலம் இந்திய சமூக அமைப்பைப் புரிந்துகொள்ள முடியும். இதனடிப்படையில், இந்திய சமூக மாற்றத்திற்கானப் பங்களிப்பை கையளிக்க முடியும்.

குறிப்பு: இந்த கட்டுரையைப் புரிந்துகொள்ள அண்ணல் அம்பேத்கர் ஆக்கங்கள் 1 முதல் 9 தொகுதிகள் வாசிக்க வேண்டுகிறேன். இருபத்திரண்டு உட்தலைப்புகளிலும், 2400 பக்கங்கள் 100 தொகுதிகளாக அம்பேத்கர் ஆக்கங்கள் வெளிவர உள்ளன. அம்பேத்கர் ஆக்கங்கள்: மக்கள் பதிப்பு எனும் இப்பதிப்புப் பணியில் பதிப்பாசிரியராக செயல்படுகிறேன். இப்பணியில் என்னோடு சேர்ந்து செயல்படும் தோழர் மா.சிவக்குமார் மற்றும் பிற தோழர்களுக்கு நன்றியுடையேன். பதிப்புக்குழு தோழர்கள் இக்கட்டுரையை விவாதித்து மாற்றங்கள் செய்தனர் என்பதையும் பதிவு செய்ய விரும்புகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உசாத்துணை

ஆனந்த், டெல்டும்ப்டே, மஹறத். (ஆங்கிலம் 2018) முதல் தலித் புரட்சியின் உருவாக்கம் தமிழில் கமலாலயன். சென்னை – 600 098: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.

தனஞ்சய் கீர். (ஆங்கிலம் 2005) டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் வாழ்க்கை வரைலாறு. இரண்டாம் பதிப்பு. தமிழில் க.முகிலன், சென்னை – 600 005: மார்க்சிய பொரியாரிய பொதுவுடமைக் கட்சி வெளியீடு.

Sukhadeo Thorat & Narender Kumar. (2009) B.R.Ambedkar: Perspectives on social Exclusion and Inclusive politics. First Edition. United Kingdom: Oxford university press. Gradian paperbacks.

Kuber, W.N. (2009) Ambedkar: A critical study. Third Reprint. New Delhi: People's publishing house.

Scott.R.Stroud. (2023) The Erdution of pragmatism in India (Intellectual Biography of Ambedkar). India: Celebrating 30 years of publishing in India. Harper Collins publishers.

Aakash Singh Rathore, Becoming BabaSaheb. (2023) Birth to Mahad (1891-1929) volume: 01. India: Celebrating 30 years of publishing in India, Harper Collins publishers.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2

கம்பராயரோடு முரணும் சாமாண்டி: சமயக் கதையாடல்களும் சமூக உறவுகளும்

மு.செல்வக்குமார் [1]

உலகெங்கிலும் எண்ணற்ற வாய்மொழிக் கதைவடிவங்கள் வழங்கி வருகின்றன. இவற்றில் மனிதர்கள் மட்டுமன்றி அஃறிணை உயிர்கள், பேய்கள், தேவதைகள் உள்ளிட்ட பலவும் பாத்திரங்களாக இருக்கின்றன. இக்கதைகள் மனிதர்களின் கற்பனையில் உதிப்பவை என்பதால் இப்பாத்திரங்கள் அனைத்திலும் மனிதர்களது குணாம்சங்களே விரவியிருக்கக் காணலாம். தெய்வங்கள் பற்றிய கதைகளும் இதற்கு விதிவிலக்கல்ல. இந்தத் தெய்வக் கதைகளில் பல்வேறு நுட்பமான செய்திகள் பொதிந்துள்ளன. ஆகவேதான் சமயம் சார்ந்த கதையாடல்கள் அறிஞர்களின் கவனத்தை ஈர்க்கக்கூடியவையாக விளங்குகின்றன.

சமயத்தின் இருபெரும் வெளிப்பாடுகளான தொன்மம், சடங்கு ஆகியன வெவ்வேறு இடங்களுக்குப் பரவிச் செல்லும் தன்மை யுடையவை. அவ்வகையில் ஒரு பண்பாட்டுக் கூறு தோன்றிய இடத்திற்கும் பரவி நிலைகொண்ட இடத்திற்கும் இடையிலான மாறுபாடுகளை ஒப்பாய்வுவழி கண்டுணர்வது அவசியமானதாகும். இதன்வழி சில புதிய வெளிச்சங்கள் கிடைக்கப் பெறலாம். இவ்வாறு நோக்குவதற்குரிய சிறந்த சான்றைக் கம்பம் பள்ளத்தாக்கில் உள்ள இரண்டு கோயில்கள் கொண்டுள்ளன. இவற்றை சமூகவியல், மானிடவியல் அணுகுமுறைகள் மூலம் பகுத்து விளக்க இக்கட்டுரை முயல்கின்றது.

சாமாண்டியம்மன்: தோற்றக்கதையும் வழிபாடும்

தேனி மாவட்டத்திலுள்ள கம்பம் நகரிலிருந்து 4 கி.மீ. தொலைவில் ஆங்கூர்ப்பாளையம் செல்லும் வழியினிடையே சாமாண்டிபுரம் எனும் சிற்றூர் இருக்கின்றது. மேற்குத் தொடர்ச்சி மலையை ஒட்டி நதிகள் பாய்ந்து செழிக்கும் வயல்வெளிகள் சூழ்ந்த பகுதியில்

1 Dr.M.Selvakumar, Guest Faculty, Department of Tamil, Indian Languages and Rural Arts, Gandhigram Rural Institute (DTBU), Gandhigram, Dindigul, Tamilnadu. email: aanilaiselvan@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாமாண்டியம்மன் கோவில் அமைந்துள்ளது. நாட்டார் சமய மரபில் பெண்தெய்வக் கோயில்கள் பெரும்பாலும் வடக்கு அல்லது கிழக்கு நோக்கி இருப்பது வழமையானதாகும். இக்கோயில் தெற்கு நோக்கி அமைந்திருப்பது தனித்துவமானதாகக் கருதப்படுகிறது. இதில் பண்டாரம் சாதியைச் சேர்ந்தவர்களே பூசாரிகளாக இருந்து வழிபாடு நடத்தி வருகின்றனர்.

சாமாண்டி அம்மன் குறித்தத் தோற்றக் கதை வருமாறு: முன்பொரு காலத்தில் வனமாக இருந்த இப்பகுதியின் வழியே வளையல் வியாபாரி ஒருவர் நடந்து சென்றார். ஆளரவமற்றும் புதர்கள் நிறைந்தும் இருக்கின்ற பாதையில் சென்றுகொண்டிருந்த பொழுது 'வளையல்காரரே, வளையல்காரரே இங்க வாங்க' என்றொரு பெண்குரல் அழைத்தது. அதைக் கேட்ட வளையல் வியாபாரி பயந்து ஓடிவிட்டார். அவர் திரும்பி வந்த போதும் அதேபோல் மீண்டும் அழைத்தது. அஞ்சி நடுங்கிய வியாபாரியிடம் 'பயப்படாதீங்க உங்கள ஒன்னும் செய்யமாட்டேன். பக்கத்தில வாங்க' என்றது. அவரும் மனதைத் திடப்படுத்திக் கொண்டு அருகில் சென்றார். அப்பொழுது பாம்புப்புற்றிலிருந்து ஒருகை மட்டும் வெளியே வந்தது. 'என் கையில வளவி போடுங்கய்யா' எனக் கேட்டவுடன் வியாபாரி தன்னிடமிருந்த வளையல்களைப் போடத் துவங்கினார். அவர் எவ்வளவு அணிவித்தும் கை நிரம்பவில்லை. ஒருகட்டத்தில் அவரிடமிருந்த வளையல்கள் முழுமையும் தீர்ந்துபோயின. செய்வது அறியாமல் திகைத்த வியாபாரி, "அம்மா, நான் புள்ளகுட்டிக்காரன். என்னிட்ட இருந்த எல்லா வளவியையும் போட்டுட்டேன். இப்ப நான் என்ன பண்றது?" என வருந்திக் கேட்டார். அப்பொழுது அப்பெண்குரல், 'இந்தப் புத்திலிருந்து கொஞ்சம் மண்ணள்ளி முடிஞ்சுகிட்டு வீட்டுக்குப் போங்க' என்று பதிலுரைத்தது. அது சொன்னவாறே வியாபாரியும் செய்தார். வீட்டுக்குச் சென்ற பின்னர் முடிப்பை அவிழ்த்துப் பார்த்தபொழுது அதனுள் பொன்னும் வைரமும் வைடூரியமும் இருந்ததைக் கண்டு மகிழ்ச்சியடைந்தார். பின்னர் ஊர்மக்களிடம் நடந்தவற்றைத் தெரிவித்தார். மக்கள் அந்தப் புற்றை வழிபடத் துவங்கினர். ஒருநாள் இந்தப் பெண்தெய்வம் அப்பகுதியை ஆண்டு கொண்டிருந்த மன்னனின் கனவில் சென்று புற்று இருக்கும் இடத்தில் தனக்குக் கோயில் கட்டுமாறு ஆணையிட்டது. அதன்படியே மன்னனும் கோயிலைக் கட்டிமுடித்தான்[2].

நாட்டார் சமய மரபில் பெண்தெய்வக் கோயில்கள் பெரும்பாலும் வடக்கு அல்லது கிழக்கு நோக்கி இருப்பது வழமையானதாகும். இக்கோயில் தெற்கு நோக்கி அமைந்திருப்பது தனித்துவமானதாகக் கருதப்படுகிறது.

2 தகவலாளர்கள்: ரா.ராஜா, 50, சாமாண்டி கோவில் பூசாரி, ஆண்டிப்பண்டாரம், கம்பம்; ராசு, 62, விவசாயம், கள்ளர், சாமாண்டிபுரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாமாண்டியம்மன் பற்றிய மேற்குறித்தக் கதையிலும் நம்பிக்கைகளிலும் வளமை வழிபாட்டின் கூறுகள் அழுத்தமாகப் பதிவாகியுள்ளன. இரண்டு சான்றுகளை இவ்விடத்தில் எடுத்துக்காட்ட முடியும். முதலாவது: பாம்புப் புற்று வழிபடப்படுவது. இந்தியப் பண்பாட்டில் நாக வழிபாடுத் தொன்மையானதாகவும் வளமைப் பண்புகள் நிறைந்தும் விளங்குகின்றது. இதற்கேற்பவே சாமாண்டியம்மன் உறைந்திருந்தப் பாம்புப்புற்றின் மண்ணானது பொன்னும் வைரமுமாக மாறுகிறது. இதைச் செல்வவளம் பெருகுவதற்கானக் குறியீடாகக் கொள்ளலாம். இரண்டாவது: கோயிலில் உள்ள புற்றை ஒட்டி வளர்ந்திருக்கும் மரத்தில் குழந்தைப்பேறு வேண்டித் தொட்டில் கட்டுவது. இக்கூறு மனிதவளம் பெருகுவதற்குச் செய்யப்படும் சடங்காக அமைகின்றது.

இந்தியப் பண்பாட்டில் நாக வழிபாடுத் தொன்மை யானதாகவும் வளமைப் பண்புகள் நிறைந்தும் விளங்குகின்றது. இதற்கேற்பவே சாமாண்டியம்மன் உறைந்திருந்தப் பாம்புப்புற்றின் மண்ணானது பொன்னும் வைரமுமாக மாறுகிறது.

இந்தச் சாமாண்டியம்மன் கோயில் வரலாற்றுத் தொடர்புகளையும் பெற்றுள்ளது. இது பற்றிய பாவெல் பாரதியின் கருத்துகள் உற்றுநோக்கத்தக்கவையாகும். கம்பம் பள்ளத்தாக்கில் பாய்கின்ற சுருளியாறும் வைரவனாறும் ஒன்று கூடுகின்ற கூட்டாற்றுக்குச் சற்றுமேலே அமைந்துள்ள ஊராக சாமாண்டிபுரம் இருக்கின்றது. இவ்வூர் வழியாக மேற்குத் தொடர்ச்சிமலையை அடையும் பெருவழி இருந்திருக்கும் என்று தெரிகின்றது. இங்கே இரும்புக்காலத்தைச் சார்ந்த தாழிகள், மண்ஓடுகள், மருந்து அரைக்கும் அம்மிகள், உரல்கள் ஆகியவை கிடைத்துள்ளன. இவ்வூரின் தொன்மையான பெயர் சமண ஆண்டிபுரம் என்பதாகும். இதுவே பிற்காலத்தில் மருவி சாமாண்டிபுரம் என்றானது. இதன் பெயராலேயே அம்மனும் சாமாண்டி என அழைக்கப்பட்டிருக்கலாம். இப்பெண்தெய்வம் உறைகின்ற கோயில் மங்கலதேவி கோயிலின் படிப்புற கோட்டமாக அமைந்துள்ளது. இதை மங்கலதேவி கோட்டை என்றும் அழைக்கின்றனர். இதற்கேற்ப இக்கோவிலுக்கு நேர்தெற்கில் மங்கலதேவி கோட்டம் அமைந்திருக்கும் உயர்ந்த வேங்கைக் கானலைக் காணமுடியும். இப்பகுதி மக்களிடம் 'கணவனை இழந்தப் பெண்ணொருத்தி வளையல் வியாபாரியிடம் வளையல் கேட்டதாகவும் அவர் தந்தும் வளையலை அணியாமல் அழுதுகொண்டே தெற்கு நோக்கிச் சென்று கோயில் கொண்டதாகவும்' கதையொன்று வழங்கப்படுகின்றது. நெடுவேல் குன்றத்திற்குச் சென்ற கண்ணகி இவ்விடத்தில் அமர்ந்து சென்றதாலேயே இவ்வாறான வழக்காறுகள் உருவாகியிருக்கலாம் (2018: 57-59).

இங்கே கண்ட கருத்துகள் நம்மை விரிந்த ஆய்வுக்குத் தூண்டுகின்றன. இவற்றுள் ஊர்ப்பெயர், தெய்வப்பெயர் ஆகியவற்றுக்கானத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பு குறித்தக் கருத்தை மட்டும் வேறொரு கோணத்தில் பார்க்க முனைவோம். சாமாண்டி எனும் பெயர்ச்சொல்லைச் சாமுண்டி என்பதன் திரிபாகக் கொள்ள இடமுள்ளது. நாட்டார் தெய்வங்களின் பெயர்கள் எழுத்து வழக்கிலிருந்து பேச்சுவழக்கிற்கு மாறும்பொழுது இவ்வாறு திரிபடைவது இயல்பாகும். உதாரணத்திற்கு இயக்கி என்பது இசக்கி என்றும் முப்பிடாரி என்பது முப்புடாதி என்றும் மக்களால் வழங்கப்படுகின்றன. இவற்றைப் போன்றதே சாமாண்டி எனும் பெயர் எனலாம். இது சண்டர், முண்டர் எனும் அரக்கர்களைக் கொன்றதால் காளிக்கு வழங்கப்பட்ட சிறப்புப் பெயர் என்பதைத் தேவி மகாத்மியம் தெளிவாக எடுத்துக்காட்டியுள்ளது. பொதுவாகவே தெய்வப் பெயர்களோடு 'புரம்' எனும் ஊர்பெயருக்கான சுட்டு கையைப் பின்னொட்டாக இட்டு வழங்கி வருவதைக் காணலாம். தேனி மாவட்டத்திலிருந்து சில சான்றுகள்: காமாட்சிபுரம், மீனாட்சிபுரம், பத்ரகாளிபுரம், அய்யனார்புரம். எனவே சாமாண்டி என்ற பெண்தெய்வப் பெயராலேயே அவ்வூர் சாமாண்டிபுரம் என்றழைக்கப்படுகிறது எனக் கொள்வதே பொருத்தமாக அமையும். இனிவரும் பகுதிகளில் சாமாண்டி அம்மனுக்கும் ஆகமக்கோயில் ஒன்றில் நடக்கும் சடங்குக்கும் இடையிலான தொடர்பு குறித்து விவாதிப்போம்.

சாமுண்டி என்பதன் திரிபாகக் கொள்ள இடமுள்ளது. நாட்டார் தெய்வங்களின் பெயர்கள் எழுத்து வழக்கிலிருந்து பேச்சுவழக்கிற்கு மாறும்பொழுது இவ்வாறு திரிபடைவது இயல்பாகும்.

கம்பராயர் திருக்கல்யாணமும் சாமாண்டியின் உறவுநிலையும்

கம்பம் நகரின் மையப்பகுதியில் (பழைய பேருந்து நிலையத்தின் பின்புறம்) இருவேறு ஆகமக் கோயில்கள் அடங்கிய ஒரு வளாகம் அமைந்துள்ளது. இதற்குள்ளே அருள்மிகு கம்பராயப் பெருமாள் திருக்கோயிலும் அருள்மிகு காசி விஸ்வநாதர் திருக்கோயிலும் இருக்கின்றன. இவ்வாறு சைவக் கோயில், வைணவக் கோயில் இரண்டும் அருகருகே கட்டப்பெற்றிருப்பது சற்றே அரிதான ஒன்றாகும். விசயநகர ஆட்சியின் கீழ் மதுரையை ஆண்ட விஸ்வநாத நாயக்கர் (1529-1564) இவ்விரு கோயில்களை நிர்மாணித்தார். நாயக்கர் ஆட்சிகாலத்துக்கும் முன்பாகவே இப்பகுதியை ஆண்ட குறுநில மன்னர்களின் கோட்டை இங்கு இருந்துள்ளது. இக்கோட்டையை பொ.ஆ.1311ஆம் ஆண்டு மாலிக்காபூர் கைப்பற்றினார். அவரின் தளபதிகள் இருவர் இப்பகுதியை ஆண்டு வந்ததாகச் சொல்லப்படுகிறது. இவ்விருவருள் ஒருவரான முகமது மீரான் எனும் மொட்டை மீரான் கோட்டையின் முன்புறம் கண்காணிப்புக் கோபுரத்தைக் கட்டியுள்ளார். இதன் எஞ்சிய ஒருபகுதி மொட்டையாண்டி கோயில் எனும் பெயரில் இன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிபடப்படுகிறது (உமர்பாரூக், 2020: 134-135). இவை தொடர்பான வரலாற்றுச் செய்திகள் அனைத்தும் விரிவான ஆய்வைக் கோருபவை[3]. ஆகவே இவ்விடத்தில் இந்த ஆய்வோடுத் தொடர்புடைய கம்பராயப் பெருமாள் கோயில் திருக்கல்யாணச் சடங்குகள் மீது மட்டும் கவனத்தைச் செலுத்தலாம்.

அலமேலு மங்கை நாச்சியார் உடனுறை கம்பராயப் பெருமாள் திருவலம் வரும் தேரோட்டம் இந்நகரில் நடக்கின்ற சிறப்புப் பெற்ற விழாக்களில் ஒன்றாகும். மூன்று வருடங்களுக்கு ஒருமுறை இவ்விழா நடப்பது வழக்கம். தற்பொழுது சிற்சில காரணங்களால் இத்தேரோட்டம் நடப்பது தடைபட்டுள்ளது. இத்தகு சூழலில் பல்வேறு நபர்களிடம் மேற்கொண்ட உரையாடல்களின் வழியாகவே இவை தொடர்பான செய்திகள் திரட்டப்பட்டுள்ளன. இவற்றைப் பின்வரும் பகுதியில் காணலாம்.

கம்பராயப் பெருமாள் கோயில் திருத்தேரோட்டம் ஆனி மாதத்தில் நடைபெறும். இந்தத் தேர்த் திருவிழாவிற்குக் கொடியேற்றம் நடக்கும் நாளன்று சாமாண்டிபுரத்திலிருந்து சாமாண்டி அம்மனின் உற்சவச்சிலையானது கம்பராயப் பெருமாள் கோவிலுக்கு வந்து விடுகின்றது. அவ்வாறு வரும்பொழுது கொடியேற்றத்திற்கான கொடிச் சீலையைத் தேவாங்கச் செட்டியார் சமூகத்தினர் எடுத்து வருகின்றனர். கம்பம் நகரத்திலிருந்து தொலைவில் அமைந்திருக்கின்ற சாமாண்டி யம்மன் கம்பராயரின் தேரோட்டத்திற்காக மட்டும் வருவதில்லை. இந்தத் தாய்த்தெய்வம் வருவதன் முக்கிய நோக்கமே கம்பராயரின் திருக்கல்யாணத்தில் கலந்து கொள்வதுதான் என பொதுமக்களும் கோயில் பணியாளர்களும் கூறுகின்றனர். இதற்குக் காரணம் சாமாண்டியம்மன் கம்பராயருக்குத் தங்கை என்றும் அதனால் தனது அண்ணன் திருமணத்திற்கு நாள் செய்யும் சடங்கிற்காக கம்பம் நகரத்திற்கு வருகின்றாள் என்றும் அவ்வூரினர் நம்புகின்றனர்.

இதற்கேற்ப ஆனிமாதம் அமாவாசை கழிந்து 6ஆம் நாள் அலமேலு மங்கையாருக்கும் கம்பராயருக்கும் நடைபெறும் திருக்கல்யாணத்தில் சாமாண்டியம்மன் கலந்து கொள்கிறார். அவருடன் நாள்செய்யும் சடங்குக்கானப் பொருட்களும் உடன்கொண்டு வரப்படுகின்றன. மாலை மாற்றுதல் சடங்கு நடக்கும் பொழுது கம்பராயர், அலமேலு மங்கை நாச்சியார் இருவரும் மேற்கு நோக்கியும் சாமாண்டி அம்மன் கிழக்கு நோக்கியும் இருப்பார்கள். திருக்கல்யாணம் முடிந்த பின்னர்

---

3 தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள 'தேனி மாவட்டத் திருக்கோயில்கள் கையேட்டில்' கம்பம் கோட்டையை விஸ்வநாத நாயக்கர் கட்டியதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது (P.28- 29).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்பம் நகரின் இரத வீதிகளில் கம்பராயரும் நாச்சியாரும் தேரினில் எழுந்தருளி வலம் வரும் நிகழ்வு நடந்தேறுகின்றது[4].

தேர்த்திருவிழா முடியும் 10ஆவது நாள் (சப்தரோஹனம்) இரவில் கொடி இறக்கி கங்கணம் அவிழ்க்கப்படுகிறது. அன்று சிவன், பெருமாள், விநாயகர், முருகன், மாரியம்மன், சாமாண்டியம்மன் உள்ளிட்ட பல்வேறு தெய்வங்களின் சப்பரங்கள் நகர வீதிகளில் வலம் வருகின்றன. இந்த ஊர்வலம் வேலப்பர் கோயில் முக்கை அடையும் பொழுது ஒரு ஆர்வமூட்டக் கூடிய நிகழ்வு நடைபெறுகின்றது. பெருமாளின் சப்பரத்திலிருக்கும் பட்டாச்சாரியர்களுக்கும் சாமாண்டி அம்மன் சப்பரத்திலிருக்கும் பூசாரிகளுக்கும் இடையே சீர்வரிசை தொடர்பான தர்க்கம் அரங்கேறுகிறது. அதாவது சப்பர வரிசையில் இடம்பெறும் அண்ணனான கம்பராயப்பெருமாள் தனது தங்கையான சாமாண்டியம்மனை நோக்கி "எனது திருமணத்தில் கலந்துகொண்ட உனக்கு நகைகள், பண்டபாத்திரங்கள், இன்னும் பலவும் சீர்வரிசையாகத் தருகின்றேன். போதுமா?" எனக் கேட்கின்றார். இதற்கு சாமாண்டியம்மன், "நீ தருகின்ற சீர்கள் எதுவும் எனக்குப் போதாது. அவை ரொம்பக் குறைவாக இருக்கின்றன" என்று மறுமொழி தருகின்றார். இவ்வாறு வாக்குவாதம் நடைபெற்ற பின்பாக அண்ணனிடம் கோபித்துக் கொண்டு அம்மன் தனது இருப்பிடமான சாமாண்டிபுரத்திற்குத் திரும்பிச் சென்று விடுகின்றார். ஒவ்வொருமுறை தேரோட்டம், திருக்கல்யாணம் நடக்கும் பொழுது நாள்செய்யும் சடங்கிற்கு வருவதும் விழா இறுதியில் சீர் போதவில்லை என்று கோபம் கொண்டு திரும்புவதும் வாடிக்கையாக இருக்கின்றது[5]

கம்பராயர் கோயில் தேரோட்ட நிகழ்வில் பல்வேறு சடங்குகள் நிகழ்த்தப்படுகின்றன என்றாலும் கம்பராயர், சாமாண்டியம்மன் இருவருக்கும் இடையே தொடர்புபடுத்தப்பெறும் கதைகளும் சடங்குகளும் நமது கவனத்தைப் பெருமளவு ஈர்க்கின்றன.

கம்பராயர் கோயில் தேரோட்ட நிகழ்வில் பல்வேறு சடங்குகள் நிகழ்த்தப்படுகின்றன என்றாலும் கம்பராயர், சாமாண்டியம்மன் இருவருக்கும் இடையே தொடர்புபடுத்தப்பெறும் கதைகளும் சடங்குகளும் நமது கவனத்தைப் பெருமளவு ஈர்க்கின்றன. காரணம் இந்தப் பண்பாட்டுக் கூறுகளின் சாயல்களை மதுரை சித்திரைத் திருவிழாவில் காணமுடியும் என்பதே ஆகும். எனவே மதுரை, கம்பம் எனும் இருவேறு பரப்புகளில் காணலாகும் பண்பாட்டு இழைகளை ஒப்பிட்டு ஆராய்வது அவசியமாகின்றது.

4 தகவலாளர்கள்: ரெ.கண்ணன், 39, பெருமாள் கோயில் பூசகர், ஐயங்கார், கம்பம்; ம.ராசு, 71, விவசாயம், வெள்ளாளர், கம்பம்.

5 15. தகவலாளர்: பொ.சிவக்குமார், 55, மாரியம்மன் கோவில் பூசாரி, ஆண்டிப்பண்டாரம், கம்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திரைத் திருவிழாவும் ஆனித் தேரோட்டமும்: ஒப்பீட்டு நோக்கு

தமிழ்நாட்டில் நடக்கும் மிகப்பெரும் பண்பாட்டு நிகழ்வுகளில் ஒன்று மதுரை சித்திரைத் திருவிழாவாகும். ஆண்டுதோறும் சித்திரை மாதத்தில் ஒன்பது நாட்கள் இவ்விழா நடைபெறுகின்றது. குறிப்பாக மீனாட்சி – சொக்கநாதர் திருக்கல்யாணம், அழகர் வைகை ஆற்றில் இறங்கும் வைபவம் ஆகிய இரண்டும்தான் சித்திரைத் திருவிழாவில் முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகளாகக் கருதப்படுகின்றன. அழகர்கோயிலில் இருந்து சுந்தரராஜப் பெருமாள் (கள்ளழகர் திருக்கோலம் பூண்டு) மதுரைக்குப் பயணப்படுவதற்கான இரண்டு காரணங்களைத் திருவிழா அழைப்பிதழ் குறிப்பிடுகின்றது. 1. மண்டூக முனிவருக்கு சாபவிமோசனம் அளிப்பது, 2. வருடம் ஒருமுறை ஆண்டாள் சாற்றிக் கொண்ட திருமாலையை ஏற்றுக்கொள்வது. ஆனால் புராணிகம் சார்ந்த இவ்விரு நோக்கங்களும் வெகுமக்கள் பெரிதும் அறியாதவையாக உள்ளன. இவற்றுக்கு மாறுபட்ட நிலையில் மக்கள் ஒரு புதிய காரணத்தைக் கூறுகின்றனர். இதன்படி அழகர் தன் தங்கை மீனாட்சியின் திருமணத்திற்குச் சீர்வரிசைகளுடன் புறப்பட்டு மதுரைக்கு வருகின்றார். ஆனால் அவர் வருவதற்கு முன்னரே மீனாட்சியின் திருமணம் நடந்து முடிந்துவிடுகிறது. வைகை ஆற்றில் இறங்கிய அழகர் தானில்லாமல் தங்கையின் திருமணம் நடந்துவிட்டதை அறிந்து கோபத்துடன் கிழக்கே வண்டியூர் நோக்கிச் செல்கிறார். அங்குத் தன் காதலியான துலுக்கநாச்சியார் வீட்டில் அன்றிரவு தங்குகின்றார். பின்பு அழகர்மலைக்குத் திரும்பிவிடுகின்றார் (பரமசிவன், 2011: 139-141).

மீனாட்சி – சொக்கநாதர் திருக்கல்யாணம், அழகர் வைகை ஆற்றில் இறங்கும் வைபவம் ஆகிய இரண்டும்தான் சித்திரைத் திருவிழாவில் முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகளாகக் கருதப்படுகின்றன.

முந்தைய பகுதியில் நாம் கண்ட கம்பராயர் - சாமாண்டியம்மன் கதையும் அழகர் - மீனாட்சி கதையும் ஏறத்தாழ ஒத்து அமைந் திருப்பதைப் பார்க்கலாம். முதலில் குறிப்பிட வேண்டிய அம்சம், இரண்டிலுமே திருக்கல்யாண நிகழ்வே பிரதானமாக நிற்கின்றது. அடுத்ததாக அண்ணன், தங்கை எனும் சமூக உறவு சார்ந்த கதையாடல் மொழியப்படுகின்றது. ஏதோவொரு வகையில் சைவ, வைணவ சமயங்கள் இரண்டும் தொடர்புற்று இருக்கும் நிலையில்தான் சடங்குகள் நிகழ்ந்தேறுகின்றன. மதுரை, கம்பம் ஆகிய இரு ஊர்களில் வழங்கப்படும் தொன்மக் கதைகள் புராணிகமாக இல்லாமல் நாட்டார் மரபு சார்ந்ததாக இருக்கின்றன. அத்துடன் இவற்றில் மேலதிகப் புனைவுத் தன்மையும் நடைமுறைகளிலிருந்து விலகிச்செல்லும் தன்மையும் காணக்கிடைக்கின்றன. திருவிளையாடற் புராணத்துடனும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிற்பச்சான்றுகளுடனும் முரண்பட்டு சுந்தரராஜப் பெருமாள் மீனாட்சி – சொக்கநாதர் திருமணத்தில் கலந்து கொள்ளவில்லை என்று கூறுவதும் வண்டியூர் வீரராகவப் பெருமாள் கோயிலில் தங்குவதைத் துலுக்கநாச்சியாரைக் காண்பதற்காகச் செல்கிறார் என்று கூறுவதும் இதற்கான சான்றுகளாகும் (பரமசிவன், 2011: 149-150). கம்பம் ஆனித் தேரோட்டத்தில் சாமாண்டியம்மன் தனது இருப்பிடத்துக்குச் செல்லும் நிகழ்வை சீர்வரிசை போதவில்லை என்று கோபித்துக்கொண்டு செல்வதாக மக்கள் புனைந்துரைப்பதை முந்தையதோடு ஒப்பிட்டுக் கூறலாம். நமது சமூக அமைப்பில் தங்கைத் திருமணத்தின் பொழுது அண்ணன் சீர்வரிசை அளிப்பது வழக்கத்தில் உள்ளது. அதேநேரம் அண்ணனது திருமண நிகழ்வில் தங்கைக்கு சீர்வரிசை கொடுப்பது எனும் முறை வழக்கத்தில் கிடையாது. ஒருசில வசதி படைத்தவர்கள் வீட்டுத் திருமணங்களில் அண்ணன் விருப்பப்பட்டால் தங்கைக்கு ஆபரணங்கள், பொருட்கள் சிலவற்றை உவந்தளிப்பது உண்டு. ஆனால் இதனைக் கட்டாயமான ஒன்றாகவோ, சீர்வரிசை என்பதாகவோ யாரும் கருதுவதில்லை. இப்படியிருக்கத் தங்கையான சாமாண்டியம்மன் தனது அண்ணனான கம்பராயப் பெருமாள் திருமண நிகழ்வில் சீர்வரிசை தொடர்பாகச் சண்டையிட்டுத் திரும்பிச் செல்கிறாள் என்பது தர்க்கத்திற்குப் பொருந்துவதாகச் சொல்ல இயலாது. ஆனால் இந்த தர்க்கத்தை மீறிய கதையாடல்கள்தான் நிறுவன சமயச் சடங்குகளின் மீதான வெகுமக்களின் புனைந்துரைக்கும் அதிகாரத்தையும் சமூக மெய்ம்மைகளை வெளிப்படுத்தும் வேட்கையையும் உட்பொதிந்து வைத்துள்ளன எனலாம்.

நமது சமூக அமைப்பில் தங்கைத் திருமணத்தின் பொழுது அண்ணன் சீர்வரிசை அளிப்பது வழக்கத்தில் உள்ளது. அதேநேரம் அண்ணனது திருமண நிகழ்வில் தங்கைக்கு சீர்வரிசை கொடுப்பது எனும் முறை வழக்கத்தில் கிடையாது.

இப்பொழுது வேறுபட்டு அமையும் கூறுகளை இனங்காண முயல்வோம். மதுரை சித்திரைத் திருவிழாவில் முதன்மை பெறும் தெய்வங்கள் இரண்டும் ஆகம மரபு சார்ந்த நிறுவனக் கோயில்களில் உறைபவையாகும். மாறாக கம்பத்தில் அண்ணனான பெருமாள் ஆகமக் கோயிலுக்கு உரியவராகவும் தங்கையான சாமாண்டி நாட்டார் கோயிலுக்கு உரியவராகவும் விளங்குகின்றனர். மேலும் பிற தெய்வங்கள் திருமணமானவையாக இருக்க சாமாண்டியம்மன் மட்டும் தனித்துறையும் தாய்த்தெய்வமாகத் திகழுகின்றாள். மதுரையில் கூறப்பெறும் கதையில் அண்ணன் திருமணத்தில் பங்குபெற இயலவில்லை என்பது பதிவாகியுள்ளது. கம்பத்தில் வழங்கும் கதையானது தங்கையானவள் அண்ணன் திருமணத்தில் பங்கேற்று சடங்கு செய்தாள் எனக் கூறுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமிலி துர்க்ஹைம் கருத்தின்படி ஒவ்வொரு சமூகமும் அதன் அடிப்படையான சமூக இயல்பினைச் சமயம் என்னும் தளத்தில் உள்ளீடாகக் கொண்டிருக்கும். அதாவது சமயத்திற்கான நடத்தை முறைகளை, சடங்குகளை, உணர்வுகளைச் சமூக வாழ்க்கையிலிருந்தே பெறுகிறார்கள். ஒட்டுமொத்தத்தில் சமயம் என்பது சமூகம் சார்ந்தது (communal) என வரையறுக்கலாம் (பக்தவத்சல பாரதி, 2005: 264). அவ்வாறானால் ஒவ்வொரு சமயக் கதையாடலிலும் சமூக நிறுவனங்களின் அமைப்பும் தொழிற்பாடும் கட்டாயமாகப் பிரதிபலிக்கும் எனலாம். ஆகவே மேற்காணும் ஒப்புமை, வேற்றுமைப் பண்புகளைப் பார்ப்பதோடு மட்டுமின்றி வேறுசில அடிப்படையான வினாக்களையும் இங்கே எழுப்ப வேண்டியுள்ளது. முதல் வினா: மதுரை சார்ந்த தெய்வங்களை அண்ணன், தங்கை உறவுக்குள் பொருத்திக் கூறும் ஒரு கதைவடிவம், கம்பத்தில் நிகழும் விழாவில் எவ்வாறு வேறொன்றாகப் பிரதிபலிக்கின்றது?. இதற்கான விடை, வெகுமக்களிடையே செல்வாக்குப் பெற்றுவிட்ட ஒரு பண்பாட்டுக்கூறு குறிப்பிட்டதொரு ஆட்சி நிர்வாகத்திற்கு உட்பட்ட நிலப்பரப்புக்குள்ளும் சில பொதுமையான சமூக, பண்பாட்டு அமைவுகளைக் கொண்டிருக்கும் வெளிகளுக்குள்ளும் எளிதாகப் பரவிநிற்கும் என்பதாகும்.

மதுரை சித்திரைப் பெருவிழாவை சைவ, வைணவ ஒருமை காணும் வகையில் பண்பாட்டு அசைவாக மாற்றியது திருமலை நாயக்கர்தான் என்பது ஆய்வுலகால் ஏற்கப்பட்ட உண்மை யாகும்.

இதன்படி நோக்கினால் மதுரையும் கம்பமும் பாண்டிய நாடு எனும் நிலப்பரப்புக்குள் அமைந்த ஊர்களாகும். பின்னரும்கூட இந்த இரண்டு ஊர்களும் மதுரை நாயக்கர்கள் ஆட்சி நிர்வாகத்தின்கீழ் இருந்துள்ளன. மதுரை சித்திரைப் பெருவிழாவை சைவ, வைணவ ஒருமை காணும் வகையில் பண்பாட்டு அசைவாக மாற்றியது திருமலைநாயக்கர்தான் என்பது ஆய்வுலகால் ஏற்கப்பட்ட உண்மையாகும். இந்தச் சித்திரைத் திருவிழாவின்இருபெரும்நிகழ்வுகளாகிய அழகர்ஆற்றில்இறங்குதலும் மீனாட்சித் திருக்கல்யாணமும் கம்பம் பள்ளத்தாக்கைச் சேர்ந்தப் பல்வேறு ஊர்களில் சற்றே மாறுபட்ட நிலையில் நிகழ்த்தப்படுகின்றன என்பதை எளிதாகக் கண்டுணர முடியும். இவ்விடத்தில் இரண்டு சான்றுகளை மட்டும் காட்டுவோம். மீனாட்சித் திருக்கல்யாணம் நடந்து சிலநாட்கள் கழிந்த உடன் சின்னமனூர் சிவகாமி உடனுறை பூலாந்தீஸ்வரர் கோயிலில் திருக்கல்யாணம் நடத்தப்பெறுகின்றது. இச்சடங்கில் மேலப்பூலானந்தபுரத்தில் வசிக்கும் நாயக்கர் சமூகத்தினரே பெண்வீட்டாராக இருந்து சிவகாமி அம்மனுக்கு சீர்வரிசை கொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்கின்றனர். இதேபோன்று உப்பார்பட்டி கிராமத்திலிருக்கும் வரதராஜப் பெருமாள் அழகராக மாறி முல்லை பெரியாறு ஆற்றைக் கடந்து சென்று உப்புக்கோட்டை கிராமத்திலிருந்து வரும் மற்றொரு அழகரைச் சந்திக்கும் நிகழ்வையும் சுட்டிக்காட்ட இயலும். இவற்றைப் போன்றதே கம்பம் ஆனித் தேரோட்டத்தில் கம்பராயரும் சாமாண்டியும் ஊடாடுகின்ற சடங்கும் எனலாம். இவ்வாறு கூறக் காரணம் கம்பம், உத்தமபுரம் எனும் இரு ஊர்களிடையேயான எல்லைப்பகுதியில் கம்பராயப் பெருமாள் கோயிலும் காசிவிஸ்வநாதர் கோயிலும் கட்டப்பட்டுள்ளன. இவ்வூர்களை ஆண்டவர்கள் கம்பண்ண நாயக்கர், உத்தம நாயக்கர் ஆகியோராவார். ஆகவே நாயக்கர் ஆட்சியில்தான் இச்சடங்குகள் உருவாகியிருக்க வேண்டும் என்ற யூகம் வலுப்பெறுகின்றது. இதை மெய்ப்பிக்கும் கூறு ஆனித்தேரோட்ட விழாவில் உள்ளது. இவ்விழாவில் கன்னடமொழி பேசும் தேவாங்கச் செட்டியார் சமூகத்தினர் கொடிச்சேலை கொண்டு செல்லும் உரிமை பெற்றவர்களாக இருப்பதை அகச்சான்றாகக் கொள்ளலாம்.

அடுத்ததாக நாம் எழுப்ப விரும்பும் வினா: 'மதுரை, கம்பம் ஆகிய இரண்டு இடங்களில் நடைபெறும் விழாக்களில் சொல்லப்படும் கதைகளின் சமூகப் பொருண்மை என்ன?'. இதற்கு விடைகாண தமிழ்ச் சமூகத்தின் உறவுமுறை தொடர்பான தனித்துவத்தைப் புரிந்துகொள்ள வேண்டும். அதாவது குடும்பம் எனும் நிறுவனத்திற்குள் பல்வேறு உறவுநிலைகள் கட்டமைக்கப்பட்டிருந்தாலும் சில உறவுகளே மிகுந்த செல்வாக்குப் பெற்றிருப்பதைப் பார்க்கிறோம். இவற்றுள் முதன்மையானது அண்ணன், தங்கை உறவாகும். இந்த அண்ணன், தங்கை உறவும் இதன் அடுத்தகட்டமான தாய்மாமன் உறவும் திராவிடப் பண்பாட்டைத் தனித்து அடையாளம் காட்டக்கூடியவையாக விளங்குகின்றன. வாய்மொழி வழக்காறுகளிலும் நவீன ஊடகமான திரைப்படங்களிலும் இந்த உறவுநிலை அழுத்தமாகச் சித்திரிக்கப் பட்டுள்ளது (பரமசிவன், 2010: 48-49). அண்ணன் – தங்கை இருவருக்கும் இடையேயானப் பாசப்பிணைப்பு பற்றிய கதையாடல்கள் வெகுமக்களுக்கு என்றும் விருப்பத்திற்குரியனவாக இருப்பதைக் காணலாம். இவ்விடத்தில் நல்லதங்காள் – நல்லதம்பி கதையை எடுத்துக்காட்டுவதுப் பொருத்தமாக அமையும். நல்லதங்காளைத் திருமணம் செய்துகொடுத்த ஊரில் கடும்பஞ்சம் தலைவிரித்தாடியது. பாதிக்கப்பட்ட பலரும் மாண்டனர். நல்லதங்காள் குடும்பமும் துன்பத்தில் வாடியதால், அவள் அண்ணன் கொடுத்தனுப்பிய சீதனப் பொருட்களை ஒவ்வொன்றாக விற்றாள். பின்னர் சாப்பாட்டிற்கும்

அண்ணன் – தங்கை இருவருக்கும் இடையேயானப் பாசப்பிணைப்பு பற்றிய கதையாடல்கள் வெகுமக்களுக்கு என்றும் விருப்பத்திற்குரிய னவாக இருப்பதைக் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழியில்லாமல் போனபோது, தான் பிறந்த அர்ச்சுனாபுரம் கிராமத்தில் உள்ள தனது அண்ணன் வீட்டிற்கு குழந்தைகளுடன் வந்தாள். அந்தநேரத்தில் அண்ணன் வேட்டையாடக் காட்டுக்குச் சென்றிருந்தார். அவனது மனைவி மூளியலங்காரி வந்தவர்களை ஆதரிக்க மனமின்றி கடும்சொற்கள் பேசியும் சதிசெய்தும் துரத்தி விட்டாள். குழந்தைகளின் பசித்துன்பத்தைப் பார்க்க சகிக்கமாட்டாமல் அவர்கள் அனைவரையும் கிணற்றுக்குள் தூக்கிப்போட்டுக் கொன்றுவிட்டுத் தானும் தற்கொலை செய்தாள். ஊருக்குத் திரும்பிய பின்பு அண்ணன் தனது தங்கைக்கும் அவளின் குழந்தைகளுக்கும் ஏற்பட்ட கதியை அறிந்து கவலையில் இறந்துபோனான். இன்றும் நல்லதங்காள் தெய்வமாக வழிபடப்படுகின்றாள்.[6]

இவை ஒருபுறமிருக்க அண்ணன் தனது தங்கையின் மீது செலுத்திய ஆதிக்க வன்முறை குறித்தத் தடயங்களும் வழக்காறுகளில் பதிவாகியுள்ளன. தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள புதுப்பட்டி எனும் கிராமத்தில் வாழ்ந்த குறும்பர் சாதியைச் சேர்ந்த ஒரு இளம்பெண்ணை அவளது ஏழு சகோதரர்கள் கம்பால் அடித்துக் கொன்றனர். பின்னர் அவள் தெய்வமாக்கப்பட்டாள். இவளைப் புதுப்பட்டி அம்மன் என்றும் முத்தம்மன் என்றும் அழைக்கிறார்கள். இதையொத்ததாகவே பூச்சியம்மன் கதையும் இருக்கின்றது. பொல்லாம்பூச்சி என்ற பெண் சாதி மீறிக் காதலித்தாள். தனது வீட்டை விட்டு வெளியேறி உழக்குடி எனும் பகுதியில் தன்னுடைய காதலனுடன் ஒளிந்து வாழ்ந்தாள். அவளைத் தேடிச் சென்ற சகோதரர்கள் தங்கையின் காதலனைக் குத்திக் கொன்றார்கள். பின்பு அவளை வீட்டுக்கு அழைத்தார்கள். வரமறுத்த அவளையும் குத்திக் கொன்றுவிட்டார்கள். இப்பெண்ணே பூச்சியம்மன் எனும் தெய்வமாக மாறினாள் (சிவசுப்பிரமணியன், ஆ. 2005: 49-50). இதுவரைக் கண்டத் தரவுகள் அண்ணன், தங்கை உறவின் இருவேறு பரிமாணங்களை எடுத்துக்காட்டுகின்றன. இப்பொழுது மதுரைச் சித்திரைத் திருவிழா, கம்பம் ஆனித் தேரோட்டம் ஆகியவை பற்றிய வினாவிற்கு மீண்டும் திரும்புவோம். மதுரை, கம்பம் ஆகிய இரண்டு

6 இந்தக் கதையாடல் மரபு 20ஆம் நூற்றாண்டிலும் தொடர்கின்றது. நல்லதங்காள் கதை திரைப்பட வடிவம் பெற்று வெளிவந்தபோது மக்கள் கண்ணீர் விட்டு அழுது புலம்பினர் என்பது நாடறிந்த செய்தி. இவர்களது கதையை ஒட்டி அவ்வப்பொழுது அண்ணன்மார்கள் தங்களது தங்கைகளுக்குப் பச்சை சேலை எடுத்துத் தரும் சம்பவங்கள் நிகழ்வதை நாளிதழ்கள் செய்தியாக வெளியிட்டுள்ளன. இதேபோன்று பிரிவாற்றாமையால் அண்ணனும் தங்கையும் இறந்துபோவதாகச் சித்தரிக்கப்பட்ட 'பாசமலர்' திரைப்படமும் தனது அண்ணனைக் காப்பாற்ற தங்கை தன்னுயிரை ஈகை செய்வதாகக் காட்டப்பட்ட 'கிழக்குச்சீமையிலே' திரைப்படமும் தமிழ்ச்சமூகத்தின் கூட்டுமனத்தில் படிமங்களாகி விட்ட நவீன படைப்புகள் எனக் கருதலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடங்களிலும் அண்ணன் – தங்கை, திருமணம், சீர்வரிசை எனும் கூறுகள் பொதுமையாக உள்ளன. இவற்றை ஆழமாக விளங்கிக் கொள்வதற்கு சமூக அமைப்பு எனும் கருத்தாக்கத்தையும் வரலாற்றுச் செய்திகள் சிலவற்றையும் அறிவது இன்றியமையாததாகும்.

ஒரு சமூகத்தின் அமைப்பு *(Social Structure)* என்பதைத் தீர்மானிப்பதில் பின்வரும் நான்கு முதன்மையான கூறுகள் உள்ளன. 1. குடிவழி *(Descent)*, 2. திருமணத்திற்குப் பின் தம்பதியர் வாழுமிடம் *(Residence)*, 3. சொத்துரிமை *(Inheritance)*, 4. குடும்பத்தை நிருவகிக்கும் அதிகாரம் *(Authority)*. இந்நான்கு கூறுகளையும் அடிப்படையாகக் கொண்டே தாய்வழிச் சமூகம் *(matrilineal)*, தந்தைவழிச் சமூகம் *(Patrilineal)* ஆகியவற்றின் அமைப்பியல்புகளை மானிடவியல் அறிஞர்கள் பகுத்துரைக்கின்றனர் (பக்தவத்சல பாரதி 2005: 84-86). இவற்றுள் பெண்களின் சொத்துரிமை சார்ந்த விடயங்களைச் சுருக்கமாகக் காண உள்ளோம்.

தமிழில் சொத்தைக் குறிப்பதற்குரிய சொல்லான 'தாயம்' என்பது 'தாய்' எனும் மூலச்சொல்லில் இருந்து பிறந்ததாகும் என்றும் இது தாய்வழி முறைமையை உணர்த்துகிறது என்றும் சிங்காரவேலு விளக்குகின்றார். சங்ககாலத்தில் இருந்த ஆரம்பநிலையிலான சமூக, பொருளாதார அமைப்பில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையே ஓரளவு சமத்துவம் நிலவியதற்கான சான்றுகள் உள்ளன. சமய, பொருளாதார சுதந்திரம் ஆகியவற்றைப் பெண்கள் அனுபவித்த ஒரு அமைப்பினை இவை உணர்த்தி நிற்கின்றன. சங்ககாலப் பிற்பகுதியில் பெண்களது சமூகநிலையில் மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின. இதற்குத் தந்தைவழி அமைப்பு இறுக்கம் பெற்றது காரணமாகும் (செல்வி திருச்சந்திரன் 1997: 1-15). பெண்கள் இவ்வாறு பொருளாதார உரிமையைப் பெறுவதும் இழப்பதும் தொடர்கதையாவதை இடைக் கால வரலாற்றிலும் காணமுடிகிறது.[7] இதுதொடர்பாக லெஸ்லி சி.ஓர் பதிவுசெய்துள்ள கருத்து உற்றுநோக்கத்தக்கது.

சங்ககாலத்தில் இருந்த ஆரம்பநிலையிலான சமூக, பொருளாதார அமைப்பில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையே ஓரளவு சமத்துவம் நிலவியதற்கான சான்றுகள் உள்ளன.

77 காலகட்டங்களுக்கு ஏற்ப மட்டுமின்றி இடங்களுக்கும் சமூகங்களுக்கும் ஏற்பவும்கூட மக்கள் தாயம், மருமக்கள் தாயம் போன்ற வேறுபட்ட நடைமுறைகள் வழக்கத்தில் இருந்துள்ளன (விரிவுக்குக் காண்க: பக்தவத்சல பாரதி, மானிடவியல் கோட்பாடுகள், 2005). இலங்கையிலுள்ள யாழ்ப்பாணப் பிரதேசத்தின் தேசவழமைச் சட்டங்கள் (பாரம்பரியமான சமூகவிதிகள்) சொத்துகளை முதுசம், சீதனம், தேடியதேட்டம் என்று மூன்றுவகையாகப் பிரிக்கின்றன. இவற்றுள் முதுசம் என்பது தகப்பனிடமிருந்து ஆண்பெற்றுக் கொள்வதையும், சீதனம் என்பது திருமணமாகும்பொழுது ஒரு பெண் தனது பெற்றோரிடமிருந்து பெற்றுக் கொள்வதையும் குறிக்கின்றவையாகும். தேடிய தேட்டம் என்பது கணவனும் மனைவியும் இணைந்து சம்பாதித்த சொத்தாகும். ஆகவே இது இருபாலருக்கும் உரியதாகும் (செல்வி திருச்சந்திரன் 1997: 141–143).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வெட்டுகளில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள பெண்கள் ஈடுபட்ட செயல்பாடுகளின் பரப்பு, மத்தியகாலத் தமிழ்நாட்டில் பெண்கள் சொத்துரிமை கொண்டவர்களாகவும், நிலம் உள்ளிட்ட சொத்துகளின் மீது கட்டுப்பாட்டைச் செலுத்தக்கூடியவர்களாகவும் இருந்தார்கள் என்றும், ஆணாதிக்கக் குடும்ப அமைப்புகளில் ஒப்பீட்டளவில், சமூகரீ தியான தற்சார்பினையும் சுதந்திரத்தையும் அனுபவித்து வந்தார்கள் என்றும் கருதச் செய்கிறது.

...... பதின்மூன்று, பதினான்காம் நூற்றாண்டுகளில் (பெயர் குறிப்பிடப்படும் பெண்களின் எண்ணிக்கையில்) ஏற்பட்ட வீழ்ச்சி, பெண்கள் மரபுரிமையாகவோ அல்லது திருமணத்தின் போதோ அல்லது திருமணத்தின் விளைவாகவோ சொத்தை அடைவதிலுள்ள கட்டுபாடுகள் அதிகரித்து வருவதைச் சுட்டிக் காட்டுவதாக இருக்கக்கூடும் (2005: 3638).

முந்தைய காலங்களில் நிலவியதைப்போல அல்லாமல் பெண்களுக்குச் சொத்தின் மீதான உரிமையை அண்மைக்காலச் சட்டங்கள் உறுதிப்படுத்தியிருக்கின்றன. காலனிய ஆட்சி காலத்திலும் இந்தியா குடியரசாக மாறிய பின்பும் இயற்றப்பட்ட சட்டங்கள், நீதி மன்றத் தீர்ப்புகள் ஆகியவற்றின் வழியே பெண்கள் பெறுபவர்களாக இல்லாமல் பகிர்பவர்களாக (பங்காளி) மாறியிருக்கின்றனர். இவற்றுள் இரண்டு முன்னெடுப்புகளை மட்டும் இவ்விடத்தில் நினைவு கூர்வோம்[8]. பி.ஆர்.அம்பேத்கர் அவர்கள் 1950ஆம் ஆண்டு நாடாளு மன்றத்தில் கொண்டுவந்த சட்டமுன்வரைவில், "பெண்களுக்குச் 'சீதனம்', 'வரதட்சணை' ஆகிய பெயர்களில் கொடுக்கப்படும் வேறு பட்ட நடைமுறைகள் மாற்றப்பட்டு அவர்களுக்குரியச் சொத்து என்பது நடைமுறைக்கு வரவேண்டும்" என்பதை வலியுறுத்தினார். ஆனால் இம்மசோதா தோற்கடிக்கப்பட்டது. மு.கருணாநிதி அவர்கள் தலைமையிலான மாநில அரசு 'இந்து வாரிசுரிமைச் சட்டம் (தமிழ்நாடு சட்டத் திருத்தம்) 1989' மூலம் பெண்களுக்கும் சொத்துக்களில் சம உரிமை உண்டு எனும் நிலையை முதன்முதலில் உருவாக்கியது. இதற்குப்பின்னர் 16 ஆண்டுகள் கழித்தே இந்திய அளவில் சட்டம் கொண்டுவரப்பட்டது (கிருத்திகா, 2010: பக்கம் இல்லை). இவ்வாறாக ஒவ்வொரு காலகட்டத்திலும் சமூக, அரசியல் மாற்றங்களுக்கு ஏற்ப பெண்களின் சொத்துரிமை பெறும் நடைமுறை மாறுதல்களுக்கு உள்ளாகி வந்துள்ளது என்பதை அறிந்து கொள்ளலாம்.

காலனிய ஆட்சி காலத்திலும் இந்தியா குடியரசாக மாறிய பின்பும் இயற்றப்பட்ட சட்டங்கள், நீதி மன்றத் தீர்ப்புகள் ஆகியவற்றின் வழியே பெண்கள் பெறுபவர்களாக இல்லாமல் பகிர்பவர்களாக (பங்காளி) மாறியிருக்கின்றனர்.

---

8 1929ஆம் ஆண்டு செங்கல்பட்டில் முதலாவது சுயமரியாதை மாகாண மாநாடு நடைபெற்றது. இதில் இயற்றப்பட்டத் தீர்மானங்களில் 'ஆண்களைப் போலவே பெண்களுக்கும் சமஅளவில் சொத்துரிமை, வாரிசுரிமைத் தரப்பட வேண்டும்' என்பதும் ஒன்றாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த சமூக நடைமுறையின் பிரதிபலிப்புக்களைத்தான் சித்திரைத் திருவிழா, ஆனித் தேரோட்டம் ஆகியவற்றில் வழங்கப்பெறும் தொன்மக்கதைகளில் காண்கிறோம். அவ்வகையில் இவற்றினூடாக வெளிப்படும் அண்ணன், தங்கை இருவருக்குமான சமூக வகிபாகத்தையும் முரண்பாட்டுக்கானப் பின்புலத்தையும் தெளிவுபட நோக்குவதற்குத் தொ.பரமசிவன் முன்வைத்துள்ள கருத்துகள் பெரிதும் உதவுகின்றன.

> பெண்ணுக்குச் சொத்துரிமை மறுக்கப்பட்ட சமூக அமைப்பில் திருமணத்தின்போது நகையாகவும் பின்னர் 'சீர்வரிசை' என்ற பெயரிலும் அவள் பிறந்த வீட்டுச் சொத்தின் தன்பங்கினைப் பெற்றுக்கொள்ள முயல்கிறாள். மீண்டும் தன் பிறந்த வீட்டிற்குத் தன் பெண்ணை மருமகளாக அனுப்பியோ அல்லது உடன்பிறந்தவன் மகளைத் தன் மகனுக்கு மனைவியாக்கியோ தன் பிறந்த வீட்டுச் சொத்தை அனுபவிக்க முயல்கிறாள் (2011: 146 -147).

> நடைமுறையில் அண்ணன் – தங்கை உறவு பெண்ணின் ஆதிக்கத்தை நிலைநாட்டுவதுபோல அமைகிறது. அதாவது அண்ணன் தன் தங்கைக்குக் கடமைப்பட்டவனாகவும் தங்கை தன் அண்ணன் மீது உரிமைகளை மட்டுமே உடையவளாகவும் ஆகிவிடுகின்றனர். தங்கையின் குடும்பத்தின்மீது அண்ணன் ஒரேஒரு உரிமையை மட்டும் பெற்றவனாகிறான். தங்கை, தமக்கையின் பெண் பூப்படைகின்றபோது அவள் மீதான 'பாலியல் உரிமை' தாய்மாமனுக்குத் தானாகவே கிடைத்துவிடுகிறது (2010: 49).

தமிழ்ச் சமூகத்தில் அண்ணன் – தங்கை உறவுகளுக்கு இடையிலான பொருள் சார்ந்த பகிர்வானது கடமை – உரிமை எனும் முறைமையாகக் கட்டமைக்கப்பட்டுள்ளது என்பதை மேலே காணும் விளக்கங்கள் தெளிவுபடுத்துகின்றன. என்றாலும் நாம் ஆய்வுக்கு எடுத்துக்கொண்டுள்ள சித்திரைத் திருவிழா, ஆனித் தேரோட்டம் தொடர்பானத் தொன்மக் கதைகளை நுட்பமாக நோக்கினால் இதனுடைய பிறிதொரு பரிமாணத்தைக் கண்டடையலாம். இதற்கு 'கோபித்துக் கொண்டு செல்லுதல்' எனும் கதைக்கூறை மட்டும் எடுத்துக் கொள்வோம். திருமண நிகழ்ச்சியில் அண்ணன் (அழகர்) கோபம்கொண்டு திரும்பிச் செல்வதைப் போல வேறிடத்தில் தங்கை (சாமாண்டி) கோபம் கொண்டுத் திரும்பிச் செல்கிறார் என்று இதனைத் தட்டையாகப் புரிந்துகொள்ளக் கூடாது. ஏனெனில் இருவரும் எதற்காகக் கோபம் கொள்கின்றனர் என்பதில் பெரும் வேறுபாடு இருக்கின்றது. அண்ணனான அழகர் (மதுரை) தானில்லாமல்

தமிழ்ச் சமூகத்தில் அண்ணன் – தங்கை உறவுகளுக்கு இடையிலான பொருள் சார்ந்த பகிர்வானது கடமை – உரிமை எனும் முறைமையாகக் கட்டமைக்கப் பட்டுள்ளது என்பதை மேலே காணும் விளக்கங்கள் தெளிவு படுத்துகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கையின் திருமணம் நடந்து விட்டது எனும் காரணத்திற்காக கோபமடைகின்றார். இது சடங்குசார் உரிமை அல்லது பண்பாட்டு உரிமை (Cultural Right) தொடர்பானது. தங்கையான சாமாண்டி (கம்பம்) அண்ணன் தந்த சீர்வரிசை போதவில்லை எனும் காரணத்திற்காகக் கோபமடைகின்றார். இது பொருள்சார் உரிமை அல்லது சொத்துரிமை (Inheritance) தொடர்பானது. ஆகவே அண்ணன், தங்கை இருவருமே தத்தம் உரிமைகளுக்காகவே முரண்படுகின்றனர் என்பது இக்கதைகள் மூலம் தெரியவரும் உண்மையாகும்.

அவ்வாறென்றால் அண்ணனாக இருக்கும் ஆண் சொத்துரிமைக்காக அல்லாமல் பண்பாட்டு உரிமைக்காக மட்டும் ஏன் முரண்படுகின்றான் எனும் கேள்வி இங்கே எழுகின்றது. நம் முந்தைய சமூக அமைப்பில் தந்தைவழிக் குடும்ப முறையே பெரும்பான்மையும் நிலைபெற்றிருந்தது. இதில் சொத்துரிமையும் குடும்ப நிர்வாகமும் ஆணிடமிருந்து ஆணுக்கு (தந்தையிடமிருந்து மூத்தமகனுக்கு செல்வது - *Primogeniture*) கைமாறுவதாக உள்ளது. இதன் வெளிப்பாட்டை வழக்காறுகளிலும் காணலாம். ஒருவருக்கு குழந்தை பிறந்தால் 'உனக்குப் பிறந்ததா? ஊருக்குப் பிறந்ததா?' என்று கேட்கும் வழக்கம் சில இடங்களில் இருக்கின்றது. இதன்பொருள் 'உன்னோடு எப்போதும் வாழப்போகும் ஆண் குழந்தை பிறந்துள்ளதா? இல்லை வேறொருவன் வீட்டுக்குச் சென்று வாழப்போகும் பெண்குழந்தை பிறந்துள்ளதா?' என்பதாகும். இது திருமணத்திற்குப் பின் தந்தையகத்தில் (*Patrilocal*) வாழும் முறையைக் குறிக்கிறது. பணம் தொடர்பான சச்சரவுகளில் பலரும் 'உங்க அப்பன் வீட்டு காசையா கேட்டேன்?' என வினவுவதைப் பார்க்கின்றோம். அதேபோல குழந்தை பிறக்கும் விருப்பத்தைத் தெரிவிக்கும்பொழுது 'ஆஸ்திக்கு ஒரு மகனும் அழகுக்கு ஒரு மகளும்' வேண்டுமென்று சொல்கின்றனர். இதிலும் ஆண்குழந்தைக்குத்தான் சொத்து உரியது என்பது உறுதியாகின்றது. பங்காளிகள் அல்லது தயாதிகள் எனும் கூட்டமைப்பும் ஆண்களை மட்டுமே குறிக்கக்கூடியதாகும். அதனால்தான் 'அஞ்சு வயசில அண்ணன் – தம்பி, பத்து வயசானா பங்காளி' என்று பழமொழியும் எடுத்துரைக்கின்றது. இவையனைத்தும் ஆண்வழிச் சொத்துரிமை (*Patrilineal Inheritance*) எனும் சமூக நடைமுறையை வெளிக்காட்டுகின்றன. எனவே ஆண்களுக்கு எவ்வளவு அதிகமாக அல்லது குறைவாகச் சொத்துக் கிடைத்தாலும் அது உறுதிப்படுத்தப்பட்ட ஒன்றாகும். ஒருவேளை சொத்துக்குச் சண்டையிட நேர்ந்தாலும் அது உடன்பிறந்த அண்ணன், தம்பி அல்லது பங்காளிகளுடன்தான் நடக்கும் வாய்ப்புள்ளது. சகோதரிகளுடன்

சொத்துரிமையும் குடும்ப நிர்வாகமும் ஆணிடமிருந்து ஆணுக்கு (தந்தையிடமிருந்து மூத்தமகனுக்கு செல்வது - *Primogeniture*) கைமாறுவதாக உள்ளது. இதன் வெளிப்பாட்டை வழக்காறுகளிலும் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சீர்செனத்தி' தொடர்பான சச்சரவுகளே ஏற்படக்கூடும். இதனால்தான் அண்ணன் தனது தங்கையுடன் சொத்துரிமைக்காக முரண்கொள்ளுமாறு கதை அமையவில்லை எனலாம். அதேநேரம் சொத்துரிமையைத் தக்கவைத்துள்ள அண்ணனுக்குப் பண்பாட்டு உரிமையும் உபரியாகக் கிடைத்திருக்கின்றது. இதனை,

> கடமைகளை மட்டுமே உடைய அண்ணன், இனக்குழுத் தன்மையுடைய சாதிய அமைப்பில் சபை மரியாதை பெறுபவனாக அமைந்து விடுகிறான். அதிலே அவன் மிகப்பெரிய மனநிறைவு பெறுகிறான் (பரமசிவன், 2010: 49)

எனும் கருத்தின் வழி அறிந்து கொள்ளலாம். இதுவரை விவாதித் தவற்றைத் தொகுத்துப் பார்த்தாலே தங்கையாக இருக்கும் பெண் ஏன் சொத்துரிமைக்கு முக்கியத்துவம் அளிக்கின்றாள் என்பது புரிந்துவிடும்.

நிறைவாக

பாலின வேறுபாடுகளால் அதிகாரம் கட்டமைக்கப்பட்டப் பொழுது முரண்பாடுகள் தோன்றின. இதற்கான தொடக்கத்தை வரலாற்றுப் பரப்பில் கண்டறிவது அவசியமாக இருந்தது. சமூகக் குழுக்களுக்கும் குடும்பங்களுக்கும் பெண் தலைமைப் பொறுப்பேற்று ஆதிக்கம் செலுத்திய பெண்முதன்மை முறை (*Matriarchal Society*) இருந்தது குறித்து நீண்ட காலமாக அறிவுலகினர் பல்வேறு கருத்துகளை முன்வைத்து வருகின்றனர். அதேவேளையில் பெண்வழிச் சொத்துரிமை நாடுகின்ற தாய்வழிமுறை (*Matrilineal*) இருந்துள்ளதற்குப் பல்வேறு சான்றுகள் உள்ளன. இந்த அமைப்பு முறையும் கால, இடப் பரிமாணங்களுக்கு ஏற்பவே தொழிற்பட்டிருக்கிறது என்று உணர்ந்து கொள்கிறோம். இதன் எச்சங்கள் தற்பொழுது தந்தைவழி முறையில் சில வடிவங் களாக வெளித் தெரிகின்றன. ஒரு சமூகத்தின் பொருளாதார அடித்தளத்தில் ஏற்படும் மாற்றங்களானவை அதன் சமகாலத்திய பண்பாட்டுச் சித்திரங்கள் வழியாக வெளிப்பட்டு நிற்கும் என்று சமூகவியல் கோட்பாடுகள் தெளிவாக்கியுள்ளன. ஆகவே அழகர்-மீனாட்சி, கம்பராயர்-சாமாண்டி ஆகிய தெய்வீக அண்ணன்மார்-தங்கைமார்களின் கதைகள் பெண்களின் சொத்துரிமை மறுக்கப்பட்ட காலகட்டத்தில் எழுந்த வெகுமக்களின் புனைவுகளாகும் எனலாம். மேலும் சமூகத்தளம் சமயத்தளத்தில் பிரதிபலிக்கும் என்பதற்கான சாட்சியங்களாக இவை நீடிக்கின்றன என்றும் உறுதிப்படுத்தலாம். இந்தக் கட்டுரை சமயக் கூறுகளின் பின்னுள்ள சமூக மெய்ம்மைகளை வெளிப்படுத்துவதை மட்டுமே கவனம் செலுத்தியுள்ளது. கம்பராயரின்

> ஒரு சமூகத்தின் பொருளாதார அடித்தளத்தில் ஏற்படும் மாற்றங் களானவை அதன் சமகாலத்திய பண்பாட்டுச் சித்திரங்கள் வழியாக வெளிப்பட்டு நிற்கும் என்று சமூகவியல் கோட்பாடுகள் தெளிவாக்கி யுள்ளன.

Class No
Acc No

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனித்தேரோட்டத் திருவிழாவை விரிவாகக் களஆய்வு செய்வதன் மூலம் இன்னமும் அறியப்படாத வரலாற்றுச் செய்திகளையும் சமூகக் குழுக்களுக்கு இடையிலான உறவு நிலைகளையும் கண்டுணர்வதற்கான வாய்ப்புகள் உள்ளன.

உசாத்துணை

உமர் பாரூக், அ. (2020) அழநாடு (தேனி மாவட்டத் தொல்லியல் சுவடுகள்). சென்னை: டிஸ்கவரி புக் பேலஸ்.

கிருத்திகா, ச. (2010) பெண்களுக்குச் சம சொத்துரிமை கடந்த பாதை… காரணமான தலைவர்கள். www.vikatan.com.

சிவசுப்பிரமணியன், ஆ. (2005) நாட்டார் வழக்காற்றியல் அரசியல். சென்னை: பரிசில் பதிப்பகம்.

செல்வி திருச்சந்திரன். (1997) தமிழ் வரலாற்றுப் படிமங்கள் சிலவற்றில் ஒரு பெண்நிலை நோக்கு. சென்னை: குமரன் பதிப்பகம்.

தேனி மாவட்ட திருக்கோயில்கள் வழிகாட்டி. (2014) தமிழ்நாடு: இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை வெளியீடு.

பக்தவத்சல பாரதி. (2005) மானிடவியல் கோட்பாடுகள். புதுச்சேரி: வல்லினம்.

பரமசிவன், தொ. (2010) பண்பாட்டு அசைவுகள். நாகர்கோவில்: காலச்சுவடு பதிப்பகம்.

……………………2011 (1989) அழகர் கோயில். மதுரை: மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.

பாவெல் பாரதி. (2018) கண்ணகி கோவிலும் வைகைப் பெருவெளியும். மதுரை: கருத்து = பட்டறை.

மங்கை, அ. (2005) பெண்ணிய அரசியல். சென்னை: பரிசல் பதிப்பகம்.

ஓர், லெஸ்லி சி. 2005. தமிழகக் கல்வெட்டுகளில் பெண்கள். தமிழில் வி.நட்ராஜ். கோயம்புத்தூர்: விடியல் பதிப்பகம்.

ஸ்ரீ தேவி மஹாத்மியம். தமிழில் வே.ராகவன். (1967) சென்னை: ப்ரியம்வதா – ஸ்ரீராம் சங்கர் திருமண அன்பளிப்பு வெளியீடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3

தமிழ்த் தொடுத்தெழுதல்
தொடுத்தெழுதலின் தேவையும் தொடுத்தெழுது முறைகளும்

சி.சிவசேகரம்[1]

மொழிக் குடும்பங்கள் போல எழுத்து முறைக் குடும்பங்களும் உள. ஒவ்வொரு எழுத்து முறையும் தன் விருத்திப் போக்கில் மாற்றங்களை உள்வாங்கிப், பல சமயம், ஒரு எழுத்தின் மாற்று வடிவங்கள் குறிப்பன ஒன்றே என இயலாதளவு, திரிந்துள்ளது. பழைய தமிழ்க் கல்வெட்டு எழுத்துக்களிடையிலுங் கூறத்தக்க வேறுபாடுகள் உள (*Mahadevan*, 2003).

எழுத்து வடிவாக்கத்தில் எழுதுகருவியின் பங்கு பெரிது. கூரிய கருவியாற் கல், களிமண் பலகைகளில் விரைந்து எழுத இயலாது. செப்பேடுகளிலும் ஓலைகளிலும் சற்று விரைவாய் எழுதலாம். தூரிகையாற் சீலையிலோ தாளிலோ அதினும் விரைவாய் எழுதலாம். பேனை தொன்மையான எழுதுகருவியாயினும், தொட்டெழுது பேனை முதல் ஊற்றுப் பேனை ஊடாகக் குமிழ்முனைப் பேனை வரையும் அப்பாலும் அதன் விருத்தி தாளில் எழுதும் வேகத்தை மிகக் கூட்டியது. அவ்வாறே தூரிகைகளும் வடிவம் மாறி விரைவாய் எழுத உதவின. வேகமாய் எழுத இடையூறான மரபுமுறை எழுத்துக்களின் வடிவங்கள் மாறின. அச்சு முறையின் வரவு வரை தமிழெழுத்து மாற்றங்களைப் படம் 1 காட்டுகிறது. (தகவல்: *https://en.wikipedia.org/wiki/Tamil_script*)

விரைவாய் எழுதலில் இடர்களுள. கையின் வேகம் மனதின் வேகத்துக்கு ஈடுகொடுப்பின், மந்த வேகத்தில் எழுதச் செய்த எழுதுகருவிகளின் காலத்திற் போலன்றித், தாளில் எழுதுகையில் வரன்முறை எழுத்து வடிவங்களினின்று விலகல்கள் நிகழ்கின்றன. (படங்கள் 2ஐயும் 3ஐயும் நோக்குக.) இத்தகைய விலகல்கள் ஓலைச்சுவடிகளிலும் நிகழ்துள்ளன்.

---

1 Dr.S.Sivasegaram, Retired Professor, University of Peradeniya, e mail : sivasegaram@ yahoo.com.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



படம் 1: தமிழெழுத்துக்களின் வரலாறு



படம் 2: சுப்பிரமணிய பாரதியின் கையெழுத்து



படம் 3: புதுமைப்பித்தனின் கையெழுத்து

அச்சுத் துறை நிறுவிய இன்றைய எழுத்து முறையில் உச்சியிற் சதுர மூலையுள்ள க ங ச ஞ ண த ந ர ள ன ா ஆகிய எழுத்துருக்களிற் சதுர மூலையோடொட்டிக் கிடையாய் வலப்புறம் நீளும் செட்டை உண்டு. ந ண தவிர்ந்த பிறவுக்குச் செட்டை தேவையில்லை. ஓலைச் சுவடிகளும் பிற்காலக் கல்வெட்டுக்களும் செட்டையுடனோ இன்றியோ பொதுவாய்ச் சதுர மூலையைப் பேணின. பேனையும் தாளும் வந்த பின், குறிப்பாக ஊற்றுப் பேனை வந்த பின், கையெழுத்திற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செட்டையும் சதுர மூலையும் விடுபடலாயின. எனினும், அன்று முதல் இன்று வரை, அச்செழுத்துப் போல எழுதுவோர் உளர்.

விரைவாய் எழுதுவோர் பொதுவாய்ச் செட்டையைத் தவிர்ப்பர். சதுர மூலையைச் சற்று வளைத்தோ தவிர்த்தோ எழுதலும் உண்டு. எனினும், சதுர மூலையற்ற நவும் னவும், முறையே, றவுடனும் வளையற் கொம்புடனும் குழம்பலாம்.

எவ்வாறும், ஊற்றுப் பேனைக்குப் பின் கையெழுத்து வாசிப்பிற் சிரமங் கூடியுள்ளது. (படங்கள் 2, 3) தமிழ் எழுத்துருக்களின் வடிவம் அதற்கு உதவுகிறது. உயிர்மெய்கள் உட்பட ஒவ்வொரு எழுத்தையும் ஒரே கோடாய் எழுத இயலின் சற்றேன் விரைவாயுந் தெளிவாயும் எழுத இடமுண்டு.

ஒரே கோடாய் எழுத இயலா அடிப்படை உயிர், மெய் எழுத்துருக்கள் பின்வருமாறு. அ(2) ஆ(3) ஈ(2+2) ஊ(4) எ(2) ஏ(2) க(2) ங(3) ச(2) ஞ(3) ண(2) த(2) ன(2) ய(2) ர(2) ழ(2) ள(3) ன(2) ஸ(2). தேவையான கோடுகளின் தொகை அடைப்புள் உள்ளது

அரவு இரு கோடுகளாலானது. விசிறிகளும் உகர ஊகாரக் கால்களும் கொம்புகளும் தனிக் கோடுகளாவன. எனவே தனி மெய்யும் ஏகப் பெரும்பாலான உயிர்மெய்களும்; இரண்டு முதல் நான்கு வரையான கோடுகளை உடையன (விலக்காக, மு மூ லி லீ என்பவும் ணா றா னா லை என்பவற்றின் பழம் வடிவங்களும் ஒரே கோட்டாலாவன). எழுதுகருவி செட்டை வழியே மீண்டு வரினோ செட்டையைத் தவிர்ப்பினோ எ ஏ க ங ச ஞ ண த ந ர ள ன என்பன ஒரே கோடாய் அமையும். எனினும், ஒரே கோடாதல் எளிதாய் எழுத உறுதியல்ல. (சிக்கலான வடிவுடைய சில சிங்கள, மலையாள, கன்னட, தெலுங்கு எழுத்துக்களை ஒரே கோடாய் எழுதலாம்.

தேவநாகரி வகை எழுத்துக்கள் பொதுவாயப் பல எளிய கோடுகளை உடையன. எனவே வட இந்திய மொழிகள் பலதில், எழுதுகருவியைத் தாளினின்று உயர்த்தாது ஒரு எழுத்தை எழுத முயலின் அதன் அமைப்பு மாறும். இத்தகைய மாற்றங்கள் எழுத்துக்களிடை குழப்பம் விளைக்கலாம். பல எழுத்துருக்களைக் கொண்ட மொழிகளில் இவ்விடர் பெரிது.

விலக்காக, வங்க எழுத்து முறையிற், பெருவாரியான உயிரெழுத்துக் களையும் அடிப்படை மெய்யெழுத்துக்களையும் (மேற் கோடு தவிர்ந்து) ஒரே கோடாய் எழுதலாம். சிலர் அதைத் தொடுத்தெழுதுல் என்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும் கொம்பு அரவு போன்ற குறிகளைத் தனித்தே எழுதுவர். அத்துடன், அடுத்தடுத்த எழுத்துக்களைத் தொடரான கோடாக எழுத இயலாது.

Bengali	ব গ ঘ ধ ড ঢ প ফ ক থ ঠ ম ন ল স ষ
Devanagari	व ग घ ध ड ढ प फ क थ ठ म न ल स ष
Sound	va ga gha dha ḍa ḍha pa pha ka tha ṭha ma na la sa ṣa

படம் 4: சில வங்க, தேவநாகரி எழுத்துக்களின் ஒப்பீடு

மாறாக, ஒவ்வொரு தமிழ் எழுத்தையும் ஒரே கோடாய் அமைக்க இடமுண்டு. ஆயினும் அதை இயல்விக்கும் ஒரு பொது எழுதுமுறை வரவில்லை. பலரும் சில எழுத்துக்களைப் பலவாறு தனிக் கோடாக்குவர். ஆனால், அவர்களின் எழுத்து எப்போதும் வாசிக்க எளிதன்று. தமிழுக்கு நிசமான ஒரு தொடுத்தெழுது முறை இயலுமா எனச் சோதிப்போம்

தொடுத்தெழுதல் என்பது எது?

சென்னைப் பல்கலைகழக ஆங்கில-ம் தமிழ் அகராதி, *Cursive Script* என்பதைக் "கையெழுத்து வகையில் எளிதாய் ஓடும் போக்குடைய, நேரொழுக்கான, ஒழுகலான" எழுதுமுறை என்கிறது. எனவே, பயன்பாட்டு அடிப்படையில், ஆங்கிலத்திற் *Cursive Script* எனும் பதம் கூறும் தொடுத்தெழுது முறையைத் தமிழில் தொடுத்தெழுதல் எனலாம்

தொடுத்தெழுதல் இரு தளங்களில் இயங்கும். பல கோடுகளாலான எவ்வெழுத்தையும் எழுது கருவியைத் தாளினின்று உயர்த்தாது தனியொரு கோடாய் (வேண்டின் மேலதிகமாய் ஒரு சிறு கோட்டுடன்) எழுத இயலுமாக்கல் ஒன்று. இத் தேவை தமிழுட்படத் தென்னாசிய எழுத்து முறைகள் பலதிற்கும் சீன எழுத்து முறைக்கும் உண்டு. (படம் 5ஐ நோக்குக.) மரபுசார் சீன எழுத்தை மிகச் சிக்கனப்படுத்திக் கிடைக்கும் தொடுத்தெழுத்துக்கும் அதன் தோற்றுவாய்க்கும் உறவை அறிதல் அம் மொழிப் புலமையற்றோர்க்கு இயலாது. ஒவ்வொரு சீன எழுத்துருவும் ஒரு சொல்லைக் குறிப்பதால் அவற்றை இணைக்குந் தேவை இல்லாவிடினும், இணைத்து எழுதும் வழமையுமுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

宋体 Song typeface	工欲善其事，必先利其器。
楷书 Regular script	工欲善其事，必先利其器。
行书 Semi-cursive script	工欲善其事，必先利其器。
草书 Cursive script	工欲善其事，必先利其器。

படம் 5: சீனத் தொடுத்தெழுது முறை

(தகவல்:https://www.quora.com/Why-do-most-Chinese-still-write-Chinese-in-cursive-handwriting-whereas-in-English-they-no-longer-do-that)

அடுத்த தளம், எழுத்து ஒவ்வொன்றும் தனிக் கோடாயோ ஆக மிஞ்சி இரு கோடுகளாயோ அமையும் எழுத்து முறையில், எழுது கருவியைத் தாளினின்று உயர்த்தாது ஒரு முழுச் சொல்லை எழுத இயலுவித்தல். இதை ஐரோப்பிய எழுத்து முறைகள் பல நிறைவேற்றின. (படம் 6ஐ நோக்குக.) படத்திலுள்ளவை எம் மொழிக்குந் தனித்துவமான எழுத்துருத் தொகுதிகளல்ல. ஒவ்வொரு மொழியிலும் ஒவ்வொரு எழுத்துக்கும் மாற்றுருக்கள் உள. ஆயினும் எவ்வெழுத்தையும் சரியாக அடையாளங் காணவும் குழப்பமின்றி வாசிக்கவும் இயலும்.

ஐரோப்பியத் தொடுத்தெழுது முறைகள், மூல எழுத்து முறையின் சாய்ந்த எழுத்துக்களின் (*Italics*) வழிப் பிறந்தவை. அவை எழுது வேகத்தைத் விரைவாக்கின. தொடர்ந்து, சாய்ந்த எழுத்துக்களை ஒன்றொடொன்று இணைத்து எழுதுமாறு எழுத்துக்கள் உருமாறின (*Diringer 1962, Fischer 2021*). அரபு எழுத்துக்கள் தொடுத்தெழுத ஏற்ற வடிவின. (தகவல்: *https://www.semanticscholar.org/paper/Structural-Features-of-Cursive-Arabic-Script-Khorsheed-Clocksin/51d8f9fc2382d67554b83e21d83c6a1229025fa9/figure/0*)எழுத்தொன்றன் முன்னோ பின்னோ வரும் எழுத்துக்கமைய அதன் எழுத்துருவை மாற்றித் தொடுத்தெழுதல் இயலும். ஹீப்ரு மொழிக்கு அச்செழுத்திற்குப் புறம்பாகத் 'தொடுத்தெழுத்து' எனும் எழுத்துக்கள் இருப்பினும் அவற்றை இணைக்கும் வழமை தோன்றவில்லை. எழுத்துக்களின் உருவங்கள் அதற்கொரு காரணமாகலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு எழுத்தையும் தனிக் கோடாக்கி அதன் மூலம் எழுது கருவியைத் தாளினின்று உயர்த்தாது ஒரு முழுச் சொல்லையும் எழுதல் நமது இலக்கு,

English



French



German



Russian



படம் 6: ஐரோப்பியத் தொடுத்தெழுல் முறைகள் சில

எழுத்தைத் தனிக் கோடாக்கல்

தமிழ்த் தொடுத்தெழுதலை இயல்விக்கும் முதற் கட்டம், ஒவ்வொரு எழுத்தையும் தனிக் கோடாக்கல். இது ஓரளவு எளிது.

உ ஐ ஒ ஓ ட ப ம ல வ ற என்பவற்றுடன் செட்டை நீக்கிய எ ஏ க ங ச ஞ ண த ந ர ள ன என்பனவுஞ் சேரின், உயிரெழுத்துக்களில் அ ஆ ஊ ஔ என்பனவும் அடிப்படை மெய் வடிவங்களில் ய ழ என்பனவும் ஒன்றுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்பட்ட கோடுகளாலாவன. அ ஆ என்பவற்றின் வலத்திலுள்ள குத்தான கோட்டை மேனோக்கி வளையும் ஒரு சிறு கோட்டால் அதை முந்திய பகுதியுடன் இணைப்பின் அவை தனிக் கோடாகும். யவின் வளைந்த முற்பகுதியை மேனோக்கி நீட்டிப் ப வடிவமாய்த் தொடரலும் ழவிற் கீழ்நோக்கிச் செல்லுங் குத்தான கோட்டை முன்னோக்கி வளைத்துப் பின்னோக்கிச் சுழித்தலும் அவற்றைத் தனிக் கோடுகளாக்கும். இவையும் டி டீ என்பவற்றைப் பலரும் ஒரே கோடாய் எழுதும் முறைகளும் நம் எழுதல் நடைமுறையிற் பரவலானவை.

எனவே நமது சவால், முதற்கண், அரவு, விசிறிகள், கொம்புகள் எனும் உயிர்க் குறிகளையும் உகர வரிசைக் குறிகளையும் இயன்றளவு மெய்யடையாளத்தின் தொடர்ச்சியாய் எழுதலைப் பற்றியதுமாகிறது. எழுது நடைமுறையிற், பலர் உயிர்க் குறிகள் சிலதை மெய் அடையாளத்துடன் குழப்பமின்றிச் சேர்த்து எழுதுவர்.

இந் நடைமுறைகளையுங் கருத்திற் கொண்டு, மெய்யடையாளங் களை உயிர்க் குறிகளுடனும் பிற மெய்யடையாளங்களுடனும் இணைத்து எழுதுமாற்றை விசாரிப்போம்.

Arasady Public Library
Municipal Council
Batticaloa.

தொடுத்தெழுதற் கொள்கைகள்

சிவசேகரம் (1975, 1977) ஐரேப்பியத் தொடுத்தெழுதல் முறைகளின் அடிப்படையிற் பின்வரும் நெறிப்படுத்தல்களை முன்வைத்தார்.

1 எழுதல் முயற்சியிலும் எழுதும் நேரத்திலும் அதிகபட்சச் சிக்கனம்

சுருங்கக் கூறின் எழுதுகருவி முனையின் பயணத் தூரத்தைக் குறைத்தலும் எழுத எளிய ஒரு எழுத்து வடிவத்தைத் தெரிதலும் விரும்பத் தக்கன. இது தொடுத்தெழுதலின் அடிப்படை நோக்கத்தை நிறைவேற்றுகிறது.

2. எழுத்துக்களின் தெளிவும் தனித்துவமும்

இதன் நோக்கம், எழுத்துக்கள் ஒன்றொடொன்று குழம்பாமல் எளிதாய் வேறுபடுத்தி அடையாளங்காணலை உறுதிப்படுத்தல். இது தொடர்பாடல் வினைத்திறனை உச்சப்படுத்தும்.

3. அழகியற் பண்பு பேணல்

இதன் நோக்கம் தொடுத்தெழுதலை யாந்திரிகமான பணியாயன்றிப் பார்ப்போரைக் கவருவதாக்கல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. மரபுடன் இசைவு

இதன் நோக்கம் எழுத்துக்களை எளிதாய் விளங்கலும் தொடுத்தெழுதக் கற்றலை இலகுவாக்கலும்.

தமிழ்த் தொடுத்தெழுதல் என அண்மையில் வெளிவந்த ஒரு எழுதுமுறை (படம் 7, *https://www.youtube.com/watch?app=desktop&v=R7BLYRRh8ec*) உயிரெழுத்துக்களையும் அடிப்படை மெய்யெழுத்துக்களையும் இலாவகமாய் இணைக்கும் உத்தியைக் கொண்டது. எழுத்துக்கள் யாவும் ஏறத்தாழ அவற்றின் மூல வடிவின. அதன் பயனான சிக்கனக் குறைவு போக, பல எழுத்துக்களை இணைக்குங் கோடு எழுத்துக்குக் குறுக்காகக் செல்கிறது. எவ்வாறும் இது மெச்சத்தக்க அலங்கார எழுத்து முறை. தொடுத்தெழுதலின் ஒரு முக்கிய பண்பை இது பேணல் கூறத்தக்கது. ஒவ்வொரு எழுத்திற்கும் முன், பின் இணைப்புக்கள் ஏறத்தாழ ஒரே உயரத்திற் தொடங்கி முடிதல் நேர்த்தியானது. ஆயினும், ஒரு வாசகத்தைத் தனி எழுத்துக்களாய் எழுதலினும் விரைவாய் எழுத இது உதவுமென இயலாது.



படம் 7: அண்மைய தொடுத்தெழுது முறை ஒன்று

தொடுத்தெழுதல் வழிமுறை

சிவசேகரம் (1977) பரிந்துரைத்த அணுகுமுறை கீழ்வருமாறு.

1. ஒவ்வொரு எழுத்தையும் தனிக் கோடாக்கல்

சுருங்கக் கூறின், இது தொடுத்தெழுதலின் அடிப்படை நோக்கை நிறைவேற்றும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. ஒரு கோட்டுப் பகுதி வழியே திரும்பிச் செல்லாமை

கோடுகள் வழியே மீளச் செல்லல் எழுது வேகத்தைக் குறைப்பதுடன் இரட்டைக் கோடுகளையும் உண்டாக்கும்.

3. மூலைகளின் தவிர்ப்பு

மூலைகளிற் செங்கோணத் திரும்பலைத் தவிர்த்தல் விரைவாய் எழுத உதவும்.

4. எழுத்தின் செல்திசை

எழுத்துக்கள் இடத்திற் தொடங்கி வலத்தில் முடிவதுடன் தொடங்கி முடியும் மட்டங்களும் திசைகளும் உடன்பட வேண்டும். இது தொடுத்தெழுதலை எளிதாக்கும்.

5. எளிமை

எழுத்துக்களின் எளிமை கற்றலுக்கும் விரைவாயெழுதலுக்கும் உகந்தது.

மேற்கூறிய எதையும் விறைப்பாய்க் கடைப்பிடித்தல் தகாது.

முதலாம் நெறிப்படுத்தலில், தனிக்கோடாக்கும் போக்கில், எழுத்தின் அமைப்புச் சிக்கலாயோ தோற்றப் பொலிவின்றியோ அமையினும் மேலதிகக் கோடேதும் எழுத்தின் வடிவைக் குழப்புமாறு குறுக்காய்ச் செல்லினும் அத்தனிக் கோடாக்கல் தவிர்க்கத் தக்கது.

இரண்டாவது, செட்டைகள் போன்ற குறுகிய கோட்டுப் பகுதிகட்கு அதிகம் பொருந்தாவிடினும் ஒரு கோட்டின் வழித் திரும்பிச் செல்லல் எழுது வேகத்தைச் சற்றேன் குறைக்கும்.

மூலைகளை வளைத்துத் தவிர்க்க முயலின், ல-வ ன-ை ஆகிய இணைகள் குழம்புவது போக, எழுத்தின் அழகும் மூல எழுத்துடன் உடன்பாடும் ஊறுபடலாம்.

இறுதி இரு நெறிப்படுத்தல்களும் இயன்றளவு கடைப்பிடிக்க உகந்தன.

இவ் வழிகாட்டல்களைப் பாவித்துச் சிவசேகரம் (1975, 1977) முன்வைத்த தொடுத்தெழுது முறை ஒன்றிற் குறைகள் உள. குறிப்பாக, மூலைகளையும் சிறகுகளையும் திரும்பிச் செல்லலையும் அறவே தவிர்த்தமையும் விசிறியை எப்போதும் எழுத்தின் பகுதியாக்கியமையும் எழுத்தின் அழகைப் பாதித்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே வலது மேல் மூலைகளைக் கையாளவும் சிறகைப் பேணவும் புதிய உத்திகள் தேடப் பட்டன. அத்துடன், கையெழுத்து நடைமுறைகள் சிலதைப் பின்பற்றித் த ந ழ ற என்பவற்றின் அடிப்புறத்திற் பின்னோக்கிய நகர்வு தவிர்க்கப்பட்டது.

எவ்வாறும் பெரும்பாலான தமிழ் எழுத்துக்களின் வளைகோடுகளின், சிறப்பாக ல ன ண ெ ே ை என்பவற்றின், வடிவை மாற்றத் தேவையில்லை. தொடுத்தெழுத இடைஞ்சலான த ந ழ ற என்பவற்றின் ஈற்றுப் பகுதியும் எழுத்தின் ஈற்றைப் பின்னோக்கிச் செலுத்தும் சுற்றிக்கட்டல்களும் மாற்றம் வேண்டுவன. அவற்றை எழுத்தின் வலப்புறம் நகர்த்தத் தகும்.

கையாளல் உத்திகள்

- **மேல் மூலையும் செட்டையும் (க ங ச ஞ ண த ந ர ள ன ா ஹ து நூ ணூ லூ றூ னூ)**: இடது மேல் மூலையை வளைத்தலும் செட்டையுடன் கூடிய வலது மேல் மூலையிற் செட்டையைக் கூராக்கலும் தோற்றப் பொலிவானது. படம் 8 மாற்றுக் கையாளல் முறைகள் சிலதைக் காட்டகிறது.

- **கீழ் மூலை (ங ட ப ம ய வ)**: இடது கீழ் மூலையிற் குத்தாகச் செல்லும் கோட்டை மெலிதாய்ப் பின்னோக்கி வளைத்து மூலையைக் கூராக்கலும் வலது கீழ் மூலையை வளைத்து எழுதலும் தோற்றப் பொலிவானது. படம் 8இல் மாற்றுக் கையாளல் முறைகள் சில உள.

- **சுழி (அ ஐ ஞ ண ல வ ள ன ஜ ஸ ஹ ஷ ெ ே ை மூ டூ ரூ மூ ளூ)**: தொடக்கச் சுழியைப் பேணல் எளிது. ஈற்றுச் சுழியைத் தொடுத்தல் தோற்றத்துக்கு ஊறாயின் எழுத்தைச் சுழியுடன் நிறுத்தகத் தகும்.

- **சுற்றிக்கட்டல் (ஞ கு டு மு ரு ழு ளு கூ டூ மூ ரூ மூ ளு)** அண்டை எழுத்துக்களுடன் முட்டாது சுற்றிக் கட்டலை எழுத்தின் மேலாக வளைத்து நீட்டலாம்.

- **வல ஓர வளைவு (ல ஸ)**: வளைவின் மேற்பகுதியைச் சற்ற நிமிர்த்தலாம்ளூ வளையற் கொம்பை (ை) உள்ளவாறே விடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ **கால்கள் (ர த ந ழ):** பின்னோக்கிச் செல்லுங் கால்களை நிமிர்த்தல் தொடுத்தெழுத வசதியானது.

❖ **விசிறிகளும் உகர ஊகாரக் குறிகளும்:** அடுத்த எழுத்துடன் இணைத்தல் சிரமமெனின் தொடுத்தலைத் தவிர்க்கலாம் அல்லது பொருத்தமானவாறு தனித்தெழுதலாம். படம் 8இல் மாற்றுக் கையாளல் முறைகள் சில உள.

❖ **புள்ளி, ஃ:** இவற்றை உள்ளவாறே தனித்து விடலாம்.

❖ **இணைப்பு மட்டத்தைச் சமனாக்கல்:** இயன்றளவும் எழுத்தின் மேற் பகுதியிற் தொடங்கி முடிக்க இயலாதபோது ஒரு இணைப்புக் கோட்டைப் புகுத்தலாம்.

மேற்கூறிய நடைமுறைகளைக் கையாளும் முறையைப் படம் 9 காட்டுகிறது. எழுத்தின் மேற்கூறிய கூறு ஒவ்வொன்றையும் தொடுத்தெழுதச் சிவசேகரம் (1975, 1977) கையாண்ட விதங்களும் படத்தில் உள்ளன.

சிவசேகரத்தின் 1977ம் ஆண்டு தொடரெழுத்து முறைகளில் இரண்டாவது கூடிய செம்மையானது. அதன்படியும் தற்போதைய பரிந்துரைப்படியும் அமையும் தொடுத்தெழுது எழுத்துருக்கள் சிலதைப் படம் 10 ஒப்பிடுகிறது. ஏறத்தாழ எல்லா எழுத்துக்களையுங் கையாளுமாற்றைச் சுட்டுமாறு எழுத்துக்கள் தெரிவாகின. மேற்குறித்த இரு தொடுத்தெழுது முறைகளிலும் வாக்கியமொன்று அமையுமாற்றைப் படம் 11 காட்டுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்துக் கூறு	எழுத்து	முறை 1	முறை 2	முறை 3
வலது மேல் மூலையும் செட்டையும்	ச			
இடது கீழ் மூலை	ப			
இகர விசிறி	சி			
ஈகார விசிறி	சீ			
உகரக் குறி	ரு			
உகரக் குறி	து			
ஊகாரக் குறி	ரூ			
ஊகாரக் குறி	தூ			

படம் 8: எழுத்துக் கூறுகளின் சில மாற்றுக் கையாளல்கள்

எழுத்துக் கூறு + அமையும் எழுத்துக்கள்	எழுத்து	சிவசேகரம் (1977) 1	சிவசேகரம் (1977) 2	தற்போதைய
மேல் மூலை, செட்டை கஙசஞணதநரனளா ஞா தூநூஹூஜூறூனூ	ச			
	ா			
கீழ் மூலை நடபமயவ	ப			
	வ			
சுழி அஆஜஞஙணமவளான ஜஸஹஷகெமேடுருமூ ளு	அ			
	ன			
	ே			
சுற்றிக்கட்டல் குஞடுமுகுமூ	கு			
வல ஓர வளைவு லஸ	ல			
கால்கள் ரதநழ	ர			
	த			
	ழ			
விசிறிகள் ி ீ	கி கீ			
	வி வீ			
	டி டீ			
உகர ஊகாரக் குறிகள்	மு மூ			
	பு பூ			
	து தூ			
	ஜு ஜூ			

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படம் 10: தெரிந்த எழுத்துக்களின் தொடுத்தெழுது வடிவம் மேலே சிவசேகரம் 1972-2; கீழே இப்போதைய பரிந்துரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவசேகரம் 1977-2



தற்போதைய முறை



படம் 11: தொடுத்தெழுதிய வாக்கையம்

எவ்வாறும், ஐரோப்பியத் தொடுத்தெழுது முறைகளிற் போற் தமிழிற் தொடுத்தெழுதுபவருக்கும் தெரிவுகள் தகும். ஆங்கில வழக்கிற், பலர் *f, F, H, K, T* என்பவற்றை இரு கூறுகளாய் எழுதுவர். அவற்றை ஒரே கோடாய் எழுதின், எழுத்துரு சற்றுச் சிக்கலாயமையும். சில தமிழ் எழுத்துருக்கட்கும் அவ்வாறு செய்தலிற் குறையில்லை.

கட்டுரையின் நோக்கம் கட்டாய விதிகளை வகுப்பதல்ல. எளிதில் அடையாளங் காணவும் விரைந்தெழுதவும் உதவும் எழுத்துருக்களைக் கொண்ட எளிய தொடுத்தெழுது முறை தமிழில் இயலும் என நிறுவுவதே கட்டுரையின் மூல நோக்கம். இங்கு முன்வைத்தவற்றினுஞ் சீரிய வடிவுடன் விரைவாய் எழுத இடமளிக்கும் தொடுத்தெழுது முறைகள் இயல்வன. எனவே அத் திசையில் உரிய முயற்சிகளை மேற்கொண்டு, வேண்டின் மாற்று முறைகள் உட்பட்ட, சீரான தமிழ்த் தொடுத்தெழுது முறையை உருவாக்கித் தமிழுக்கு வளமூட்ட வேண்டும் என்பதே கட்டுரையாளரின் அவா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவுகள்

1. தமிழிற் தொடுத்தெழுதல் முறையொன்றை வகுக்கும் வழிமுறை ஒன்று முன்வைக்கப்பட்டுள்ளது
2. அதைச் செயற்படுத்தும் வழிகாட்டல்கள் தரப்பட்டுள்ளன
3. தொடுத்தெழுதலுக்கு உகந்த இரு தொடுத்தெழுது முறைகள் தரப்பட்டுள்ளன.
4. எளிதாய் எழுதவும் வாசித்து விளங்கத் தெளிவாயும் அமையும் தொடுத்தெழுதல் தமிழுக்கு இயலும் என நிறுவப்பட்டுள்ளது.

உசாத்துணை

Diringer, David. (1965) Writing, Volume 25 of Ancient peoples and places, Thames and Hudson, 1965.

Fischer, Steven Roger (2021) A History of Writing. Reaktion Books.

Khorsheed M, Clocksin W. (1999) Structural Features of Cursive Arabic Script (1999) British Machine Vision Conference 1999 Computer Science. //www.semanticscholar.org/paper/Structural-Features-of-Cursive-Arabic-Script-Khorsheed-Clocksin/51d8f9fc2382d67554b83e21d83c6a1229025fa9/figure/0

Mahadevan, I. (2003) Early Tamil epigraphy: From the earliest times to the sixth century A. D. (Harvard oriental series, Vol. 62). Chennai: India/Cambridge, MA: Cre-A/The Department of Sanskrit and Indian Studies, Harvard University.

Sivasegaram. (1975) a Cursive Script for Tamil, Dravidian Linguistics Papers Exchange. Vol VII No. 4

Sivasegaram. (1977) On Developing a Cursive Script for Tamil. International Journal of Dravidian L Linguistics. Vol VI, No. 2, pp. 214-222.

https://en.wikipedia.org/wiki/Tamil_script

https://www.quora.com/Why-do-most-Chinese-still-write-Chinese-in-cursive-handwriting-whereas-in-English-they-no-longer-do-that

https://www.youtube.com/watch?app=desktop&v=R7BLYRRh8ec

https://www.typotheque.com/articles/modern-handwriting-a-historical-survey-1 (and 2,3,4,5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4

அருட்காடு என்னும் புனிதக் கருத்தாக்கமும் இயற்கை சார்ந்த சமூகச் சிந்தனையும்

சி. ஜஸ்டின் செல்வராஜ்[1]

அறிமுகம்

இக்கட்டுரையானது, பல்வேறு தளங்கலிருந்து பெறப்பட்ட குறிப்புகளின் அடிப்படையில் ஒரு ஆய்வாகவும், ஆக்கப்பூர்வமான விவாதத் தினையும் கவனத்தில் கொள்கின்றது. காடுகள் புனிதமானதாக கருதப்படுவதால், அவை பெரும்பாலும் புனிதத் தலங்களாகப் பார்க்கப் படுகின்றன. மக்களின் சடங்குகள், சம்பிரதாயங்கள், நம்பிக்கைகள் ஆகியவற்றுடன் அவைகள் இணைந் திருப்பதன் மூலம் மேலும் முதன்மை பெறுகின்றன. புனிதப் பொருளாக, மக்களின் கலாசார, சமய மரபுகளில் ஆழமாக வேரூன்றி யுள்ளன. இக்கட்டுரையானது தமிழ் நாடு, இந்தியா, உலகளாவிய நிலையில் அருட்காடுகள் குறித்த பதிவுகளை தொகுத்து விவாதத்தினை முன்னெடுக்க முயல்கின்றது.

இக்கட்டுரையின் நோக்கங்கள் பின்வருமாறு அமைகின்றன.

1. சமூக அறிவியலில் அருட்காடுகள் எனும் கருத்தை குறிப்பாக சமயத்தின் பின்னணியில் அறிமுகப்படுத்துகிறது.
2. இந்தியச் சூழலில் சமூகம், கலாசாரத்தில் அதன் பங்கை புரிந்து கொள்ள முயற்சி செய்கிறது.
3. அருட்காடுகள் குறித்த முன்மொழியப்பட்ட சிந்தனைகளையும் மதிப்பீடு செய்கின்றது.

அருட்காடு - விளக்கம்

அருட்காடு என்பது ஒரு சமூகம் அல்லது கலாசாரத்திற்கான சமய, ஆன்மீக முதன்மை பெறும் ஒரு பகுதி அல்லது மரங்கள் நிறைந்த நிலப்பகுதியைக் குறிக்கின்றது. அருட்காடுகள் பொதுவாக அவற்றைப்

---

1 20. Dr.C. Justin Selvaraj, Assistant Professor & Head I/C, Department of Fine Arts and Aesthetics, Madurai Kamaraj University, e mail: justin.finearts@mkuniversity.ac.in & jsfolk@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனிதமானதாகக் கருதும் சமூகம் அல்லது சமயக்குழுக்களால் பராமரிக்கப்பட்டு பாதுகாக்கப்படுகின்றன. அவை பெரும் பாலும் தெய்வத்தன்மையுடனோ அல்லது ஆன்மீகத்துடனோ தொடர்பு கொள்ளும் இடமாகக் காணப்படுகின்றன. உதாரணமாகக் கூற வேண்டுமென்றால் பிரார்த்தனைகள், புனிதப் பொருட்கள், தியானம், சமய வழிபாடுகள் உள்ளிட்ட பல்வேறு சமய, கலாசார நடை முறைகளை நாம் கூறலாம். இக்காடுகள் பெரும்பாலும் குறிப்பிட்ட தெய்வங்கள், இயற்கையிறந்த பொருட்கள் *(Supernatural Beings)* அல்லது மூதாதையர்கள் போன்றோர்களின் ஞாபகார்த்தமாக விளங்கு கின்றன. மேலும் இயற்கைக் கூறுகளான மரங்கள், பாறைகள் அல்லது நீர்நிலைகள் போன்றவைகள் தெய்வம் அல்லது ஆன்மீக சக்தியால் நிரப்பப்பட்டதாக கருதப்படுகின்றன. ஆக புனிதக் கருத்தை ஒன்றின் மேல் புகுத்துவதன் மூலம் அவை மேலும் முக்கியத்துவம் பெறுகின்றன எனலாம்.

இக்காடுகள் பெரும்பாலும் குறிப்பிட்ட தெய்வங்கள், இயற்கையிறந்த பொருட்கள் *(Supernatural Beings)* அல்லது மூதாதையர்கள் போன்றோர்களின் ஞாபகார்த்தமாக விளங்குகின்றன. மேலும் இயற்கைக் கூறுகளான மரங்கள், பாறைகள் அல்லது நீர்நிலைகள் போன்றவைகள் தெய்வம் அல்லது ஆன்மீக சக்தியால் நிரப்பப்பட்டதாக கருதப்படுகின்றன.

அருட்காடுகள் குறித்த முன்னைய ஆய்வுகள், அறிக்கைகள்:

1975 இல் காட்கில், வர்தக் ஆகியோர் இந்தியாவின் கர்நாடகா, மகாராஷ்டிரப் பகுதிகளிலுள்ள மேற்குத் தொடர்ச்சி மலைகளில் நூற்றுக்கணக்கான காடுகளைப் பட்டியலிட தங்களது ஆய்வினைத் தொடங்கினர். அதன் பயனாக இந்தியா முழுமைக்கும் காடுகள் கணக்கிடப்பட்டு, அவற்றுடன் தொடர்புடைய பல புதிய அம்சங்கள் கண்டறியப்பட்டன. ஆரவல்லி பகுதிகளின் லீவர்ட் பகுதியில் உள்ள காடுகள் வன்னி (ப்ரோசோபிஸ் சினேரியா) மரங்கள் அதிகமுள்ள திட்டுகளாக இருந்தன எனவும் வடகிழக்கு இமயமலைத் தொடர்களில் உள்ளவை பசுமையான காடுகள், சமவெளிப் பகுதியிலுள்ள காடுகளில் பெரும்பாலானவை ஒத்த/ஒருநிலை அல்லது பல்லினங்களின் கூட்டங்கள் எனவும் இவைகளில் முற்காலங்களில் காணப்பட்ட தாவரங்களின் நினைவுச் சின்னங்களாக இருக்கின்றன என்றும், அவை சுற்றுச்சூழல் வரலாற்றிற்கு சான்றாவணமாகவும் விளங்குகின்றன எனவும் கூகின்றனர். காடுகளில் வெவ்வேறு வகைகளின் அடிப் படையில் வேறுபாடுகள் இருந்தபோதிலும், அவை கிராம தெய்வத் திற்கு, வருடந்தோறும் நடைபெறும் சமூகவிதிகளோடு பின்னிப் பிணைந்து காணப்படுகின்றன. அத்தைகைய காடுகளிலுள்ள இயற்கை வளங்களை முறையாகப் பயன்படுத்துதல் மற்றும் செய்யத்தகாத செயல்பாடுகளை செய்யாதிருத்தல் போன்ற பண்புகளை மக்கள் நாட்டுப்புறக் கதைகள் மற்றும் நடத்தைகள் மூலம் முறைப்படுத்தி வைத்துள்ளனர். காடுகளை முறைப்படுத்தி ஒழுங்குபடுத்துவதற்கான வடிவங்களாக அருட்காடுகள் விளங்குகின்றன என்று ஆய்வாளர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடுகின்றனர்.

அருட்காடுகள் குறித்த கருத்து என்பது, இயற்கை, பண்பாடு, இவற்றோடு தொடர்புடையவைகள். மேலும் மரங்கள், கிராம தெய்வங்களாகவும் பார்க்கப்படுகினறன. இந்த வலைப்பின்னலில் நடைபெறும் கலாசார முறைகளினாலும், அவற்றினைத் தொடர்ந்து நிகழும் நடவடிக்கைகளினாலும் அருட்காடுளின் விரிவாக்கம் இன்னும் சாத்தியம் ஆகின்றது என்று கூறவேண்டும். (சோமசேகர் 1999).

சி.பி. சென்னை ராமசாமி ஐயர் அறக்கட்டளையானது (CPRF) தமிழ்நாடு முழுவதிலுமுள்ள காடுகளை ஆய்வு செய்து மறுசீரமைக்கும் மகத்தான பணியை மேற்கொண்டது. குறிப்பாக புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் 82 காடுகளை பட்டியலிட்டுள்ளது. அதைத் தொடர்ந்து, CPRF ஆனது அழிவுக்குள்ளான காடுகளை ஆய்வு செய்ததன் அடிப்படையில் பயன்பாடாகும் 'வனம்/காடு' குறித்த கொள்கைக்கு உயிரூட்டியது என்று கூறலாம். தமிழ்நாடு மற்றும் ஒருங்கிணைந்த ஆந்திரப் பிரதேசத்தில் ஏராளமான காடுகளின் முந்தைய நிலைக்கு மீட்டெடுத்தது என்றால் மிகையல்ல (நந்திதா மற்றும் ஜவந்தி, 1997; அமிர்தலிங்கம், 1998).

அருட்காடுகள் என்பது தெய்வங்கள் அல்லது மூதாதையரை திருப்திப்படுத்த அல்லது மரியாதை செய்வதற்கான தளங்களாக இருந்தன. அவ்வாறு செய்கின்றபோது தெய்வங்கள், முன்னோருக்குப் படைக்கப்படும் பொருட்கள் தாவரப் பொருட்களாகவும் விலங்குகளாகவும் இருக்கின்றன.

UNESCO-WWF நிதியுதவியுடன், புதுதில்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ராமராகிருஷ்ணன் தலைமையிலான நாடு தழுவிய கணக்கெடுப்பு, இந்தியாவின் அனைத்துப் பகுதிகளிலும் அருட்காடுகள் இருப்பதை ஆவணப்படுத்தியுள்ளது மிகச்சிறந்த பணியாகும் (ராமகிருஷ்ணன் 1998). இருப்பினும், இந்தத் தொகுப்பில் தமிழ்நாட்டில் உள்ள அருட்காடுகள் குறித்த தரவுகள் மிக சொற்பமாகவே ஆவணப்படுத்தப்பட்டுள்ளதனை அமிர்தலிங்கம் (2014) அவர்கள் தனது ஆய்வில் சுட்டிக்காட்டியுள்ளது கவனிக்கத்தக்கது.

அருட்காடுகள் என்னும் பாரம்பரியக் கட்டமைப்பு

நாம் ஏற்கனவே குறிப்பிட்டது போன்று அருட்காடுகள் என்பது தெய்வங்கள் அல்லது மூதாதையரை திருப்திப்படுத்த அல்லது மரியாதை செய்வதற்கான தளங்களாக இருந்தன. அவ்வாறு செய்கின்றபோது தெய்வங்கள், முன்னோருக்குப் படைக்கப்படும் பொருட்கள் தாவரப் பொருட்களாகவும் விலங்குகளாகவும் இருக்கின்றன. இவ்வாறு பலிகொடுப்பது அல்லது காணிக்கைகளைத் தொடர்ந்து செய்வது தெய்வீகத்துடன் ஒரு தொடர்பை ஏற்படுத்துவதற்கும் தெய்வத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருளை அல்லது ஆசீர்வாதங்களைப் பெறுவதற்குமான ஒரு வழியாகக் காணப்பட்டது. காடுகள் வழிபாட்டிற்கான இடங்களாக இன்றும் இருப்பதனை யாரும் மறுப்பதற்கில்லை. தனிநபர் அல்லது குழுக்கள் காடுகளுக்குச் சென்று சடங்கு நிகழ்வுகளில் ஈடுபடுகிறார்கள், மேலும் வனத்தோடு தொடர்புடைய தெய்வங்கள், ஆவிகளிடமிருந்து வழி காட்டுதல் அல்லது வரங்களைப் பெற்றுச்செல்கிறார்கள். காடுகளுக்குள் இத்தகைய வழிபாட்டு நடவடிக்கைகள், பலிபீடங்கள்/ ஆலயங்கள் போன்றவை புனிதம் மிகுந்த அப்பகுதிகளில் தொடர்ந்து உருவாகின்றன.

இன்னும் கவனிக்க வேண்டிய விசயம் என்னவென்றால் அருட்காடுகள் பழங்குடி மக்கள் பண்பாடுகளில் குணப்படுத்தும் நடைமுறைகளுடனும் தொடர்புடையன என்றால் மிகையல்ல. பாரம்பரிய முறையில் குணப்படுத்துபவர்கள் (சாமன்/*shaaman*) சடங்குகள் அல்லது பிற சடங்குகளை நிகழ்த்த காடுகளைப் பயன் படுத்துகின்றனர் என்று அறிகிறோம். இவற்றில் சமநிலை, நல்லிணக்கம், நல்வாழ்வை மீட்டெடுப்பதை உள்ளடக்கமாக கொண்டுள்ள மந்திரமுறைகள், மருத்துவ தாவரங்கள், ஒலி எழுப்புதல், பிற ஆன்மீக நடைமுறைகளைக் கூறலாம். மேலும், அருட்காடுகள் என்னும் புனிதக் கருத்தாக்கமானது பெரும்பாலும் மண் சார்ந்த நாட்டுப்புற மரபுகளில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பிடித்துள்ளன. எதிர்காலத் தலைமுறையினருக்கு கலாசார அறிவு, ஆன்மீக போதனைகள், மூதாதையரின் ஞானத்தை கடத்தும் கதைகள், புராணங்கள், பழ மரபுக்கதைகள், வரலாற்றுக் குறிப்புகள் போன்றவற்றைப் பகிர்ந்து கொள்ள இந்த அருட்காடுகள் பயன்படுகின்றன. மேலும் இவை கலாசாரம், பாரம்பரியத்தை பாதுகாப்பதற்கும், பரப்புவதற்குமான ஒரு அங்கமாகத் திகழும்.

அருட்காடுகளின் பாரம்பரியம் குறித்த ஆய்வை முன்னெடுக்கும் இத்தருணத்தில் அவை சுற்றுச்சூழல் சார்ந்த சரணாலயங் களாகவும் சுற்றுச்சூழல் அமைப்பு களுக்குள் ஒரு மென்மை யான சமநிலையை பராமரிக் கின்றன என்பதனையும் உணர முடிகின்றது.

அருட்காடுகளின் பாரம்பரியம் குறித்த ஆய்வை முன்னெடுக்கும் இத்தருணத்தில் அவை சுற்றுச்சூழல் சார்ந்த சரணாலயங்களாகவும் சுற்றுச்சூழல் அமைப்புகளுக்குள் ஒரு மென்மையான சமநிலையை பராமரிக்கின்றன என்பதனையும் உணர முடிகின்றது. அருட்காடுகள் பெரும்பாலும் அரிதான, உள்ளூர் அல்லது அழிந்து வருகிற உயிரினங் களின் புகலிடங்களாகவும் மாறிவிடுகின்றன. காடுகளில் பல்வேறு தாவரங்கள், விலங்கினங்கள் இருப்பதால், உயிரினங்களுக்கு வாழ் விடங்கள், உணவு ஆதாரங்கள், இனப்பெருக்கம் ஆகியவற்றின் மூலம் ஒட்டுமொத்த சுற்றுச்சூழல் சமநிலைக்கு வாய்ப்பளிக்கிறது. அருட் காடுகள் பலவற்றின் செயல்பாடுகளும் பாரம்பரிய சூழலியல் அறிவு, நிலையான இயற்கை நடைமுறைகளுடன் தொடர்புடையவை என்பதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் மூலம் நிரூபிக்க முடியும். பழங்குடிச் சமூகங்கள் இயற்கை உலகத்தைப் பற்றிய நுணுக்கமான புரிதல்களைக் கொண்டிருப்பதனைப் போல, அவற்றின் சுற்றுப்புறங்களுடன் தொடர்பு கொள்வதற்கான நிலையான வழிகளை உருவாக்கியுள்ளதனைப் போல அருட்காடுகள் எனும் நடைமுறைகள் மேற்கூறிய செயல்பாட்டு விளைவுகளால் நிலைநிறுத்தப்பட்டு அவை தலைமுறைகள் வழியாக கொண்டு செல்லப்படும் இடங்களாகின்றன. இவற்றில் இயற்கை, சமூக வளர்ச்சிக்கு முதன்மையாக விளங்கும் வளங்களைப் பிரித்தெடுத்தல், பருவகால நடைமுறைகள், சுற்றுச்சூழல் அமைப்பின் நீடித்த வளர்ச்சி, உற்பத்தித்திறனை உறுதிப்படுத்தும் பாதுகாப்பு நடவடிக்கைகளை ஆரோக்கியமான முறையில் செயல்படுத்துதல் ஆகியவை அடங்கும்.

எனவே அருட்காடுகள் எனும் புனிதக் கருத்தாக்கத்தினால் அமைந்த பகுதிகள் பல்வேறு சுற்றுச்சூழல் அமைப்பு சேவைகளை வழங்குகின்றன என்றால் மிகையல்ல. அவற்றை சுற்றியுள்ள நிலப்பரப்புகள், மனித சமூகங்கள் அதனோடே பயணிக்கின்றன, பயன்பெறுகின்றன. அருட்காடுகள் இயற்கையான நீர் பிடிப்புப் பகுதிகளாகச் செயல்படுவதன் மூலமும், அவ்வட்டாரத்திற்கான நீரியல் சுழற்சிகளில் பங்குகொள்வதன் மூலமும் நீர் வள மேலாண்மைக்கு மிகுந்த பங்களிக்கின்றன. மேலும் அவை மண் அரிப்பைத் தடுக்கவும், நிழல் தரும் வளங்களாகவும், நுண்ணுயிர்களை ஒழுங்குபடுத்தவும், உள்ளூர் காலநிலைப் போக்கை மேம்படுத்தவும் உதவுகின்றன. காலநிலை மாற்றத்தின் விளைவுகளைத் தணித்து, வளியில் கார்பன் அதிகமாவதை மட்டுப்படுத்தவும் செய்கின்றன. அருட்காடுகளின் துணையால் தேனீக்கள், பட்டாம்பூச்சிகள் மற்றும் பறவைகள் போன்றவைகள் தாவரங்களில் மகரந்தச் சேர்க்கைகளுக்கு பெரும்பங்கு வகிக்கின்றன. இதனால் அருட்காடுகளில் உள்ள பூக்கும் தாவரங்கள் தேன், மகரந்த வளங்களை வழங்குகின்றன. இந்த மகரந்தச் சேர்க்கைகள், அருகிலுள்ள விவசாயப் பகுதிகளில் பொருளாதார ரீதியாக, முதன்மையான பயிர்கள் உட்பட தாவரங்களின் இனப்பெருக்கத்தை எளிதாக்குகின்றன. இன்னும் ஒருபடிமேலே அருட்காடுகள் விதை வங்கிகளாகவும் செயல்படுகின்றன. இச்செயல்பாடு இயற்கையான விதை பரவல், சுற்றியுள்ள காடுகள், நிலப்பரப்புகளின் மீளுருவாக்கம் ஆகியவற்றை ஊக்குவிக்கின்ற செயல்பாடு கொண்ட காரணியாக இருப்பதனை அருட்காடுகள் பாரம்பரியம் உணர்த்துகிறது.

அருட்காடுகள் இயற்கையான நீர் பிடிப்புப் பகுதிகளாகச் செயல்படுவதன் மூலமும், அவ்வட்டாரத் திற்கான நீரியல் சுழற்சிகளில் பங்கு கொள்வதன் மூலமும் நீர் வள மேலாண் மைக்கு மிகுந்த பங்களிக் கின்றன.

அருட்காடுகள்: நிலைத்த சுற்றுச்சூழலின் தொடக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூய்மையான சூழல் (காற்று, மண், நீர் பாதுகாப்பு), தாவரங்கள், விலங்கினங்கள் பாதுகாப்பு, கார்பனை மட்டுப்படுத்துதல், வெப்ப நிலை கட்டுப்பாடு, பாரம்பரிய அறிவைப் பாதுகாத்தல் போன்ற சுற்றுப் புறச்சூழலை மேம்படுத்தும் செயல்களில் அருட்காடுகள் முதன்மை யான பங்கு வகிக்கின்றன. இந்தியாவில் சுமார் 1 லட்சம் முதல் 1.5 லட்சம் சிறிய, பெரிய அருட்காடுகள் உள்ளன. தமிழ்நாட்டில் மட்டும் 1262 அருட்காடுகள் உள்ளன. இந்த அருட்காடுகள் பல்வேறு வகையான விலங்கினங்கள், தாவரங்களை வளர்த்தெடுக்கவும், பாதுகாக்கவும் முடியும் என்பதை பல்வேறு ஆய்வுகளும், அறிக்கைகளும் தெளிவுபடுத்துகின்றன. இந்தியாவில், பல்வேறு சமயங்கள், பல்லுயிர், காடுகளின் பாதுகாப்புடன் தொடர்புடைய பல்வேறு வழிபாட்டு மரபுகள், நம்பிக்கைகள், சடங்கு நிகழ்வுகளை அருட்காடுகளோடு தொடர்புபடுத்திக் கூறமுடியும். அதனை இவ்வாறும் கூறலாம். அதாவது இயற்கையின் அனைத்து படைப்புகளும் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில் இந்தியாவில் உள்ள பல்வேறு சமூகங்கள் இயற்கை வழிபாட்டைப் பின்பற்றுகின்றன என்பதேயாகும். மேலும் அருட்காடுகள் சமூக-சமய இணைப்பு, மருத்துவ விழுமியங்களைக் கொண்டதாகவும், விளங்குகின்றன. ஆகவே பல்வேறு வழிகளில் உள்ளூர் சுற்றுச்சூழல் முறையினைப் பாதுகாப்பதிலும், தொடர்ந்து நிலைநிறுத்துவதிலும் அருட்காடுகள் முதன்மையான பங்கு வகிக் கின்றன. இதனை ஒரு சில உதாரணங்களுடன் பார்க்கலாம்.

இந்தியாவில், பல்வேறு சமயங்கள், பல்லுயிர், காடுகளின் பாதுகாப்புடன் தொடர்புடைய பல்வேறு வழிபாட்டு மரபுகள், நம்பிக்கைகள், சடங்கு நிகழ்வுகளை அருட்காடுகளோடு தொடர்புபடுத்திக் கூறமுடியும்.

பாதுகாப்பான வாழிடம்: முன்னர் கண்டது போலவே, அருட்காடுகள் எனும் இவ்வமைப்பு ஏராளமான தாவரங்கள், விலங்கினங்களுக்கு சரணாலயங்களாக செயல்படுகின்றன. அவை செழித்து வளரக்கூடிய இடையூறு இல்லாத வாழ்விடங்களை வழங்குகின்றன. காடுகள் பெரும்பாலும் அடர்த்தியான தாவரங்கள், நீர்நிலைகள், பழமையான மரங்கள் உள்ளிட்ட பல்வேறு நுண்ணுயிரிகளையும் உள்ளடக்கியது. அவை பரந்த அளவிலான உயிரினங்களுக்கு தங்குமிடம், கூடு கட்டும் தளங்கள், உணவு ஆதாரங்களை வழங்குகின்ற பெருந்திரளாக விளங்குகின்றன.

காடழிவதனை தடுக்கும் ஒரு உத்தி: அருட்காடுகள் காடழிப்புக்கு எதிராக இயற்கையான தாங்கல்களாக செயல்படுகின்றன. அருட் காடுகளை உயர்வாகக் கருதும் சமூகங்கள் பெரும்பாலும் மரங்களை வெட்டுவதைத் தடை செய்கின்றன. இந்த கட்டுப்பாடு, காடழிப்பு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனுடன் தொடர்புடைய சுற்றுச்சூழல் பாதிப்புகளான வாழ்விடத்தை இழந்து நிற்றல், சுற்றுச்சூழல் செயல்முறைகளில் இடையூறு, மண் அரிப்பு போன்றவற்றைக் கட்டுப்படுத்துகிறது.

அரியவகை, வட்டார முக்கியத்துவம் கொண்ட உயிரினங்களின் பாதுகாப்பு: அருட்காடுகள் அரிய, உள்ளூர் உயிரினங்களின் தாயகமாகும், அவை வேறு எங்கும் காணப்படாது, இக்காடுகளின் புனிதமான நிலையினால் அவற்றின் பாதுகாப்பை உறுதிசெய்து, சிறப்புமிக்க இனங்களை அழிவிலிருந்து தடுக்கிறது.

அறுவடை, பருவகால மாற்றங்கள் குறித்த சடங்குகள் அருட்காடுகளின் நிலைத்த தன்மைக்கும் அதன் நடைமுறைகளை உறுதி செய்வதற்கான சடங்குகள் போன்றவை இயற்கை வளங்களை மேம்படுத்துவதற்கும் சமூகக் குழுக்களுக்கு அறிவுரைகளாக வழங்கப் படுகின்றன என்று விளக்கம் கொள்ளலாம்.

நீர் வள மேலாண்மை: அருட்காடுகள் பெரும்பாலும் நீரோடைகள், நீரூற்றுகள், ஈரநிலங்கள் போன்ற இயற்கையான நீர் ஆதாரங்களைக் கொண்டிருக்கின்றன. அப்பகுதிகள் மாசுபாடு, அதிகப்படியான இயற்கை வளச் சுரண்டல் உள்ளிட்ட மனித இடையீடுகளிலிருந்து பாதுகாக்கப்படுகின்றன. காடுகளுக்குள் உள்ள நீரின் தரம், அளவைப் பாதுகாப்பதன் மூலம், அவ்வட்டாரச் சுற்றுச்சூழல் அமைப்புகள் நீடித்து, நீர்வாழ் உயிரினங்களுக்கு பயனளிக்கின்றன. மேலும் நீரியல் சுழற்சிகளைப் பராமரிக்கின்றன. அருட்காடுகள் நிலத்தடி நீரை மறுசீரமைத்துக் கொள்ளவும் அந்த வட்டாரத்தின் ஒட்டுமொத்த நீர் வள மேம்பாட்டிற்கும் பங்களிக்கிறது.

மண் பாதுகாப்பு: மண் பாதுகாப்பு என்பது இயற்கையை பாதுகாப்பதின் முதல்படியாக பார்க்கப்படுகிறது. மண் அரிப்பைத் தடுத்து மண் வளத்தை பலப்படுத்துவதன் மூலம் மண் பாதுகாப்பில் அருட்காடுகள் பங்கு வகிக்கின்றன. இக்காடுகளில் உள்ள அடர்ந்த தாவரங்களின் இலை குப்பைகள், காற்று, நீரினால் ஏற்படும் இயற்கையான மாற்றங்கள் மண்ணிலுள்ள நுண்ணுயிரிகளின் செயல் பாடுகளினால் மண் வளம் மேம்படுகிறது. மேலும் ஆரோக்கியமான தாவர வளர்ச்சியை ஆதரிக்கிறது. மண் சிதைவைத் தடுக்கிறது.

பண்பாட்டு நடைமுறைகள்: அருட்காடுகளுடன் தொடர்புடைய கலாசார நடைமுறைகள் பெரும்பாலும் நிலையான வள மேலாண்மையை உள்ளடக்கியது என்று அறிகிறோம். அறுவடை, பருவகால மாற்றங்கள் குறித்த சடங்குகள் அருட்காடுகளின் நிலைத்த தன்மைக்கும் அதன் நடைமுறைகளை உறுதி செய்வதற்கான சடங்குகள் போன்றவை இயற்கை வளங்களை மேம்படுத்துவதற்கும் சமூகக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழுக்களுக்கு அறிவுரைகளாக வழங்கப்படுகின்றன என்று விளக்கம் கொள்ளலாம். தொடர்ந்து அவை நடைமுறைக்கு வருவதால் கலாசார முக்கியத்துவம் பெறுகின்றன.

அருட்காடுகளின் முதன்மையான பங்கு

அருட்காடுகள் பெரும்பாலும் சமய எல்லைகளைக் கடந்து, சமயங்களுக்கிடையிலான உரையாடலினை வளப்படுத்தும் சிந்தனைப் புலமாகவும் அதே நேரத்தில் இயற்கை குறித்த அக்கறை கொள்ளும் சமூக நம்பிக்கையாகவும் செயல்படுகின்றன. இயற்கையின் மீதான மரியாதை, சமய நம்பிக்கைகள் சுற்றுச்சூழல் நெறிமுறைகளுடன் ஒன்றோடொன்று இணைந்திருப்பதை உணர்த்துகின்றன. அருட் காடுகளின் புனிதத் தன்மையால் சமயங்கள் மேற்கொள்ளும் சமய நடவடிக்கைகள், சுற்றுச்சூழலின் நிலைத்தன்மைக்கும், இயற்கை வளங்களைப் பாதுகாப்பதற்குமான உரையாடல், ஒத்துழைப்பு, கூட்டு நடவடிக்கைகளை ஊக்குவிக்கின்றன. அருட்காடுகள் நிலையான நில மேலாண்மை, பாதுகாப்பு செயல்முறைகளை பரிந்துரைக்கின்றன. மேலும் வழக்கமான முறையில் நிலத்தினைப் பயன்படுத்துவது குறித்தும், வழக்கமான அணுகுமுறைகளிலிருந்தும் வேறுபட்டு சுற்றுச்சூழலை பாதுகாப்பதன் முக்கியத்துவத்தை உணர்த்துவதோடு, நிலம் குறித்து நன்மதிப்பை சமூகத்தில் தொடர்ந்து உலவ விடுகின. பாரம்பரிய சூழலியல் அறிவு, சமூகப் பங்கேற்பு, இயற்கையின் மீதான அக்கறை ஆகியவை எவ்வாறு நிலையான வள மேலாண்மைக்கு வழிவகுக்கும் என்பதனையும் அறிவுறுத்திச் செல்கிறது.

அருட்காடுகள் பெரும் பாலும் சமய எல்லை களைக் கடந்து, சமயங்களுக் கிடையிலான உரையாடலினை வளப் படுத்தும் சிந்தனைப் புலமாகவும் அதே நேரத்தில் இயற்கை குறித்த அக்கறை கொள்ளும் சமூக நம்பிக்கை யாகவும் செயல் படுகின்றன.

சமூக-பண்பாட்டு நோக்கில் அருட்காடுகள்

அருட்காடுகளோடு இணைந்த சமயச் செயல்பாடுகளுக்கு ஒருபடி மேலாக சமூக, பண்பாட்டுச் செயல்பாடுகளை நாம் குறிப்பிட முடியும். அருட்காடுகளில் பல திருவிழாக்கள் நடத்தப்படுகின்றன. இனவரைவியல் ஆய்வுகளில் நிகழ்த்தப்பட்ட சமூக-கலாசார செயல் பாடுகளின் விரிவான குறிப்புகள் நமக்கு அதனை உணர்த்துகின்றன. உதாரணமாக நாத் (1960) என்பவரின் பதிவிலிருந்து பின்வரும் தரவினைக் கூறலாம்: ஆண்டுக்கு ஒருமுறை தீபாவளியின்போது, ரத்தன்மாலின் 'பில்' மக்கள் மத்தியில் உள்ள காடுகளில் உணவு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதுபானம் வழங்கப்படுகின்றது. டெப், மல்ஹோத்ரா (1997) அறிக்கையின்படி, தென்மேற்கு வங்காளத்திலுள்ள பழங்குடியினர் மத்தியில், 'சலுய்', 'கரம்' பண்டிகைகள், திருமணச் சடங்குகள், சமூகக் கூட்டங்கள் அருட்காடுகளிலே நடைபெறுகின்றன. வித்யார்த்தி, ராய் (1997) அறிக்கையின்படி பீகார் மாநிலத்திலுள்ள பெரும்பாலான பழங்குடியினர் அருட்காடுகளில் தங்களது முக்கிய பண்டிகைகளைக் கொண்டாடுகிறார்கள் என்று அறிய முடிகின்றது.

மகாராஷ்டிராவின் புனே மாவட்டத்தைச் சேர்ந்த கோலி இனக்குழுவின் திருமணச் சடங்குகள் அவர்களின் அருட்காடுகளில் நடைபெறுகின்றன. பெர்னாண்டஸ் (1993) குறிப்பிடுவது போல் சோட்டா நாக்பூர் பழங்குடியினரிடையே இளைஞர்களை சமூகமயமாக்குவதில் அருட்காடுகளின் பங்கு முதன்மை பெறுகின்றது. ஹோலி, நவராத்திரி போன்ற பண்டிகைகள் மகாராஷ்டிராவின் ரத்னகிரி மாவட்டத்தில் உள்ள அருட்காடுகளில் நடத்தப்படுகின்றன. ஜார்க்கண்ட் மாநிலத்திலுள்ள அருட்காடாக அறியப்படும் 'ஜஹர்தன்' மீது ஒட்டுமொத்த கிராமம் கொண்டுள்ள தொடர்பானது குழுவின் ஒற்றுமையை உணர்த்தும் இடமாக அறியப்படுகின்றது. மேலும் அவ்வருட்காடோடு தொடர்புடைய கிராமங்கள் இந்த ஒரே ஜஹர்தனைப் பகிர்ந்து கொள்வதில்லை. குறிப்பிடத்தகுந்த இவ்வழக்கமானது, அவ்வட்டார மக்களின் புவியியல் எல்லையைக் கண்டறிய ஒரு முக்கியமான அளவுகோலாகச் செயல்படுகிறது. பரஞ்சப்யே (1989) குறிப்பிடுவது யாதெனில் அருட்காடுகளோடு இணைந்த செயல்பாடுகள் ஒட்டுமொத்த கிராமத்தினை பராமரிப்பதற்கு சிறந்த எடுத்துக்காட்டு. மேலும் வளங்களின் மீதான சமூகக் கட்டுப்பாடு என்பதில் மேற்கு மகாராஷ்டிராவின் கோலி சமூகத்தின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது (ராய் பர்மன், 1996).

பெர்னாண்டஸ் (1993) குறிப்பிடுவது போல் சோட்டா நாக்பூர் பழங்குடியினரிடையே இளைஞர்களை சமூகமயமாக்குவதில் அருட்காடு களின் பங்கு முதன்மை பெறுகின்றது.

சமூகத்தில் அருட்காடுகள் என்னும் புனித சிந்தனை

அருட்காடுகளின் சிறப்பியல்புகள், செயல்பாடுகள் சமயம், சமய சார்பற்றவை என பரவலாக வகைப்படுத்தப்படுகின்றன. மேலும் சமயம் சார்ந்த சிந்தனையில் தெய்வங்கள் அல்லது ஆவிகளை ஆற்றுப் படுத்துதல், மூதாதையரின் ஆன்மாவை சாந்தப்படுத்தல், குலக்குறி நெறிகளை தலைமுறைகளுக்கு கொண்டு செல்லுதல் போன்ற செயல்பாடுகளைக் கொண்டுள்ளன. சமயசார்பற்றத் தன்மைக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருட்காடுகள் சிறந்த உதாரணமாகப் பார்க்க முடியும். குறிப்பாக பின்வரும் செயல்பாடுகளைக் குறிப்பிடலாம். 1. கலாசாரம்: இது சமூகத்தில் ஒரு பொதுவான வளமாகவும், சொத்தாகவும் முதன்மையான இடத்தைப் பெறுகிறது. 2. அரசியல்: குழு அடையாளத்தை உறுதிப் படுத்தல், குழு ஒற்றுமையை உறுதிப்படுத்தல், புதிய குழுக்ளை நிறுவுதல் ஆகியவை முக்கிய அம்சங்களாகக் காணப்படுகின்றன. 3. நலவாழ்வு: சமூக நலவாழ்வு, தலைமுறைகள், தனிநபர் அல்லது குடும்பத்தின் நல்வாழ்வு ஆகியவற்றை மேம்படுத்தும் அங்கமாகவும் விளங்குகின்றது. 4. பொருளாதாரம்: பொருளாதார நடவடிக்கையாக நல்ல மழைப்பொழிவு, விவசாய உற்பத்தி, பயிர்கள் மற்றும் விலங்குகளின் நலவாழ்வு, வேட்டையாடுதல், உற்பத்திப் பொருட்களின் பரிமாற்றம் போன்றவைகளும் இதன்மூலம் பயனடைகின்றன. 5. உள ஒற்றுமை: தமிழ் நாட்டிலும் சரி, இந்திய அளவிலும் சரி உளவியல் ரீதியாக சமூகத்தில் பெரும்பாலான அருட்காடுகள் தார்மீக ஆதரவையும் வழிகாட்டுதலையும் கொண்டுள்ளன என்றால் அது மிகையல்ல.

சமகாலத்தில் அருட்காடுகள்

அருட்காடுகள் என்பது அவை ஏற்படுத்துகின்ற சுற்றுச்சூழல், கலாசார முக்கியத்துவத்திற்காக ஒவ்வொரு சமூகத்திலும் சொல்லத் தகுந்த தாக்கத்தினைப் பெற்றுள்ளன. இத்தன்மையானது அருட் காடுகள், இயற்கை பாதுகாப்பு முயற்சிகளுக்கு மேலும் வழிவகுத்தது. இது போன்ற காடுகளை பாதுகாக்க அரசு நிறுவனங்கள், அரசு-சாரா நிறுவனங்கள் (என்ஜிஓ), உள்ளூர் சமூகங்கள் என அனைத்து பிரிவு களும் இணைந்து செயல்படுகின்றன. அருட்காடுகளின் பாதுகாப்பு என்பதில் நிலையான, இயற்கையோடு இணைந்த வள மேலாண்மை நடைமுறைகளை செயல்படுத்தல், சுற்றுச்சூழல் குறித்த ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல், அவற்றின் விழுமியங்கள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துதல் போன்றவை அடங்கும். மேலும் காடுகள் தனித்துவமான கலாசார, சுற்றுச்சூழல் ஈர்ப்புகளைக் கொண்டுள்ள பகுதிகளாக அங்கீகரிக்கப்படுகின்றன. உதாரணமாக இக்காடுகளுடன் தொடர்பு டைய ஆன்மீக, இயற்கை பாரம்பரியத்தை அனுபவிப்பதில் ஆர்வமுள்ள சுற்றுலாப் பயணிகள், இதர பார்வையாளர்களின் பங்கேற்பு, பயண ஆர்வத்தை நாம் குறிப்பிடலாம். அருட்காடுகளை மையமாகக் கொண்ட சுற்றுச்சூழலியல் சுற்றுலா முயற்சிகள் உள்ளூர் சமூகங்களுக்கு பொருளாதார வாய்ப்புகளை வழங்குகின்றன.

அருட்காடுகளின் பாதுகாப்பு என்பதில் நிலையான, இயற்கையோடு இணைந்த வள மேலாண்மை நடைமுறைகளை செயல்படுத்தல், சுற்றுச்சூழல் குறித்த ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல், அவற்றின் விழுமியங்கள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துதல் போன்றவை அடங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் அருட்காடுகளின் பாதுகாப்பிற்கான ஊக்குவிப்பையும் வழங்குகின்றன. அருட்காடு குறித்த கல்வித் திட்டங்கள், விளக்க மையங்கள் சுற்றுச்சூழல் விழிப்புணர்வையும், வட்டார பண்பாடு பற்றியப் புரிதலையும் மேம்படுத்த உதவுகின்றன.

ஒரு சில சூழல்களில், அருட்காடுகள் நகர்ப்புறங்கள் அல்லது விவசாயப்பகுதிகள் போன்ற நிலப்பரப்புகளுடன் இணைந்து காணப் படுகின்றன. இதனாலேயே பெரும்பாலான சமூகக் குழுக்கள் அத்தகைய அருட்காடுகளை நகர்ப்புறத் திட்டமிடல், வளர்ச்சித் திட்ட செயல்முறைகளில் ஒருங்கிணைப்பதற்கான முயற்சிகளில் ஈடுபடுகின்றனர். அவற்றின் சுற்றுச்சூழல், கலாசார மதிப்பை அங்கீகரிக் கின்றனர். நகர்ப்புறங்களிலுள்ள அருட்காடுகள் இயல்பாக பசுமையான இடங்களாக செயல்படுகின்றன என்பதனை இதன்மூலம் அறிய முடிகின்றது. மேலும் பல்லுயிர், காலநிலை ஒழுங்குமுறை, நகர்ப்புற மக்களின் நல்வாழ்வுக்கு அவை பெரிதும் பங்களிக்கின்றன. கடந்த காலங்களில் புறக்கணிக்கப்பட்ட அல்லது அழிவு நிலைகளிலிருந்த அருட்காடுகள் பல்வேறு குழுக்களின் தலைமையிலான முயற்சிகள் மூலம் புத்துயிர் பெற்றுள்ளன. சமூகக் குழுக்களின் ஒருங்கிணைந்த ஒற்றுமை அருட்காடுகளோடு தொடர்புடைய பாரம்பரியச் சடங்குகள், நடைமுறைகளை பாதுகாக்கின்றன அதேநேரம் புதுப்பிக்கின்றன. இத்தகைய முயற்சிகள் அருட்காடுகளின் பாதுகாப்பிற்கு பங்களிப் பதோடு மட்டுமல்லாமல் கலாசார அடையாளத்தையும், சமூக ஒற்றுமை யையும், தலைமுறைகளுக்கிடையேயான அறிவுப் பரிமாற்றத்தையும் வலுப்படுத்தும் தளமாக அமைகின்றன. அருட்காடுகளின் கலாசார, சூழலியல் முக்கியத்துவத்தை அங்கீகரித்து அவற்றை தங்கள் சட்ட, கொள்கை கட்டமைப்பில் உலக நாடுகள் இணைத்துள்ளதனையும் குறிப்பிடலாம். இந்த சட்ட விதிகள் அருட்காடுகளை ஆக்கிரமிப்பு, வளர்ச்சி அல்லது அழிவு நடவடிக்கைகளில் இருந்து பாதுகாக்க வாய்ப்புள்ளது. தேசிய அல்லது வட்டார அளவில் அளிக்கப்படும் அங்கீகாரம் காடுகளின் பாதுகாப்பிற்கு வலுவான அடித்தளத்தை வழங்குவதோடு, பழங்குடி சமூகங்கள், அரசு நிறுவனங்கள், பாதுகாப்பு அமைப்புகளுக்கு இடையேயான ஒத்துழைப்பை ஊக்குவிக்கும் முதன்மையான கருவியாக விளங்குகிறது.

தேசிய அல்லது வட்டார அளவில் அளிக்கப்படும் அங்கீகாரம் காடுகளின் பாதுகாப்பிற்கு வலுவான அடித்தளத்தை வழங்குவதோடு, பழங்குடி சமூகங்கள், அரசு நிறுவனங்கள், பாதுகாப்பு அமைப்புகளுக்கு இடையேயான ஒத்துழைப்பை ஊக்குவிக்கும் முதன்மையான கருவியாக விளங்குகிறது.

மேற்கூறிய அருட்காடுகளின் இருப்பு, பாதுகாப்பு, விரிவாக்கம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரைவான நகரமயமாக்கல், விரிவடைந்து வரும் மக்கள் குடியிருப்புகள், பாரம்பரியமாக அருட்காடுகளாக உருவாக்கம் பெற்ற பகுதிகளைக் கூட ஆக்கிரமிப்பு செய்வதோடு அவை சார்ந்த சூழலை மாற்றுகிறது. நகரமயமாக்கல் எனும் படிமுறை மிகப்பெரும் அச்சுறுத்தலாகவே உள்ளது. இதன்மூலம் அறியப்படுவது என்னவென்றால் அருட்காடுகள் பெரும்பாலும் உள்கட்டமைப்பு மேம்பாடு, வீட்டுவசதி, வணிக நடவடிக்கைகள் போன்ற நவீன/நகரமய அழுத்தத்தை எதிர் கொள்கின்றன என்றுதான் கூறவேண்டும். இத்தகைய அழுத்தம் அருட்காடுகளை பரப்பளவில் அல்லது முழுமையான இழப்பிற்கும் கொண்டு செல்ல வாய்ப்புள்ளது. விவசாய நடவடிக்கைகளில், குறிப்பாக பெரிய அளவில் மேற்கொள்ளப்படும் வணிக விவசாயம், அருட்காடுகளுக்கு குறிப்பிடத்தக்க அச்சுறுத்தலாகவே உள்ளது. இதுபோன்ற பாரம்பரிய முக்கியத்துவம் வாய்ந்த காடுகளை விவசாய நிலமாக மாற்றுவது, வாழ்விடத்தை அழித்து சுற்றுச்சூழல் செயல்முறைகளை சீர்குலைப்பது என்பது, இந்த பகுதிகளுடன் இணைக்கப்பட்டுள்ள கலாசார, ஆன்மீக முக்கியத்துவத்தையும் சிதைப்பதற்குச் சமமாகும்.

பாரம்பரிய முக்கியத்துவம் வாய்ந்த காடுகளை விவசாய நிலமாக மாற்றுவது, வாழ்விடத்தை அழித்து சுற்றுச்சூழல் செயல்முறை களை சீர்குலைப்பது என்பது, இந்த பகுதிகளுடன் இணைக்கப் பட்டுள்ள கலாசார, ஆன்மீக முக்கியத்துவத் தையும் சிதைப்பதற்குச் சமமாகும்.

தொடர்ந்து வரும் காலநிலை மாற்றம் அருட்காடுகளுக்கு அச்சுறுத் தலாகவே உள்ளது. உயரும் வெப்பநிலை, மாறிவரும் மழைப்பொழிவு முறைகள், தீவிர வானிலை நிகழ்வுகள் காடுகளுக்குள் நுட்பமான சுற்றுச் சூழல் சமநிலையை சீர்குலைக்கின்றன. வெப்பநிலை, மழைப் பொழிவுகளில் ஏற்படும் மாற்றங்கள் தாவரங்கள், விலங்குகள் போன்ற வைகளின் பரவல், எண்ணிக்கையினைப் பாதிக்க வாய்ப்புள்ளது. மேலும் காலநிலை மாற்றமானது இயற்கை வளங்களின் இருப்பினை கேள்விக்குள்ளாக்குகிறது. அருட்காடுகளுடன் தொடர்புடைய பாரம்பரியச் சடங்குகள், விழாக்களின் கால மாற்றம் மக்கள் கூடுகை யினை பாதிக்கின்றது. சமூகங்களுக்குள் கலாசார, சமூக இயக்கவியலை மாற்றுவது, பாரம்பரிய நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள் காலப் போக்கில் மாற்றமடைந்து அல்லது வழக்கொழிந்து போவதால், அருட்காடுகளின் முக்கியத்துவத்தினையும் கேள்விக்குள்ளாக்குகின்றது.

அருட்காடுகளுக்கான சவால்களும் வாய்ப்புகளும்

அருட்காடுகளுக்கான வாய்ப்புகளும் சவால்களும் பல ஆய்வுகள் மூலம் மீண்டும் மீண்டும் நிரூபிக்கப்பட்டுள்ளன. நாட்டின் பல பகுதிகளில் கலாசார, உயிரியல் ஒருமைப்பாட்டின் அடிப்படையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றங்கள் ஏற்படுகின்றன என்பதற்கான அறிகுறிகளைக் காட்டுகிறது. ஆகவே, அருட்காடுகள் எதிர்கொள்ளும் சவால்கள் என்பது வட்டாரத்திற்கு வட்டாரம் மாறுபடுகின்றது. மேலும் காலநிலை மாற்றங்களுக்கு உள்ளாகும் அருட்காடுகள் ஒருநிலையிலிருந்து மற்றொருவகை அருட்காடாக மாற வாய்ப்புள்ளது.

அருட்காடுகள் எதிர்கொள்ளும் சவால்களை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

வணிக வனவியல்: கடந்த இரு நூற்றாண்டுகளில், நாட்டின் பல பகுதிகளில், வட்டார அளவில் மக்கள் வன மேலாண்மைக்கான தங்களது வழக்கமான உரிமைகளை இழந்துள்ளனர். வணிக வனவியல் நடவடிக்கைகளால் பல அருட்காடுகள் மாற்றத்திற்கு உள்ளாகியுள்ளன என்பதே நிதர்சனம்.

வளர்ச்சித் திட்டங்கள்: நகரங்கள் பெருகியபோது, பெரும்பாலான நிலங்கள் குறிப்பாக அருட்காடுகள் அழிக்கப்படுகின்றன. இரயில் பாதைகள், நெடுஞ்சாலைகள் பல அருட்காடுகளின் மீதே அமைந் துள்ளன என்பது வரலாறு. பெரிய அணைத் திட்டங்களால் அவை மீண்டும் வெள்ளத்தில் மூழ்கின என்பது வரலாறே.

மேல்நிலையாக்கமடைதல்: பல இடங்களில், உள்ளூர் நாட்டுப்புறத் தெய்வங்கள் சைவ, வைணவத் தெய்வங்களுடன் இணைக்கப்பட்டு மாற்றமடையும்போது அருட்காடுகளின் வழக்காமான நடவடிக்கை களில் மாற்றங்கள் ஏற்படுகின்றன.

யாத்திரை மற்றும் சுற்றுலா: யாத்திரை, சுற்றுலா நடவடிக்கைகளில் அதிக எண்ணிக்கையிலான யாத்திரிகர்கள், சுற்றுலாப் பயணிகளின் வருகையால் வட்டார அல்லது ஒட்டுமொத்த இந்தியத் தன்மை கொண்ட பல அருட்காடுகளின் ஒருமைப்பாடும் பாதிப்பு அடை வதற்கான வாய்ப்புகள் ஏராளம்.

உயிர்களை இடமாற்றம் செய்தல்: பல அருட்காடுகளில், வாழும் உயிர்களை இடமாற்றம் செய்தல், கால்நடைகளை மேய்ச்சலுக்காக அனுமதிக்கப்படுவதுமான நடைமுறைகள் தொடர்வதால் காடுகளின் எண்ணிக்கை குறைந்து வருகின்றன.

ஆக்கிரமிப்பு: காடுகளில் உள்ளூர் சமூகங்கள், பல்வேறு அரசு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறைகள், புலம்பெயர்ந்த மக்களால் ஆக்கிரமிக்கப்பட்ட நிகழ்வுகள் பல்வேறு பகுதிகளில் பதிவாகியுள்ளன. இது போன்ற நிகழ்வுகளும் கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

நவீனமயமாக்கல்: அருட்காடுகளுக்கு மிக சமீபத்திய அச்சுறுத்தலாக இருப்பது நவீனமயமாக்கல் செயல்பாடுகள். மேற்கத்திய நகர்ப்புற கலாசாரங்கள் உள்ளூர் மரபுகளுக்கு சவாலாக விளங்குகின்றன. நவீன கல்வி முறைகள் உள்ளூர் மரபுகளில் மாற்றத்தை ஏற்படுத்துகின்றன. அதன் விளைவாக உள்ளூர் மக்களின் குறிப்பாக இளைய தலைமுறையினருக்கு அருட்காடுகளின் கலாசார முக்கியத்துவத்தை கடத்துவதற்கு தடையாக நிற்கிறது. சந்தைப் பொருளாதாரத்தின் பரவலானது, உள்ளூர் சமூகங்களின் தனி அடையாளங்களை மறுப்பதோடு பாதிப்பையும் ஏற்படுத்துகிறது. குறுகிய கால வணிக ஆதாயங்களின் மீது ஏற்படுகின்ற மோகம், அருட்காடுகள் உட்பட பாரம்பரிய வள ஆதாரங்களை சிதைவடையச் செய்கின்றன. மேலும் அருட்காடுகளின் சாலைகள், மின் இணைப்புகள் போன்றவைகளின் விரிவாக்கம் சுற்றுச்சூழல் செயல்பாடுகளை சீர்குலைக்கின்றன.

குறுகிய கால வணிக ஆதாயங்களின் மீது ஏற்படுகின்ற மோகம், அருட்காடுகள் உட்பட பாரம்பரிய வள ஆதாரங்களை சிதைவடையச் செய்கின்றன.

மேலே கூறப்பட்ட சவால்கள் அனைத்தும் உள்ள போதிலும், அருட்காடுகள் இந்தியாவைப் பொறுத்தவரையில், நாட்டின் பல பகுதிகளில் இன்னும் உயிர்ப்புடன் உள்ளன. மக்கள் தங்களது கலாசாரத்தின் ஒரு பகுதியாக இவ்வருட்காடுகளை பராமரிக்கின்றனர். பின்வரும் நிகழ்வு இதனை இன்னும் வலுப்படுத்தும் ஆதாரமாகவே இருப்பதனை காண்கிறோம்.

இந்தியாவில் குறிப்பாக மணிப்பூர், இராஜஸ்தான், மேற்கு வங்காளம், சத்தீஸ்கர், ஜார்கண்ட் ஆகிய மாநிலங்களில், அருட்காடுகள் கண்டறியப்பட்டுள்ளன. குறிப்பாக இந்தியாவின் கர்நாடகா மாநிலத்தில் 'பவித்ர வனம்' என்னும் கருத்தியல் கோவில்கள், பள்ளிகளைச் சுற்றிலும் தோட்டங்கள் அமைத்து விரிவுபடுத்தப்பட்டுள்ளன. கேரளாவில், காடுகளைப் பாதுகாக்க காடுகளுக்கான அறங்காவலர்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், கிராம மக்களை இணைத்து அருட்காடுகளை காக்கும் மனப்பான்மை உருவாக்கப்பட்டுள்ளது. மத்திய பிரதேசம் மாநிலத்தில், வனத்துறையானது, கிராம மக்களுடன் இணைந்து, அருட்காடுகளுக்கு பாதுகாப்பு அளிக்கின்றது. மகாராஷ்டிரா மாநிலம் ரத்னகிரி மாவட்டம், ஒடிசா மாநிலம் கோராபுட் மாவட்டத்தின் 'செமிலிகுடா' பகுதியில், தன்னார்வ தொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுவனங்களின் முயற்சியால், அருட்காடுகளின் மேம்பாட்டிற்காக குழு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவை தவிர உலகளாவிய நிலையில் ஆய்வு மேம்பாட்டிற்கு யுனெஸ்கோ, உலக வங்கி, ஃபோர்டு அறக்கட்டளை போன்ற சர்வதேச நிறுவனங்கள் முகமைகள் தங்கள் வளர்ச்சித் திட்டங்களில் அருட்காடுகளை இணைத்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. ஊடகங்கள், முன்னெப்போதையும்விட தற்போது அருட்காடுகள் குறித்த பதிவுகளுக்கு மேற்கண்ட நிறுவனங்கள் போல் உலகளவில் அதிக இடத்தை ஒதுக்கி வருகின்றன. ஆக, அருட்காடுகளின் கலாசார, உயிரியல் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வு பல்வேறு பிரிவுகளிடையே அதிகரித்து வருவது இதன் மூலம் புலனாகின்றது. இங்கு சுட்டப்படும் உதாரணம் அருட்காடுகள் குறித்த புரிதலுக்கு மேலும் வலுசேர்ப்பதாகவே அமைகின்றது. இந்தியாவில் உள்ள அருட்காடுகளின் கலாசார, உயிரியல், சுற்றுச்சூழல் முக்கியத்துவம் கருதி அவை எதிர்கொள்ளும் நடைமுறை சிக்கல்களை உணர்ந்து, மத்தியப் பிரதேசம் மாநிலம் போபாலில் அமைந்துள்ள இந்திரா காந்தி இராஷ்ட்ரிய மானவ் சங்க்ரஹாலயா (IGRMS), பல கல்வி நிறுவனங்கள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து பல்வேறு நிகழ்வுகளை மேற்கொண்டுள்ளது.

அருட்காடுகளின் பல்வேறு அம்சங்களைச் சித்தரிக்கும் புகைப் படங்கள், வரைபடங்கள் போன்றவற்றைப் பயன்படுத்தி ஒரு உள்ளரங்க கண்காட்சி ஏற்படுத்தப்பட்டது. பல்வேறு வகையான புகைப்படங்கள், வரைபடங்களின் துணையோடு 1999-2000 ஆம் ஆண்டில் ஒரு பயணக் கண்காட்சி முன்னெடுக்கப்பட்டது. இவை பற்றியப் பதிவுகள் அனைவரையும் இன்னும் அருட்காடுகள் குறித்த கவனத்தை ஈர்க்கச் செய்திருக்கிறது என்றால் மிகையல்ல. (மல்ஹோத்ரா 2000). அப்பயணக் கண்காட்சியின் நோக்கம், இந்தியாவிலுள்ள அருட்காடுகளைப் பற்றி மக்கள் அறிந்து கொள்வதோடு அருட்காடுகள் தொடர்பான உள்ளூர் மேலாண்மை நடைமுறைகள், அறிவுசார் அமைப்புகளை வலுப்படுத்துவதாகும்.

மேலான ஆய்விற்கு

அருட்காடுகள் குறித்த இக்கட்டுரை ஆழமான புரிதலுடன் சமூக, சமய சிந்தனைப் பின்புலத்தில் பகுப்பாய்வு செய்வதற்கான முன்மொழிவை உருவாக்குகின்றது. சமயம், கலாசாரப் பின்னணியில் அருட்காடுகள் என்பவை வட்டார அளவிலும் சரி உலகளாவிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையிலும் சரி அவை உருவாக்கியுள்ள தாக்கம் ஆய்வுக்குரியதாகவும் வட்டார அளவில் பெருமளவில் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடியதாகவும் உள்ளன. அருட்காடுகள் ஒரு வட்டாரத்தின் பாரம்பரியத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. உள்ளூர் அளவில் மக்களால் மரியாதையோடும் உணர்வோடும் இரண்டறக் கலந்த இச்செயல்பாடு, தாவரங்கள், விலங்கினங்களின் உயிர்க்கோளமாக இருப்பதனையும் பார்க்கின்றோம். அதோடு மட்டுமல்லாது அருட்காடாக இருக்கும் பகுதிகளுக்குள் பாரம்பரிய மருத்துவ இரகசியங்கள், மூலிகைகள் பாதுகாக்கப்படுகின்றன. மேலும் குலதெய்வ வழிபாட்டின் பாதுகாப்பிடமாகவும் உள்ளன. முன்னர் சுட்டிக்காட்டிது போல், ஒரு சமூகத்தின் வாழ்க்கை முறை இனக்குழுவின் வளங்களைப் பேணிபாதுகாப்பதன் மூலம் புலனாகின்றது. மேலும் அச்சமூகத்தின் தனித்த அறிவுசார் அமைப்பையும் உருவாக்குகிறது, பாதுகாக்கிறது.

அருட்காடாக இருக்கும் பகுதிகளுக்குள் பாரம்பரிய மருத்துவ இரகசியங்கள், மூலிகைகள் பாதுகாக்கப்படுகின்றன. மேலும் குலதெய்வ வழிபாட்டின் பாதுகாப் பிடமாக வும் உள்ளன.

உசாத்துணை

குளத்தூரன், க. (2018) சுற்றுச்சூழலும் அழகியலும். சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.

சிவசுப்பிரமணியன், ஆ. (2016) மந்திரமும் சடங்குகளும். நாகர்கோயில்: காலச்சுவடு பப்ளிகேசன்ஸ் (பி) லிட்.

தருமராஜன் டி. (தொ. ஆ.) (2006) சனங்களின் சாமிகள். பாளையங்கோட்டை: நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம்.

பஞ்சவர்ணம், இ. (2016) தமிழ் நாட்டுத் தாவரக் களஞ்சியம்: பனைமரம். பண்ணுருட்டி: பஞ்சவர்ணம் பதிப்பகம்.

பத்தவத்சல பாரதி. (2021) தமிழக வரலாற்றில் ஊரும் சேரியும்: சிந்துவெளி தொடங்கிச் சமகாலம் வரை. சென்னை: பாரதி புத்தகாலயம்.

பரமசிவன், த. (2016) அழகர் கோயில். மதுரை: பதிப்புத்துறை, ம.கா.ப.

மகாராசன். (2018) பண்பாட்டு அழகியலும் அரசியலும். திருவண்ணாமலை: ஆதி பதிப்பகம்.

Amirthalingam, M. (2005) Scared Groves of Tamil Nadu: A Survey. Chennai: C.P.R. Environmental Education Centre.

Burman, J. R. (1996) A Comparison of Sacred Groves Among the Mahadeo Kolis and Kunbis of Maharashtra. Indian Anthropologist 26, 3746.

Debal Deb. & Kailash C.Malhotra. (1997) Interface Between Biodiversity

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

and Tribal Cultural Heritage: An Exploratory Study. Human Ecology. 8(3):157-163.

Eliade, M. (1997). Patterns in Comparative Religion. London: Sheed and Ward.

M.P.R. (2017) Conservation of Scared Groves, Cultural Connections and Controlling Climate Change. Kong. Res. J., 47-51

Nath, Y. (1960) Bhils of Ratanmal: An Analysis of the Social Structure of a Western Indian Community. Baroda: Maharaja Sayajirao University.

Patnaik, D. P. (1989) Palm-Leaf Etchings of Orissa. New Delhi: Shakti Malik.

Rai, L. V. (1977) Tribal Culture of India. Delhi: Concept Publishers.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5

திரைப்படக் கலை பற்றிய அடோர்னோவின் சிந்தனைகள் - ஒரு தத்துவவியல் பகுப்பாய்வு

இரத்தினசபாபதி பிரேம்குமார்[1]

அறிமுகம்

நவீன விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சியின் விளைவாக 19ம் நூற்றாண்டில் உருவான கலை வடிவமான திரைப்படம் (Film) வெகுசன கலை வடிவமாக அதாவது அனைத்து மக்களும் இரசிக்கத் தக்க கலை வடிவமாக அழகியல் அறிஞர்களினால் கருதப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. கட்டடம், சிற்பம், ஓவியம், நாடகம் போன்ற நுண்கலைகளில் சமயம், புனைக்கதைகள், சடங்குகள், உயர் வர்க்கத்தினரின் மதிப்பீடுகள், புலன் இன்பத்திற்குரிய பொருட்கள் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன. 12ஆம் நூற்றாண்டுக்கு பின்னர் கலை பற்றிய கொள்கைகளும் விதிகளும் உருவாக்கப்பட்டு வந்தன. விஞ்ஞான வளர்ச்சி காரணமாக ஒரு புதுவகை கலை வடிவமாக திரைப்படக் கலை 19ஆம் நூற்றாண்டில் தோற்றம் பெறுகின்றது.

ஏனைய கலை வடிவங்கள் உள்ளடக்கியிராத பல பண்புகளைத் திரைப்படம் கொண்டிருந்தது. மனித வரலாற்றில் அதிக அளவு மக்களால் விரும்பி இரசிக்கபடும் கலைவடிவமாக திரைபடம் கானப்படுகின்றது. இது இதன் தனித்தன்மைகளில் ஒன்று. ஏனைய கலை வடிவங்கள் பெரியள விலன மக்களை இரசிகர்களாக உள்ளடக்கியிருந்ததா? என்ற கேள்வியை நாம் எழுப்புவோமாயின் பெரும்பாலும் இல்லை என்ற பதிலே கிடைக்கும். இத்தகைய பிற்புலத்தில் விஞ்ஞான தொழில் நுட்ப வளர்ச்சியின் விளைவாக உருவான திரைப்படம் எத்தகைய பண்புகளை கொண்டிருக்கின்றது? அது கலையா? அல்லது இல்லையா? சமூகத்திற்கும் திரைப்படத்திற்கும் உள்ள தொடர்புகள் யாவை? திரைப்படத்தின் தனித்தன்மைகள்

1 Dr.R.Premkumar, Senior Lecturer in Philosophy, Department of Philosophy and Value Studies, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka, Vantharumoolai. e mail: premkumarr@esn.ac.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவை? போன்ற வினாக்களை அழகியல் அறிஞர்கள் எழுப்பி விடை காண முயல்கின்றனர்.

மேற்குறிப்பிட்ட கேள்விகளுக்கு விடையளிக்கும் விதத்தில் விமர்சனக் கோட்பாட்டுச் சிந்தனையாளரான தியடோர் டபிள்யூ. அடோர்னோ (*Theodor W. Adorno* - 1903-1969) கருத்துக்கள் அமைந்திருந்தன. மாக்சிச சித்தாந்தம், ஜெர்மனிய கருத்து முதல்வாத அழகியல் சிந்தனைகளை அடிப்படையாகக் கொண்டு அவர் திரைப்படம் தொடர்பான தனது வாதங்களை முன்வைத்திருந்தார். அடோர்னோ திரைப்படம் தொடர்பாக அதிகளவு எதிர்மறையான கருத்துக்களைக் கொண்டிருந்தார். இத்தகைய பிற்புலத்தில் திரைப்படம் தொடர்பாக அடோர்னோவின் கருத்துக்கள், வாதங்களை பகுப்பாய்வு செய்து அவை பற்றிய விமர்சனங்களை இக்கட்டுரை முன்மொழிகின்றது.

பற்றற்றத் தன்மையினை (*Disinterestness*) கலைப்பொருளின் முக்கிய பண்பாக கருதுமிவர், சுயநல நோக்கமில்லாமல் பற்றற்ற நிலையில் ஒருவருக்கு ஏற்படும் ஒருவகை உணர்வை அல்லது இன்பத்தினை கலைப்பொருள் தருவதாக கருதுகின்றார்.

அடோர்னோவின் நோக்கில் கலையும் திரைப்படக்கலையும்

கலை பற்றிய அடோர்னோவின் கருத்துருவாக்கத்தில் காண்ட் (*Kant*) ஹெகல் (*Hegel*), சோபனாவர் (*Schopenhauer*) முதலான சிந்தனையாளர்களின் பாதிப்பு காணப்படுகின்றது. கலைப் பொருளுக்குரிய முக்கிய பண்பாக சுயாதீன தன்மையினை குறிப்பிடு கிறார் அடோர்னோ (*Adorno* 2002:1).

கலைப் படைப்புக்கள் இவ்வுலக புலனனுபவ விடயங்கள் கடந்த ஒரு உலகினை கொண்டிருப்பதாக அவர் கருதுவது குறிப்பிடத்தக்கது. கலை எப்போதும் உண்மைக்கு மிக நெருக்கமாக உள்ளது என்று குறிப்பிடுவதுடன், கலையின் பண்புகளை ஒருவரின் அகவய பண்புகளுடன் தொடர்புபடுத்தி பேசுகிறார். பற்றற்றத் தன்மையினை (*Disinterestness*) கலைப்பொருளின் முக்கிய பண்பாக கருதுமிவர், சுயநல நோக்கமில்லாமல் பற்றற்ற நிலையில் ஒருவருக்கு ஏற்படும் ஒருவகை உணர்வை அல்லது இன்பத்தினை கலைப்பொருள் தருவதாக கருதுகின்றார். அடோர்னோவின் நோக்கின்படி அழகியல் அல்லது கலை இன்பம் புலனின்ப ஆசைகள், புலனின்பங்கள் என்பன கடந்த ஒன்றாகக் காணப்படுகிறது. புறப்பொருட்கள் உள்ளிட்ட புலன்களில் இருந்து பெறப்படுகின்ற அனுபவங்களுக்கும் கலைக்கும் இடையே எதிர்மறை தொடர்பே காணப்படுவதாக இவர் குறிப்பிடுகிறார். சாதாரண மக்கள் புலனின்பங்களை தரக்கூடிய பொருட்களை கலைப்பொருட்களாக கருதி நுகர்கின்றனர் எனக் கருதுமிவர், ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைப் படைப்பினை உருவாக்குதல், அதனை அனுபவித்தல் என்பது எந்த விதமான பயன்பாடு, புலனின்ப நோக்கமின்றி எழுவதாகவும் இதனை நோக்கமின்மை என்ற வார்த்தை மூலமும் குறிப்பிடுகிறார்.

பொதுவாக அடோர்னோ கலை என்பதை எதிர்மறையான பதங்களின் ஊடாகவே விளக்குகின்றார். கலை என்பதை வரைவிலக் கணப்படுத்த முடியாது எனக் குறிப்பிடும் இவர், எதிர்மறைப் பதங்களினால் கலையினை வரைவிலக்கணப்படுத்தும் முயற்சியில் ஈடுபடுகிறார். எடுத்துக்காட்டாக, புலனின்பம் கலையல்ல என அடோர்னோ குறிப்பிடுவது இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. மேலும் கலைப்பொருள் புரிந்து கொள்ள முடியாத புதிரான தன்மையினை கொண்டிருக்கும் என்பதையும் குறிப்பிடுகிறார். இலகுவில் புரிந்து கொள்ள முடியாத தேடல் நிறைந்ததாக கலைப்படைப்பும் கலை அனுபவமும் காணப்படும் என அடோர்னோ குறிப்பிடுகிறார். மேலும் கலைப் படைப்புக்கள் புரட்சிகரமான தன்மை கொண்டதாக இருக்க வேண்டும் என்பதையும் குறிப்பிடுகின்றார். இதற்கு உதாரணமாக 1940ல் சார்ளி சப்ளின் இயக்கி நடித்த ஒரு பெரிய சர்வதிகாரி (Great Dictator) என்ற திரைப்படத்தினை சிறந்த கலைப்படைப்பாக கருதுகிறார். இந்த திரைப்படம் சர்வதிகாரியான ஹிட்லரின் நடவடிக்கைகளை விமர்சிப்பதாகவும் கேலி செய்வதாகவும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலகுவில் புரிந்து கொள்ள முடியாத தேடல் நிறைந்ததாக கலைப் படைப்பும் கலை அனுபவமும் காணப்படும் என அடோர்னோ குறிப்பிடுகிறார். மேலும் கலைப் படைப்புக்கள் புரட்சி கரமான தன்மை கொண்டதாக இருக்க வேண்டும் என்பதையும் குறிப்பிடு கின்றார்.

அடோர்னோவின் திரைப்படம் தொடர்பான கருத்துக்களை நோக்கும் போது, கலைப் பொருள் வேறு நுகர்வுப் பொருள் வேறு என்ற தீவிர வேறுபாட்டினை அவர் கொண்டிருந்தமை புலனாகிறது. கலை என்பது சுயாதீனமான சுதந்திரமான கலாசார செயற்பாடாக இருக்க வேண்டும் என்ற அடிப்படைப் பண்பினை திரைப்படங்கள் கொண்டிருக்கவில்லை என்ற கருத்தினை வலியுறுத்தும் இவர், நுகர்வுப் பொருளான திரைப்படம் கலைப் பொருள் என்ற போர்வையில் நுகரப்படுகிறது எனக் குறிப்பிடுகிறார். நாம் சாதாரணமாக எமது புலன்களால் நுகர்கின்ற (குடித்தல், உண்ணுதல் என்ற பண்புகளை கொண்ட பொருட்களை நுகர்வுப்பொருளாக அடோர்னோ கருதுகின்றார். இத்தகைய நுகர்வுப்பொருட்களில் இருந்து வேறுபட்ட உயர்ந்த பொருளாக கலைப்பொருள் காணப்படுகிறது என்ற நோக்கினை அடோர்னோ கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது. நுகர்வுப் பொருள் கலைப் பொருள் என்ற போர்வையில் உற்பத்தி செய்யப்பட்டு சந்தையில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது என்ற கடுமையான விமர்சனத்தினை திரைப்படம் தொடர்பாக அடோர்னோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்வைக்கிறார். அடோர்னோவின் நோக்கில் திரைப்படம் என்பது பொதுமக்கள் கலையாகும். அது கலைக்குரிய அனைத்து நிபந்தனை களையும் பூர்த்தி செய்ய முடியாத முழுமையற்ற கலையாக விளங்கு வதாகக் கருதுகிறார். திரைப்படக் கலை சாதாரண மக்களின் எதிர்பார்க் கையைப் பூர்த்தி செய்யுமொன்றாகச் செயல்படுவதால் அதனை குறைவுபட்ட கலையாக அடோர்னோ நோக்குகிறார். முதலாளித்து வத்தின் முக்கிய நோக்கமான இலாபமீட்டலை அடிப்படையாகக் கொண்ட பணம் சம்பாதித்தல் என்ற குறிக்கோளுடன் சந்தையில் விற்கப்படும் நுகர்வு பண்டமாக திரைப்படம் மாறி உள்ளது என்ற முக்கிய விமர்சனத்தை முன்வைக்கிறார். கலைப் பொருளுக்குரிய முக்கிய பண்புகளாக நோக்கமற்ற தன்மையினையும் சுயாதீனத் தன்மையினையும் அடையாளங்காணும் அடோர்னோ, திரைப்படம் நோக்கமற்ற தன்மையினையும் சுயாதீனத் தன்மையினையும் இழந்து காணப்படுவதாக கருதுகின்றார்.

கலைப் பொருளுக்குரிய முக்கிய பண்புகளாக நோக்கமற்ற தன்மை யினையும் சுயாதீனத் தன்மை யினையும் அடையாளங் காணும் அடோர்னோ, திரைப்படம் நோக்கமற்ற தன்மையினையும் சுயாதீனத் தன்மை யினையும் இழந்து காணப் படுவதாக கருதுகின்றார்.

திரைப்படக் கலையாக்கத்தில் ஒரு படைப்பாளன் பொதுமக்களை திருப்திப்படுத்தல், இலாபமீட்டல் ஆகிய இரு நோக்கங்களையும் இணைத்துக் கொண்டு கலையை உருவாக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருப்பதாக அடோர்னோ ஆதங்கப்படுகிறார். பின் நவீனத்துவ சமூகத்தில் காணப்படும் முதலாளித்துவ சந்தை பொருளாதாரம் காரணமாக முன்னொருபோதும் இல்லாத அளவிற்கு கலை தனக்குரிய பண்புகளை இழந்து காணப்படுவதாக அவர் குறிப்பிடுகிறார். கலைப் பொருள் நுகர்வு பொருளாக மாறியதன் காரணமாக கலைப் பொருளை மக்கள் மயப்படுத்துதல், பொதுமக்கள் இலகுவாக அடையக்கூடியதாக மாற்றுதல் போன்ற விடயங்களை நவீன உலகின் தொழில்நுட்ப வளர்ச்சி செய்துள்ளது. மேற்குறிப்பிட்ட விடயங்கள் இயந்திரமயப்படுத்தப்பட்ட நவீன சமூகத்தில் ஒரு கூறாக கலையினை மாற்ற முயற்சித்துள்ளன. இவை எந்த ஒரு முன்னேற்றத்தையும் கலையில் ஏற்படுத்தவில்லை என்பதே அடோர்னோவின் வாதமாக இருக்கின்றது. கலை சமூக வரலாற்றுச் சூழலுடன் இணைந்த வகையில் காணப்பட வேண்டும் என்ற கருத்தினை முன்வைக்கும் அடோர்னோ கலை சமூகத்திலும் சமூகம் கலையிலும் தங்கி இருக்கும் நிலையினை கலைக்குரிய சிறந்த பண்புகளில் ஒன்றாக எடுத்துரைக்கிறார். சமூகத்திற்கும் கலைக்கும் இடையே காணப்படும் நெருக்கமான உறவினை வர்த்தக நோக்கம் காரணமாக திரைப்படம் இழந்துள்ளது என அடோர்னோ குறிப்பிடுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரைப்படம் மூலம் கலை வரலாற்றில் ஏற்பட்டிருக்கும் இயந்திர மீளுருவாக்கத் தன்மை, மூலம்/நகல் வேறுபாடற்றத்தன்மை என்பவற்றை ஆரோக்கியமற்ற விடயங்களாக அடோர்னோ நோக்கு கிறார். திரைப்படங்களில் பொழுது போக்குத்தன்மை, நோக்கத் தன்மை அதிகமாக இருப்பதாக அடோர்னோ குற்றஞ் சாட்டுகின்றார். மேற் குறிப்பிட்ட பண்புகளை ஒரு உயர்ந்த கலைக்கு எதிரான பண்பு களாக பாரம்பரிய அழகியல் அறிஞர்களும் கலை வல்லுனர்களும் கருதுவது குறிப்பிடத்தக்கது.

ஆயினும் ஆரம்பத்தில் திரைப்படம் என்பதை ஒரு கலையாக ஏற்றுக் கொள்ள முடியாது எனக் கருதிய அடோர்னோ, பிந்திய படைப்புக்களில் அதனை கலையாக ஏற்றுக் கொள்ளும் நோக்கிலான கருத்துக்களை முன்வைக்கிறார். பாரம்பரிய, நவீன கலை பற்றிய நோக்குகளிலிருந்து வேறுபட்ட வகையில் திரைப்படக் கலை அணுகப்பட வேண்டும் எனக் கருதுமிவர், திரைப்படக் கலையினை ஒரு புது வகை கலை வடிவமாக நோக்குகிறார். ஒரு திரைப்படம் இலக்கியத்தின் எடுத்துரைப்பு வடிவம், இசை, கட்புலக் கலைகள் என்பவற்றின் சங்கமமாக உள்ளது எனக் குறிப்பிடுகின்றார். திரைப்படம் ஒரு புரட்சிகரமான கலை வடிவமாகவும் சாதாரண மக்களின் நலன்களை அடிப்படையாக கொண்டு செயற்படக் கூடிய ஆற்றலையும் கொண்டுள்ளது என்ற கருத்தினை திரைப்பட தயாரிப்பாளரான அலெக்ஸாண்டர் கிலெஜ் கொண்டிருந்தார். அலெக்ஸாண்டர் கிலெஜின் இந்த கருத்தினை அடோர்னோவும் ஏற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. திரைப்படக் கலை ஏனைய கலைகளிலிருந்து வேறுபட்டு காணப்படுவதுடன் கலையின் வரைவிலக்கணத்தினை விரிவுபடுத்துவதாகவும் உள்ளது என அடோர்னோ குறிப்பிடுகின்றார் (*Raquel 2022:361-365*).

பாரம்பரிய, நவீன கலை பற்றிய நோக்குகளிலிருந்து வேறுபட்ட வகையில் திரைப்படக் கலை அணுகப்பட வேண்டும் எனக் கருதுமிவவர், திரைப்படக் கலையினை ஒரு புது வகை கலை வடிவமாக நோக்குகிறார்.

அடோர்னோ நோக்கில் திரைப்படக் கலைஞர்கள்

கலைப்பொருட்களை படைப்பவன் பெரும்பாலும் காலம் காலமாக சமூகத்தில் உயர்வர்க்கத்தினரின் தயவில் தங்கியிருக்கிறான். கலையாக்கம் கலைஞர்களின் வாழ்வாதாரமாகக் காணப்படும் போது அவர்களது சுயாதீன தன்மைக்கு அது பெரும் சவாலாக அமைகிறது. சமூகத்தில் உயர்வர்க்கத்தினரின் மதிப்பீடுகள், நடைமுறைகள் போன்ற வற்றிற்கு சாதகமான விடயங்களை தான் பொதுவாக கலைஞன் படைக்கிறான். அவற்றிற்கு எதிரான விடயங்களை தமது கலைப் படைப்புக்களில் கலைஞர்கள் உருவாக்கும் போது அவர்கள் பல்வேறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரச்சினைகளை எதிர்கொள்வர். இத்தகைய பிற்புலத்தில் ஏனைய கலைகளுடன் ஒப்பிடும் போது கலைஞர்களுக்கு அதிக சுதந்திரத்தை வழங்காத கலை வடிவமாக திரைப்படம் விளங்குகின்றது. ஏனைய கலைகளில் தனிப்பட்ட கலைஞர்களுக்கு காணப்படும் உயர்ந்த அளவிலான சுதந்திரம் திரைப்படக் கலையில் காணப்படுவதில்லை. திரைப்படக் கலை ஒன்றுக்கு மேற்பட்ட பலரது கூட்டு முயற்சியின் விளைவாக உருவாகிறது. ஆயினும் கோடிகளை முதலீடு செய்யும் திரைப்பட தயாரிப்பாளரே திரைப்படத்தில் கலைத் தராதரங்களைத் தீர்மானிக்கிறார். ஏனைய கலைகளில், குறிப்பாக நாடகம் உள்ளடங்கலான கலைகள், பல கலைஞர்களின் கூட்டு உழைப்பின் இணைவில் உருப்பெற்றாலும் அவை திரைப்படத்துடன் ஒப்பிடத்தக்க அளவு பெரியளவிலான முதலீட்டைக் அவற்றின் தயாரிப்புச் செலவாகக் கொண்டிருப்பதில்லை. இதனால் பொருளாதார பலமுள்ளவர்களின் ஆதிக்கம் திரைப்படக் கலை போன்று அக்கலைகளில் நிலவுவதில்லை. இதன் காரணமாக திரைப்படக் கலையினை அடோர்னோவும் ஹொர்கைமரும் (ஹொர்கைமர் அடோர்னோவின் தொழில் ரீதியான நண்பர்) கலாசார தொழில்துறையில் (*Cultural Industry*) ஒரு அங்கமாக கருதுகின்றனர். வானொலி, ஜாஸ் இசை, இதழ்கள் போன்றன கலாசார தொழிற்துறையில் ஏனைய அங்கங்களாக காணப்படுகின்றன (Adorno 2001:105).

கலாசார தொழில்துறை என்ற தொடருக்குள் திரைப்படத்தினை அடக்கு வதன் மூலம் மனிதனால் நுகரப்படும் ஏனைய பண்டங்களை போல் திரைப்படமும் காணப் படுகின்றது என்ற கருத்தினை அடோர்னோ கொண்டிருந்தார்.

கலாசார தொழில்துறை என்ற தொடருக்குள் திரைப்படத்தினை அடக்குவதன் மூலம் மனிதனால் நுகரப்படும் ஏனைய பண்டங்களை போல் திரைப்படமும் காணப்படுகின்றது என்ற கருத்தினை அடோர்னோ கொண்டிருந்தார். கலைக்கு பல்வேறு விதமான பண்புகளை அழகியல் அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். அவற்றுள் நோக்க மின்மை, சுயாதீன தன்மை இரண்டும் படைப்பாளனின் நோக்கில் முக்கியத்துவம் உடையவை. மேற்குறிப்பிட்ட நோக்க மின்மை, சுயாதீன தன்மை என்ற பண்புகளை திரைப்படக் கலை இழந்திருப்பதாக அடோர்னோ வாதிடுகின்றார். ஒரு கலைஞன் தான் விரும்பியதை வெளிப்படுத்துதல் என்ற நிலையினை திரைப்படம் கொண்டிருக்காமல் எத்தகைய விடயங்களை வெளிப்படுத்தினால் அதிகளவு இலாபம் கிடைக்கும் என்ற குறிக்கோளை முதன்மையாக கொண்டதாக திரைப்படக் கலை காணப்படுகிறது என அடோர்னோ குற்றஞ் சாட்டுகிறார். இவ்வகையில் உண்மையான கலைஞனும் கலைசார்ந்த உழைப்பாளர்களும் திரைப்பட தயாரிப்பாளரின் இலாப நோக்குடனான பண ஆசைக்குப் பலியாகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலை உற்பத்தி பணம் சம்பாதித்தலை அடிப்படையாகக் கொண்டது என்ற நோக்கம் திரைப்படக் கலையினை, கலை என்ற நிலையிலிருந்து குறைத்து விடுவதாக அடோர்னோ ஆதங்கப்படுகின்றார். முதலாளித் துவ சமூகத்தின் எழுதப்படாத முக்கிய விதிகளாக இருக்கும் எந்த பொருளுக்கும் ஒரு விலையுண்டு, எல்லாம் நுகர்வு பண்டமாகும் என்ற விதிகளின் பிடியில் கலைப் பொருள் மனிதனின் சாதாரண நுகர்வு பொருளாக (எடுத்துக் காட்டாக குளிர் பானம் போல) மாறியுள்ள செயன்முறையினை அடோர்னோ வேதனையுடன் விளக்குகின்றார். திரைப்படக் கலையின் சமூகத்திற்கு உண்மையினை சொல்லுதல் அல்லது நன்மையினை செய்தல் போன்ற நோக்குகள் இரண்டாம் நிலைக்கு தள்ளப்படுவதாகக் கருதும் அடோர்னோ, எந்தவொரு திரைப்படக் கதையும் வெற்றி வாய்ப்பினை கொண்டு வராது என்ற ஐயப்பாட்டினைக் கொண்டிருக்குமாயின் அந்த கதை திரைப்படமாக வெளிவருவது சந்தேகமே என்று குறிப்பிடுகின்றார் (அடோர்னோ 2001:106).

முதலாளித் துவ சமூகத்தின் எழுதப்படாத முக்கிய விதிகளாக இருக்கும் எந்த பொருளுக்கும் ஒரு விலையுண்டு, எல்லாம் நுகர்வு பண்டமாகும் என்ற விதிகளின் பிடியில் கலைப் பொருள் மனிதனின் சாதாரண நுகர்வு பொருளாக (எடுத்துக் காட்டாக குளிர் பானம் போல) மாறியுள்ள செயன் முறையினை அடோர்னோ வேதனையுடன் விளக்குகின்றார்.

திரைப்படக்கலை ஏனைய கலைகளுடன் ஒப்பிடும்போது கற்பனைத்திறன், இயல்பாக உணர்வினை வெளிப்படுத்தும் பண்பு, ஆக்கத்திறன் என்பவற்றை இழந்து ஒரே வகையான சூத்திரத்தினை (ஒரே வகையான கட்டமைப்பு) கொண்டு செயல்படுவதாகக் கருதும் அடோர்னோ, ஒரே மாதிரியான விடயங்கள் மீண்டும் மீண்டும் இடம் பெறுவதன் மூலம் திரைப்படம் உயர்ந்த கலை என்ற நிலையினை இழப்பதாகக் குறிப்பிடுகிறார் (*Olimpio 2014: 8*). இதன் காரணமாக இரசிகர் ஒருவர் ஒரு திரைப்படத்தில் இடம் பெறப் போகும் காட்சிகள், முடிவினை முற்கூட்டியே அறிந்து கொள்வார் என அடோர்னோ குறிப்பிடுவது இங்கு சுட்டிக் காட்டத்தக்கது (*Adorno 2001: 98*).

சமூக அடுக்கமைவுக்கு உட்பட்டதாக திரைப்படங்கள் உருவாக்கப் படுவதாக வாதிடும் அடோர்னோ, காலங்காலமாக தொடர்ந்து வரும் கலாசார அரசியல் சூழ்நிலைகள் ஒரு வகையான சூத்திரத்தினை உருவாக்கி வைத்திருப்பதாகவும் இச்சூத்திரத்திற்கு அப்பாலோ அல்லது புதுமையான முறையிலோ திரைப்படங்கள் உருவாக்கப்படுவதற்கான வாய்ப்பு மிகக் குறைவாக உள்ளது எனக் குறிப்பிடுகிறார். இத்தகைய ஒரே வகையான சூத்திரத்தின் ஆதிக்கத்தினை 'அழகியல் காட்டுமிராண்டித்தனம்'(*Aesthetic Barbarism*) என அடோர்னோ சுட்டிக் காட்டுவது குறிப்பிடத்தக்கது. திரைப் படத்தொழில்த்துறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்பத்திக்குரிய பண்பான பண வேட்கையைக் கொண்டுள்ளது. பண வேட்கை கொண்டதிரைப்பட உற்பத்தியாளர்கள் திரைப் படத்தில் இரசிகர்களை சுயமாக சிந்தித்துச் செயற்படுவதற்கான வாய்ப்பினை வழங்கு வதில்லை என்ற கருத்தினை அடோர்னோ முன்வைக்கிறார். எவ்வாறானதிரைப்படங்களை படத்தயாரிப்பாளர்கள் சுவைஞருக்கு வழங்குவதற்கு விரும்பு கின்றனரோ அவற்றை ஏற்றுக் கொள்ளத்தக்க மனநிலை யுடையவர்களாக இரசிகர் களை மாற்றி வைத்துள்ளனர் என படத்தயாரிப்பாளர்கள் மீது குற்றம் சுமத்துகிறார் அடோர்னோ (அடோர்னோ 2001: 105).

பொழுது போக்குத் தன்மை என்பது திரைப்படக் கலையின் முதன்மையான குறிக்கோளாக இருப்பதன் மூலம் ஒரு மனிதனுக்கு ஒரு உயர்ந்த கலை மூலம் ஏற்படும் திருப்தியினையும் மகிழ்ச்சியினையும் வழங்காமல் திரைப்படம் இரசிகர்களை ஏமாற்று கின்றது

ஆரம்ப காலம் முதல் கலைப்பொருளின் பல்வேறு பண்புகளில் ஒரு பண்பாக பொழுது போக்குத்தன்மை (*Amusement*) செயற்பட்டு வந்துள்ளது எனக் குறிப்பிடும் அடோர்னோ, திரைப்படக் கலையின் முதன்மையான, ஒரேயொரு பண்பாக பொழுது போக்குத்தன்மை மட்டுமே காணப்படுவதாக வாதிடுகின்றார் (Adorno 2001:107). ஒரே மாதிரியாக அதிக நேரம் உழைக்கும் தொழிலாளர்களின் களைப்பினை தீர்க்கும் மருந்தாக சினிமா காணப்படுவதாகவும், இந்த தொழிற்றுறையானது சாதாரண மக்கள் எத்தகைய விடயங்களுக்கு முக்கியத்துவம் வழங்குகின்றனரோ அத்தகைய விடயங்களுக்கு முக்கியத்துவம் அளிப்பதன் மூலம் சந்தையில் நிரந்தரமான இடத்தினை பிடித்துக் கொள்கின்றது எனச் சுட்டிக் காட்டுகின்றார் (Adorno 2001:107). திரைப்படத்தின் பிரதான நோக்கமாக வணிகம் இருப்பதாக வாதிடும் அடோர்னோ, முதலாளித்துவத்தின் உழைப்புச் செயன்முறைக்குப் பொருத்தமான வகையில் தொழிலாளர்கள் உழைப்புச் செயற் பாடுகளால் ஏற்படும் களைப்பிலிருந்து விடுபடுவதற்கும் மகிழ்ச்சியாக இருப்பதற்குமான ஒரு பொழுது போக்குத்தன்மைக் கொண்ட ஊடகமாக திரைப்படம் விளங்குகிறது என அடோர்னோ சுட்டிக் காட்டுகிறார். பொழுது போக்குத்தன்மை என்பது திரைப்படக் கலையின் முதன்மையான குறிக்கோளாக இருப்பதன் மூலம் ஒரு மனிதனுக்கு ஒரு உயர்ந்த கலை மூலம் ஏற்படும் திருப்தியினையும் மகிழ்ச்சியினையும் வழங்காமல் திரைப்படம் இரசிகர்களை ஏமாற்று கின்றது என அடோர்னோ ஆதங்கப்படுவது குறிப்பிடத்தக்கது. கலைகளின் பண்புகளில் ஒன்றாக பொழுதுபோக்குத் தன்மை என்பது கருதப்பட்டாலும், அடோர்னோ பொழுது போக்கு என்பதை ஒரு போதையேற்ற நிலையாகவே கருதுகிறார் என்னும் தெளிவை அப்பதத்தை அவர் கையாளும் முறைமையில் இருந்து புரிந்துகொள்ள வேண்டியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐரோப்பிய கலை வரலாற்றை ஆய்வு செய்த அடோர்னோ, பிரான்சிய புரட்சிக்கு முன்பாக தாழ்த்தப்பட்ட சமூகத்தினர் கலைஞர் களாக காணப்பட்டதாகவும் பின் நவீனத்துவ காலத்தில் இரசிகர் களை புலனின்ப விடயங்களில் ஈடுபாடு கொள்ளச் செய்து மகிழ் விப்பவர்களாக கலைஞர்கள் மாற்றமடைந்துள்ளதாகக் கருதும் அவர், கலை வரலாற்றில் இத்தகைய நிலையினை பின்னடைவான முன்னேற்றமற்ற நிலையாகவே காண்பது குறிப்பிடத்தக்கது *(Fianco 2020: 2-3).*

அனைத்து பின் நவீனத்துவ கலைகளுடன் ஒப்பிடு செய்து திரைப்படக் கலையினை மிகவும் தாழ்ந்த கலையாக அடோர்னோ மதிப்பிடுகிறார். சந்தையில் இலாப நோக்கத்துடனான ஒரு விற்பனை பொருளாக திரைப்படக் கலை செயற்படுவதன் காரணமாக இத்தகைய மதிப்பீட்டினை அடோர்னோ வழங்குகிறார். பகுத்தறிவு சார்ந்த அழகியல் விடயங்கள் பின் நவீனத்துவ காலத்தில் பெரும் பாதிப்புக்குள்ளாகியிருப்பதாக அடோர்னோ கவலையடைகின்றார். சமூக வரலாற்று பிற்புலத்தைக் கலை கொண்டிருப்பதுடன் சமூகத்தை பிரதிபலிப்பதாக கலை இருக்க வேண்டும் என்ற மாக்ஸிச சித்தாந்த நோக்கினை அடோர்னோ கொண்டிருப்பது தெளிவாகின்றது *(Graham 1997: 8).* சமூகத்தினை பிரதிபலிக்காத சமூகத்திலிருந்து அந்நியமாக்கப்பட்ட படைப்பினை ஒரு கலைஞன் படைக்க வேண்டிய சூழ்நிலையினை முதலாளித்துவ சமூகம் உருவாக் கியிருப்பதாக அடோர்னோ கருதுவது குறிப்பிடத்தக்கது. முதலாளித் துவ சமூகத்தில் ஒரு படைப்பாளன் அல்லது கலைஞன் போதியளவு கலைப் படைப்புக்களை உருவாக்குவதில் சுதந்திரமற்ற தன்மையினை கொண்டிருப்பதன் காரணமாக சமூகத்திற்காக தனது படைப்பினை வெளிப்படுத்த முடியாத நிலையில் கலைஞன் இருக்கின்றான். முதலாளித்துவ சமூகத்தில் இத்தகைய சூழ்நிலை காரணமாக படைப்பாக்கக் கலைஞர்கள் தீவிர அந்நியமாதல் செயல்முறைக்கு உள்ளாகின்றனர் என்று கருதும் அடோர்னோ, முதலாளித்துவ சமூகத்தில் ஒரு கலைஞனின் படைப்பு அதிகளவில் வரலாற்றுச் சூழ்நிலையிலிருந்து விலகி இருப்பதாக விமர்சிக்கிறார். முதலாளித்துவ சமூகத்தில் நிலவும் சந்தை பொருளாதார முறைமையும் இலாப நோக்கமும் கலைப் பொருளின் தரத்தினை வெகுவாக குறைத்து விட்டதாகக் குற்றஞ்சாட்டுகின்றார்.

பகுத்தறிவு சார்ந்த அழகியல் விடயங்கள் பின் நவீனத்துவ காலத்தில் பெரும் பாதிப்புக்குள் ளாகியிருப்பதாக அடோர்னோ கவலை யடைகின்றார்.

பின் நவீனத்துவச் சூழலில் ஏற்பட்டிருக்கும் தொழில்நுட்ப வளர்ச்சியுடன் இணைந்த கலாசார தொழிற்றுறை செயன்முறை கலைப்பொருளின் பண்பில் பாரிய மாற்றத்தினை ஏற்படுத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிருப்பதாகவும் கலைப்பொருளை நுகர்வுப் பொருளாக மாற்றி யுள்ளதாகவும் கருதும் அடோர்னோ இத்தகைய செயன்முறையினை குறிக்க ஜேர்மானிய வார்த்தையான '*Entkunstung*'என்ற சொல்லை உருவாக்கி பயன்படுத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது (*Fianco 2020:7*). உயர்ந்த நிலையில் ஒரு திரைப்படம் சமூக விடயங்களை உள்ளடக்கியிருக்க வேண்டும் என அடோர்னோ வற்புறுத்துவது குறிப்பிடத்தக்கது (*Adorno 1982: 202*). அடோர்னோ ஒரு கலைஞன் தான் படைக்க விரும்பும் கலைப் பொருளின் உள்ளடக்கத்தினை தேர்வு செய்தல், அத்தகைய கலைப்பொருளை படைப்பதற்கு அடிப்படையான பொருளைத் தெரிவுச் செய்தல், கலையினைப் படைக்கும் முறையினை தெரிவு செய்தல் ஆகியவற்றில் சுதந்திரத் தினைக் கொண்டிருக்க வேண்டும். ஆனால் பெரும் கலாசாரத் துறையாக உருவாகியுள்ள திரைப்படங்கள் மேற்குறிப்பிட்ட விடயங்களில் ஒரு கலைஞனுக்கு சுதந்திரத்தினை வழங்கவில்லை என அவர் வாதிடுவது குறிப்பிடத்தக்கது.

இரசிகர்களை திரைப்படத்தின் மீதான கவர்ச்சிக்கு அடிமையாக்கு வதன் மூலம் தொடர்ச்சியாக திரைப்படம் அவர்களை ஏமாற்றி வருவதாக திரைப் படத் தயாரிப் பாளர்களை குற்றஞ் சாட்டுகிறார்

மேட்டுக்குடி ஆட்சியில் கலையின் நிலை, மதங்களின் செல் வாக்கில் கலையின் நிலை, நவீன காலத்தில் கலையின் நிலை என கலையினை வரலாற்று ரீதியாக பகுப்பாய்வு செய்யும் அடோர்னோ, மேற்குறிப்பிட்ட காலங்களில் கலைக்கும் கலைஞர்களுக்கும் ஏற்பட்ட பாதிப்பினைக் காட்டிலும் அதிக பாதிப்பினை திரைப்படக் கலையின் உருவாக்கத்தின் பின் கலையும் கலைஞர்களும் எதிர்நோக்கி வருவதாக கவலையடைகிறார்.

அடோர்னோ நோக்கில் திரைப்பட இரசிகர்கள்

ஒரு திரைப்படத்தின் முக்கிய இலக்காக வணிக ரீதியான வெற்றி காணப்படுவதைச் சுட்டிக் காட்டும் அடோர்னோ, இரசிகர்களை திரைப்படத்தின் மீதான கவர்ச்சிக்கு அடிமையாக்குவதன் மூலம் தொடர்ச்சியாக திரைப்படம் அவர்களை ஏமாற்றி வருவதாக திரைப் படத் தயாரிப்பாளர்களை குற்றஞ்சாட்டுகிறார் (*Adorno 2001:111*). ஒரு உண்மையான கலைப் பொருள் ஒருவரது உணர்வுகளை வெளிப் படுத்துவதற்கும் அவற்றை பூரணப்படுத்துவதற்கும் உதவும் என கலைப் பொருளின் முக்கிய செயற்பாடுகளை விபரிக்கும் அடோர்னோ, ஒரு திரைப்படம் ஒருவரது உணர்வுகளை சரியாக வெளிப்படுத்துவதற்கு உதவாமல் அவரது உணர்வுகளை அடக்கி ஒடுக்குகிற செயன்மு றையினை கொண்டிருப்பதாக வாதிடுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய செயற் பாடுகளால் திரைப்படம் உளவியல் ரீதியாக ஆரோக்கியமற்ற நிலையினை இரசிகர்களில் ஏற்படுத்துகிறது என்ற கடுமையான விமர்சனத்தினை திரைப்படம் தொடர்பாக அடோர்னோ முன்வைக்கிறார்

மேலும் காதல் என்ற பெயரில் பாலியல் சார்ந்த விடயங் களை காட்சிகளாக உருவாக்குவதினால் திரைப்படக் கதாப்பாத் திரங்களுடன் (குறிப்பாக கதாநாயகன், கதாநாயகி) இரசிகர்கள் தங்களை அடையாளப்படுத்திக் கொள்வதன் மூலம் ஒருவித மகிழ்ச் சியினைப் பெற்றுக் கொள்கின்றார்கள் என்றும், இத்தகைய மகிழ்ச்சி ஆரோக்கியமானதாக அமைவதில்லை என்கிறார். திரைப் படங்களினால் ஏற்படும் இத்தகைய மகிழ்ச்சியினை அடோர்னோ, 'ஏமாற்றுத்தன்மையான மகிழ்ச்சி' *(Cheating Happiness)* எனக் குறிப்பிடுகிறார். கலைகளில் பாலியல் சார்ந்த விடயங்கள், காதல் என்பன பேசப்பட்டாலும் அவை சுவைஞர்களிடம் பாலியல் சார்ந்த உணர்வுகளை தூண்டி, சுவைஞரை பாலியல் சார்ந்த தவறான நடத்தைக்கு இட்டுச்செல்வதை நோக்காகக் கொண்டிருப்பதில்லை. அவ்வாறான நோக்கை குறித்த கலைப்படைப்பு கொண்டிருக்குமாயின் அக்கலைப்படைப்புக்கு அரச, சமூக அங்கிகாரம் மறுக்கப்படும். அங்கு கலைப்படைப்புக்கள் சமூக யதார்த்தத்தை மக்கள் முன் கொண்டுவரும் போது சமூக வாழ்வில் காதல், பாலியல் சார்ந்த நடத்தைகளுக்கு வழங்கப்பட்டுள்ள முக்கியத்துவத்தின் வரம்பை மீறாத விதத்திலேயே காண்பிக்கப்பட வேண்டும். திரைப்படத் தயாரிப்பாளர்கள் பாலியல் சார்ந்த காட்சிகளை கூடுதலாகக் காண்பிப்பதாக அடோர்னோ சுட்டிக் காட்டுகிறார்.

காதல் என்ற பெயரில் பாலியல் சார்ந்த விடயங் களை காட்சிகளாக உருவாக்கு வதினால் திரைப்படக் கதாப்பாத் திரங்களுடன் (குறிப்பாக கதாநாயகன், கதாநாயகி) இரசிகர்கள் தங்களை அடையாளப் படுத்திக் கொள்வதன் மூலம் ஒருவித மகிழ்ச் சியினைப் பெற்றுக் கொள் கின்றார்கள்

இவ்வாறான காரணங்களால் திரைப்படங்கள் பல்வேறு நிலை களில் இரசிகர்களை உண்மையிலிருந்து அதிகம் அந்நியப்படுத்தி வைத்திருப்பதாக அடோர்னோ கவலையடைகிறார். உண்மையில் கலையின் மூலம் வெளிப்படுத்தப்படும் விடயங்கள் உண்மைக்குப் புறம்பான மாய உலகத்தைக் கட்டமைக்கின்றன என்பதை இதன்போது சுட்டிக்காட்டுகிறார். தமிழ்த் திரையுலகில் முன்னணி நடிகர்களில் ஒருவராக விளங்கும் நெப்போலியன் அவர்கள் சுவையுணவு தொடர்பான காணொளிகளை *(Irfan's View, Youtube Video)* வலைத்தளத்தில் பதிவிடும் இர்பான் *(Irfan)* அவர்களால் வெளியிடப்பட்ட ஒரு காணொளியில் "சினிமா ஒரு மாய உலகத்தை கட்டமைக்கும் ஊடகம்" எனும் கருத்தைப் பதிவு செய்திருந்தார். இது அடோர்னோவின் மேற்சுட்டிய கருத்துக்கு வலுச்சேர்க்கும் ஒன்றாக அமைகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முப்பரிமாணப் பொருளை தொட்டு உணர்ந்து அனுபவிப்பதன் மூலம் ஏற்படும் மகிழ்ச்சியிலிருந்து வேறுபட்ட, இரு பரிமாண விம்பங்கள் மூலம் திரைப்படம் வழங்கும் மகிழ்ச்சி காணப்படுவதாக அடோர்னோ வாதிடுகிறார். இரசிகர்களை திரைப்படங்கள் யதார்த்த நிலையிலிருந்து கற்பனை நிலைக்கு நகர்த்துவது மட்டுமல்லாமல் கற்பனை நிலையினை உண்மை என நம்பவைத்து மகிழ்வுறுத்துகின்றன என்கிறார். திரைப்படங்களின் இத்தகைய செயற்பாடுகள் மூலம் இரசிகர்கள் அந்நியமாதல் செயன் முறைக்கு உட்படுகின்றனர் என்கிறார். இந்நிலையில் திரைப்படங்களைப் பார்ப்பதன் மூலம் இரசிகர்கள் தங்களை தாங்களே ஏமாற்றிக் கொள்வதுடன் திரைப் படத்தைப் பார்ப்பதனால் ஏற்படும் இன்பத்தை ஒரு நோயாகவும் ஏமாற்றுத்தனமாகவும் கருதுகிறார் (Adorno 2001:112). கலைப் படைப்புக்கள் வாழ்வியல் அனுபவங்களை கலையாக்குவதால் அதனை இரசிக்கும் மக்கள் பெறும் அனுபவம் அவர்களின் உடல், உள தேவைகளைப் பூர்த்தி செய்து மன ஆரோக்கியத்திற்குரியதாகவும் அமைகின்றது. ஆனால் திரைப்படத்தைப் பார்க்கும் இரசிகர்களிடம் இந்த உளசமநிலையாக்கச் செயல்முறை நடைபெறுவதில்லை என்பது அடோர்னோவின் வாதம். இதனை சிசுபிறினியா (Schizophrenia) என்ற மன நோய்க்கு ஒப்பிடுகின்றார் பின் நவீனத்துவ சிந்தனையாளரான ஜெமிசன் (Bertens, H.1995: 163).

இரசிகர்களை திரைப்படங்கள் யதார்த்த நிலையிலிருந்து கற்பனை நிலைக்கு நகர்த்துவது மட்டுமல் லாமல் கற்பனை நிலையினை உண்மை என நம்பவைத்து மகிழ்வுறுத்து கின்றன

தற்காலத்தில் திரைப்படத்தின் பொழுதுபோக்குத் தன்மை கலைக்கு எதிரானதாக இருப்பதுடன் மட்டுமல்லாமல் அதுவே கலையாக மாறிவிடுகின்றது என வாதிடும் அடோர்னோ, திரைப்படங்களில் வலம்வரும் கதாநாயகர்கள். கதாநாயகிகளின் பெறுமானங்கள், வாழ்க்கை முறைமைகளுடன் தம்மை அடையாளப்படுத்திக் கொள்ளும் இரசிகர்கள் தமது ஆளுமையினைச் சரியாக புரிந்து கொள்ள தவறுகின்றனர் எனக் குறிப்பிடுகிறார். இதனால் பல பிரச்சினைகள் ஏற்படுகிறது. திரைப்படங்களில் சித்திரிக்கப்படும் கற்பனை வாழ்க்கையை உண்மை வாழ்க்கையாக கருதி, அதை ரசிகர்கள் அவர்களின் வாழ்வுடன் ஒப்புநோக்கி வாழ்வில் கடைப்பிடிக்கின்றனர். இதன்போது திரைப்படங்கள் இரசிகர்களது சுயாதீன தன்மையினை கட்டுப்படுத்தி தமது கருத்து நிலைகளினால் அவர்களை வழிநடத்திச் செல்கிறது. இத்தகைய சூழ்நிலைகள் இரசிகர்களிடம் அந்நியமாதல் செயல்முறையினை உருவாக்குகின்றது என்று குறிப்பிடுகிறார். எடுத்துக்காட்டாக, ஒரு இரசிகன் தனது அபிமான நடிகர் அல்லது நடிகையின் காதல் அல்லது திருமண பிரச்சினையினை தனது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரச்சினையாகக் கருதி துன்பத்தை அனுபவிப்பதைக் குறிப்பிடலாம் (Brenez 2007:75).

திரைப்படங்களில் எடுத்துரைக்கப்படும் ஆர்வத்தைத் தூண்டும் கதைகள் அதிகளவு ஜனநாயகத்தினையும் தேர்வுச் சுதந்திரத்தினையும் கொண்டிருப்பது போலத் தோன்றினாலும் கூட உண்மையில் இத்தகைய திரைப்படங்கள் இரசிகர்களை பெரும்பாலும் நுகர்ச்சிப் பொருட்களாகவே கருதுகின்றன என்று குறிப்பிடலாம். நுகர்ச் சிப் பொருட்களாக இரசிகர்களைக் கருதும் நிலையானது "சிந்தித்துச் செயற்படும் ஆற்றலற்றவர்களாக திரைப்பட இரசிகர்கள் மாற்றப் பட்டுள்ளனர்" என்ற அடோர்னோவின் என்ற வாதத்தினை உருத்ப்படுத்துவதாக உள்ளது. நடைமுறையில் இருக்கின்ற சமூக பொருளாதார அரசியல் முறைமையில் பெரும்பாலும் மாற்றங்களை ஏற்படுத்தாது அவற்றை தொடர்ந்து பேணுவதை நோக்காகக் கொண்டவையாக திரைப்படங்கள் காணப்படுகின்றன என்ற கருத்தையும் அவர் கொண்டிருந்தார் (Adorno 2001:118).

மேற்குறித்த காரணங்களால் திரைப்படங்கள் பொதுவாக எமக்குத் தேவையான எல்லா விதமான சமூக கலாசார விழுமியங்களையும் பெருமளவிற்கு நீர்த்துப் போகச் செய்கின்றது என்ற குற்றச்சாட்டினை அடோர்னோ திரைப்படம் தொடர்பாக முன்வைப்பது குறிப்பிடத் தக்கது. இவ்வகையில் திரைப்படங்கள் போலியான தனிநபர், சமூக அடையாளங்களை உருவாக்கி உண்மையான தனிமனித, சமூக அடையாளங்களை அழித்து வருகின்றது என்ற விமர்சனத்தினை அடோர்னோ முன் வைக்கின்றார்.

திரைப்படங்கள் போலியான தனிநபர், சமூக அடையாளங்களை உருவாக்கி உண்மையான தனிமனித, சமூக அடையாளங்களை அழித்து வருகின்றது என்ற விமர்சனத்தினை அடோர்னோ முன் வைக்கின்றார்.

மனித கற்பனை எவ்வாறு முன்னர் கலை உருவாக்கத்திலும் அதனை இரசிப்பதிலும் முக்கிய பங்கு வகித்து வந்ததோ அத்தகைய நிலையினை திரைப்படங்கள் மாற்றிவிட்டன என அடோர்னோ வேதனைப்படுகிறார். இரசிகர்கள் அல்லது நுகர்வோர்கள் மத்தியில் கலை எது? கலை அல்லாதது எது? என்ற அறிவு மிக குறைந்த அளவில் இருப்பதாகவும் கலை அல்லாத பொருட்களை கலைப் பொருட்களாக எண்ணி நுகர்வதாகவும் அடோர்னோ ஆதங்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

பின் நவீனத்துவ கலைகள் (திரைப்படக் கலை உட்பட) சுயாதீன தன்மையுடையதாக இல்லாததன் காரணமாக அவை கலைக்கும் மனிதத்துவத்திற்கும் ஆபத்தானதாக மாறுகின்றது என வாதிடும் அடோர்னோ, கலை அல்லது அழகியல் என்பது ஒரு மெய்யியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சார்ந்ததொன்றாகவும் உண்மையினைத் தருவதாக இருக்க வேண்டு மெனவும் வலியுறுத்தி கூறுகின்றார். மேலும் உண்மையான கலை யென்பது புதிர்த் தன்மை கொண்டதாக இருப்பதுடன் வரலாற்றுப் பிற்புலத்தையும் கொண்டிருக்க வேண்டும் என வலியுறுத்தும் அடோர்னோ, இத்தகைய பண்புகளை திரைப்படக்கலை இழந்துள் ளதாக கவலை கொள்கின்றார்.

அடோர்னோவின் கருத்துக்கள் மீதான பரிசீலனை

திரைப்படம் கலை எனும் அந்தஸ்தை இழந்து ஒரு வியாபாரப் பொருளாக மாறியுள்ளது, இதனால் பணம் சம்பாதிப்பதே திரைப்படத் துறையுடன் தொடர்புடைய வர்களின் நோக்கமாக அமைந்துள்ளது ஆகிய விடயங்களை முன்னிலைப் படுத்துவதாக இருக்கிறது.

திரைப்படக்கலை தொடர்பான அடோர்னோவின் சிந்தனைகள் திரைப்படம் கலை எனும் அந்தஸ்தை இழந்து ஒரு வியாபாரப் பொருளாக மாறியுள்ளது, இதனால் பணம் சம்பாதிப்பதே திரைப்படத் துறையுடன் தொடர்புடையவர்களின் நோக்கமாக அமைந்துள்ளது ஆகிய விடயங்களை முன்னிலைப்படுத்துவதாக இருக்கிறது.

திரைப்படத்தின் வரலாற்றை நாம் எடுத்துநோக்கும் போது அதில் இரு போக்குகள் பிரதானப்படுத்தி நோக்கத்தக்கன. 1.பணம் சம்பாதிப்பதை பிரதான நோக்காகக் கொண்டு திரைப்படச் செயற்பாட்டில் ஈடுபடும் ஒரு பிரிவினர். 2.பல புதிய உத்திகளைப் பயன்படுத்தி திரைப்படத்தின் கலைத்துவத்தை மேம்படுத்துவதை நோக்காகக் கொண்டு செயற்படும் இன்னொரு பிரிவினர். இந்த இரு போக்குகளும் திரைப்படத் துறையில் சமாந்தரமாக முன்னெடுக்கப் பட்டுக் கொண்டு வருபவை. இரண்டாவது பிரிவினர் முதலாவது வகைப்பாட்டினர் போல் திரைப்படத்தின் மூலம் பணம் சம்பாதிப்பதை பிரதான நோக்காகக் கொண்டவர்கள் அல்லர்.

1919களில் ஜேர்மனியில் தோன்றிய வெளிப்பாட்டுவாத திரைப்பட இயக்கம், பிரான்சில் 1918களில் இருந்து முன்னெடுக்கப்பட்ட மனப் பதிவுவாத திரைப்பட இயக்கம், சர்லியலிஸ திரைப்பட இயக்கம், 1958களில் இருந்து பிரான்சின் முக்கியமானதொரு திரைப்படத் செயற்பாட்டுக் குழுவாகச் செயற்பட்ட புதிய அலைத் திரைப்பட இயக்கம், 1924களில் இருந்து ரசியாவில் செயற்பட்ட மொண்டாச் திரைப்பட இயக்கம், 1942இல் இருந்து இத்தாலியில் செயற்பட்ட நவயதார்த்தவாத திரைப்பட இயக்கம் போன்றவற்றுடன் ஹொலிவூட் சினிமாவிலும் பல கலைத்துவ ஆர்வமுள்ள கலைஞர்கள் தோன்றி திரைப்படத் துறைக்கு வளஞ் சேர்த்துள்ளனர் (இன்பமோகன், 2018). இவ்வாறான செயற்பாட்டாளர்களின் பணி இன்றுவரை தொடர்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பிற்புலத்திலேயே இந்திய சூழலில் சத்திய ஜித்ராய், யப்பானில் அக்கிரா குரோசாவா என இந்தப் பட்டியலை விரித்துக் கொண்டு செல்லலாம்.

அடோர்னோ குறிப்பிடும் திரைப்படம் தொடர்பான விமர்சனங்கள் எவையும் மேற்சுட்டிய திரைப்படச் செயற்பாட்டாளர்களை உள்ளடக்கிய இரண்டாவது வகைப்பாட்டினருக்குப் பொருத்தமுடையவை அல்ல. அத்துடன் சர்வதேச அளவில் முன்னெடுக்கப்படும் கலைத்துவ முயற்சிகளைப் பற்றி அடோர்னோ கவனம் செலுத்தவில்லை. ஏனெனில் வர்த்தக நோக்கிலான திரைப்படங்கள் சமூகத்தில் ஏற்படுத்தும் பாதிப்புக்கள் பற்றிய ஏக்க உணர்வே அவரிடம் இருந்தது. அதனால் வர்த்தக நோக்கிலான திரைப்படங்கள் சமூகத்தில் ஏற்படுத்தும் எதிர்மறையான தாக்கங்கள் பற்றிய கருத்துக்களை முன்வைக்கிறார்.

அடோர்னா வர்த்தக நோக்கிலான திரைப் படத்தை அடிப்படையாகக் கொண்டு தனது சிந்தனைகளைப் பதிவு செய்திருந்தாலும் கலை வரலாற்றில் திரைப்படக் கலையின் வரவு சில விடயங் களில் ஒரு திருப்பு முனையாகவே அமைந்துள்ளது.

கலைத்துவ ரீதியான திரைப்பட செயற்பாட்டாளர்கள் நிறுவனப் படுத்தப்பட்ட முயற்சியாகவும், தனிமனித முயற்சியாகவும் திரைப் படத் தயாரிப்பில் ஈடுபட்டனர். இருந்தும் வர்த்தக திரைப்படத் தயாரிப் பாளர்கள் போன்று பாரியளவிலான கலாசாரத் தொழிற்றுறையாக திரைப்படச் செயற்பாட்டில் ஈடுபடவில்லை என்பதும் குறிப்பிடத் தக்கது.

அடோர்னா வர்த்தக நோக்கிலான திரைப்படத்தை அடிப்படையாகக் கொண்டு தனது சிந்தனைகளைப் பதிவு செய்திருந்தாலும் கலை வரலாற்றில் திரைப்படக் கலையின் வரவு சில விடயங்களில் ஒரு திருப்பு முனையாகவே அமைந்துள்ளது. சினிமாவை வளப்படுத்துவதில் வர்த்தக திரைப்பட செயற்பாட்டாளர்களும் பங்களிப்புச் செய்துள்ளனர்.

இயந்திரங்களைப் பயன்படுத்தி (தொழில்நுட்பத்தை) மக்கள் இரசனைக்குரிய கலையை படைத்தளிக்க முடியும் என்பதனை நிரூபனப்படுத்திய முயற்சியாக திரைப்படக் கலையின் பிறப்பும் அதன் வெற்றிகரமான தொடர்ச் செயற்பாடுகளும் அமைந்துள்ளன. ஆவண திரைப்படத்தின் சாயலைக் கொண்டதாக பிரான்சியர்களான லூமியஸ் சகோதரர்களின் திரைப்பட முயற்சி இன்று பல புதுமைகளை ஏற்படுத்திய வண்ணம் உள்ளது குறிப்பிடத்தக்கது.

கலை வரலாற்றில் ஜனநாயகத் தன்மையினை ஏற்படுத்திய கலை வடிவமாக திரைப்படக் கலை திகழ்வது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரைப்படக் கலையின் வருகைக்கு முன்னர் கலைகள் உயர் வர்க்கத்தினரின் கலாசார, வாழ்வியல் விடயங்களுக்கு முக்கியத்துவம் அளித்திருந்தன. திரைப்படக் கலை சமூக பொருளாதார ரீதியாக நலிவுற்ற மக்களின் கலாசார, வாழ்வியல் விடயங்களுக்கு முக்கியத்துவம் அளித்திருந்ததுடன், சமூகத்தின் சகல தரப்பினரும் கலைச் செயற்பாட்டில் ஈடுபடுவதற்கான வாய்ப்பினையும் வழங்கியது. இதனை "குறிப்பிட்ட பாரம்பரியத்திலிருந்தும் பிற்புலத்திலிருந்தும் கலைகள் உருவாக்கப்பட வேண்டும் என்ற நிலையிலிருந்து கலையினை விடுவித்த கலையாக திரைப்படக் கலை காணப்படுகின்றது" என பெஞ்சமின் சுட்டிக்காட்டுவார் (பெஞ்சமின் 1969: 4).

சாதி, மத, சமூக ரீதியான எந்தவித பேதங்களும் இன்றி சகல தரப் பினரும் ஒரு மண்டபத்தில் இணைவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தியது திரைப்படத்தின் இன்னொரு முக்கிய பங்களிப்பாக அமைந்திருந்தது. இதனை கா.சிவத்தம்பி தமிழ் சினிமாவுடன் தொடர்புபடுத்தி கூறும் போது "சினிமா மண்டபம் எல்லாத் தமிழர்களையும் ஒரே கூரையின் கீழ் அமர்த்திய முதல் கலைக்கூடமாகும்" (சிவத்தம்பி, 2004:53) என்பார்.

சாதி, மத, சமூக ரீதியான எந்தவித பேதங்களும் இன்றி சகல தரப் பினரும் ஒரு மண்டபத்தில் இணைவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தியது திரைப்படத்தின் இன்னொரு முக்கிய பங்களிப்பாக அமைந்திருந்தது.

இவ்வடிப்படையில் சாதாரண மக்களின் உணர்வுகளைப் பிரதிபலித்ததுடன் அவர்கள் பார்த்து இரசித்து இன்புறுவதற்கான வாய்ப்புக்களையும் திரைப்படம் வழங்கியது. மக்களின் அவலம் நிறைந்த வாழ்வினை அப்படியே காட்டாமல் சாதாரண மக்கள் அவர்களின் வாழ்க்கைத் துன்பத்தில் இருந்து விடுவிப்புப் பெற்று திரைக்கலைஞர்கள் கட்டமைத்த உலகத்திற்குள் சுமார் 2 – 3 மணி நேர இடைவெளிக்குள் சென்று வருவதற்கான வாய்ப்பை வழங்கிய ஒரே கலையாக சினிமா விளங்குகிறது. சர்வதேச அளவில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள அனைத்து திரையரங்குகளிலும் குறித்த ஒரு திரைப்படத்தை ஒரே நேரத்தில் காண்பிக்கக் கூடிய தொழில் நுட்பத் திறன் சர்வதேசஅளவில் அதிகளவிலான இரசிகர்களை திரை படத்திற்கு வழங்கியது. இங்கு உயர் கலைக்குரிய நியமங்களை பேணாது அனைத்து தரப்பினரும் பார்த்து இரசிக்கத் தக்க எளிமையான நுட்பங்கள் கையாளப்படுகின்றன. அதிக எண்ணிக்கையிலான மக்களை சென்றடையக் கூடிய திரைப்படத்தின் இத்தகைய தன்மையினை 'திரைப்படத்தின் ஜனநாயகத்தன்மை' என பெஞ்சமின் எடுத்துரைப்பார். இருந்தும் அடோர்னோ திரைப்படக் கலையினை ஒரு உயர்ந்த கலையாக நோக்காமல் பொழுதுபோக்குத் தன்மை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட சாதாரண மக்கள் கலையாக நோக்குகின்றார். இதற்கான அடிப்படைக் காரணம் அவரின் கருத்தியல் தளமாகும். மார்க்சிஸ, கருத்துமுதல் வாத நோக்குநிலையுடைய அடோர்னோ திரைப்படக் கலையினை முதலாளித்துவ பொருளாதார அரசியல் முறைமையுடன் இணைத்து நோக்குவதனால் இவ்வாறான முடிவுக்கு வருகிறார். வர்த்தக நோக்கத்திற்காக உற்பத்தி செய்யப்படும் திரைப்படங்களுடன் சமூக யதார்த்தத்தைப் பேசும் கலையார்வலர்களினால் தயாரிக்கப்பட்ட திரைப்படங்களையும் அவரின் கருத்துப் பதிவுக்கான சான்றுகளாகக் கொண்டிருப்பாராயின் அவரின் சிந்தனைப் பதிவில் சில மாற்றங்கள் ஏற்பட்டிருக்கலாம்.

வர்த்தக நோக்கத்திற்காக உற்பத்தி செய்யப்படும் திரைப் படங்களுடன் சமூக யதார்த்தத்தைப் பேசும் கலையார் வலர்களினால் தயாரிக்கப் பட்ட திரைப்படங் களையும் அவரின் கருத்துப் பதிவுக்கான சான்றுகளாகக் கொண்டிருப் பாராயின் அவரின் சிந்தனைப் பதிவில் சில மாற்றங்கள் ஏற்பட்டிருக் கலாம்.

உசாத்துணை

இன்பமோகன், வ. (2018) கலைத்துவ சினிமா. கொழும்பு – சென்னை: குமரன் புத்தக இல்லம்.

சிவத்தம்பி, கா. (2004) தமிழ்ப் பண்பாட்டில் சினிமா. சென்னை: மக்கள் வெளியீடு.

Adorno, T. W. and Horkheimer, M. (2002) The Culture Industry: Enlightenment as Mass Deception – The Dialectic of Englightenment (Philosophical Frgaments) ed. Gunzelin Schmid Noerr & trans. Edmund Jephcott. California: Stanford University Press.

Adorno, T. W. (1982) Levin, T. Y. (tr.) Transparencies on Flim. No24/25 winter 1982 Special Double Issue on New German Cinema. USA: Duke University Press.

Adorno, T.W. (2002) Aesthetic Theory. London: Contiuum.

Allen, R. W. (1987) The Aesthetic Experience of Modernity: Benjamin, Adorno, and contemporary Flim Theory in New German Critique (Winter Special Issue). USA: Duke University Press.

Benjamin, Walter. (1969) The Work of Art in the Age of Mechanical Reproduction in: Illuminations, Hannah Arendt (Ed). Harry Zohn (Tra) from the 1935 essay. New York: Schocken Books.

Bertens, Hans. (1995) The Idea of Post Modern History. London: Routledge.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Brenez, Nicole. (2007) T W Adorno Cinima in spite if itself -but cinema all the same in Cultural Studies Review Vol.13 (1). Australia: UTS ePress.

Fianco Francisco. (2020) Art and society in Theodor Adorno's Aesthetic Theory in Art Research Journal Vol.7 (1). Brazil: Universidade Federal dorio Grande do Norte Natal.

Graham, Gordon. (1997) The Marxist Theory of Art. British Journal of Aesthetics Vol.37 (2), Oxford: Oxford University Press.

Novitz, David. (2001) Post Modernism, Barthes and Derrida in the Routledge Companion to Aesthetics edited by Berys Gaut and Dominic Mciver Lopes. London: Routledge.

Olimpio, Laura, D. (2014) Thought on flim: Critically engaging with both Adorno and Benjamin Educational Philosophy and Theory Vol. 48(6). USA: Philosophical Documentation Centre.

Patriota Da Silva, Raquel. (2022) Cinima and the Arts: Reassessing Theodor Adarno's Late work, Brasil: Centro Brasileiro de Analisee Planejamento.1.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6

அந்நியமாதல் கருத்துநிலையும் ஈழத்துப் புகலிடத் தமிழ் இலக்கியங்களும்

த.மேகராசா [1]

அறிமுகம்

ஒருவர் தனது தாய் நாட்டிலிருந்து வெளியேறிச் சென்று வேறொரு நாட்டில் வாழ்கின்றபோது எழுதுகின்ற இலக்கியங்களை தனியானதொரு வகைப்பாட்டில் குறிப்பிடுகின்ற வழக்கம் உலக இலக்கிய வரலாற்றில் உண்டு. இத்தகைய இலக்கியங்கள் தமிழில் புகலிட இலக்கியம், புலம்பெயர் இலக்கியம், புலம்பெயர்ந்தோர் இலக்கியம், அலைந்துழல்வு இலக்கியம், புலச்சிதறல் இலக்கியம் என்று வெவ்வேறு பெயர்களால் வழங்கப்படுகின்றன. இச்சொற்கள் ஒவ்வொன்றும் நுண்மையான பொருட்செறிவுடையதாகும். இவற்றுள் ளும் புகலிட இலக்கியம், புலம்பெயர் இலக்கியம் ஆகிய இரு சொற்களுமே பெருமளவில் புழக்கத்திலுள்ளன. ஈழத்தில் ஏற்பட்ட இனமுரண்பாட்டுச் சூழல் காரணமாகப் பெருந்தொகையான தமிழர்கள் வெவ்வேறு நாடுகளுக்குப் புலம்பெயர்ந்துசென்ற நிலையில் பெருமளவிலான புகலிடத் தமிழ் இலக்கியங்கள் வெளிவந்தன. இவ்விலக்கியங்கள் ஈழத்துத் தமிழ் இலக்கியத்தின் ஒரு புலமாக வளர்ச்சிபெற்றிருப்பதைக் காணலாம்.

புலம்பெயர்ந்து சென்று ஈழத்து சமூக, பண்பாட்டுச் சூழலிலிருந்து முற்றிலும் மாறுபட்ட சூழலில் ஈழத்தமிழர்கள் எதிர்கொண்ட சிக்கல்கள், அவற்றை எதிர்கொண்ட விதங்கள், உளப்பாதிப்புகள் இவ்விலக் கியங்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றை நுண்மையாக நோக்குகின்றபோது அவற்றில் அந்நியமாதல் தன்மையே மேலோங்கி

1. Dr.T. Megarajah, Lecturer in Tamil, Department of Tamil Studies, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka, Vantharumoolai. e mail: megarajaht@esn.ac.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிருப்பதை அவதானிக்க முடிகின்றது. இவ்வகையில் அந்நியமாதல் கருத்தியலின் அடிப்படையில் எண்பதுகள் தொடக்கம் இரண்டாயிரம் ஆண்டுகள் வரையான காலப்பகுதியில் வெளிவந்த புகலிடத் தமிழ் இலக்கியங்களை ஆராய்ந்து அதனூடாகக் கோட்பாட்டு ஆய்வை முன்னிறுத்துதல், அந்நியமாதல் கருத்து நிலையில் ஈழத்துப் புகலிடத் தமிழ் இலக்கியங்களின் தனித்துவக் கூறுகளை வெளிப்படுத்துதல் என்பவற்றை நோக்கங்களாகக் கொண்டு இவ்வாய்வு அமைந்துள்ளது.

அந்நியமாதல் கருத்துநிலை

பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஏற்பட்ட தொழில் புரட்சியானது வேலை மற்றும் சமூக உறவுகளின் தன்மையில் ஆழமான மாற்றங்களை ஏற்படுத்தியது. தொழிற்சாலைகள் உற்பத்தியின் மேலாதிக்க வழிமுறையாக மாறின. தொழிலாளர்கள் நீண்ட நேரம் வேலை செய்ய வேண்டிய நிலைக்கும் குறைந்த ஊதியத்திற்கும் தள்ளப்பட்டனர். தொழிலாளர் வர்க்கம் தனித்துவமானதொரு சமூகக் குழுவாக இயங்க வேண்டிய தேவை ஏற்பட்டது. இப்பின்புலத்திலேயே மார்க்சியச் சிந்தனைகள் முன்வைக்கப்பட்டன. ஆடம் ஸ்மித், டேவிட் ரிக்கார்டோ, ஜார்ஸ் வில்ஹெல்ம் பிரெடெரிக் ஹெகல் ஆகியோரின் கருத்தியல்களிலிருந்து தனக்குப் பொருத்தமானவற்றைப் பெற்று கார்ல்மார்க்ஸ் தனது மார்க்சியக் கோட்பாட்டைக் கட்டியெழுப்பினார். ஹெகலின் அந்நியப்படுத்தல் பற்றிய கருத்துக்களை கார்ல்மார்க்ஸ் தனது உழைப்பின் பொருள் நிலைமைச் சிந்தனைகளுக்குப் பயன்படுத்தினார். இவ்வடிப்படையில் ஹெகல் மற்றும் கார்ல்மார்க்ஸ் ஆகியோரின் கருத்தியல்களின் ஒரு கூறாக இருப்பது அந்நியமாதல் சிந்தனையாகும்.

கார்ல்மார்க்ஸ் தனது மார்க்சியக் கோட்பாட்டைக் கட்டியெழுப்பினார். ஹெகலின் அந்நியப் படுத்தல் பற்றிய கருத்துக்களை கார்ல்மார்க்ஸ் தனது உழைப்பின் பொருள் நிலைமைச் சிந்தனைக ளுக்குப் பயன்படுத் தினார்.

உற்பத்தி முறைமை, உழைப்பு, சுரண்டல் சார்ந்த பொருள் நிலைக் காரணிகளின் அடிப்படையிலேயே ஆரம்பத்தில் அந்நிய மாதல் தன்மை வலியுறுத்தப்பட்டது. பிற்காலத்தில் இக்கருத்தியல் விரிவாக்கம் பெற்றது. குறிப்பாகப் பொருளாதார அடிப்படையில் மட்டுமன்றி சமூகம், அரசியல், பண்பாடு, கல்வி, தொழில் நுட்பம் முதலான அனைத்து நிலைகள் சார்ந்தும் ஒருவர் அல்லது ஒதுக்கப்படும் சிறு குழுவினர் அந்நியமாதலைச் சுட்டுவதாக விரிவாக்கம் பெற்றது. தற்காலத்தில் ஒருவர் பல்வேறு காரணங்களினடிப்படையில் அந்நியப்படும் நிலை ஏற்படுகின்றது. குடும்பம், சமூகம், நாடு என்ப வற்றிலிருந்தும் நண்பர்கள் மற்றும் உறவினர்களிடமிருந்தும் பிரிதல்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழி, சாதி, நிறம், தொழில், கல்வி, சார்ந்து ஒதுக்கப்படுதல் அந்நியமாதல் என்று கூறலாம். வீட்டாரால், உறவினர்களால், நண்பர்களால், தான் வாழும் சமூகத்தால் அன்பும் அரவணைப்பும் மறுக்கப்படுகின்ற போது அல்லது தன்னை ஒதுக்கிக் கொள்கின்றபோது ஒருவர் அந்நியப்படுத்தப்படுகின்றார். கூட்டுக்குடும்பச் சிதைவுச் சாதிப் பிரிவினைகள், பொருளாதார ஏற்றத் தாழ்வுகள், தொழில், கல்வித்தரம் என்று வெவ்வேறு காரணங்களினடிப்படையில் ஈழத்திலிருக் கின்றவர்களும் சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கேற்ப அந்நியமாதலை எதிர்கொள்ளவேண்டி ஏற்படுகின்றபோதிலும் புலம்பெயர்ந்து சென்ற தமிழர்கள் கூடுதலான அளவு அந்நியமாதலுக்கு உட்படும் நிலை ஏற்பட்டது. இதனடிப்படையில் இவ்வாய்வில் அந்நியமாதல் கருத்து நிலையின் அடிப்படையில் ஈழத்துப் புகலிடத் தமிழ் இலக்கியங்கள் பண்பாட்டு அந்நியமாதல், இருத்தலியல் அந்நியமாதல், பொருளாதார அந்நியமாதல், அரசியல் அந்நியமாதல், சுய அந்நியமாதல் என்றவாறு பிரித்து நோக்கப்படுகின்றன.

பண்பாட்டு அந்நியமாதல்

மனிதனால் சமூகரீதியாகக் கட்டமைக்கப்பட்ட உலகத்திலிருந்தே அவனது சமூக பண்பாட்டு உருவாக்கமும், சமூக உளவியல் உருவாக்கமும் உருப்பெறத் தொடங்குகின்றன. தமக்குரிய உலகினையும், நியமங்களையும் மனிதர் கட்டமைத்துக்கொள்வதில் அவர்களுடைய உயிரியலும், சூழலும் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. ஒவ்வொரு சமூகத்தினதும் வாழும் சூழல் வேறுபடுவதனால், பண்பாடும் வேறுபடுவதுடன், பண்பாடும் பலவாதல் தவிர்க்கமுடியாது போகிறது (கிருஸ்ணராஜா,சோ.,2010:17). ஈழத்துப் பண்பாட்டுச் சூழலுக்குள் வாழ்ந்த தமிழ்ச் சமூகம் புலம்பெயர்ந்து வெவ்வேறு நாடுகளில் அகதிகளாகச் சென்றபோது பண்பாடு சார்ந்த சிக்கல்களை எதிர்கொள்ளும் நிலை ஏற்பட்டது. சுய பண்பாட்டு மனநிலையிலிருந்துகொண்டு தஞ்சம் நாடிச்சென்ற நாடுகளின் பண்பாட்டை எதிர்கொள்வது சவால்மிக்கதாக இருந்தது. குறிப்பாக புலம்பெயர்ந்து சென்ற மூத்த தலைமுறையினர் தமிழ்ப்பண்பாட்டினைப் புகலிட நாடுகளிலும் இறுக்கமாகப் பேண முற்பட்டனர். அதேவேளை புதிய பண்பாட்டை எதிர்க்கவும் முற்பட்டனர். எனினும் அடுத்துள்ள இரண்டாம் மூன்றாம் தலைமுறையைச் சார்ந்தவர்களில் பெரும்பாலானோர் புகலிடப் பண்பாட்டுக்கு இயைவாக்கமடைய வேண்டியவர்களாக இருந்தனர். வாழுகின்ற சூழலின் பண்பாடு அங்கு வாழ்கின்ற மனிதர்களின்

மனிதனால் சமூக ரீதியாகக் கட்டமைக் கப்பட்ட உலகத்திலிருந்தே அவனது சமூக பண்பாட்டு உருவாக் கமும், சமூக உளவியல் உருவாக் கமும் உருப்பெறத் தொடங்கு கின்றன. தமக்குரிய உலகினையும், நியமங் களையும் மனிதர் கட்டமைத்துக் கொள்வதில் அவர் களுடைய உயிரியலும், சூழலும் முக்கிய இடத்தைப் பெறு கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பாடாகவும் அமையும். பெற்றோர் தமது பிள்ளைகளை தாய் நாட்டுப் பண்பாட்டுக்கு ஏற்ப வளர்க்க முற்பட்டனர். வாழும் நாட்டின் பண்பாட்டுக்கு ஏற்ப பிள்ளைகள் மாறமுற்பட்டனர். இதனால் முரண்பாடுகளும் மனமுறிவுகளும் ஏற்பட்டன. இவ்விரு பிரிவினரும் பண்பாடு சார்ந்த அந்நியமாதலை எதிர்கொண்டனர். பண்பாட்டு நிலை சார்ந்த முரண்நிலை மனமுறிவுகளுக்கும் தனிமைப்படுத்தல்களுக்கும் வழிவகுத்தது.

ஒருவனுக்கு ஒருத்தி அல்லது ஒருத்திக்கு ஒருவன் என்ற கருத்தியலை மையப்படுத்திய ஈழத்தமிழரின் கற்புக்கோட்பாட்டு மனப்பாங்கே புகலிட தேசங்களில் பண்பாட்டு அந்நியமாதல் சார்ந்த பெரும்பாலான சிக்கல்களுக்கு மூல காரணியாக அமைந்தது. தெய்வீகம், விழுமியம், ஒழுக்கம் முதலானவற்றால் மூடப்பட்டதாகவும் சமூகத் தண்ட னையால் அச்சுறுத்தப்பட்டதாகவும் காணப்பட்ட தமிழரின் திருமண நடைமுறைகள் திறந்த பாலுறவுப் பண்பாட்டில் சிக்கல்களை எதிர்கொண்டது. திருமணத்திற்கு முந்திய பாலுறவும் ஒருவர் பலருடன் உடலுறவு கொள்வதும் கற்புப் பண்பாட்டு நோக்கில் மிகப்பெரும் பண்பாட்டு மீறல்களாகக் கருதப்பட்டன. இதனால் விருப்பம் - விருப்பமின்மை அல்லது ஏற்பு – ஏற்பின்மை என்ற இருமுரண் நிலைகளில் மன உடைவுகள் ஏற்பட்டன.

ஒருவனுக்கு ஒருத்தி அல்லது ஒருத்திக்கு ஒருவன் என்ற கருத்தியலை மையப்படுத்திய ஈழத்தமிழரின் கற்புக்கோட்பாட்டு மனப்பாங்கே புகலிட தேசங்களில் பண்பாட்டு அந்நியமாதல் சார்ந்த பெரும்பாலான சிக்கல்களுக்கு மூல காரணியாக அமைந்தது.

குழந்தை வளர்ப்பும் சிக்கல்களும்

குழந்தைகள் தாம் பிறந்து வாழும் பண்பாட்டுச் சூழலுக்கேற்றவாறு நடந்து கொள்ள முற்படுகின்றார்கள். பெற்றோர் தமது தமிழ்ப் பண்பாட்டைத் தமது பிள்ளைகள் பின்பற்ற வேண்டுமென்று கருது கிறார்கள். இந்தப் பண்பாட்டு முரண் குழந்தை வளர்ப்பில் பாரிய சிக்கலை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது. குறிப்பாக, முதலாவது தலைமுறையைச் சார்ந்த பெரும்பாலான தமிழர்களின் மனநிலை தமது பண்பாடு அழிந்துவிடும் என்பதேயாகும். பின்னுள்ள உரைப்பகுதிகள் இதனை ஆதாரப்படுத்துகின்றன:

> எங்கடை கலாசாரம், மொழி அழியப் போகுது. அது இப்பவே கொஞ்சம் அழிஞ்சு போச்சிது. இனியொரு காலத்தில சிங்கப்பூர், மலேசியாவில இருக்கிற தமிழர்கள் மாதிரித்தான் வரப்போகிது. இங்க வளர்ற பிள்ளைகளுக்கு மரியாதை எண்டா என்னெண்டு தெரியாது. பொம்பிளயளெல்லாம் தங்களுக்குச் சுதந்திரம் கிடைச்சிட்டிது எண்டிட்டு ஆடித்திரியினம். பொம்பிளப்பிள்ளையள நினைச்சா இன்னும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயமாயிருக்கு. தங்களுக்கு மொழி தெரியும் எண்டு திமிர். எங்களுக்கு ஒண்டும் விளங்காது எண்டு பேக்காட்டுதுகள் (நிருபா,2005:57)

பதினாறு வயது பருவ மகளை இரவு பன்னிரண்டு மணியாகியும் காணவில்லையென ஒரு தகப்பன் தேடிக்கொண்டு திரிகின்றார். மகளைக் காணவில்லையென தாய், வீட்டில் வழிமேல் விழிவைத்து ஒவ்வொரு இரவும் காத்திருக்கிறார் (வரதராஜா,வீ,ஆர்., 1999:20)

வெளிநாட்டு வாழ்க்கை போதும். இந்தச் சீரழிவுகள் இனியும் தேவையில்லை. எமது நாடு எமக்குத் தேவை. கஞ்சியோ கூழோ குடித்துக்கொண்டு அங்கு நாம் நிம்மதியாக வாழவேண்டும் (மேலது).

இத்தகைய மனநிலையுடனையே பிள்ளைகளை வளர்க்க முற் படுகின்றனர். இக்கருத்துக்களை பிள்ளைகள் ஏற்றுக்கொள்ளாத நிலையில் மனமுறிவுகளுக்கு உட்படுகின்றனர். இத்தன்மை பிள்ளை களிடமிருந்து பெற்றோரையும் பெற்றோரிடமிருந்து பிள்ளைகளையும் அந்நியப்படுத்துவதாக அமைந்தது. ஜீவகுமாரனின் ஆமினா பேகம் சிறுகதையில் வரும் பூஸா நண்பர்களுடன் சேர்ந்து வைன் குடிப்பவளாகவும் பெற்றோரின் விருப்பத்தை மீறி முஸ்லீம் இளை ஞனைக் காதலிப்பவளாகவும் காணப்படுவதும் அதனைப் பெற்றோர் கண்டித்தபோது பொலிசுக்கு அறிவித்து பொலிசாரின் பாதுகாப்புடன் வீட்டிலிருந்து வெளியேறி காதலனின் வீட்டுக்குச் செல்பவளாகவும் படைக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

தமது நண்பர்களின் பிறந்தநாள் நிகழ்வுகளுக்கு இரவில் சென்று நேரம் கடந்து வருவது, குடிபோதைக்கு அடிமையாகுவது, பாலியல் தொடர்புகளை வைத்துக்கொள்வது அனைத்துமே சாதாரண மானவையாகிப்போன ஐரோப்பியச் சூழலில் தமது பிள்ளைகள் வீட்டைவிட்டு இரவுநேரத்தில் வெளியே செல்வதை விரும்பாத பெற்றோர்கள் அதனைக் கண்டிக்கின்றனர். இதனாலும் பிள்ளை களுக்கும் பெற்றோருக்குமிடையில் முரண்பாடு ஏற்படுகின்றது. பிறந்த நாள் நிகழ்வுக்குச் செல்லவிடாது தனது தந்தை தடுத்தமையால் சிறுமியொருத்தி உளரீதியாகப் பாதிக்கப்படுவது சந்திரவதனாவின் சிறுகதையில் பின்வருமாறு வருகிறது:

இண்டைக்கு மிகைலாவின்ரை பிறந்தநாள். ஆறு மணியிலை இருந்து பத்து மணி வரை பார்ட்டி. என்ரை வகுப்புப் பிள்ளையள் எல்லாரும் போவினம்.

'அதென்ன இரவிலை பார்ட்டி! நாங்கள் ஜேர்மனியிலை வாழ்ந்தாலும் சிறீலங்கன்ஸ்தான். அதை மறந்திடாதை' எண்டு அப்பா கோவமாய்ச் சொல்லித் தடுத்துப் போட்டு குசினிக்குள்ளை போய் அம்மாட்டை 'இஞ்சை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரும், இப்பிடி பார்ட்டி அது இதெண்டுபோய்த்தான் பிள்ளையள் கெட்டுப் போகுதுகள். அவளுக்குச் சொல்லி வையும், இனி இப்பிடியான விசயங்களுக்குப் போப்போறன் எண்டு என்னைக் கேட்கக் கூடாதெண்டு' கத்துறார். எனக்கு அழோணும் போலை இருந்திச்சு.

ஏதோ, வெளிநாட்டுக்காரர் பிள்ளையளை வளர்க்கிறது சரியிலை எண்ட மாதிரி என்ரை அப்பா, அம்மா, அவையின்ரை சினேகிதர்கள் எல்லாரும் சேர்ந்து கதைப்பினம். ஆனால் உண்மையிலை வெளிநாட்டுக் காரர்தான் பிள்ளையளின்ரை மன உணர்வுகளுக்கு மதிப்புக் குடுத்து வளர்க்கினம் எண்டது இவையளுக்குத் தெரியேல்லை. இதுகளை நான் சொல்லப் போனால் இவையள் கேட்பினமே! (2007:97)

ஐரோப்பியரின் பண்பாட்டில் வெளிப் படையான பாலியல் நடத்தை, திருமணத்திற்கு முந்திய பாலுறவு, பலதார மணமுறை என்பன புரிந்து கொள்ளப் பட்டவையாக உள்ளன. இதற்கு ஏற்புடை யனவாகவே அவர்களின் குடும்ப, சமூக அமைப்புகள் காணப் படுகின்றன.

வெளிநாட்டுக்காரர் பிள்ளைகளை வளர்ப்பது சரியல்ல என்று தமது பெற்றோர்கள் நினைக்கின்றார்கள் என்றும் ஆனால் தமது பெற்றோரே பிழையாகப் பிள்ளைகளை வளர்க்கின்றார்கள் என்றும் சிறுமி கருதுவது இங்கு வெளிப்படுகின்றது. பெற்றார் பிள்ளைகளுக்கிடையிலான முரண்பட்ட பண்பாட்டு நோக்கும் அதனால் அந்நியமாகிப்போகும் தன்மையும் இதில் காட்டப்பட்டுள்ளது.

ஐரோப்பியரின் பண்பாட்டில் வெளிப்படையான பாலியல் நடத்தை, திருமணத்திற்கு முந்திய பாலுறவு, பலதார மணமுறை என்பன புரிந்து கொள்ளப்பட்டவையாக உள்ளன. இதற்கு ஏற்புடை யனவாகவே அவர்களின் குடும்ப, சமூக அமைப்புகள் காணப் படுகின்றன. ஐரோப்பியரிடையே பாலியல் ஒரு தொழிலாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இளமையிலேயே குழந்தைகளுக்குப் பாலியல் கல்வி ஊட்டப்படுகிறது. கர்ப்பத்தடைகளுக்கான மாத்திரை களைப் பயன்படுத்துவது முக்கியமான நடைமுறையாக பாடசாலை மட்டத்திலேயே வலியுறுத்தப்படுகின்றது. இது தமிழர்களுக்குப் புதியதும் அதிர்ச்சி தருகின்றதுமான விடயமாகவே புலம்பெயர்ந்த ஆரம்ப காலங்களில் உணரப்பட்டது. தாயகப் பண்பாட்டுக்கு ஏற்ப தமது பிள்ளைகளை வளர்க்க எத்தனித்து அது முடியாமல் போனமையால் தமது பண்பாட்டைப் பாதுகாக்கத் தவறிய மனநிலையை அடைந்தனர்.

ஜீவகுமாரனின் கடவுச்சீட்டு நாவலில் பள்ளிக்கூடத்தில் கல்வி கற்கும் சுமிதா என்ற மாணவி தனது ஏனைய மாணவர்களுடன் சேர்ந்து சுற்றுலாவுக்குச் சென்ற வேளையில் கர்ப்பமுறுகிறாள். அம்மாணவியின் பெற்றோர் ஆசிரியிடம் முறையிட்டபோது கர்ப்பத் தடைக்குரிய மாத்திரையைக் கொடுத்து அனுப்பாத பெற்றோரிடமே தவறு உள்ளதென்றும் கர்ப்பத்தடை மாத்திரைகளை எடுத்துவருமாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறுவது பாடசாலை நிருவாகத்தின் கடமையல்ல என்றும் அவ்வாசிரியர் குறிப்பிடுகின்றார். இதனால் அம்மாணவியின் பெற்றோர் தமது மகளை ஒழுக்கமுடன் வளர்க்க இயலாதவர்களாக இருந்துவிட்டோமே என்று வருந்துகின்றனர்.

முதன்முறையாக உடலுறவில் ஈடுபடும்போது பெண்ணுறுப் பினூடாக இரத்தம் வெளியேறல்/ வெளியேறாமையை அடிப் படையாக வைத்து ஒரு பெண்ணின் கற்பை மதிப்பிடும் நிலை தமிழ்ச் சமூகத்தில் காணப்படுகின்றது. இந்த மனப்பாங்கும் தமிழ்ப் பண்பாட்டினூடாகவே கட்டியெழுப்பப்பட்டதாகும். கற்பை மதிப்பிடும் ஆண்களின் இந்த அளவுகோலால் பெண்கள் பாதிக்கப் படுவதும் தொடர்கிறது. இந்நிலைப்பாடு ஆண்பெண் இருவருக் கிடையே மணமுறிவுக்கு குறிப்பாகப் பெண்ணை அந்நியமாதல் நிலைமைக்கு இட்டுச் செல்வதாகவும் அமைந்தது. நிருபாவின் 'விட்டு விடுதலையாகி' என்ற சிறுகதையில் தனது மனைவியுடன் முதன் முதலாக உடலுறவு கொள்ளும் கணவன் அவளின் பெண்ணுறுப் பிலிருந்து இரத்தம் வெளிவரவில்லையென்பதால் அவள் ஏற்கனவே பாலுறவுத் தொடர்பைப் பேணியுள்ளாள் என்ற சந்தேகத்தில் அவளை வெறுக்கிறான். அதனால் அவள் மனமுடைவுக்கு உட்படுவது எடுத்துக் கூறப்படுகிறது.

> பெண்பிள்ளைகள் பருவமெய்துதல் சார்ந்த சடங்கு நடை முறைகளும் புகலிட நாட்டுச் சூழலில் ஒரு பண்பாட்டுச் சிக்கலாக மாறியுள்ள அதேவேளை உளவியல் சார்ந்த பாதிப் பினையும் அதன் காரணமாக அந்நியமாதல் தன்மையி னையும் ஏற்படுத்தக் கூடியதாகவும் உள்ளது.

பெண்பிள்ளைகள் பருவமெய்துதல் சார்ந்த சடங்கு நடை முறைகளும் புகலிட நாட்டுச் சூழலில் ஒரு பண்பாட்டுச் சிக்கலாக மாறியுள்ள அதேவேளை உளவியல் சார்ந்த பாதிப்பினையும் அதன் காரணமாக அந்நியமாதல் தன்மையினையும் ஏற்படுத்தக் கூடியதாகவும் உள்ளது. இப்பருவமெய்தல் சடங்கு (சாமத்தியச்சடங்கு), புகலிட நாட்டுப் பண்பாட்டுடன் இயைபுற்று வாழுகின்ற (அந்நாடுகளிலே பிறந்து வாழ்கின்ற) பிள்ளைகளால் தேவையற்றதொரு விழாவாக நோக்கப்படுகின்றது. இதற்கு அடிப்படையான காரணம் மேலைத்தேயப் பண்பாட்டில் பருவமெய்துதல் உடலில் ஏற்படும் ஒரு பருவ மாற்றமாகவும் சாதாரணமானதொரு விடயமாகவும் பார்க்கப்படுவதேயாகும். அது மாத்திரமன்றி தமிழ்ச் சமூகத்தில் இளையோர் மத்தியிலும் பெண்ணியச் சிந்தனைகள் முகிழ்ப் புப்பெற்றுள்ளன. 'வயதுக்கு..' என்ற கதையில் தான் பருவ மெய்தியதை அறிந்தால் பெற்றோர் தனது கருத்தை மறுதலித்து அதனை ஒரு பெருவிழாவாக ஏற்பாடு செய்வார்கள் என்றும் அவ்வாறு நடைபெற்றால் தன் நண்பர்களாலும் பாடசாலைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகத்தாலும் தான் கேலிக்குள்ளாக்கப்பட்டு ஒதுக்கப்படும் நிலை ஏற்படும் என்றும் கருதி தான் பருவமெய்த விடயத்தையே மூன்று வருடமாக ஸ்ரீவேணி மறைத்து வருகிறாள். மகள் விரைவில் பருவ மெய்யவேண்டுமென்பதற்காக பெற்றோர் கோயில்கள் தோறும் நேர்த்திக் கடன்களை வைத்துவருகின்றனர். இறுதியில் ஸ்ரீவேணி மனநிலை பாதிப்புக்குள்ளாக்கப்படுகின்றாள்.

இவ்வாறு புகலிடச் சூழலில் குழந்தை வளர்ப்பு ஒரு சவாலாகக் காணப்பட்டமையினையும் பெற்றோரால் பிள்ளைகளும் பிள்ளைகளால் பெற்றோரும் என இரு பகுதியினரும் அந்நியமாதல் நிலைமையை எதிர்கொள்ளவேண்டியிருந்தமையினையும் இப்படைப்புகள் புலப்படுத்துகின்றன.

சாதியை முன்னிறுத்தி தம்மை மேலாண்மையுடைய வர்களாகக் கட்டமைத்த அதிகாரத்துவச் சமூகம், அதனை இன்னொரு சமூகத்தை ஒடுக்குகின்ற ஆயுதமாகப் பாவிக்கும்போது சாதி சார்ந்த பிரச்சினைகளும் அதனால் அந்நியமாதலும் எழுகின்றன.

சாதிய மேலாதிக்கம்

பண்பாட்டு அடிக்கட்டுமானங்களுள் ஒன்றாக சாதியும் காணப்படுகின்றது. சாதியை முன்னிறுத்தி தம்மை மேலாண்மையுடையவர்களாகக் கட்டமைத்த அதிகாரத்துவச் சமூகம், அதனை இன்னொரு சமூகத்தை ஒடுக்குகின்ற ஆயுதமாகப் பாவிக்கும்போது சாதி சார்ந்த பிரச்சினைகளும் அதனால் அந்நியமாதலும் எழுகின்றன. குறிப்பாக உயர் சாதியெனப்பட்டோர் தமக்கான சாதி நடைமுறைகளைப் பேணுவதைக் கௌரவத்திற்குரியதாக நோக்குகின்றனர். இந்தச் சாதிப்பெருமிதத்தால் உருவாகிய அதிகார மையம் மேலாண்மை பெற்றமையால் அவ்வதிகார மையத்திற்கு புறம்பாக்கப்பட்ட அல்லது ஒதுக்கப்பட்ட மக்கள் பல நிலைகளிலும் பிரச்சினைகளை எதிர் கொள்ள வேண்டியிருந்தது. சாதிய மேலாதிக்கம் காரணமாக தாழ்ந்த சாதிக்காரர்களை இவ்வாறுதான் வழிநடத்தவேண்டுமென்ற நிலைப்பாடு உயர்சாதியினரிடையே பலமான அதிகார முன்னெடுப்பாகக் காணப்படுகின்றது. அதனாலேயே இலங்கையில் சாதியப் பெருமை கொண்ட சமூகத்தின் ஒரு பிரிவினர் புலம்பெயர்ந்து சென்ற நாடுகளிலும் அதனைக் கைவிடாது தொடருகின்றனர். தம்மைச் சமூகத்தில் உயர்ந்தவர்களாக நிரூபிப்பதற்கு சாதியொடுக்குமுறையைப் பயன்படுத்துகின்றனர். பார்த்திபனின் 'தீவு மனிதன்' சிறுகதையிலும் ஓரிடத்தில் சிறுவர்களாக ஒன்றாக இணைந்து விளையாடியபோது தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த சிறுவன் ஏனையோரிலிருந்து ஒதுக்கப்பட்டமையும் அதனால் அச்சிறுவன் அடைந்த வேதனையும் எடுத்துக்கூறப்படுகின்றன. ஜீவகுமாரனின் 'கழிப்பு' கதையிலும் 31ம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாள் நிகழ்வுக்குச் சென்ற வேளையில் சாதியினால் தாழ்த்தப்பட்ட நான்கு பேருக்கும் தேநீர் பரிமாறுவதில் வேறுபாடு காட்டப்பட்டமை குறிப்பிடப்படுகின்றது. இதனால் அந்நால்வரும் அங்கிருந்தோரிலிருந்து வேறுபிரிக்கப்பட்டு அந்நியப்படுத்தப்படுவதும் அதனால் அவர்கள் வேதனையடைவதும் எடுத்துக்கூறப்பட்டுள்ளது. சாதனா எழுதிய 'அக்கா' என்ற சிறுகதை சாதி குறைந்த ஒருவரைத் திருமணம் செய்த பெண்ணுக்கும் அதனை ஏற்றுக்கொள்ளாத அப்பாவுக்கும் இடையிலான முரண்பாட்டால் பெண் வீட்டை விட்டு வெளியேறியமையினை எடுத்துக்கூறுகின்றது.

அகதியாகப் புலம்பெயர்ந்து சென்ற தமிழர்கள் அறைகளில் தங்க வைக்கப்பட்டனர். அவர்களிடையேயும் சாதி மேலாண்மை காரணமாக ஒடுக்குதல்கள் இடம்பெற்றன. இதனை தேவாவின் 'ஊசி இருக்கும் இடம்கூட...' என்ற சிறுகதை சிறந்தமுறையில் எடுத்துக் கூறுகின்றது. குறிப்பாக ஜேர்மனிக்குப் புகலிடம் தேடிச் சென்று அகதியாக தங்க வைக்கப்பட்டிருந்த சந்திரன் என்ற தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த இளைஞன் அதே அறையில் தங்கவைக்கப்பட்ட சிவசோதி, தாமோதரம் ஆகிய உயர் சாதிக்காரர்களால் துன்புறுத்தப்படுவதையும் ஒடுக்கப்படுவதையும் எடுத்துக்கூறுகின்றது. அகதியாகச் சிதறுண்டு வாழும் துன்பநிலை ஏற்பட்ட போதிலும் தமிழர்களிடம் சாதி மேலாண்மைத்துவம் இல்லாமற் போகவில்லை என்பதற்கு இச்சிறு கதை சிறந்த எடுத்துக்காட்டாகவுள்ளது. இதேபோன்று உமாவின் 'எழுதப்பட்டுக்கொண்டிருக்கும் கதை' என்ற சிறுகதையும் அமைந் துள்ளது.

மொழிப் புறக்கணிப்பும் அடையாளமிழப்பும்

கருத்துப் பரிமாற்றத்திற்கும் சமூக அடையாளப்படுத்தலுக்கும், சமூக இயைபாக்கத்திற்கும் மொழி இன்றியமையாத சாதனமாகும். ஒருவர் தனது தாய்மொழியைப் பேசமுடியாத நிலைக்கு உள்ளாவதென்பதும், தாய்மொழிச் சமூகக் குழுவிலிருந்து அந்நியமொழிச் சூழலுக்குள் தனித்து விடப்படுவதென்பதும் அடையாளமிழப்பையும் அதன்மூலம் அந்நியமாதல் நிலையையும் உருவாக்குகின்றன. தனிச்சிங்களச்சட்டம் கொண்டு வரப்பட்டதிலிருந்தே தமிழர்கள் தாய்நாட்டில் தமது மொழியை இழந்த துயரையும் அதன் காரணமாக எதிர்ப்பினையும் வெளிப்படுத்தத் தொடங்கினர். முற்றிலும் புதிய பண்பாட்டுச் சூழலுக்குள் புகலிடம் தேடிச் சென்றபோதும் தமது மொழியை இழந்த துயரை எதிர்கொண்டனர்.

ஒருவர் தனது தாய்மொழியைப் பேசமுடியாத நிலைக்கு உள்ளாவ தென்பதும், தாய்மொழிச் சமூகக் குழுவிலிருந்து அந்நியமொழிச் சூழலுக்குள் தனித்து விடப்படுவ தென்பதும் அடையாளமிழப் பையும் அதன்மூலம் அந்நியமாதல் நிலையையும் உருவாக்கு கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகலிட நாடுகளின் தேசிய மொழியையே பேசவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். பெற்றோர்களில் சிலரும் தமது பிள்ளைகள் தாம் வாழும் புகலிட நாட்டு மொழிகளைப் பேசுவதைப் பெருமிதமாகக் கருதுகின்றவர்களாகக் காணப்பட்டனர். கரவை மு.தயாளனின் 'ஜெர்மனிய வீடுகளில்...' என்ற சிறுகதையில் தமிழ்க் குடும்பங்களின் பிள்ளைகள் தமிழை மறந்து போனமை வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அதேவேளை புகலிடம்(அரசியல் தஞ்சம்) பெற்ற நாட்டு மொழியைப் பேசுவதில் தமது பிள்ளைகள் சிறந்து விளங்கிய போதிலும் அது தமது தாய்மொழி இல்லை என்ற அடிப்படையில் புறக்கணிக்கப்படுகின்றமையும் காணப்படுகின்றது. நிருபாவின் 'உங்களுடைய மகள் நல்ல கெட்டிக்காரி' என்ற சிறுகதை இதனைக்குறிப்பிடுகின்றது.

புகலிடம்(அரசியல் தஞ்சம்) பெற்ற நாட்டு மொழியைப் பேசுவதில் தமது பிள்ளைகள் சிறந்து விளங்கிய போதிலும் அது தமது தாய்மொழி இல்லை என்ற அடிப்படையில் புறக்கணிக்கப் படுகின்றமையும் காணப் படுகின்றது.

தமிழ் மொழியைப் பேசத் தெரியாமை காரணமாகத் தமது அடையாளமிழந்து ஈழத்துப் பண்பாட்டிலிருந்து அந்நியமாகிப் போவதுடன் புகலிடச் சூழலிலும் அந்நாடுகளின் மொழிகள் தமக்குத் தாய்மொழி அல்ல என்ற விதத்தில் ஒதுக்கப்பட்டு அந்நியமாக் கப்படுவதையும் கலப்புறு சமூகமாக மாற்றமடைவதையும் பல படைப்புகள் வெளிப்படுத்துவதைக் காண முடிகிறது.

நிறவாதம்

சமூகத்தில் ஒருவரை அந்நியப்படுத்தும் காரணிகளுள் நிறமும் ஒன்று. ஒரு தன்மையான நிறக் குழுமமாக ஈழத்தில் வாழ்ந்த தமிழர்கள் சிதறி பல்வேறு நாடுகளில் வாழத் தலைப்பட்டபோது நிறம் சார்ந்த ஒடுக்குதலுக்கும் பேதங்காட்டலுக்கும் உள்ளாக்கப்பட்டனர். வெள்ளையர் - கறுப்பர் என்ற சமூகப் பிரிவினையின் கொடூரத்தை முதன்முதலாக உணரத் தொடங்கினர். இவ்வொடுக்கு முறைகளை பாடசாலைகள், தொழில் புரியும் இடங்கள், பேருந்து நிலையங்கள், கடைகள், பொதுவிடங்கள் என அனைத்து நிலைகளிலும் எதிர் கொண்டார்கள்.

இலங்கையில் தாம் எதிர்நோக்கிய அடக்குமுறைகளை வேறொரு வகையில் புகலிடத் தமிழர்கள் புலம்பெயர்ந்த நாடுகளில் எதிர் நோக்கினர். பார்த்திபன் 'கனவை மிதித்தவன்' நாவலில் இலங்கை அகதிகளை நவநாஜிகள் விரட்டித் துன்புறுத்துவதையும் அந்நிலையில் அந்நியமாதல் நிலையை உணர்வதையும் வெளிப்படுத்தியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜேர்மனியில் அகதிகளின் குடிசைகளை நாஜிகள் எரித்தபோது அதில் துரிக்கி நாட்டைச் சேர்ந்த 'ஆயஸ்' என்ற சிறுமி கொல்லப்பட்டமையை மையப்பொருளாகக் கொண்டு நிருபா எழுதிய 'நேற்று இன்று நாளை' என்ற கவிதை நிறவாத ஒடுக்குமுறையையும் அந்நியத்தன்மையினையும் சிறப்பாக வெளிப்படுத்துகின்றது. ஜேர்மனியில் பிறந்த தமிழ்ச்சிறுமி வளர்ந்தவளாகி தான் ஏனையவர்களிடமிருந்து வேறுபட்டு இருப்பது தொடர்பாகவும் துருக்கித் தோழி எரிக்கப்பட்டமை தொடர்பாகவும் தாயிடம் பல்வேறு வினாக்களைத் தொடுக்கும் பாணியிலும் நிருபாவின் கவிதை அமைகிறது. அக்கவிதையின் பின்வரும் பகுதிகள் முக்கியமானவையாகும்:

ஜேர்மனியில் பிறந்த தமிழ்ச்சிறுமி வளர்ந்த வளாகி தான் ஏனையவர் களிடமிருந்து வேறுபட்டு இருப்பது தொடர்பாகவும் துருக்கித் தோழி எரிக்கப்பட்டமை தொடர் பாகவும் தாயிடம் பல்வேறு வினாக் களைத் தொடுக்கும் பாணியிலும் நிருபாவின் கவிதை அமைகிறது.

அம்மா!
நாங்கள் ஏன் அகதிகளானோம்?
என் தாய் நாடு எங்கே?
என் தாய் மொழி எது?
நாங்கள் ஏன் கறுப்பர்களாயிருக்கிறோம்?
அவர்களால் ஏன்
ஒதுக்கப்படுகிறோம்?
துருக்கித் தோழி ஏன்
எரிக்கப்பட்டாள்? (1993:4-5)

ஒருவர் தன் தாய் நாடு, தாய்மொழி எதுவென்று தெரியாமல் இருத்தல் என்பது தன்னினக் குழுமத்திலிருந்தும் வாழும் சமூகத்திலிருந்தும் வேறுபடுத்தப்பட்ட அந்நிய நிலையாகும்.

பார்த்திபனின் 'நாளை' சிறுகதை, ஜேர்மனிய பாடசாலையில் கல்வி கற்கும் தமிழ்ச்சிறுவனான வினோத், மார்க்கோஸ் என்ற வெள்ளை இனச் சிறுவனால் 'கறுப்பன்' என்றும் 'கறுப்பனே உனது நாட்டுக்குப்போ' என்றும் கூறி துன்புறுத்தப்படுவதை எடுத்துக் கூறுகின்றது. ஜேர்மனில் தமிழ்ச்சிறுவர்கள் நிறவாதத்தால் பாதிக்கப்படுவதையும் வெள்ளையின நண்பர்களால் ஒதுக்கப்படுவதையும் அவர்களிடமிருந்து அந்நியமாக் கப்பட்டு உளவியல் பாதிப்புக்குட்படுவதையும் இச்சிறுகதை வலியுடன் எடுத்துரைக்கின்றது.

'உன்னுடைய நாட்டுக்குத் திரும்பிப் போ'
பின்னால் மார்க்கோஸ் கத்துவது வினோத்துக்குக் கேட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணீர்த் துளியொன்று வலிக்கும் கன்னத்தைத் தடவி விழுந்தது.
'எந்த நாடு?'
'நான் எங்க போக வேணும்?'
'நான் ஏன் இங்க இருக்க வேணும்?'
'என்னோட படிக்கிற எல்லாரும் வெள்ளையாயிருக்க நான் மட்டும் ஏன் கறுப்பாயிருக்க வேணும்?'
'நான் கதைக்கிற பாசை மட்டும் ஏன் வேறயாயிருக்க வேணும்?'
'ஏன் என்னோட ஒருத்தரும் வடிவாப் பழகினமில்லை?'
'ஏன் மார்க்கோஸ் அடிச்சவன்?'
எந்த ஒரு கேள்விக்கும் வினோத்தால் விடை தெரிந்துகொள்ள முடியவில்லை. தன்னை எல்லோரும் விரட்டுவது போலவும், கேலி செய்வது போலவுமான உணர்வு அவனை வருத்தியது.
....

வினோத் களைத்துத் தூங்கிப் போயிருந்தான். கனவில் மார்க்கோஸ் வந்து 'கறுப்பனே உனது நாட்டுக்குப் போ' என்று காலால் உதைத்தான் (2017:87-89).

பாடசாலையில் கற்கின்ற சக மாணவர்கள் தம்மை நிற ரீதியாக வேறுபாடுகாட்டி ஒதுக்குவதை இராஜன் முருகவேலின் 'சிறுதுளி' என்ற சிறுகதையிலும் காணலாம்.

'யாரும் அவனுக்கு ஆதரவாகக் கதைக்கவுமில்லை. நடந்ததை விசாரிக்கவுமில்லை' என்ற வினோத்தின் கூற்று அங்கிருந்த ஏனையவர்களும் மார்க்கோஸ் என்ற சிறுவனின் மனநிலையிலேயே இருந்துள்ளார்கள் என்பதையும் அக்கூட்டத்திலிருந்து அந்நியப்படுத்தப் பட்ட ஒருவராகவே வினோத்தும் காணப்பட்டுள்ளான் என்பதையும் புலப்படுத்துகின்றது.

பாடசாலையில் கற்கின்ற சக மாணவர்கள் தம்மை நிற ரீதியாக வேறுபாடுகாட்டி ஒதுக்குவதை இராஜன் முருகவேலின் 'சிறுதுளி' என்ற சிறுகதையிலும் காணலாம். தந்தைக்கும் மகளுக்கும் இடையில் நடைபெறும் உரையாடலில் இதனை வெளிப்படுத்தியுள்ளார் ஆசிரியர்:

அப்பா இந்தப்படம் நல்லாயில்லை.
நீங்கள் பொய் சொல்லுறீங்கள்!
ஏனடா...?
எல்லாம் கறுப்பாய்க் கிடக்கு. கலர் குடுத்திருக்கலாம்தானே....
நான் குடுக்கட்டே....
கறுப்பும் வடிவுதாண்டா.....
இல்லை.... கறுப்பு அழுகல். எனக்குப் பிடிக்காது. பள்ளிக்கூடத்திலை பெஞ்சமின்கூடச் சொல்லுறான்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னெண்டு....?
நான் கறுப்பாம். என்னோடை விளையாட மாட்டன் எண்டு...
(1995:42-43)

கறுப்பென்றும் உன்னுடன் விளையாடமாட்டேன் என்றும் சக மாணவர்கள் ஒதுக்குதல் மிகுந்த வேதனையை உண்டுபண்ணுவதை இச்சிறுகதை உணர்வோட்டமாக எடுத்துக்கூறுகிறது. இதேபோன்று இலங்கை அகதிச் சிறுமி மஞ்சுவும் ஆபிரிக்கக் கறுப்பினச் சிறுமி அனாவும் பாடசாலையில் கற்கின்ற உயர்வகுப்பு மாணவனால் 'ஊத்தை', 'நேகரினன் கறுப்பர்' என்று நக்கலடிக்கப்படுவதை உமாவின் முற்குறிப்பிட்ட 'அம்மா நான் விளையாடமாட்டேன்' என்ற சிறுகதை வெளிப்படுத்துவதும் குறிப்பிடத்தக்கது. மேலும் கரவை மு.தயாளனின் 'ஜெர்மனிய வீடுகளில்' என்ற சிறுகதையில் பாடசாலைக்குச் செல்லும் வாணி என்ற சிறுமி சக மாணவரால் கறுப்பி என்றும் சொந்த நாட்டுக்கும் போ என்றும் கூறப்பட்டதை நினைத்து வேதனை கொள்வதும் அவளது பிரச்சினையைப் புரிந்துகொள்ளாது தாய் நடந்துகொள்வதையும் அதனால் அச்சிறுமி அந்நியமாக்கப்படுவதும் குறிப்பிடப்பட்டுள்ளது.

வெளிநாட்டவன், கறுப்பன், அகதி, நாடோடி, பிச்சைக்காரன் முதலான சொற்களைத் தம்மீது பயன்படுத்தி தம்மை பிரித்து ஒதுக்குவதை துஷ்யந்தன் பின்வருமாறு வெளிப்படுத்துகின்றார்:

உடல் செத்துப் போன பின்னும்
உள்ளிருந்து ரத்தமாய் விழும் துளி நிலத்தில்
அதையும் மிதித்தபடி
வெளிநாட்டவன்/கறுப்பன் /அகதி
பிச்சைக்காரன் /நாடோடி
இவை எல்லாம் /இலக்கணமாய் மாறும்
பனியே!
நிலத்தின் மேல் / விழுந்தது போதும்
இனி/ மனிதர் மேல் / வெள்ளையாய் விழு
இனவாதம் /நிறவாதம்
யாவும் கரைய/ வெள்ளையாய் (140-141)

இனவாதப் போக்குடையவர்கள் கறுப்பினத்தவர்களைக் குறிக்க 'கறுப்புப் பன்றிகள்', 'பன்றி நாய்', 'பன்றி அகதி' முதலான சொற்களைப் பயன்படுத்துகின்றனர். நிறவாதிகளின் செயற்பாட்டால் பாதிக்கப்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவரின் வெளிப்பாடாக ராகுலனின் 'ஜேர்மன் கலைத்த கனவு' என்ற பின்வரும் கவிதை அமைந்துள்ளது:

என் சோலைப் பசுமைகளைச் சுமந்து
நான் பறந்தேன் கிளியே
சிறகுகள் வெட்டி வெட்டி காகங்கள் குட்ட
நாய்கள் முட்டித்தள்ள
பன்றியின் வாயிலும் குதிரையின் காலிலும்
வந்து விழுந்தேன் கிளியே
பன்றிகள் முகம் சுழித்து எச்சில் துப்ப
மென்று விழுங்கியிருந்தேன் கிளியே
குதிரைகள் சினந்து எட்டி உதைக்க
பன்றிகள் கைகொட்டிப்பாட
இந்துக்கடலில் வந்து விழுந்தேன் கிளியே (1993:14)

ஈழத்தில் இடம்பெற்ற ஒடுக்குமுறைச் சூழலால் புலம்பெயர்ந்து சென்ற தமிழர்கள் நிம்மதியான வாழ்வை அனுபவிக்கமுடியாத நிலையை எதிர்கொண்டமையினையும் புகலிட நாடுகளிலும் சமூக ஒதுக்குதல் காணப்படுவதையும் இத்தகைய படைப்புகள் சிறப்பாக வெளிப்படுத்துகின்றன.

தனிநபர்கள் தமது தாயகத்திலிருந்து ஒரு புதிய நாட்டிற்கு அகதியாகச் சென்ற நிலையில் அவர்கள் அனுபவிக்கும் துண்டிப்பு மற்றும் பிரிவினையின் ஆழமான உணர்வை எடுத்துக்கூறுவது இருத்தலியல் அந்நியமாதலாகும்.

இருத்தலியல் அந்நியமாதல்

தனிநபர்கள் தமது தாயகத்திலிருந்து ஒரு புதிய நாட்டிற்கு அகதியாகச் சென்ற நிலையில் அவர்கள் அனுபவிக்கும் துண்டிப்பு மற்றும் பிரிவினையின் ஆழமான உணர்வை எடுத்துக்கூறுவது இருத்தலியல் அந்நியமாதலாகும். புலம்பெயர்தல் மற்றும் அதனோடு தொடர்புடைய மறுசீரமைப்பிலிருந்து எழும் அடையாளம், சொந்தம், உடைமை ஆகியவற்றின் சவால்களில் வேரூன்றிய ஆழமான இருத்தலியல் நெருக்கடியை இது பிரதிபலிக்கின்றது. புலம்பெயர்ந்தவர்கள் தமது கடந்த கால வாழ்நிலை, தற்போதைய வாழ்நிலை என்பவற்றை நினைத்துப் பார்க்கையில் ஆழ்ந்த பின்னோக்கு நினைவுக்கு அதாவது கடந்தகால நினைவுகளுக்குச் சென்று அவை இழந்துவிட்டதாகக் கருதும் தன்மை ஏற்படுகின்றது. 'ஒரு பழக்கமான கலாசாரச் சூழலின் இழப்பு மற்றும் ஒரு புதிய சமூதாயத்தில் ஒருங்கிணைப்பதில் சிரமம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியவை குழப்பம், தனிமைப்படுத்தல் மற்றும் சுய உணர்வு குறைவதற்கு வழிவகுக்கும்' (கிடென்ஸ்,1991).

ஒரு நாட்டிலிருந்து அல்லது ஒரு சமூகக் குழுவிலிருந்து வேறாக்கப்பட்ட அந்நியத்தன்மையே அகதி நிலையெனலாம். இன முரண்பாட்டுச் சூழல் காரணமாக ஈழத்திலும் புகலிட நாடுகளிலும் தமிழர்கள் பெருந்தொகையில் அகதியாகி அலைந்து மூல்வுக்குட்பட்டனர். தாய்நாட்டுப் பிரிவும் புகலிட நாடுகளில் அகதி நிலையில் எதிர்கொண்ட சிக்கல்களும், புறக்கணிப்புக்களும் தாம் இந்த மனித சமூகத்திலிருந்து வேறாக்கப்பட்டவர்கள் என்ற மனநிலைக்குத் தமிழர்களை உட்படுத்தின. பிறந்த நாட்டில் வாழும் உரிமை மறுக்கப்பட்டவர்களாக வாழ்விடம் தேடிச் சென்ற சூழலில் அந்நாடுகளும் தம்மை ஒதுக்குவதை உணர்ந்தார்கள் இந்நிலைப்பாடு புகலிடத் தமிழர்களுக்கு மிகுந்த வேதனையினையும் அந்நியமாதல் தன்மையினையும் ஏற்படுத்துவதாக அமைந்தது.

பிறந்த நாட்டில் வாழும் உரிமை மறுக்கப் பட்டவர்களாக வாழ்விடம் தேடிச் சென்ற சூழலில் அந்நாடு களும் தம்மை ஒதுக்குவதை உணர்ந்தார்கள் இந்நிலைப்பாடு புகலிடத் தமிழர் களுக்கு மிகுந்த வேதனை யினையும் அந்நியமாதல் தன்மை யினையும் ஏற்படுத்து வதாக அமைந்தது.

பிரிதல் நிமித்தம் ஏற்படும் வேதனை என்பது உளவியல் நிலை சார்ந்த ஓர் அந்நியமாதலாகும். புலம்பெயர்ந்து சென்ற ஒவ்வொருவரும் இத்தகைய அந்நியமாதல் நிலையை எதிர்கொள்வது தவிர்க்க முடியாததாகும். தன் தாய்நாடு, தன் ஊர், தன் இனக்குழு, தன் குடும்பம், உறவினர்கள், நண்பர்கள், பாடசாலை, தமது செல்லப் பிராணிகள் என்று வாழ்ந்த நிலையை, கூட்டு வாழ்நிலையை இழத்தல் ஆழ்மனப் பாதிப்புக்கு அடிப்படையாக அமைவதை உளவியலாளர்கள் வலியுறுத்தியுள்ளனர். கடந்த கால வாழ்வின் அனைத்து மகிழ்வுகளையும் இழந்த அந்நியப்பட்ட நிலையை இளைய அப்துல்லாஹ்வின் பின்வரும் கவிதை எடுத்துக் கூறுகின்றது:

இன்னும் என் கோடையின் வாசம்
மறக்க முடியவில்லை
இன்னும் அந்தக் கல்வீடும்
அந்த மாமரமும் தேக்க வேலியும்
நினைவிலே கிடந்துதான்.
கச்சான் பாத்தி நடுவே
நீரோடியதும்
பசுமையான வயல் பரப்பில்
ஓடி விளையாடியதும்
எல்லாம் இழந்தனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாம் இழந்தனம்
எம்பூமி இழந்தனம் (2001:62)

பணம் இருந்தும் மனம் நிம்மதியின்றி வாழும் நிலையை இ.சம்பந்தன் 'இரை மீட்கப்படும் நினைவுகள்' என்ற கவிதையில் பின்வருமாறு வெளிப்படுத்தியுள்ளார்:

கொட்டுகின்ற பனிக்குளிரில்
மேனி நடுங்கியவர்கள்
வெட்டுகின்ற மார்க்குகளைக்
கையிலெண்ணி
வீணாக வாழ்வதிலே
சாந்தியில்லை நெஞ்சில்
தாய்த்தேசம்
விட்டகன்று மீண்ட காலம்
தாய்தந்தை முகம் பாராமல்
நீளும் சோகம் (2002:56)

புலம்பெயர்ந் தமையால் பலமிழந்து நலிவுற்றிருப் பதாகவும், ஊரை மறந்தார் பட்டியலில் தன்னையும் சேர்த்துவிட வேண்டாம் என்றும் கவிஞர் குறிப்பிடுவது முற்றுமுழுதாக கையறு நிலை யினால் ஏற்பட்ட அந்நியமா தலையே வெளிப் படுத்து கின்றது

அதேவேளை ஒவ்வொரு காலை நேரத்திலும் ஊரை நோக்கிச் சென்ற நினைவை மீண்டும் கொண்டுவரச் சிரமப்படுவதாகவும் ஊரை மறந்து போனவர்களின் பட்டியலில் தன்னையும் ஒருவராகச் சேர்த்துவிட வேண்டாமென்று கழிவிரக்கத்தோடு கோரிக்கை விடு கின்றார் மட்டுவில் ஞானக்குமாரன். புலம்பெயர்ந்தமையால் பலமிழந்து நலிவுற்றிருப்பதாகவும், ஊரை மறந்தார் பட்டியலில் தன்னையும் சேர்த்துவிட வேண்டாம் என்றும் கவிஞர் குறிப்பிடுவது முற்றுமுழுதாக கையறுநிலையினால் ஏற்பட்ட அந்நியமாதலையே வெளிப்படுத்துகின்றது (2004:42). ஜெகனின் 'நிர்ப்பந்தம்' என்ற கவிதையில் தாயகத்தைப் பிரிந்த துயரத்தில் புகலிடத் தமிழருக்கு இலுப்பங்கொட்டையையும் பலாச்சருக்கையும் பொறுக்கிய தாயக நினைவு சுகமாக இருப்பதுவும் மீண்டும் அந்த இன்பம் வருமா என்று ஏங்குவதும் குறிப்பிடப்படுகின்றது (1992:2). இக்கவிதையில் தாயக ஏக்கத்தில் தாம் குடியிருந்த வீடும் அதன் நினைவும் முக்கிய இடம்பெறுவதைக் காணலாம். ஏக்கம் என்ற கவிதையில் சுகுணா தனது உச்சக்கட்டப் பிரிவுத்துயரை பின்வருமாறு வெளிப்படுத்துகின்றார்:

அந்த நிலவும்/கதை சொல்லும்/காற்றும்/ இழந்தவைதானா? (1990:10)

அகதியாகச் சிதறி வெவ்வேறு இடங்களுக்கும் நாடுகளுக்கும் சென்றமையினால் உறவுத் தொடர்பற்ற நிலை ஏற்பட்டமையினையும் ஈழத்தில் சுற்றம் சூழ வாழ்ந்த வாழ்வு அற்றுப் போனமையினையும் வ.ஐ.ச.ஜெயபாலன் பின்வருமாறு வெளிப்படுத்துகின்றார்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் நகரில் என் பையன்
கொழும்பில் என் பெண்டாட்டி
வன்னியில் என் தந்தை
தள்ளாத வயதினிலே
தமிழ்நாட்டில் என் அம்மா
சுற்றம் பிறாங்பேட்டில்
ஒரு சகோதரியோ பிரான்ஸ் நாட்டில்
நானோ வழி தவறி அலாஸ்கா வந்துவிட்ட ஒட்டகம் போல
ஒஸ்லோவில்
என்ன நம் குடும்பங்கள்
காற்றில்
விதிக்குரங்கு கிழித்தெறியும்
பஞ்சுத் தலையணையா? (2001:38;)

குடும்பத்தின் ஒவ்வொருவரும் சிதறி வெவ்வேறு இடங்களில் வாழும் துயரத்தை சிறப்பாக எடுத்துக்கூறும் இக்கவிதையில் குடும்பங்கள் என்பது காற்றில் விதிக்குரங்கு கிழித்தெறியும் பஞ்சுத் தலையணையா என்று கவிஞர் கேள்வியெழுப்புகின்றபோது மேலெழுகின்ற உணர்வு அந்நியப்பட்டுப்போன வாழ்வையே புலப் படுத்துகின்றது. புலம்பெயர்ந்தமையால் தமது ஊரின் இருப்பை இழந்தை சோகத்தை செல்வம் பின்வருமாறு வெளிப்படுத்தியுள்ளார்.

தனிநபர்கள் பொருளாதார நடவடிக் கைகளில் முழுமையாகப் பங்கேற்கவோ, பயன டையவோ இயலாத நிலையில் பொருளாதார அமைப்பில் இருந்து துண்டிக் கப்பட்டு அந்நியமாக் கப்படுகின்றனர்.

சிறுகுருவி வீடுகட்டும்/தென்னோலை பாட்டிசைக்கும்
சூரியப் பெடியன் செவ்வரத்தம் பூவை
புணரும் என் ஊரில் இருப்பிழந்தேன் (1992).

ஈழத்துப் புகலிட இலக்கியங்களுள் பெரும்பாலானவை தமது இருப்பிழந்து அந்நியப்பட்டுப்போன மனநிலையின் பிரதிபலிப்பாக அமைவதைக் காணலாம்.

பொருளாதார அந்நியமாதல்

தனிநபர்கள் பொருளாதார நடவடிக்கைகளில் முழுமையாகப் பங்கேற்கவோ, பயனடையவோ இயலாத நிலையில் பொருளாதார அமைப்பில் இருந்து துண்டிக்கப்பட்டு அந்நியமாக்கப்படுகின்றனர். இப்பொருளாதார அந்நியமாதல் என்பது பரந்த பொருளாதார மற்றும் கட்டமைப்புக் காரணிகளுடன் தனிப்பட்ட அனுபவங்களின் குறுக்குவெட்டைப் பிரதிபலிக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழைப்பு மனித இயங்கியலின் அடிப்படைகளுள் ஒன்றாக அமைகின்ற அதேவேளை அது தனிநபர்கள் தங்கள் திறமையை வெளிப்படுத்துவதற்கும், வளர்த்துக்கொள்வதற்குமான ஒரு வழியாகவும் உள்ளது. எனினும் உழைப்பு அனைத்துச் சமூகங்களிலும் முதலாளித்துவத்தின் கீழ் ஒரு நிறைவான செயலாக அமையாது உயிர் வாழ்வதற்கான ஒரு வழியாகவே ஆக்கப்பட்டுள்ளமையைக் காணலாம். முதலாளித்துவம் முதலாளி – தொழிலாளி என்ற வர்க்க வேறுபாட்டைப் பலப்படுத்தியதோடு தொழிலாளர்களை அடிமைப்படுத்தி அவர்களின் உழைப்பைச் சுரண்டவும் செய்தது. இதனால் தொழிலாளர்கள் பல்வேறு அடிப்படைகளில் ஒடுக்கப்பட்டனர். மற்றையவர்களிடமிருந்தும் உழைப்பிலிருந்தும், உற்பத்திப் பொருட்களிலிருந்தும் அந்நியப்படுத்தப்பட்டனர்.

முதலாளித்துவம் பொருளீட்டல், அதிகாரப் பலம் என்பவற்றை மையப்படுத்தி முதலாளி களுக்கிடையே போட்டியை உருவாக்கிய அதேவேளை தொழிலாளர் களுக்கிடையேயும் போட்டிகளை உருவாக்கியது.

முதலாளித்துவம் பொருளீட்டல், அதிகாரப் பலம் என்பவற்றை மையப்படுத்தி முதலாளிகளுக்கிடையே போட்டியை உருவாக்கிய அதேவேளை தொழிலாளர்களுக்கிடையேயும் போட்டிகளை உருவாக்கியது. தொழிலாளர்களைத் தமது சுயநலத்திற்காகப் பிரித்தாண்டது. இந்நிலைமை உண்மையான மனிதத் தொடர்புகள் வளர்வதற்குச் சவாலாக அமைந்தது. இது கூட்டுணர்வு சிதைக்கப்படுவதற்கும் ஒருவருக்கொருவர் அந்நியமாகிப்போவதற்கும் காரணமாக அமைந்தது. அத்தோடு நவீன நுகர்வோர் கலாசாரம் பொருட்கள் மற்றும் சேவைகளை மையப்படுத்துவதன் மூலம் தனிப்பட்ட அடையாளத்தையும் தனியாள் தன்னிறைவையும் அடையமுடியும் என்ற கருத்தை ஊக்குவிக்கின்றது. இக்கருத்தியல் கூட்டுணர்வைச் சிதைத்து அந்நியப்படுத்தலை வளர்க்கின்றது. இத்தன்மை தனிநபர்களை அவர்களின் உண்மையான சுயத்திலிருந்தும் மற்றவர்களிடமிருந்தும் அந்நியப்படுத்துகின்றது.

முதலாளித்துவ சமூகக் கட்டமைப்பில் தொழிலாளர்கள் உருவாக்கும் பொருட்கள் அவர்களுக்குச் சொந்தமானதாக இருப்பதில்லை. மாறாக முதலாளிகளுக்கே சொந்தமானவையாக உள்ளன. இதனால் அவர்கள் உற்பத்தி செய்யும் பொருளும் அவர்களுக்கு அந்நியமாகிப் போகின்றது. அதுமட்டுமன்றி அவர்களின் உழைப்பும் ஒரு புறப்பொருளாகுவதோடு அது அவர்களை அந்நியப்படுத்தவும் செய்கிறது. மேலும் முதலாளித்துவ சமூகம் எப்போதும் தொழிலாளர்களை அடிமை யாகவே வழிநடத்த விரும்புகின்றது. இதனால் உற்பத்திச் செயன் முறை சார்ந்த தீர்மானமெடுக்கும் சந்தர்ப்பங்களில் தொழிலாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களின் ஆலோசனைகளையோ, அனுபவங்களையோ அது புறக்கணிக்கின்றது. தமது வேலைகளை சுதந்திரமாகவும் ஆக்கச் சிந்தனையுடையதாகவும் மேற்கொள்வதைத் தடுத்து இப்படித்தான் செய்ய வேண்டும், இப்படித்தான் நடந்து கொள்ள வேண்டும் என்று கட்டளைகளையிடுகின்றது. இதனால் தொழிலாளர்களுக்குத் தமது வேலையில் சலிப்பு ஏற்படுவதோடு அது அந்நியமாதல் நிலைக்கும் வழிவகுக்கின்றது.

தொழில் - உழைப்பு – சுரண்டல் - போராட்டம் - ஏமாற்றம் - சலிப்பு – விரக்தி - அந்நியமாதல் என்ற ஒரு தொடர் செயற்பாடு உலகம் முழுவதும் காணப்படுகின்றது. இந்நிலையில் ஈழத்துப் பொருளாதார, சமூக, அரசியல், கல்விக் கட்டமைப்புகளிலிருந்து முற்றிலும் வேறுபட்ட நாடுகளில் வாழத்தலைப்பட்ட புலம்பெயர்ந்த தமிழர்கள் தொழில் நிலை சார்ந்து அந்நியமாதல் நிலையை எதிர்கொள்வதென்பது சாதாரணமானதொன்றாகும். 1980களிலிருந்து புலம்பெயர்ந்தவர்களில் பெரும்பாலானோர் கல்வியறிவு குறைந்தவர்கள். பல்கலைக் கழகங்களில் பட்டப்படிப்புகளை முடித்துவிட்டுச் சென்றவர்களாகச் சிலர் இருந்தபோதிலும் மொழித்தடைகளை எதிர்கொண்டனர். அது மாத்திரமன்றி இத்தகையோரின் கல்வித் தகுதி அந்நாடுகளின் கல்விச்சிந்தனைகளுடனோ, தொழிலுக்கான தகுதிப்பாடுகளுடனோ பொருந்தியதாக அமையவில்லை. இதனால் பெரும்பாலான அகதித் தமிழர்கள் புலம்பெயர்ந்த நாடுகளில் பொருளாதார நிலை சார்ந்த அந்நியமாதலை எதிர்கொள்வது தவிர்க்க முடியாததாயிற்று.

புலம்பெயர் வாழ்வில் பொருளாதார அந்நியமாதல் என்பது புகலிடத் தமிழர்கள் தமக்கான பொருளாதார வாய்ப்புகள், வளங்கள், நிதி நிலைத்தன்மைகள் சார்ந்து எதிர்கொள்ளும் புறக்கணிப்பு நிலையைச் சுட்டுவதாகவே பெரும்பாலும் அமைகின்றது. வேலைவாய்ப்புக்களைப் பெறுவதில் உள்ள சிரமங்கள் குறிப்பாகத் தொழிலைத் தேடி அலைதல், மிகவும் கடினமான தொழில்களையே செய்ய வேண்டியிருத்தல், தொழிலுக்கு ஏற்ற ஊதியத்தைப் பெறமுடியாமை, தொழிலாளர் நலன் மறுக்கப்படுதல், தொழிலாளர் சமத்துவமின்மை, நிதி ஒருங்கிணைப்புக்கான தடைகளை எதிர்கொள்வது உள்ளிட்ட பல்வேறு அடிப்படைகளில் புகலிடத் தமிழர்கள் சவால்களை எதிர்கொள்ளும் நிலை காணப்படுகின்றது. இதனால் புகலிடம் பெற்ற நாடுகளில் தொழில் சார்ந்த அந்நியமாதலைச் சந்தித்தனர்.

புலம்பெயர் வாழ்வில் பொருளாதார அந்நியமாதல் என்பது புகலிடத் தமிழர்கள் தமக்கான பொருளாதார வாய்ப்புகள், வளங்கள், நிதி நிலைத்தன்மைகள் சார்ந்து எதிர்கொள்ளும் புறக்கணிப்பு நிலையைச் சுட்டுவதாகவே பெரும்பாலும் அமைகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருபது வயதில் ஜேர்மனிக்குச் சென்று இருபத்தாறு வயதில் முகாமை விட்டு வெளியேறி வேலை தேடியலைந்த இளைஞன் மொழி தெரியாமையால் வேலையைப் பெறமுடியாமல் போனமையை பின்வரும் பகுதி எடுத்துக் காட்டுகின்றது:

> அழகிய இருபது வயது வாலிபனான கோபு குளிரிலும், பனியிலும், ஆறு வருடங்களைக் கழித்த பின்னே வேலை செய்யவும், வேறு நகரங்களுக்குச் செல்லவும் அனுமதி கிடைத்தது. இனியாவது வாழ்க்கை சிறப்பாகி விடுமென்ற நம்பிக்கையில் ஓடி ஓடி வேலை தேடினான். வேறு நகரங்களுக்குச் சென்று நண்பர்களைச் சந்தித்தான். பாஷை தெரியாத நாட்டில் படித்த படிப்புக்கோ, பகட்டான வேலைக்கோ இடமில்லை என்பதை வேலை தேடிய போதும், நண்பர்களுடன் பேசிய போதும் தெரிந்துகொண்டான் (சந்திரவதனா,2007:10)

மொழி தெரிந்தவர்களாலும்கூட ஜேர்மனிய அரசாங்கம் எதிர் பார்க்கும் கல்வித் தரம் இல்லாமையால் எதிர்பார்க்கின்ற வேலை களைப் பெற முடியாதிருந்தது. இலங்கையின் கல்வித்தரம் ஜேர்மனி யில் குறைத்தே மதிப்பிடப்பட்டது. இதனைச் சந்திரகௌரி சிவபாலன் சிறுகதையில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்;

> நான் பி.எஸ்.ஸி மெத்ஸ். யாழ்ப்பாண யூனிவேர்சிட்டி. இஞ்ச நாங்க படிச்ச படிப்புக்கு எங்க வேலை கிடைக்கப்போகுது.எங்களுடைய சேர்டிபிக்கட்டை இங்குள்ள கல்வித்தரத்துக்கு மாத்தினேன். 12ம் வகுப்பு பூர்த்தியானதாகி பல்கலைக்கழக ஆரம்பம் என்று மாற்றித்தந்தார்கள். அதனால் இப்போ ஒரு கொம்பனியில் நிலம் துடைக்கிற வேலை செய்றன் (2018:20).

இதன்படி படிப்பறிவு குறைந்தோர் மட்டுமன்றி பட்டப்படிப்பைப் பூர்த்தி செய்தவர்கள்கூட ஐரோப்பிய நாடுகளில் தொழிலைப் பெறுவதிலும் அதனை மேற்கொள்வதிலும் சவால்களை எதிர் கொண்டார்கள் என்பது தெளிவாகின்றது.

மொழி தெரியாமை, தொழிலுக்கேற்ற கல்வித் தகுதியின்மை, தொழில் புரிவதற்கான முறையான அனுமதியின்மை, அகதி என்ற அலட்சிய மனப்பாங்கு இவற்றால் புகலிட நாடுகளில் அந்நாட்ட வர்கள் செய்ய விருப்பம் கொள்ளாத கழுவுதல், கூட்டுதல், பத்திரிகை விநியோகித்தல் முதலான வேலைகளையே புகலிடத் தமிழர்கள் செய்ய வேண்டிய அவலநிலை காணப்பட்டது. தனது 30 வருட அனுபவத்தில் புலம்பெயர்ந்த தமிழர்கள் இத்தகைய வேலைகளையே செய்கின்றார்கள் என்பதை பொ.கருணாகரமூர்த்தி பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோடை காலம் பிறக்கவும் ஒரு நாள் இன்று தொடக்கம் புதிதாக வந்த Auslaender (விதேசிகள்) மற்றும் பொருளாதார அகதிகள் எவரும் வேலைகள் செய்ய அனுமதிக்கப்படமாட்டார்கள் என ஜெர்மன் அரசு பட்டவர்த்தமாக அறிவித்தது. விதிவிலக்காக ஒரு உப விதியும் செய்யப்பட்டிருந்தது. அஃது இவர்கள் உணவகங்களில் ஜெர்மன்காரர் செய்ய மனப்படாத கோப்பை கழுவுதல், அதிகாலையில் ஒரு மணிக்கு வீடுகளுக்குச் செய்திப் பத்திரிகைகள் விநியோகித்தல் போன்ற சிலவற்றைச் செய்யலாம் என்பதாகும். இங்கும் முப்பது வருஷங்களாக அதிகாலையில் பெர்லினின் எந்தப் பகுதியையாவது ஒருதரம் வலம் வந்தீர்களாயின் அங்கே எங்குலக்கொழுந்தொன்று வண்டியிலோ மிதியுந்தியிலோ பத்திரிகை விநியோகித்துக்கொண்டிருப்பதைக் கண்டேகலாம். அதாவது அஃது நம்மவர்களுக்கேயான தொழில் என்றாகிப் போனது (2014:107).

இவற்றினூடாகத் தமிழர்கள் புகலிட நாடுகளில் மிகவும் கீழ் மட்ட தொழில்களையே செய்ய வேண்டியிருந்த அவல வாழ்வு புலப் படுத்தப்பட்டுள்ளது. இதன் காரணமாக தொழில் சார்ந்த புறக் கணிப்புக்கும் பொருளாதாரச் சுரண்டலுக்கும் உளவியல் பாதிப் புக்கும் ஆட்பட்டனர். பத்திரிகை விநியோகித்தல் உள்ளிட்ட வேலைகளை அனைத்து நாட்களிலும் செய்ய வேண்டிய நிலையும் செய்யாவிட்டால் வேலை பறிபோகும் நிலையும் காணப்பட்டது. இதனால் தொழில் சார்ந்த விரக்தி நிலையையும் சந்தித்தார்கள்.

தமிழர்கள் புகலிட நாடுகளில் மிகவும் கீழ் மட்ட தொழில்களையே செய்ய வேண்டியிருந்த அவல வாழ்வு புலப் படுத்தப் பட்டுள்ளது. இதன் காரணமாக தொழில் சார்ந்த புறக் கணிப்புக்கும் பொருளாதாரச் சுரண்டலுக்கும் உளவியல் பாதிப் புக்கும் ஆட்பட்டனர்.

ஒரு புதுவருஷத்தன்று பத்திரிகைகளை விநியோகித்துக்கொண்டு வருகையில் எதிரே ஒரு இளைஞன் வந்துகொண்டிருந்தான். எல்லாப் பத்திரிகைகளையும் தெருவில் வீசிவிட்டு வீட்டில் போய் தூங்கு என்றான். எதுக்கு என்றேன். பார் கொம்றேட் இன்றுதான் உலகம் முழுவதும் மக்கள் தம் வேலைகள் அனைத்தையும் போட்டுவிட்டு ஜாலியாய் குதூகலிக்கும் ஒரு நாள். இன்றைக்கும் வேலை செய்கிறாயே நோய்பிடித்த பன்றி மாதிரி என்றான். என்ன செய்ய என் பணி அந்தமாதிரியாச்சே என்றுவிட்டு நான் அடுத்தவீட்டுக்குப் பத்திரிகை விநியோகிக்கப் போனேன் (கருணாகரமூர்த்தி,பொ. 2014:112)

இன்றும் வேலை செய்கிறாயே நோய்பிடித்த பன்றிமாதிரி என்ற வார்த்தை மிக மோசமானதாகும். எனினும் அத்தகைய வார்த்தைகளைக் கேட்டுச் சலிப்படைந்த மனத்தினர் என்பதனாலேயே அவர் அடுத்த வீட்டுக்கு பத்திரிகை விநியோகிக்கச் சென்றார் என்பது தெரிகின்றது.

ஜீவமுரளியின் லெனின் சின்னத்தம்பி (2014) என்ற நாவல் உணவகம் ஒன்றில் பாத்திரம் கழுவும் வேலையைச் செய்யும் லெனின் சின்னத் தம்பியின் மனவுணர்வுகளையும் முதலாளியிடமிருந்து மட்டுமன்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கு வேலைசெய்கின்றவர்களுக்கிடையே ஏற்பட்ட போட்டிச் சூழலாலும் அந்நியமாகிப்போகும் நிலையைக் கூறுகின்றது. குறிப்பாக அதிகாலையில் வேலைக்குச் செல்ல வேண்டியிருப்பதால் பனிக் காலத்தில் மிகுந்த துன்பங்களை எதிர்கொள்ளல், தாமதமாகிச் சென்றால் மேற்பார்வையாளரால் கேலிக்குட்படுத்தப்படல், துர் நாற்றத்தைப் பொறுத்துக்கொண்டு பாத்திரங்களைக் கழுவுதல், அதிகமான பாத்திரங்களைக் கழுவ வேண்டியதோடு வேறு வேலை களையும் செய்ய வேண்டியிருந்தமை, விடுமுறை எடுக்கமுடியாமை, போதிய சம்பளம் இல்லாமை, கெடுபிடிகளையும் பழிவாங்கலையும் எதிர்கொள்ளவேண்டியிருந்தமை என்று பல்வேறு நெருக்குதல்களை வெளிப்படுத்துகின்றது. குறிப்பாக அக்கம்பனியின் தொழில் நிலைப்பாடு, தொழிலில் பற்றற்ற தன்மையையும் மனநலப் பாதிப் புகளையும் ஏற்படுத்துவதையும் வேலையாட்களை ஒருவருக்கொருவர் பகையாளியாக்குவதையும் இந்நாவல் சிறப்பாக எடுத்துக் கூறுகின்றது.

முதலாளித்துவம் தொழிலாளர்களை அடிமையாகப் பிணைத்து வைத்திருக்க விரும்பும் மனநிலை காரணமாக ஒருவருக்கான அத்தியாவசிய விடுமுறை யைக் கூட ஏற்றுக்கொள் வதில்லை. இந்நிலைப் பாடு தொழில் விரக்தியை ஏற்படுத்துவது தவிர்க்க முடியாததாகும்.

தொழில் நிலையங்களில் தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சினைகளுள் ஒன்று விடுமுறை பெறமுடியாமையாகும். முதலாளித்துவம் தொழிலாளர்களை அடிமையாகப் பிணைத்து வைத்திருக்க விரும்பும் மனநிலை காரணமாக ஒருவருக்கான அத்தியாவசிய விடுமுறையைக் கூட ஏற்றுக்கொள்வதில்லை. இந்நிலைப் பாடு தொழில் விரக்தியை ஏற்படுத்துவது தவிர்க்கமுடியாததாகும். தமக்கான விடுமுறைக் கோரிக்கையை மறுதலித்து ஓய்வற்ற வேலை வாங்கும் முதலாளிகளின் மனநிலையை இக்கவிதை பின்வருமாறு எடுத்துக்கூறுகிறது:

ஒலிம்பிக் போன ஓட்டக்காரனைப் போல
வசந்தம் தராமலே வயதுகள் ஓடின.
இருந்தாலும் எமக்கு
வயதுகள் சாப்பிட்ட இளமையைவிட...
இயந்திரமாய் மாற்றி
ஐரோப்பிய முதலாளிகள்
சாப்பிட்ட... இளமைகளே அதிகம்...
விடுமுறைகள் கொடுக்காமல்
இருகைகளாலும் வேலை செய்விக்கின்ற
இலங்கைத் தமிழ் அகதிகளை
ஐரோப்பிய முதலாளிகளுக்கு
நிச்சயம் பிடிக்கும்
இன்னும் பிடிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்று கைகளோடு வந்திருந்தால் (நிலாவெளி கைலை, 1997:20). இளமைச் சிதைவு மிகுந்து வலியுடன் இக்கவிதையில் வெளிப் படுத்தப் பட்டுள்ளது.

புகலிடத் தமிழர்கள் உறுதியற்ற நிதி நிலைமைகளுடன் போராட வேண்டியிருந்தமை, அதனால் அவர்களின் வாழ்க்கை நிலை பாதிக்கப்பட்டமை, நிலையான தொழிலைப் பெறமுடியாமையாலும் தொழில் நிலை நெருக்கடிகளால்; மன அழுத்தத்திற்கு உட்பட்டமை எனப் பல்வேறு நெருக்கடிகளைச் சந்தித்தமையைப் புகலிடப் படைப் புகள் வெளிப்படுத்துகின்றன. பிற்காலத்தில் புகலிடத் தமிழர்கள் ஐரோப்பிய நாடுகளுக்கேற்ற கல்வித் தகுதிகளை நிறைவுசெய்து உயர்ந்த தொழில்களைப் பெறக்கூடிய நிலை உருவாகியுள்ளமையால் தொழில் சார்ந்த அந்நியமாதல் ஓரளவு குறைந்துவருவதையும் அறியமுடிகின்றது.

அரசியல் அந்நியமாதல்

புலம்பெயர் வாழ்வில் அரசியல் அந்நியமாதல் என்பது, தமது தாய்நாட்டிலிருந்து வெளிநாட்டிற்கு புலம்பெயர்ந்தவர்கள் அனுபவிக்கும் அரசியல் செயல்முறைகள், நிறுவனங்கள் மற்றும் சித்தாந்தங்களில் இருந்து அந்நியப்படுவதைக் குறிக்கிறது. இந்த நிகழ்வு, ஒருவரின் பிறப்பிடத்திலிருந்து வேறுபட்ட அரசியல் அமைப்புகளை வழிநடத்துவதில் உள்ள சிக்கல்களிலும், அத்துடன் ஒரு புதிய சமூக, அரசியல் சூழலில் ஒருங்கிணைப்பதில் உள்ள சவால்களிலும் வேரூன்றியுள்ளது. அரசியல் அந்நியப்படுத்தல் புலம்பெயர் சமூகங்களை கணிசமான வகையில் பாதிப்பதாகவும் அமைந்துள்ளது.

புலம்பெயர் வாழ்வில் அரசியல் அந்நியமாதல் என்பது, தமது தாய்நாட்டிலிருந்து வெளிநாட்டிற்கு புலம்பெயர்ந்தவர்கள் அனுபவிக்கும் அரசியல் செயல்முறைகள், நிறுவனங்கள் மற்றும் சித்தாந்தங்களில் இருந்து அந்நியப்படுவதைக் குறிக்கிறது.

தமிழர்கள் பெருமளவில் புலம்பெயர்ந்த சூழலில் புகலிட நாடுகள் இறுக்கமான குடிவரவுச் சட்டங்களை நடைமுறைப்படுத்தின. அகதிமுகாம்களில் தங்க வைக்கப்பட்ட அகதிகளில் ஒரு பகுதியினரை விசாரணையினூடாக நாட்டுக்குத் திருப்பியனுப்பிவிடுவதன் மூலம் அகதிகள் நாட்டுக்குள் வருவதைத் தடுக்க முடியுமென்று கருதிய ஜேர்மன் அரசு அகதிகள் தொடர்பான சட்டத்தைப் பல ஆண்டுகளுக்குப் பின்னர் முழுமையாக மாற்றியமைத்து 1991 ஜனவரி முதலாம் திகதி முதல் நடைமுறைப்படுத்தியமை இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். இதில் அகதிகள் தொழில் புரியக்கூடாதென்றும், வேறு நகரங்களுக்குச் செல்லக்கூடாதென்றும் வலியுறுத்தப்பட்டன. இதனால் அகதியாகத்

Public Library Municipal Council Batticaloa.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கவைக்கப்பட்டிருந்த தமிழர்களும், ஜேர்மனிக்குப் புதிதாகச் செல்லவிருந்தவர்களும் மிகவும் மோசமாகப் பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டது. அகதியாக ஜேர்மனியில் தங்க வைக்கப் பட்டிருந்தவர்களின் நிலையினை பார்த்திபன் 'கனவை மிதித்தவன்' நாவலில் பதிவு செய்துள்ளார். ஆசிரியர் குறிப்பிடும் பின்வரும் பகுதி முக்கியமானதாகும்:

> 'எனக்கு மட்டும் பிடிப்பே? சும்மா கிடந்து சாப்பிடுறதும் படுக்கிறதும் சீ எண்டு போச்சு. அதுதான் வெளியால போக ட்றை பண்ணிக்கொண்டிருக்கின்றன்' பாலகுமார் சொன்னான்.
>
> 'எனக்கு அது கூட வெறுத்துப் போச்சு. எங்க போனாலும் நிலமை ஒண்டுதானே. இஞ்ச எல்லோ வேலை செய்யாதை. அங்கால போகாதை. இங்கால போகாதை எண்டு அடைச்சு வைச்சிருக்கிறாங்கள். மற்ற நாடுகளில் உப்பிடி இல்லத்தானே?' (1988:45).

அகதியாகத் தங்கவைக் கப்பட்டிருந்த தமிழர்களும், ஜேர்மனிக்கு புதிதாகச் செல்லவிருந்த வர்களும் மிகவும் மோசமாகப் பாதிக்கப் படும் நிலை ஏற்பட்டது. அகதியாக ஜேர்மனியில் தங்க வைக்கப் பட்டிருந்த வர்களின் நிலையினை பார்த்திபன் 'கனவை மிதித்தவன்' நாவலில் பதிவு செய்துள்ளார்.

ஒரு நகரத்தைத் தாண்டி அடுத்த நகரத்திற்குச் செல்ல முடியாத நிலையை ஜெகன் பின்வருமாறு வெளிப்படுத்தியுள்ளார்:

என் உணர்வுகளைக்
கொன்று தின்னும்
தனிமையான அறையுமாய்
என் காலம்
நானிருக்கும் ஜேர்மனியில்
என் நகரம் தாண்டி
அடுத்த நகரம்
செல்லும்
சுதந்திரம் மறுக்கப்பட்ட நிலையில்
இங்கு நான் (மேற்கோள்: யோகராசா,செ., 1995:52)

அரசியல் சுதந்திரம் மறுக்கப்பட்டு தனிமையும் அறையு மாகப் பொழுதுகளைக் கழிக்கும் நிலை இக்கவிதையில் வெளிப் படுத்தப் பட்டுள்ளது.

அகதிகளின் கோரிக்கைகளை புகலிட நாடுகள் உதாசினம் செய்து ஏற்க மறுத்தன. கேலியாக நோக்கின. பொய்க் காரணங்களுடன் நாட்டுக்குள் உள்நுழைய எத்தனிக்கிறார்கள் என்று கருதின. அகதிகளில் 92 வீதமானவர்கள் பொய்யான அகதிகளே என ஜேர்மனியிலிருந்து வெளிவந்த *Bill* (14.08.1991) பத்திரிகை எழுதியது (தூண்டில், இதழ் 49,1992:7). பொய்க் காரணங்களைக் காட்டி அரசியல் தஞ்சம் கேட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகின்றார்கள் என்றும் சிறிது காலம் தங்கியிருந்து நாட்டுக்குச் சென்றுவிடட்டும் என்றும் ஜேர்மன் அரசு கருதியமையை பார்த்திபன் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:

> **நீ அரசியல் தஞ்சம் கோரிய பம்மாத்து அகதி. எப்படியோ இங்கு வந்து விட்டாய். உன்னை இங்கு கொல்லப் போவதில்லை. வெடிக்காது. ஒரு மூலையில் இருந்து விட்டு நாங்கள் பிடித்து அனுப்பும் போது நாட்டுக்குப் போய்ச்சேர் என்றது ஜேமன் அரசு. இதற்குப் பெயர் அரசியல் தஞ்சமாம் (2017:121).**

இலங்கையிலிருந்து வந்த கறுத்த அகதிகளை வெள்ளைக்காரன் ஒரு பூச்சியைப் பார்ப்பது போலத்தான் பார்ப்பான் (கருணாகர மூர்த்தி,பொ.,1996:26). என்ற நிலையே அகதிகள் தொடர்பாகக் காணப்பட்டது. சங்கர் புஸ்பா ஐரோப்பியர்கள் தமிழர்களை எவ்வாறு இழிவாக நோக்கினார்கள் என்ற உணர்வுநிலை வெளிப்படும் வகையில் இவ்வாறு கூறுவார்:

ஐரோப்பிய கரைகளிலோ
பஞ்சத்தில் புலம்பெயர்ந்த
கறுப்பு அகதிகளென்ற
இகழ் சிரிப்புகளினால்
இல்லாமல் போபவர்கள் நாங்கள் (1990:25)

ஈழத்து அகதிகளில் பெரும் பாலானோர் இன முரண்பாட்டால் பாதிக்கப் பட்டு உறவுகளையும், சொத்துக் களையும் இழந்து அலைந்து மூன்று ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்ற போதிலும் 'பஞ்சம் போக்க வந்தவர்கள்' என்ற எண்ணத் துடனேயே இழிவாக நோக்கப் பட்டார்கள்.

ஈழத்து அகதிகளில் பெரும்பாலானோர் இன முரண்பாட்டால் பாதிக்கப்பட்டு உறவுகளையும், சொத்துக்களையும் இழந்து அலைந்து மூன்று ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்ற போதிலும் 'பஞ்சம் போக்க வந்தவர்கள்' என்ற எண்ணத்துடனேயே இழிவாக நோக்கப்பட்டார்கள். சந்திரன் என்ற அகதி கிழக்கு ஜேர்மனியில் அகதி முகாமில் இருந்து பின்னர் அகதிக்கோரிக்கை நிராகரிக்கப்பட்டமையை அடுத்து அநியாயமாக இறந்து போனமையை 'பாதை தெரியாத பயணங்கள் என்ற கதையினூடாக எடுத்துக்கூறியுள்ளார் இராஜன் முருகவேல். நிருபாவின் 'தஞ்சம் தாருங்கோ' சிறுகதையிலும் புலம்பெயர்ந்து சென்ற தமிழ் அகதிகள் எவ்வாறு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்கள் என்பதும் பாதிக்கப்பட்டார்கள் என்பதும் எடுத்துக்கூறப்பட்டுள்ளன. 'எம்முயிர் சகோதரரே..' என்ற கவிதையில் அம்பலவன் புவனேந்திரன் அரசியல் சூழலால் தமிழர்கள் பாதிக்கப்பட்டதை எடுத்துக் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கி வாழப் பாதுகாப்பின்றி – அரசியல்
தஞ்சம் கேட்டு இங்கு வந்தோம்
பாவிகள் அரசியல் தஞ்சமதோ – எமக்கு
பாராமுகமாய்த் தீர்ப்பானதே
தூங்காத இரவுகள் எத்தனையோ – எங்கள்
துன்பச்சு மைகள் எத்தனையோ
ஏங்கும் இதயத்துடிப்பு நிற்க - இன்னும்
எத்தனை நாள்தான் விடிந்திடுமோ
உங்களைப் போல்தானே நாங்களுமே - இங்கு
உயிரைக் காத்திட ஓடி வந்தோம்
எங்களை ஏனின்றும் ஏளனமாய் - பரம
எதிரிகள் போலவே பார்க்கின்றீர்கள் (2000:5-6).

அகதிகள் பாராமுகமாக நடத்தப்பட்டமையினையும் அவர்களது கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டமையினையும் வேதனையோடு எடுத்துக்கூறுவதாக இக்கவிதை அமைந்துள்ளது. உங்களைப் போன்றே நாங்களும் மனிதர்களாக இருந்தும் எங்கள் பாதிப்புகளை உணர்ந்து ஏற்க மறுப்பது ஏன் என்பதனூடாக புறக்கணிக்கப்பட்ட மனநிலை வெளிப்படுவதைக் காணலாம். ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களாக இருந்த போதிலும் அனைவருக்கும் விசா அனுமதிக்கப்படாமையும் அதனால் பாதிக்கப்படுவதும் காணப்பட்டது. பின்வரும் கவிதையில் இதனைக் காணலாம்:

எனக்கு விசா தந்த அதிகாரி
மனைவிக்கு
விசா மறுக்கிறான்
யாழ்ப்பாண வடலிகளின் நிழலில்
அம்மம்மா
போய்ச்சேர்ந்துவிட்டாலும்
சென்று திரும்பல்
இயலுமோ சொல்
ரொறன்ரோவில் லண்டனில்
எனது சதைகளும் இரத்தமும்
ஆன சகோதரிகள்......
எந்தத்தூதரகத்திலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது நிறத்தை நம்பத் தயாரில்லை
அகதி என்ற தமிழ்ச் சொல்லின்
அர்த்தம் தேவை(திருநாவுக்கரசு, பக்:45)

'அம்மம்மா போய்ச் சேர்ந்துவிட்டாலும் சென்று திரும்பல் இயலுமோ' என்ற வரியில் தாயகத்திலிருந்து அந்நியப்பட்டுப்போன மன ஆதங்கம் வெளிப்படுவதைக் காணலாம்.

சுய அந்நியமாதல்

சுய அந்நியமாதல் என்பது தனிநபர்கள் தமது உண்மையான அடையாளத்திலிருந்து அல்லது நிஜமான மனவெளியிலிருந்து முழுமையான ஒதுக்கலாக தம்மை உணர்கின்ற நிலையாகும். இது ஆழமான தத்துவ அடிப்படைகளைக் கொண்டது. ஜார்ஜ் வில்ஹெல்ம் ஃப்ரைட்ரிக் ஹேகல் தனது படைப்பில் (*Phenomenology of Spirit*) மனிதர் தம் சுயத்தின் மெய்யான நிலையிலிருந்து பிரிந்துள்ளதாக உணர்வதிலிருந்தே சுய அந்நியமாதல் உருவாகிறது என எடுத்துரைத்தார்(ஹேகல், 1807). கார்ல் மார்க்ஸ் பொருளாதார மற்றும் தத்துவ கட்டுரைகள் நூலில் (*Economic and Philosophic Manuscripts*) சுய அந்நியமாதலை மேலும் விரிவாக உருவாக்கினார். முதலாளித்துவ சமூக அமைப்புகளில், தொழிலாளர்கள் தங்கள் உழைப்பு ஒரு பொருளாக மாறுவதால் சுய அந்நியமாதலுக்கு ஆளாவார்கள் என்று குறிப்பிட்டார் (மார்க்ஸ்,1844). உளவியலாளர் எரிக் பிரோம், தனது 1955 ஆம் ஆண்டின் *The Sane Society* என்ற படைப்பில், நபர்கள் தனிப்பட்ட மனநிறைவும் சுயாதீனமும் அடைய முடியாதபோது, சுய அந்நியமாதல் உருவாகக்கூடும் என விளக்குகிறார். இவ்வகையில் சுய அந்நியமாதல் சமூக, பொருளாதார மற்றும் உளவியல் காரணிகளால் உருவாகிறது எனலாம்.

முதலாளித் துவ சமூக அமைப்பு களில், தொழிலா ளர்கள் தங்கள் உழைப்பு ஒரு பொருளாக மாறுவதால் சுய அந்நிய மாதலுக்கு ஆளாவார்கள் என்று குறிப்பிட்டார் (மார்க்ஸ்,1844).

உளவியற் கோளாறுகள், பதற்றம், வேதனை, ஆளுமை, நசிவு, தனிமை, நிரானுகூலங்கள், மதிப்பீடுகளின் வீழ்ச்சி ஆகிய அனைத்தும் அந்நியமாதல் என்ற கூரையின் கீழ் ஒதுங்கிக்கொள்கின்றன (ராஜதுரை, எஸ்.வி., 1979:2) சுய அந்நியமாதல் மனநலம் பாதிப்பு, சமூக ஒருங்கிணைவு இன்மை, குடும்பப்பிணைப்பு அறுதல், சலிப்பு முதலான பாதிப்பு நிலைகளைத் தோற்றுவிக்கத்தக்கது. புகலிட நாட்டுச் சூழலில் ஒருவர் தனது தாய்மொழியில் பேச முடியாத நிலை ஏற்படும்போது அல்லது புகலிட நாட்டு மொழியைப் பேசத் தெரியாத போது தாமாகவே தன்னை அந்நியப்படுத்திக்கொள்ளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலை ஏற்படுகின்றது. அத்தோடு தமது அகதிக் கோரிக்கை நிராகரிக் கப்படுகின்றபோது அல்லது காலதாமதம் செய்யப் படுகின்றபோது ஏனையவர்களிடமிருந்து ஒதுங்கிக்கொள்ளும் சூழலும் அதனால் உளரீதியான பிரச்சினைகளை எதிர்கொள்ளவும் நேரிடுகின்றது. தமது அரசியல் தஞ்சக்கோரிக்கை ஏற்றுக்கொள்ளாமை தற்கொலை, மனநலப்பாதிப்பு உள்ளிட்ட ஆபத்தான நிலைகளுக்கும் ஒருவரை இட்டுச்செல்கின்றது. இவை அனைத்தும் சுய அந்நியமாதலின் வெளிப்பாடுகளாகும்.

அகதிக்கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படாமல் காலங்கடந்து சென்றமை, திருமணம் செய்ய விருப்பமிருந்தும் திருமணம் செய்யாது இருக்க வேண்டிய நிலை, நண்பர்களின் பிரிவு, உழைத்தும் எதுவும் மிச்சமின்மை முதலான காரணங்களால் இளைஞர்கள் அந்நியமாதல் நிலைக்கு ஆளாகினர். பார்த்திபனின் 'தீவு மனிதன்' என்ற சிறுகதையில் குறிப்பிடப்படும் 'தீவு' அந்நியப்படுத்தலினால் ஒதுங்கிக்கொள்ளும் தனிமையை குறித்து நிற்கின்றது. தன்னோடு பழகிய நண்பன் திருமணமாகி சில காலங்கள் வாழ்ந்த பின்னர் தன்னைவிட்டு பிரிந்தபோது எவ்விதமான உறவும் இனித்தேவையில்லை என்ற விரக்தி நிலையில் தன்னைச் சுயமாகவே அந்நியப்படுத்தும் ஒருவரை இச்சிறுகதையில் காணலாம். இவ்வாறு தன்னைச் சுய அந்நியப்படுத்திக்கொண்டாலும் தான் முதுகில் சுமந்து விளையாடிய குழந்தையின் பிரிவை தாங்க முடியாது தவிக்கின்றான். நண்பன் குடும்பத்தோடு சென்றபின் அவர்களின் பிரிவைத் தாங்க முடியாது நண்பனின் குழந்தையின் நினைவோடும் ஏக்கத்தோடும் தனிமைத் தீவில் சிறைப்பட்டுப்போகும் நிலை என்பது சுய அந்நியமாதலையே எடுத்துக்காட்டுகின்றது. யாருடனும் நட்புக்கொள்ளாது தன்னை விலக்கிக்கொண்டு வாழ முற்பட்டபோதும் மீண்டும் தனது நண்பியின் குடும்பத்துடன் உறவு ஏற்பட்ட நிலையில் அவ்வுறவும் அறுந்துபோக மீண்டும் தனது தீவில் (அறையில்) அந்நியமாகிப்போகிறான். மீண்டும் மீண்டும் அந்நியமாகிப்போகின்ற மனிதர்களின் வகைமாதிரியை இச்சிறுகதையில் காண முடிகிறது.

தமது அரசியல் தஞ்சக்கோரிக்கை ஏற்றுக் கொள்ளாமை தற்கொலை, மனநலப் பாதிப்பு உள்ளிட்ட ஆபத்தான நிலைகளுக்கும் ஒருவரை இட்டுச்செல் கின்றது. இவை அனைத்தும் சுய அந்நிய மாதலின் வெளிப்பாடு களாகும்.

வீட்டுத் தேவைகளை நிறைவேற்ற வேண்டியிருந்தமையால் தன்னுடன் இருந்த நண்பர்கள் அனைவரும் திருமணம் செய்து பிரிந்து போவதையும், திருமணம் செய்யாது தொடர்ந்தும் உழைக்க வேண்டியிருந்த சூழலில் கண்ணன் என்ற இளைஞன் ஏனைய நண்பர்களிடமிருந்து அந்நியப்பட்டு தனிமையில் கவலைகளோடு இரவைக் கழிப்பதை பார்த்திபன் 'பனியில் எரியும் இரவுகள்' சிறுகதையில் வெளிப்படுத்தியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜேமனிக்கு வந்த நாளிலிருந்து ஒண்டாயிருந்த எல்லாருமே கலியாணம் முடிச்சிட்டாங்கள். சேந்து சாப்பிட்டு, குடிச்சு, முஸ்பாத்தி பண்ணின எல்லாருமே பெண்சாதிமார் வர தனி அறை எடுத்துக்கொண்டு போட்டாங்கள். சேகரும் வேறு அறை பாக்கிறதாய் சொல்லியிருக்கிறான். பிறகு..... நான் தனியத்தான். நானே சாப்பிட்டு, நானே படம் பாத்து, நானே சோகப்பாட்டுக் கேட்டு, நானே படுத்து.... சாய் இன்னும் எத்தினை நாளைக்கு.... (2017:148-149)

என்று தனது வாழ்வை நினைத்து சலித்துப்போகின்றான் கண்ணன். கடன்சுமை ஒருபுறமும் வாலிப வயதுக்கோளாறு மறுபுறமும் தன்னைத் துன்புறுத்த, மன உளைச்சலுக்கு உட்பட்டு தனியாக வாழும் நிலை என்பது அந்நியமாதலினையே தெளிவாகப் புலப்படுத்துகின்றது.

இத்தகைய சுய அந்நியமாதல் பல்வேறு பாதிப்புகளை ஏற்படுத்து வதையும் புகலிடப் படைப்புகளில் காணலாம். தாயகத்தில் உறவு களைப் பிரிந்து யாருடைய துணையுமின்றி திருமணத்தின் நிமித்தம் புலம்பெயர்ந்து சென்ற பெண்கள் கணவன்மாரால் துன்புறுத்தப் படுவதும் அதன்காரணமாக சுய அந்நிய மாதலுக்கு உட்பட்டு இறு தியில் மனநலம் பாதிக்கப்பட்டு தற்கொலைசெய்துகொள்வதுமான பல சம்பவங்கள் புகலிட நாடுகளில் நடைபெறுகின்றன. இவ்வகையில் சந்திரவதனா செல்வகுமாரனின் 'வேஷங்கள்' என்ற சிறுகதை முக்கியமானது. 15 வருடங்களாக உமா என்ற பெண்ணுடன் வாழ்ந்து ஒரு குழந்தைக்கும் தந்தையான சந்துரு செக்கொஸ்லாவிய பெண்ணையும் திருமணம் செய்துகொள்ள அனுமதி கேட்பதும் அதனால் சந்துருவுக்கும் உமாவுக்குமிடையே ஏற்பட்ட முரண் பாட்டால் உமா தன் அந்நியப்பட்ட நிலையை உணர்ந்து உளப்பாதிப்படைந்து இறுதியில் தற்கொலை செய்துகொள்வதுமான நிலையை இச்சிறுகதை கூறுகின்றது. சந்திரகௌரி சிவபாலனின் 'என்னையே நானறியேன்' நாவலில் கணவனால் அந்நியமாக்கப்பட்டு உளநலம் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் பெண்ணைக் காணமுடிகிறது. அரசியல் தஞ்சம் மறுக்கப்பட்ட மையால் தனிமை நிலையில் மனவிரக்தியடைந்த சந்திரன் தற்கொலை செய்துகொண்டமையை இராஜன் முருகவேலின் பாதை தெரியாத பயணங்கள் (1993) என்ற சிறுகதை எடுத்துக்கூறுகிறது. சுய அந்நிய மாதலுக்குட்பட்ட நிலையில் விரக்தி, தனிமை, உடறகளைப்பு காரணமாக மதுப்பழக்கத்திற்கு அடிமையாகிப்போகும் நிலையும் காணப்படுகின்றது. சி.புஸ்பராஜாவின் பின்வரும் கவிதை இதனை வெளிப்படுத்துகின்றது:

கடன்சுமை ஒருபுறமும் வாலிப வயதுக்கோளாறு மறுபுறமும் தன்னைத் துன்புறுத்த மன உளைச்சலுக்கு உட்பட்டு தனியாக வாழும் நிலை என்பது அந்நியமாத லினையே தெளிவாகப் புலப்படுத்து கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழுதுகளுடனும்
இலக்கில்லாப் போக்குடனும்
இது என்ன வாழ்க்கை
தினமும் விஸ்கியும் கையுமாக
என் வாழ்வு தொலைகிறது
முயன்று முயன்று தோல்வியே விதியாகி
வெறுமையே விடையாகி
போலி ஆற்றில் சுகமான குளியலாகிப்
பொய்யான கனவுகளுடன்
என் வாழ்வு தொலைகிறது (2001:45)

திருமண வயதை அடைந்தும் வீட்டார் திருமணம் செய்வதற்குத் தடையாக இருப்பதால் பாலியல் நடத்தைகளில் ஈடுபட்டு பாதிக்கப் படுவதையும் பல ஆக்கங்கள் வெளிப்படுத்தியுள்ளன. ப.வி.ஸ்ரீரங்கனின் தரிசிப்பு சிறுகதையில் ரவி என்ற பாத்திரம் பாலியலுக்கு அடிமையாகி மன உளைச்சலோடு உலாவித்திரிவது பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஈழத்துத் தமிழிலக்கியத்தின் ஒரு புலமாக வளர்ச்சி பெற்றுள்ள ஈழத்துப் புகலிடத் தமிழ் இலக்கியங்கள் ஈழத்தமிழர் களின் புலம்பெயர்வு வாழ்வியலை – வரலாற்றை அறிந்து கொள்ள உதவும் ஆவணமாக உள்ளது.

நான் பாலியல் நோயாளியாகிவிட்டேன். அடிக்கொரு தடவை பிராங்பேர்ட் வந்து உழைக்கிற பணத்தையெல்லாம் நாசம் செய்கிறேன். பணம் போகுதே யொழிய மனம் திருப்தியில்லை. ஒவ்வொருத்தியும் கள்ளப்பேர்வழிகள்... எனக்கிது வேண்டாம். ஜேர்மன் என்னை பாலியல் வக்கிர நோயாளியாக்கிப் போட்டுது.... என்னால் ஒவ்வொரு முறையும் ஒவ்வொருத்திக்கும் அப்பன் பெயர் தெரியாத பிள்ளை பிறக்கச் செய்வதாக எண்ணுகிறேன்... (1997:112)

இவ்வகையில் பாலியலில் ஈடுபட்டு அதனால் பாதிக்கப்பட்ட மனநிலையுடைய ஒருவராகவே ரவி காணப்படுகின்றார். இதுவும் சுய அந்நியமாதலேயாகும்.

முடிவுரை

இலக்கியம் என்பது கலாபூர்வமாக எழுதப்படுவதாயினும் அது சமூக மாற்றத்தை, சமூக வரலாற்றை ஆவணப்படுத்தும் பதிவாகவும் அமைகிறது. ஈழத்துத் தமிழிலக்கியத்தின் ஒரு புலமாக வளர்ச்சி பெற்றுள்ள ஈழத்துப் புகலிடத் தமிழ் இலக்கியங்கள் ஈழத்தமிழர்களின் புலம்பெயர்வு வாழ்வியலை – வரலாற்றை அறிந்து கொள்ள உதவும் ஆவணமாக உள்ளது. அதேவேளை அவை ஈழத்து வாழ்வியலிலிருந்து வேரோடு பிடுங்கப்பட்ட துயரத்தினையும் புகலிட நாட்டு அரசியல்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூக, பண்பாட்டுச் சூழல்களால் எதிர்கொண்ட – எதிர்கொள்கின்ற சிக்கல்களையும் இவை காரணமாக அந்நியமாதல் நிலைமையைச் சந்திப்பதையும் மிகத் தெளிவாகப் புலப்படுத்தி நிற்கின்றன.

அந்நியமாதல் என்பது ஆரம்பத்தில் பொருளாதாரப் பாதிப்புடன் தொடர்புடையதாக இருந்த போதிலும் பிற்காலத்தில் அது அரசியல், சமூகம், தொழில் நுட்பம் எனப் பல துறைகள் சார்ந்து விரிவாக்கம் பெற்றது. அத்தோடு தனிநபர்கள் மட்டுமன்றி ஒரு அதிகாரத்துவ சமூகத்தால் அதன் சிறுபகுதியினராகவுள்ள மக்கட் கூட்டத்தினரும் அந்நியமாகின்ற நிலையும் கூடுதலாகக் காணப்படுகின்றது. புகலிடத் தமிழ் இலக்கியங்களை ஆராய்கின்றபோது அவற்றில் அந்நியமாதல் சிந்தனை மேலோங்கியிருப்பதைக் காணமுடிகின்றது. அவ்விதத்தில் அந்நியமாதல் கருத்துநிலையை உள்வாங்கியதும் தனித்துவமானதுமான ஒரு கோட்பாட்டைத் தமிழ்ச் சூழலில் கட்டியெழுப்பவேண்டியதன் அவசியத்தை இவ்வாய்வு வலியுறுத்தி நிற்கின்றது.

உசாத்துணைகள்

அம்பலவன் புவனேந்திரன். *(1989)* எரி நட்சத்திரங்கள். தூண்டில், *14: 31-33.*

அம்பலவன் புவனேந்திரன். *(1988)* அவமானம். தூண்டில், *09: 32.*

இராஜன் முருகவேல். *(2000)* பாதை தெரியாத பயணங்கள்;. பூவரசு, *62: 17-27, 46-*

இளைய அப்துல்லாஹ், *(2001)* காலம் பக்.62

கருணாகரமூர்த்தி,பொ. *(1996)* ஒரு அகதி உருவாகும் நேரம். சென்னை: சினேகா.

கருணாகரமூர்த்தி,பொ. *(2014)* பெர்லின் நினைவுகள். சென்னை: காலச்சுவடு பப்ளிகேசன்.

கருணாகரமூர்த்தி,பொ. *(2014)* அனந்தியின் டயறி. சென்னை: காலச்சுவடு பப்ளிகேசன்.

கிருஸ்ணராஜா,சோ. *(2010)* பண்பாடு சமூக மெய்யியல் நோக்கு. கொழும்பு: குமரன் புத்தக இல்லம்.

சந்திரவதனா செல்வகுமாரன்;. *(2001)* விழிப்பு. பெண்கள் சந்திப்பு மலர்,*6: 26-30.*

சாதனா. *(2018).* தொலைந்துபோன சிறிய அளவிலான கறுப்பு நிற பைபிள். சென்னை: எழுத்துப் பிரசுரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திரலேகா மௌனகுரு. (1995) இலங்கைத் தமிழரின் புலம்பெயர் இலக்கியம். நுகேகொட: சுதந்திர இலக்கியவிழா அமைப்புக்குழு.

தம்பா, (1994) இனிக்கும் இரவும் புளிக்கும் பகலும், சுவடுகள், 1994 சித்திரை, பக் 56)

திருநாவுக்கரசு,ப (பதிப்பாசிரியர்). (2001) புலம்பெயர்ந்தோர் கவிதைகள். சென்னை : நிழல்.

தேவா. (1999) சுரண்டலின் கொடுக்குகள். புது உலகம் எமை நோக்கி: 12-20. தயாநிதி, றஞ்சி. நோர்வே: சக்தி வெளியீடு.

தேவா. (1999) ஊசி இருக்கும் இடம்கூட. தோற்றுத்தான் போவோமா: 99-102.

நிரூபா. (2005) அச்சாப்பிள்ளை. கொழும்பு: ஈகுவாலிற்றி கிரபிக்ஸ்

நிரூபா. (2018) இடாவேணி. புதுச்சேரி: அணங்கு பெண்ணியப் பதிப்பகம்.

நிருபா. (1993) நேற்று இன்று நாளை, பெண்கள் சந்திப்பு மலர், 3: 7.

நிருபா. (1993) விட்டு விடுதலையாகி. பெண்கள் சந்திப்பு மலர், 3: 26-30.

நிலாவெளிகைலை. (1997). மூன்று கைகளோடு வந்திருந்தால். பூவரசு, 44: 20.

பார்த்திபன். (2017) கதை. சுவிச்சர்லாந்: தமிழச்சு.

பார்த்திபன். (1988) கனவை மிதித்தவன், தூண்டில்,14,34-37.

பார்த்;திபன். (1988) கனவை மிதித்தவன். தூண்டில், 5: 42-46.

பார்த்திபன். (1988) கல்லான கணவன். தூண்டில்,2: 27-37.

பறித்த பின் விரட்டுகிறார்கள். (1990) தூண்டில், 29:10-12.

புஸ்பராஜா,சி., புத்தி ஜீவி, உயிர் நிழல், மார்ச் - ஏப்ரல் 2001, பக்.45)

புஸ்பராஜா,எஸ். பிரான்ஸ்: சபாலிங்கம் நண்பர்கள் வட்டம்.

மட்டுவில் ஞானக்குமாரன். (2004) வசந்தம் வரும் வாசல். இலங்கை: பகலவன் பதிப்பகம்.

ராகுலன். (1993). ஜேர்மன் கலைத்த கனவு. தேனீ:14.

வரதராஜா,வீ.ஆர். (1999) புலம்பெயர் மண்ணில் பெற்றோர் முன் பிள்ளைகள் ஒரு கேள்விக்குறியா?. பூவரசு, 55:20-24.

ஜீவகுமாரன்,வி. (2014) கடவுச்சீட்டு. சென்னை: நற்றிணை பதிப்பகம்

ஜீவகுமாரன்,வி. (2015) ஜீவகுமாரன் கதைகள். யாழ்ப்பாணம்: ஜீவநதி வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவமுரளி, (2014) லெனின் சின்னத்தம்பி. நோர்வே: உயிர்மெய்.

ஸ்ரீரங்கன்,ப.வி. (1988) அந்நியமாதல். தூண்டில், 6: 8-14

Fromm, E. (1955) *The Sane Society*. New York: Rinehart.

Hegel, G. W. F. (1807) *Phenomenology of Spirit*. TÜbingen: J. C. B. Mohr.

Kahn, W. A. (1990) Psychological Conditions of Personal Engagement and Disengagement at Work. *Academy of Management Journal*, 33(4), 692-724.

Marx, K. (1844) *Economic and Philosophic Manuscripts of 1844*. Moscow: Progress Publishers

மின்னூல்

சந்திரகௌரி சிவபாலன். (2013). என்னையே நானறியேன்: Available from:www.gowsy.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை ஆசிரியர்களின் விபரங்கள்

1. பேராசிரியர். **வீ.அரசு,** ஓய்வுநிலைப் பேராசிரியர், சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை. *e mail: arasuveerasami@gmail.com*

2. முனைவர் **மு.செல்வக்குமார்,** கௌரவ விரிவுரையாளர், தமிழ்த்துறை, காந்தி கிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக் கழகம், காந்திகிராமம், திண்டுக்கல் மாவட்டம், தமிழ்நாடு. *e mail: aanilaiselvan@gmail.com*

3. பேராசிரியர். **சி.சிவசேகரம்,** ஓய்வுநிலைப் பேராசிரியர், பேராதனைப் பல்கலைக்கழகம், இலங்கை. *e mail: sivasegaram@yahoo.com*

4. முனைவர் **சி. ஜஸ்டின் செல்வராஜ்,** உதவிப் பேராசிரியர் & தலைவர், நுண்கலைகள் மற்றும் அழகியல் துறை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை – 625021. *e mail: jsfolk@gmail.com*

5. கலாநிதி. **இரத்தினசபாபதி பிரேம்குமார்,** மெய்யியல் துறை, கிழக்குப்பல்கலைக்கழகம், இலங்கை. *e mail: premkumar.phd@gmail.com*

6. கலாநிதி. **த.மேகராசா,** விரிவுரையாளர்,தமிழ் கற்கைகள் துறை, கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை. *e mail: megarajaht@esn.ac.lk.*

மதிப்பீட்டாளர்களின் விபரம்

1. முனைவர். **சுந்தர் காளி,** ஓய்வுபெற்ற தமிழ்ப் பேராசிரியர், தமிழ், இந்திய மொழிகள் மற்றும் கிராமியக் கலைகள் பள்ளி, காந்தி கிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழகம், காந்தி கிராமம், தமிழ்நாடு.

2. பேராசிரியர் **ALM, றியால்,** மெய்யியல் பேராசிரியர், கலைப்பீடம், தென்கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

3. முனைவர். **பக்தவத்சல பாரதி,** முன்னாள் இயக்குநர், புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம், புதுச்சேரி

4. முனைவர். **சே.செந்தமிழ்ப்பாவை,** மூத்த பேராசிரியர் & இயக்குநர், தமிழ்ப்பண்பாட்டு மையம், அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி, தமிழ்நாடு.

5. முனைவர். **மு. இராமசுவாமி,** மேனாள் புலத் தலைவர்,கலைப் புலம், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்613010.

6. முனைவர். **இரா.சீனிவாசன்,** முதல்வர், அரசு கலை அறிவியல் கல்லூரி, திட்டமலை, ஈரோடு மாவட்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் அறிமுகம்

கிழக்கிலங்கையில் முருக வழிபாடு
வரலாறும் வழமைகளும்



- கலாநிதி வ.குணபாலசிங்கம் (பீடாதிபதி, கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை) அவர்களால் எழுதப்பட்டது.
- 2024இல் குமரன் புத்தக இல்லம், கொழும்பு - சென்னை, முதல் வெளியீடாக வெளிவந்துள்ளது.
- நூலின் விலை 2900.00 (இலங்கை)
- நூலின் பக்கங்கள் 254
- தொடர்புக்கு +94779178806 (நூலாசிரியர்)
- +94112364550 (வெளியீட்டாளர்)

தமிழ் நிலத்தின் பூர்வ வழிபாட்டு நெறிகளுள் முதன்மையானதாக முருக வழிபாடு விளங்கியுள்ளது. தமிழ் மொழியினதும் தமிழ் இனத்தினதும் அடையாளமாக முருகனை முன்நிறுத்துமளவுக்கு அவ்வழிபாடு மேலோங்கியிருந்துள்ளது. சங்க இலக்கியச் செய்திகளிலிருந்து பண்டைத் தமிழரின் அகவாழ்வுக்கும் புறவாழ்வுக்கும் – காதலுக்கும் போருக்கும் என இரு நிலைகளிலும் வழிபடப்பட்ட சிறப்புக்குரிய கடவுளாக முருகன் விளங்கியுள்ளமையைக் கண்டுகொள்ள முடிகிறது.

தமிழ்ச் சமூகத்துள் காலந்தோறும் நிகழ்ந்துவந்துள்ள மாற்றங்களுக்கு ஏற்ப பல்வேறு மாற்றங்களைப் பெற்றுள்ள முருக வழிபாடு, தன் பூர்வ மரபுகளின் எச்சங்களை வெவ்வேறு தளங்களில் தொடர்ந்தும் பயில்வில் கொண்டுள்ளது. முருக வழிபாட்டின் தனித்துவங்களுள் ஒன்றாக இதனை அடையாளப்படுத்தலாம். அதனால் தமிழ்ச் சமூகத்தின் பண்டைய வழிபாட்டு மரபு, அதன் தொடர்ச்சி, காலமாற்றங்களுக்கு ஏற்ப அதில் ஏற்பட்டுவந்துள்ள மாற்றங்கள், அம்மாற்றங்களுக்கு ஏதுவான காரணிகள் முதலானவற்றை அறிந்துகொள்ளவும் அவற்றின்வழி தமிழ்ச் சமூக வரலாற்றை வரையவும் முருக வழிபாடு முதன்மையான ஆய்வுக் களமாக விளங்கிவருகிறது.

இலங்கையில் சைவ மரபிலும் பௌத்த மரபிலும் முருக வழிபாடு முதன்மை பெற்றுள்ளது. அவ்விரு சமய நடைமுறைகளிலும் முருக வழிபாடோடு இணைந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உபபண்பாட்டுக் கூறுகள் நிலைபேறாக்கம் பெற்றுள்ளன. அதனால் இலங்கையின் முருக வழிபாட்டில் பல்பண்பாட்டுப் பிணைப்பு மிகுந்துள்ளது. அப்பல்பண்பாட்டுப் பிணைப்பினை உச்சமாக உள்ளடக்கிய பிராந்தியங்களுள் ஒன்றாகக் கிழக்கிலங்கையை அடையாளப்படுத்தலாம். கிழக்கிலங்கையின் இனத்துவப் பரம்பல், சமூகக் கட்டமைப்பு, வாழ்வியலம்சங்கள் மற்றும் வரலாற்றுத் தொடர்ச்சி முதலானவை அதற்கான அடிப்படைகளைக் கட்டமைத்துள்ளன. இந்நிலையால் காலமாற்றங்களுக்கு ஏற்ப முருக வழிபாட்டில் இடம்பெற்றுள்ள புதிய கூறுகளும் தொன்மையான வழிபாட்டம்சங்களின் எச்சங்களும் நிறைந்தவையாகக் கிழக்கிலங்கை விளங்குகிறது. அந்த வரலாற்றையும் வழமைகளையும் சுய இனவரைவியலாளனைப்போல் உள்ளிருந்து துலக்கும் முயற்சியை வ.குணபாலசிங்கம் கிழக்கிலங்கையில் முருக வழிபாடு என்ற நூலில் மேற்கொண்டுள்ளார்.

இலங்கையில் முருக வழிபாட்டின் தோற்றமும் வளர்ச்சியும், கிழக்கிலங்கையில் திருப்படைக் கோயில்கள், முருக வழிபாட்டு முறைகள், முருக வழிபாடும் பண்பாட்டு மரபுகளும் எனும் நான்கு இயல்களை இந்நூல் கொண்டுள்ளது. இலங்கையின் முருக வழிபாட்டு வரலாற்றினைச் சுருக்கமாக எழுதும் முயற்சியாக முதலாவது இயல் அமைந்துள்ளது. வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதல் இலங்கையில் முருக வழிபாடு இடம்பெற்று வந்துள்ளமை தொல்லியல் எச்சங்கள், கல்வெட்டுகள், நாணயங்கள், இலக்கியக் குறிப்புகள், வம்ச வரலாற்றுக் கதைகள் முதலானவற்றின் துணைகொண்டு நிறுவப்பட்டுள்ளதுடன் முருக வழிபாட்டின் தொடர்ச்சியும் சான்றாதாரங்களுடன் விளக்கப்பட்டுள்ளது.

கிழக்கிலங்கை முருக வழிபாட்டின் தனித்துவ அம்சங்களுள் முதன்மையானதாகத் திருப்படைக் கோயில்கள் எனும் வகைமை விளங்குகிறது. கதிர்காமத்துடன் இணைந்த உபபண்பாட்டுக் கூறுகளைக் கொண்டதாக விளங்கும் அக்கோயில்கள், கிழக்கிலங்கை முருக வழிபாட்டின் தொன்மைக்கும் அதன் தொடர்ச்சிக்கும் மூலமாக அமைந்துள்ளன. அக்கோயில்களின் அமைப்பு, நடைமுறைகள் முதலானவற்றை விளக்கியுரைத்துள்ள நூலாசிரியர், வாய்மொழிக் கதைகளைக் கொண்டு அக்கோயில்களின் வரலாற்றை மீட்டெடுக்கும் முயற்சியை மேற்கொண்டுள்ளார்.

ஆகமம்சார்ந்த வகையிலும் ஆகமம்சாராத வகையிலும் கிழக்கிலங்கையில் இடம்பெற்றுவரும் முருக வழிபாட்டு முறைகளை விரிவாக ஆவணப்படுத்தும் முயற்சியாக முருக வழிபாட்டு முறைகள் எனும் இயல் அமைந்துள்ளது. இதில் இடம்பெறும் குமாரத்தான்–குமார வழிபாடு மிகுந்த கவனத்துக்குரியதாக விளங்குகிறது. அது கிழக்கிலங்கைக்கே உரிய பிரத்தியேக வழிபாட்டு முறையாகும். கிழக்கிலங்கையின் பூர்வக் குடிகளான வேட்டுவ மக்களிடம் அவ்வழிபாடு நிலவிவருகிறது. அதன் வழிபாட்டம்சங்களை விரிவாக ஆவணப்படுத்தியுள்ள நூலாசிரியர், அக்கூறுகளைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு அதனை முருக வழிபாடென வரையறுத்துள்ளதுடன் திருப்படைக் கோயில்கள் என அறியப்படுகின்ற கோயில்கள் யாவும் முற்காலத்தில் குமாரத்தன் கோயில்களாக விளங்கியவை என நிறுவமுயன்றுள்ளார். திருப்படைக் கோயில் மரபுகளில் நிலவிவரும் குமாரத் தெய்வத்தோடு இணைந்த வழிபாட்டம்சங்கள் அதற்கான வலுவான சான்றாக முன்நிறுத்தப்பட்டுள்ளன. அத்துடன் வேட்டுவ மக்களிடம் பயில்வில் உள்ள குமாரத்தான் வழிபாடு முருக வழிபாட்டின் தொன்மையான கூறுகளின் எச்சங்கள் நிறைந்தவையாகவும் ஆகமநிலைக்குட்பட்ட முருகன் கோயில்கள் அத்தொன்மையான கூறுகளின் தொடர்ச்சி குறைந்தவையாகவும் விளங்குகின்றமை எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. இது கிழக்கிலங்கை முருக வழிபாட்டின் பன்முகத்தன்மையையும் அவற்றுள் உள்ளோடும் ஒத்தக்கூறுகளின் இழையையும் வரலாற்றுத் தொடர்ச்சியையும் வெளிப்படுத்திநிற்பதுடன் தமிழ் மரபில் நிலவிய தொன்மையான முருக வழிபாட்டு அம்சங்களுடன் கிழக்கிலங்கையின் முருக வழிபாட்டுக் கூறுகள் சில ஒத்தவையாக விளங்குவதையும் சுட்டிநிற்கின்றது.

கோயில் ஒரு பிரதான சமூக நிறுவனம் என்ற வகையில் தனிமனித வாழ்விலும் சமூக வாழ்விலும் தவிர்க்க முடியாத பாத்திரத்தை வகித்துவருகிறது. அதனால் சமூக இயங்குமுறையிலும் பண்பாட்டுப் பேணுகையிலும் கோயில் மையமான இடத்தைப் பெறுகிறது. அவ்வகையில் முருகன் கோயில்களையொட்டி இயக்கங்கொள்ளும் கிழக்கிலங்கையின் பண்பாட்டு மரபுகளும் அப்பண்பாட்டு மரபுகளின் பேணுகையில் கோயில் நடைமுறைகள் பெறுகின்ற இடமும் இந்நூலில் ஆராயப்பட்டுள்ளன. கிழக்கிலங்கையின் சமூக இயங்குமுறையையும் பண்பாட்டு வாழ்வியலையும் கோயில் நடைமுறைகளுடன் இணைத்துப் புரிந்துகொள்வதற்கான தளத்தினை அந்த இயல் முன்நிறுத்தியுள்ளது.

கிழக்கிலங்கை முருக வழிபாட்டின் வரலாற்றையும் அதன் சமகாலப் பயில்வையும் விரிவாக ஆவணப்படுத்தியுள்ள இந்நூல், கிழக்கிலங்கையின் முருக வழிபாட்டு நடைமுறைகளையும் அவை உருவாக்கியுள்ள பண்பாட்டு வாழ்வியலையும் சமூக பண்பாட்டுத் தளத்தில்நின்று உரையாடியுள்ளது. பண்பாட்டு உருவாக்கத்துக்கும் சமூக இயக்கத்துக்கும் இடையிலான தொடர்பினைக் கோயில் நடைமுறைகளை அடிப்படையாகக் கொண்டு விளங்கியுள்ளது. இந்நூல் திரட்டித்தந்துள்ள முருகன் கோயில்கள் பற்றிய தரவுகளும், வாய்மொழி மற்றும் வரலாற்று ஆதாரங்களும் கிழக்கிலங்கை பற்றியும் கிழக்கிலங்கை முருக வழிபாடு பற்றியும் மானுடவியல், சமூகவியல் அடிப்படையிலான நுண்ணாய்வுகளுக்குத் துணையாகவும் வழிகாட்டியாகவும் அமையக்கூடியனவாகும்.

எம்.எம்.ஜெயசீலன்,
முதுநிலை விரிவுரையாளர்,
தமிழ்த்துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிதல் பிரதிகளைப் பெற்றுக்கொள்ள

இந்தியாவில்

முனைவர் மு.ஏழுமலை

தொடர்பு எண்: +91 9962082440

இலங்கையில்

பேராசிரியர் வ.இன்பமோகன்

தொடர்பு எண்: +94 774749441

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Class No: 6372.
Acc No

Arasady Public Library
Municipal Council
Batticaloa.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளடக்கம்

ஆசிரியர் தலையங்கம்

உணவுப் பண்பாட்டில் நவீன அறிவியல் தொழில்நுட்பத்தின் தாக்கம் 07

இந்தியச் சமூகத்தில் சமூக முரண்கள்: சாதி - சூத்திரர் - தீண்டப்படாதார் குறித்த அண்ணல் அம்பேத்கர் உரையாடல்கள் 17
வீ.அரசு

கம்பராயரோடு முரணும் சாமாண்டி: சமயக் கதையாடல்களும் சமூக உறவுகளும் 42
மு.செல்வக்குமார்

தமிழ்த் தொடுத்தெழுதல் : தொடுத்தெழுதலின் தேவையும் தொடுத்தெழுது முறைகளும் 59
சி.சிவசேகரம்

அருட்காடு என்னும் புனிதக் கருத்தாக்கமும் இயற்கை சார்ந்த சமூகச் சிந்தனையும் 74
சி. ஜஸ்டின் செல்வராஜ்

திரைப்படக் கலை பற்றிய அடோர்னோவின் சிந்தனைகள் - ஒரு தத்துவவியல் பகுப்பாய்வு 91
இரத்தினசபாபதி பிறேம்குமார்

அந்நியமாதல் கருத்துநிலையும் ஈழத்துப் புகலிடத் தமிழ் இலக்கியங்களும் 109
த.மேகராசா

ISSN 2386-1630

9 772386 163006

விலை: SLR 1000.00
INR 250.00

Wrapper - balaji's design lab

Printed by Aadhavan Art Print, Porur-116.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org